உ

கடவுள்துணை.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம் அல்லது வடலூர்

இராமலிங்கசுவாமிகள்

அருளிச்செய்த

# திருவருட்பா

# இங்கிதமாலை.

---

இஃது,

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ - சிவஞானபாலையதேசிகாதீனத்து

சிதம்பரம் ஈசானியமடம்

**ஸ்ரீமத் - இராமலிங்கசுவாமிகளவர்கள்**

மாணாக்கருள் ஒருவரும்

சென்னை பச்சையப்பமுதலியார் காலேஜ்

தமிழ்ப்பண்டிதருமாகிய

**க. வ. திருவேங்கடநாயடுவினால்**

இயற்றப்பட்ட உரையுடன்,

குளத்தூர் - குப்புசாமி முதலியாரால்

---

சென்னை:

கலாரத்நாகர யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

---

குரோதி௵ துலாரவி.

1904.

உ

கடவுள் துணை.

# முகவுரை.

முத்தொழிற்றலைமைசா லத்தருமிறையையும்
எப்புலமையுந்தரு மொப்பில்பாரதியையும்
மகத்துவத்தமிழ்க்குர வகத்தியப்பிரானையும்
எங்குருவிராம லிங்கதேசிகனையும்
அன்புடனிறைஞ்சியே யின்புறுபுலமையின்
ஆற்றல்கொளறிஞர்முன் போற்றியேகிளப்பது :—

**இங்கிதமாலை** என்னும் இப்பிரபந்தம் சிதம்பரம் அல்லது வடலூர் ாமலிங்கசுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட பல பிரபந்தங்களின் தொ யான திருவருட்பாவென்னும் நூலினுள்ளதொரு அரிய பிரபந்தமாம். தம் - குறிப்பு ; * "இங்கிதம் - குறிப்பாணிகழும் உறுப்பின்றொழில்" றருளினர் பரிமேலழகரும். மாலை - ஈண்டுப் பாமாலை ; பல பூக்க ால் அலர்மணமுடைத்தாய் அணிபெறத்தொடுத்ததொரு அலங்கல்போல து பலபாட்டாற் றொடுக்கப்பட்டமையின் மாலையெனப்பட்டுக் காரணக் யாய்ப் பிரபந்தத்தின்மேற்றாயிற்று.

ஈண்டு இங்கிதமென்பது தாருகவனமுனிவர் மகளிரின் கருவபங்கநிமித் சிவபெருமான்கொண்ட பிக்ஷாடன மூர்த்தத்தைநோக்கி அத்தவமங்கை தவமயங்கினராய் உள்ளுறையோடு வினாயவினாக்களுக்கு அப்பெருமான் மெய்ப்பாடாகவும் உரையாகவும் விடுத்த விடைகளின்மேலது. இது காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என்னும் பொருட்சுவை ஒன்பானுள் காமச்சுவையை வெளிப்படையாகக் காட்டுவதாயினும்,ஏனைச்சுவைகளையும் குறிப்பிற் பெரிதும் காட்டுகின்றதுய்த்துணர்க.

† "காமப் பகுதி கடவுளும் வரையார்" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் அருளிய சூத்திரத்தில் பகுதி யென்பதற்கு ஆசிரியர் நச்சினார்க் யர் "கடவுண்மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர்மாட்டு டப் பெண்டிர் நயப்பனவும், கடவுள் மானுடப்பெண்டிரை நயப்பன றவுமாம்." என்று விசேடித்தவாறு முனிமங்கையர் பெருமான்

---

* குறள் ௪௫ - அதிகாரம் ௨ - உரைவிசேஷம்.

† தொல்காப்பியம் - பொருள் - புறத்திணை - ௨௮.

பக்கலில் மயல்பூண்டதும் பெருமான் அவர்மாட்டு மயல்பூண்டமைபோல நடித்ததுமாகிய விசேடங்களை உணர்த்துதலையே விஷயமாகக் கொண்டுள்ளதாதலின், இது பாடாண்டிணைப் பகுதியதாம். பாடாண்டிணை என்பது ஒருவருடைய ஒளி, ஆற்றல், ஈகை, அளி என்னுமிவற்றை ஆராய்ந்து சொல்லுவது; இதனை * "ஒளியுமாற்றலு மோம்பாவீகையும் - அளியுமென்றிவை யாய்ந்துரைத்தன்று." என்பதனானும், கடவுளென்றது ஈண்டுச் சிவபெருமானை யென்பதனை † "முக்கணான் முயக்கம்வேட்ட மக்கட் பெண்டிர் மலிவுரைத்தன்று" என்பதனானும் உணர்க. இப்பாடாண்டிணை புறத்திணைக் குரித்தேனும், ஆசிரியர் ‡ "பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே." என்று கூறினமையின் இதுவும் ஆற்றலாதிய சிறப்பினையே ஓதுதலால் கைக்கிளையகத்திணைக்குப்புறனாக ஆளப்பட்டதென்க.

இந்நூல் இற்றைக்கு ௬௨ - வருடங்கட்கு முற்பட்டது. இந்நூலாசிரியர் கருணீகர் குலத்திலே இராமையப்பிள்ளையின் திருக்குமாரராய் கலி 4925-ல் சுபானு௵ புரட்டாசி௴ 21௳ உதித்தவர். கருவிலே திருவுடையாரென்று விதக்கும்படிச் சின்னஞ் சிறுவயதிலேயே பத்திமேலிட்டு ஆராமையோடு பரமனைப் பாடியாடும் பான்மையராயிருந்தனரென்று எனக்கெழுத்தறிவித்த இறைவரான பெரியகாவணம் முருகேசமுதலியா ரென்பவர் கூறியுள்ளார். அவர் பெரியகாவணத்தில் இச்சுவாமிகளுடன் வாசித்த ஒருசாலையர். பின்னர் இச்சுவாமிகள் பத்திப்பயிர் வளர்ந்தாங்கு வளர்வுற்றுச் சுவானுபூதிச் செல்வராய் வதிந்து, ஆதிபுரி ஔதும்பரக்ஷேத்திரம் முதலிய திருநாமங்களுடைய திருவொற்றியூர்த் தலத்தே வீற்றிருக்கும் தியாகராஜப்பெருமானை நித்தியசேவை செய்தலென்னும் விரதம்பூண்டொழுகி அப்பெருமான் சந்நிதியில் உட்பிராகாரத்தில் அமரும் பாலசுப்பிரமணியப் பெருமான் சந்நிதியிலேயே முதற்புத்தகமும் இரண்டாம் புத்தகமுமாகத் தற்காலம் பதித்துள்ள பிரபந்தமனைத்தும் பெரிதும் பாடியருளினரென்ப. இவரா லருளப்பட்டு இப்போது வெளிப்போந்துள்ளவைகளேயன்றி இன்னும் அச்சியற்றுப் பதிகங்களும் பாடல்களும் பலவுளவாம். இவர் தோத்திரரூபமாகப் பாடுதலில் வல்லவரேயன்றிச் சொற்செறிவும் பொருட்செறிவும் நவரசமும் அணியுமமையப் பாடவல்லரல்லரெனச் சிலர்கூறிய பயனில் கூற்றினைக்கேட்டு, இதுவும் பெருமான் திருவுள்ளம்போலுமென மதித்துத் தம்பால் அவ்வாற்றல்களும் அமைந்துள்ளமை வெளிப்படுப்பான் பிறர் வேண்டுகோளின்படி இவ்விலக்கிதமாலைப் பிரபந்தம் பாடியதாகக் கர்ணபரம்பரை வழக்கமுண்டு. இவ்வாசிரியர் சரித்திரம் இத்தமிழ்நாட்டில் பிரசித்தமாக வழங்கிவருதலின் மற்றவற்றை இங்கு விரித்திலன். இவர் ஸ்ரீமுக௵ தை௴ 19௳ புனர்பூச நக்ஷத்திரத்தில் சமாதிகொண் டமர்ந்தனர்.

---

* புறப்பொருள் வெண்பாமாலை பாடாண்படலம் - க.

† ஷை சக.

‡ தொல் . பொருள் - புறத்திணை . உரு.

குறிப்புப் பொருளமைந்த சொற்செறிவுகளை நிரம்பப்பெற்ற இந்நூ
லுக்கு இலக்கண இலக்கியத் தேர்ச்சியுடைய புலவர்பெருமான்களே ஆசிரி
யர்கருத்து ஈதெனவறிந்து உரைவகுக்கத்தக்கவர். அது என் போல்வார்க்கு
எட்டுணையும் இயலாதென்பதைத் தெற்றெனத் தெரிந்துவைத்தும், திருக்
கைலாசபரம்பரைப் பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலையதேசிக ராதீனத்துச்
சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிக ளவர்கள்பால் யா
னும் இச்சென்னைப் புதுவண்ணாரப்பேட்டை வித்தியாவிர்த்தி நிலயசபை உபா
த்தியாயர் ம-ா-ா- ஸ்ரீ சே. சூரப்பநாயடவர்களும் பாடங்கேட்டபோது
குறித்துவைத்த குறிப்புரை யிருந்தமையின், ஒருவாறு தொகுத்தெழுதத்
தலைப்பட்டேன். இந்நூற் செய்யுள்களுக்குப் பிறர் தம்மனம் போனவாறு
உரைவகுத்தலைக் கண்டமையின் இவ்வாறன்றி யாம் கேட்டவாறு ஓருரை
வரைந்து வெளியிடின் இந்நூற்பொரு ளாராய்வார்க்கு உதவியாமென்ப துட்
கொண்டு, கேட்டபடியே அவ்வச் செய்யுள்களில் அமைந்துள்ள செம்பொ
ருள் இலக்கணைப்பொருள் குறிப்புப்பொருள் முதலிய பொருணுட்பங்களை
விளக்கி யெழுதிச் சுவாமிகளவர்களால் பரிசோதிப்பித்து அச்சிற் பதிப்பித்த
னன். இவ்வுரையை வெளியிடும்படி மிகமுயன்று என்னை இரவும்பகலும்
தூண்டியதேயன்றி அச்சிட்டு வெளிப்படுத்தப் பொருட்சகாயமும் செய்த
ம-ா-ா- ஸ்ரீ குளத்தூர். குப்புசாமிமுதலியாரவர்கள் நன்றி மிகப்
பாராட்டத்தக்கது. இவ்வபிமானியரைப்போல மற்றும் சிலபுண்ணியர் சகா
யர்களாயின் இன்னும் சில நூலுக்கு உரைவகுத்தும் சிலநூல் பரிசோதித்
தும் அச்சிற்பதித்து வெளியிடலாகும்.

அன்பர்களே! தமிழ்ப்பாஷையின் அருமைபெருமை தெரிந்த தாங்கள்
இவ்வுரையில் காணுங் குற்றங்களையும் மற்றும் புதுமையாகக் காணும் நயங்
களையும் எனக்கறிவித்து என்னை ஆசீர்வதிக்க வேண்டுகின்றனன். சுபம்.

இங்ஙனம்

தாழ்மையுள்ள,

**க. வ. திருவேங்கடன்.**

சிவமயம்.

சிவ கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவருட்பா.

# இங்கிதமாலையுரை.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஒருமாமுகனையொருமாவையூர்வாகனமாயுறநோக்கித்
திருமான்முதலோர்சிறுமையெலாந்தீர்த்தெம்மிருகண்மணியாகிக்
கருமாலகற்றுங்கணபதியாங்கடவுளடியுங்களித்தவர்பின்
வருமாகருணைக்கடற்குமாரவள்ளலடியும்வணங்குவாம்.

(இதன்பொருள்.) ஒருமா முகனை ஒருமாவை ஊர் வாகனமாய் உறநோக்கி—ஒரு கயமுகாசுரனையும் ஒரு மாமரவடிவாகிய சூரபத்மனையும் (போரில் தாம்) செலுத்தும் வாகனமாகி (அவர்தம்பால்) அடையநோக்கியருளி; திருமால் முதலோர் சிறுமை எலாம் தீர்த்து—(அவ்விருவராலும்) திருமால் முதலிய தேவர்களுக்கு (நேர்ந்திருந்த) குறைவுகளனைத்தையும் நிவிர்த்தித்து; எம் இரு கண்மணியாகி கருமால் அகற்றும்—எங்கள் இருநேத்திரங்களிலுள்ள மணிபோல் விளங்கிப் பிறவிமயக்கத்தை ஒழித்தருளுகின்ற; கணபதியாம் கடவுள் அடியும் அவர் பின்வரும் மா கருணை கடல் குமார வள்ளல் அடியும்—விநாயகக்கடவுளுடைய திருவடிகளையும் அக்கடவுளின் பின்னர்த் திருவவதாரஞ்செய்த மிக்க கிருபைக்கடலாகிய முருகக்கடவுளுடைய திருவடிகளையும்; களித்து வணங்குவாம்—மகிழ்ந்து இறைஞ்சுவாம். எ-று.

(விசேடக்குறிப்பு) கயமுகாசுரனை மூஷிகவாகனமாகியும் சூரபத்மனை மயில்வாகனமாகியும் உறநோக்கினரென்பது. இவ்வண்ணமே கீழ்வருவனவற்றையும் நிரனிறையாகக்கொள்க. நோக்கி தீர்த்து ஆகி அகற்றுமென்பவை

யும், சிறுமைதீர்த்தலாதிய விசேடங்கள் குமாரவள்ளலையுங் குறித்துநின்றன. நன்மைநிலைமைகளைப் பகுத்துக் காட்டலின் கண்மணிகளை உவமித்தனர். எடுத்தகாரியம் இடையூறின்றி இனிதுமுடித்தற்கு ஏற்புடைக்கடவுளாகிய விநாயகக்கடவுள் வணக்கமும், வழிபடுகடவுளாகிய முருகக்கடவுள் வணக்கமும் ஒருங்குகூறியபடி. இந்நூலாசிரியர் சென்னையில் வசித்தகாலங்களில் முருகக்கடவுளைச்சுட்டியியற்றிய செய்யுட்களெல்லாம் திருவொற்றியூரில் ஸ்ரீ படம்பக்கநாதர் சந்நிதியின் உட்பிராகாரத்தில் வீற்றிருக்கும் முருகக்கடவுளைச்சுட்டியே யியற்றினரென்பதும், அக்கடவுளே இவர்க்கு உபாசனாமூர்த்தி யென்பதும் பிரசித்தம். இங்ஙனமே பிறரும் சிலநூல்களிலே காப்புச்செய்யுளில் கந்தவேளையுங்கலந்து துதித்திருப்பதும் காண்க.

---

பாடாண்டிணை.

கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தபக்கம்.

(வினா வுத்தரம்.)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

திருவார்கமலத்தடம்பணைசூழ்செல்வப்பெருஞ்சீரொற்றியில்வாழ்
மருவார்கொன்றைச்சடைமுடிகொள்வள்ளலிவர்க்குப்பலிகொடுநா
னொருவாதடைந்தேனினிநமக்கிங்குதவவருந்தோறுன்முலைமே
லிருவாரிடுநீயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) திரு ஆர் கமலம் தடம் பணை சூழ் செல்வம் பெருஞ்சீர் ஒற்றியில்வாழ்—இலக்குமி குடிகொள்ளும் செந்தாமரைமலர்கள் செறிந்த தடாகங்களும் வயல்களும் சூழ்ந்ததாய்ச் செல்வத்தோடு பெரும்புகழ்படைத்த திருவொற்றியூரில் வாழ்கின்ற; மரு ஆர் கொன்றை சடைமுடிகொள் வள்ளல் இவர்க்கு பலிகொடு—மணநிரம்பிய கொன்றைமாலிகை யணிந்த சடாமகுடத்தையுடைய கடவுளாகிய இத்தியாகேசப்பெருமானுக்கு (இடுதற்பொருட்டுப்) பிச்சையைக்கொண்டு; நான் ஒருவாது அடைந்தேன்—யான் அகலாது அணுகினேன்; இனி நமக்கு இங்கு உதவ வருந்தோறு—இனிமேல் எமக்கு ஈண்டு அன்னமளிக்க வரும்பொழுதெல்லாம்; உன் முலைமேல் இருவார் இடு நீ என்கின்றார்—உனது தனங்களில் இருவாரை நீ இடுவாய் எனக்கூறுகின்றனர்; ஏடி சேடி இது என்—அடி தோழியே இவ்வாறுரைப்பதன்பொருள் என்னை? எ-று.

(வி-ரை.) கொடு கொண்டென்பதன் இடைக்குறை. மேல் ஏழனுருபு. வள்ளல் - வரையாதுகொடுப்போன்; இது இத்தலத்திலே வேண்டுவார் வேண்டுவதே யீவோராய்த் தியாகேசரெனத் திருநாமங்கொண்டு பெருமான் வீற்றிருத்தலை யுணர்த்தியபடி. பின்வருமிடங்கடோறும் இதுவே பொருளா

கக் கொள்ளல் நேர். ஒருவாதென்பது நீங்காதெனவும் ஒருவம்பெனவும் பொருள் படுதலின், அதற்கெதிராக இருகச்செனவும் இருவம்பெனவும் பொருள்பட இருவாரொன்றாரெனவும்; நான்ஒருவம்புசெய்தேன் அதற்கினி இருவம்புசெய் என்றாரெனவும், உதவவருந்தோறும் உனது கற்பில் வழுவா திரு, கொண்டுவந்தது தீர்த்தமேல் வார், அன்னமேல் இடு, இன்னும் காதற்பெருக்கால் உனது தனங்கள் பூரித்தலின் ஒருகச்சமையாது இருகச்சணிக என்றாரெனவும் இங்ஙனம் பலபொருள்கொள்ளக்கிடப்பதோர்க. இருகச்சணிதலை *“ஏயுமிருவாரொழிஞொருவாமிக்கவலி—வீயு மெனவெழுந்தவெம்முலையாள்” என்பதனாலும் உணர்க. முலை-தனம், முல்லை, (கற்பு.) ஏடி தோழிமுன்னிலை; விளியேற்று நின்றது. தான் அசை.

தண்ணார்மலரைமதிநதியைத்தாங்குஞ்சடையாரிவர்தமைநா
னண்ணாலொற்றியிருந்தவரேயையரேநீர்யாரென்றே
னண்ணாரிடத்துமம்பலத்துநடவாதவர்நாமென்றுசொலி
யெண்ணாதருகேவருகின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) தண் ஆர் மலரை மதி நதியை தாங்கும் சடையார் இவர் தமை நான்—குளிர்ச்சிபெற்ற கொன்றைமலரையும் சந்திரனையும் கங்கையையும் ஏந்தும் சடைமுடியையுடைய இத்தியாகேசப் பெருமானை யான்; அண்ணால் ஒற்றியிருந்தவரே ஐயரே நீர் யார் என்றேன்—அண்ணலே! திருவொற்றியூரிலிருந்தவரே! ஐயரே! நீர் யாரெனவினாவினேன்; நாம் நண்ணாரிடத்தும் அம்பலத்தும் நடவாதவர் என்று சொல்லி—யாம் (நம்மை) அணுகாதாரிடத்தும் அம்பலத்திலும் நடவாதவர் என்று (விடை) கூறி; எண்ணாது அருகே வருகின்றார்—யோசிக்காது சமீபத்தில் அணுகுகின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ந.) ஒற்றியிருந்தவரே ஐயரே யென்பது திருவொற்றியூரிலமர்பவரே! பிராமணகுலத்தவரே! என வியங்கேதனாகவும், இவர் ஒற்றியிருந்தனிராகலின் எம்மரபினரோ வெனச் சந்தேகிக்கத்தக்கவரே நீர்யாரென வினாவியதாகக் கொண்டனரெனவும், நடவாதவரென்பது-நண்ணாரிடத்துச்செல்லாதவர், அம்பலத்திலே காளியோடு நடனவாதையுடையவர் எனப் பொருள்பட்டு நிற்பதன்றியும், நீ நண்ணினமையாலும் நின்னால் அழகிய பலன் சித்தித்தலாலும் நின்னினின்றும் யாம் நடவாதவரே யென்றாரெனவும், நண்ணாரிடத்துநட., அம்பலத்து வா., தவர்நாம் என்றாரெனவும், இங்ஙனம் பலபொருள்பட்டுநிற்பதோர்க. அண்ணல்-பெருமையிற் சிறந்தோர்; இது விளியேற்றது. நண்ணார்-பகைவர், அணுகத்தகாதவர். அம்பலம்-சபை, அழகிய பிரயோசனம். அருகுவருதல்-இனி ஒற்றியிருந்தவராகேமெனக் கூட்டத்தைநாடி அணுகவருதல். ௨

* திருவெங்கையுலா-அடி-௫௧௰.

பிட்டினதிமண்சுமந்தவொற்றிப்பிச்சைத்தேவரிவர்தமைநான்
றட்டின்மலர்க்கையிடத்தெதுவோதனத்தைப்பிடியுமென்றுரைத்தேன்
மட்டினொருமூன்றுடனேழுமத்தர்தலையீதென்றுசொலி
யெட்டிமுலையைப்பிடிக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பிட்டின் நதி மண் சுமந்த ஒற்றி பிச்சைதேவர் இவர்தமை—பிட்டின்பொருட்டு வைகையாற்றின் மண்ணை முடியிற்சுமந்தவரும் திருவொற்றியூரில் வாழ்பவரும் பலியேற்றுண்பவருமாகிய இக்கடவுளை; தட்டின் மலர் கையிடத்து எது—(கொடுத்தலில்) தடைபடாத செந்தாமரைமலர்போலும் கரத்தில் (உள்ளது) என்னை?; ஓதனத்தை பிடியும் என்று நான் உரைத்தேன்—அன்னத்தை (அதில்) ஏற்றுக்கொள்ளும் என்று நான் பகர்ந்தேன்; ஈது மட்டின் ஒரு மூன்றுடன் எழு மத்தர்தலை என்று சொல்லி—இது எமது கையிலுள்ளது தேனையுடைய ஒருபதுமத்தரின் (பிரமாவின்) சிரம் என்று (இவர்விடை) கூறிவிட்டு; எட்டி முலையை பிடிக்கின்றார்—தாவி (என்) தனத்தைப் பற்றுகின்றார்; எடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) கையிடத்தது எது ஓதனத்தைப் பிடியுமென்றவழி எது வென்னுங் கேள்விக்குப் பிரமதேவர் கபாலமென விடையிறுத்து, ஓதனமென்பதன் ஓகாரத்தை முந்திய எதுவென்பதனொடு புணர்த்த வினாவிடைச்சொல்லாகக்கொண்டு தனத்தைப்பிடிக்கின்றாரென்பது. ஒரு மூன்றுடன் எழு-ஒருபது; இத்துடன் மத்தரென்பது சேர, ஒருபதுமத்தரென்றாகி, முன்மடித்த பிரமதேவருள் ஒருவனை யுணர்த்திநின்றது. ௬

மடையிற்கயல்பாயொற்றிநகர்வள்ளலாகுமிவர்தமைநா
னடையிற்கனிவாற்பணியென்றேயருளீருரியீருடையென்றேன்
கடையிற்படுமோர்பணியென்றேகருதியுரைத்தேமென்றுரைதந்தென்
னிடையிற்கலையையுரிகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மடையில் கயல் பாய் ஒற்றிநகர் வள்ளல் ஆகும் இவர்தமை—நீர்மடையிற் சேல்கள் எதிரேறிப்பாயும் திருவொற்றியூரிலமரும் தியாகேசராகிய இவரை, நான் அடையில்—யான் உம்மிடம் வந்தடைந்தால்; உரியீர் உடை கனிவால் பணி என்றே அருளீர் என்றேன்—உம்முடைய தோலாகிய குளிர்ந்த ஆடையைப் பட்டாடையென்றே இரக்கத்தால் அருள்கின்றீரில்லை என்றிசைத்தேன்; (யான்இசைத்தது) கடையில் படும் ஓர் பணிஎன்றே கருதி—கடையிற்பொருந்திய பட்டாடையென்றே சிந்தித்து; உரைதேம் என்றுரைத்து—பின்னுரை மிகவினிதென்று கூறி; என் இடையில் கலையை உரிகின்றார்—என்மருங்கிலுள்ள ஆடையை யவிழ்க்கின்றார், எடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) தோலாகிய பட்டாடையை அருளீரென்றேனாக, இவர் அவ்வாக்கியத்தை "அருளையுடையீர் எனதுடை (பழையதன்றிக்) கடையிற் பொருந்

தியதொரு புதியபட்டாடையென்றே கருதி உரியீர்” என்றதாகக்கொண்டு, கலையை யுரிகின்றாரென்பது. தொடுதற்குப் பரிகத்தவுடைமைதோன்றக் கடையிற்படுமோர் பணியெனவும், தமதாடை முதலியவற்றினும் தாழ்ந்தன வாயினும் தலைவராடையாதியவற்றை வெஃகல்விரகமங்கைய ரியல்பாகலின், உரியுடையருளீரெனவுங் கூறியதென்க. பட்டாக விதப்பதை * “பெட்டுப் பட்டாவுரி கொண்டோன்றன் வெங்கைப் பிரான்” என்பதனாலும், தலைவராடை வெஃகலை † “பட்டினை யொழித்தனள் அதழுக்காமெனு நின்றுகிலி னுக்கே” என்பதனாலும் அறிக. பணியென்றது-பாற்கடல் கடைதலிற்பட்ட வாசுகியென்னும் பணியெனக்கருதி, ‘வா, சுகிப்பாயாக என்றருளீர் ; உடையுரியீர்; என்றதாகக்கொண்டு கலையையுரிகின்றாரெனலுமாம். இப்பொருட்க ண்கனிவாற்பணியென்பதற்கு, முதிர்ந்த வாலையுடைய பணியெனவும், கடை-முதனிலைத் தொழிற்பெயரெனவுங்கொள்க. அன்றியும் ‘உரிஉடையீர் உமக்குத் தொண்டுசெய்தொழுகவே பணிப்பீராக’ என்றதாகக்கொண்டு யான் கேட்டது இறுதியிற்கிடைக்கும் ஒரு தொண்டையே என்று சிந்தித்து (அதற்கு விக்கினமாக) என்னிடத்துள்ள கலையைக் களைகின்றாரெனினும் பொருந்தும். இதிற் கலை என்றது கலாதி தத்துவங்களை. ௮

மன்றன்மணக்குமொற்றிநகர்வாணராகுமிவர்தமைநா
னின்றன்பொடுங்கையேந்தனத்தையேற்றோர்கலத்திற்கொளுமென்றே
னன்றன்புடையாயெண்கலத்திலுங்கொண்டிடுவேமென்றுசொலி
யென்றன்முலையைத்தொடுகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மன்றல் மணக்கும் ஒற்றிநகர் வாணர் ஆகும் இவர்தமை—சோலைகளில் மணம்வீசாநின்ற திருவொற்றியூரின்கண் வாழ்பவராகும் இவரை; இன்று அன்பொடும் நான் கை ஏந்து அனத்தை ஓர்கலத்தில் ஏற்று கொளும் என்றேன்—யான் இன்று அன்பினோடும் கையிற்றாங்கிய அன்னத்தை ஒருபாத்திரத்தில் பெற்றுக்கொள்ளும் என்றேன்; அன்பு உடையாய் நன்று நாம் எண்கலத்தில் கொண்டிடுவேம் என்று சொலி--அன்புடையானே! நல்லது யாம் எட்டுககலத்தில் ஏற்றுக்கொள்வேம் என்று கூறி ; என்றன் முலையை தொடுகின்றார்—என்னுடைய தனத்தைத்தீண்டுகின்றனர் ; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) கை ஏந்து அனத்தை ஏற்று ஒருகலத்திற்கொள்ளும் என்று கூறிய வாக்கியத்தை அவர் (யாங்கள்) கையேம் (கோபியோம்) தனத்தை யேற்று ஒருகலம்போலக் கொள்ளும் என்னும் பொருள்படக் கூறிய வாக்கியமாகக்கொண்டு, அன்புடையவளே! ஒருகலத்திலன்று எண்கலத்திற்கொள்கின்றேமென்று கூறி, எனது தனத்தைத் தொடுகின்றாரென்பது. எண்கலம்-எட்டென்னும் எண்ணைக்குறிக்கும் அகரவக்கரம் சேர்ந்தகலம் ; அகலமென்றபடி ; அகலம்-மார்பு. கலம்-பாத்திரம், ஆபரணம். ௯

* திருவெங்கைக்கோவை - சக. † பழமலையந்தாதி - சங.

கோமாற்கருளுந்திருவொற்றிக்கோயிலுடையாரிவரைமத
மாமாற்றியநீரேகலவிமகிழ்ந்தின்றடியேன்மனையினிடைத்
தாமாற்றிடக்கொண்டேகுமென்றேனென்றாவென்றார்தந்தாலென்னை
யேமாற்றினையேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கோமாற்கு அருளும் திருவொற்றிகோயில் உடையார் இவரை — தொண்டைமான் சக்கரவர்த்தியாருக்கு அருள்புரிந்த திருவொற்றியூரில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியவராகிய இவரை; மதமாமாற்றிய நீர் ஏகல்-மதயானையை வென்ற நீர் செல்லற்க; இன்று அடியேன்மனையினிடை அவி ஆற்றிட — இன்று அடியேன்வீட்டில் உணவுசித்தப்படுத்த; தாம் மகிழ்ந்து கொண்டு ஏகும் என்றேன் — தேவரீர் உவந்து உட்கொண்டு செல்லும்என்று கூறினேன்; தா என்றார் — கொடுப்பாயாக என்று கட்டளையிட்டார்; தந்தால் என்னை ஏமாற்றினையே என்கின்றார் — கொடுத்தால் என்னை ஏமாற்றிவிட்டனையேஎன்றிசைக்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) திருமாலுக்கருளும் இவரையெனினும், மாந்தாதாவுக்கு அருளிய இவரை எனினும் ஆம். நீர்கலவியின் மகிழ்ந்து அநுபவித்தேகும் என்றதாகக்கொண்டு ஏமாற்றினையே என்கின்றாரென்பது. என்னையென்பது ஒருவராலும் ஏமாற்றுதற்கரிய என்னை யெனவும், இஃதொருவியப்பென்னை யெனவும் பொருடந்து நின்றது. ஏமாற்றல் - நீரேயென்ற ஏகாரத்தைப் பிறிதுமொழியின் முதலெழுத்தாக மாற்றலுமாம். ௬

அம்மாலயனுங்காண்பரியீர்க்கமரும்பதிதான்யாதென்றே
னிம்மாலுடையாயொற்றுதற்கோரெச்சமதுகண்டறியென்றார்
செம்மாலிஃதொன்றென்னென்றேன்றிருவேபுரிமேற்சேர்கின்ற
வெம்மான்மற்றொன்றென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அம்மால் அயனும் காண்பு அரியார்க்கு-அத்திருமாலும் பிரமதேவரும் காணுதற்கரிய தேவரீருக்கு; அமரும் பதியாது என்றேன்-வீற்றிருக்குந் தலம் எதுவென்று வினவினேன்; இம்மால் உடையாய் — (நமது நகர்தெளியாத) இம்மயக்கமுடையவளே!; ஒற்றுதற்கு ஓர் எச்சம் — ஒற்றுதல்வினைக்குரியதொரு எச்சமே நமது பதியாம்; அதுகண்டு அறி என்றார் — அப்பதியை நீ யூகித்துணர்வாயாக என்று பணித்தார்; செம்மால் இஃது ஒன்று — பெருமையிற் சிறந்தவரே! இஃதொரு பெயரேயாம்; மற்று ஒன்று என் என்றேன் — அத்தலத்திற்குரிய பிறிதொரு பெயர் யாதென்று வினவினேன்; திருவே — இலக்குமிபோல்பவளே!; புரிமேல் சேர்கின்ற எம்மான் மற்று ஒன்று என்கின்றார் — புரி யென்னுமொழி பின்னே சேரப்பெற்ற எமது மூலப்பகுதிப் பெயரேபிறிதொருபெயர் என்றியம்புகின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) உம்மை மாலென்புழியுங் கூட்டப்பட்டது. தான் அசை. ஒற்றுதல் வினைக்குரியஎச்சம் ஒற்றி என்னும் வினையெச்சம். அவ்வொற்றி யென்னும் சொல்லாலுணர்த்தப்படும் ஊர் ஒற்றியூர். ஒற்றுதல் - உளவறிதல். மான் மூலப்பகுதி; இது பலதத்துவோற்பத்திக்கு மூலமாதல் பற்றி மூலப்பகுதி

வெனப்பட்டது. மூலம் ஆதியாகவின் புரிமேற் சேர்கின்ற மானென்பது ஆதி புரியென்னும் அத்தலத்திற்குரிய பிறிதொருபெயரையுணர்த்தியபடி. தலைவி செம்மாலென விளித்தமையால், தலைவர் திருவேயென விளித்தாரெனக. எ

கண்கள்களிப்பவீண்டுநிற்குங்கள்வரிவரூரொற்றியதாம்
பண்களியன்றதிருவாயாற்பலிதாவென்றார்கொடுவந்தேன்
பெண்கடாலீதன்றென்றார்பேசப்பலியாதென்றேனின்
னெண்கண்பலித்ததென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கண்கள் களிப்ப ஈண்டு நிற்கும் கள்வர் இவர் ஊர் ஒற்றியாம்—எனது கண்கள் களிப்புறுமாறு ஈண்டு எழுந்தருளிநிற்கும் கள்வரான இப்பெருமானது ஊர் ஒற்றிநகராகும்; பண்கள் இயன்ற திருவாயால் பலிதா என்றார்—இசைபாடிவந்த திருவாக்கால் பிக்ஷைதருவாய் என்றனர்; கொடுவந்தேன்—யான் இடுதற்குப் பிக்ஷையைக் கொணர்ந்தேன்; பெண்கள் தரல் ஈது அன்று என்றார்—இதுகண்ட இவர் பெண்கள் தருவது இப்பிக்ஷையல்லவே என்றார்; பேசு அப்பலியாது என்றேன்—தேவரீர் குறிப்புமொழியிற் கூறும் அப்பிக்ஷையாதோ? (அறைவீர்) என்றேன்; நின் எண் கண் பலித்தது என்கின்றார்—பெண்ணே! நினது எண்ணத்திற்றோன்றியதெதுவோ? அதுவே என்கின்றார்; எடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) கள்வரென்றது-உயிர்கடோறும் கலந்திருந்தும் அவற்றாலுணரப்படாதுள்ள நிலைமைநோக்கி என்க. ஒற்றியது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி; இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க. பலிதாவென்பது எமதெண்ணப்படி பலித்தவளே யெனவும், பெண்கள் என்பது பொதுமொழியேனும் வாழ்க்கைத்துணைவியரெனவும், பேசப்பலியாதென்பது இவ்வண்ணம் பேசில் உமக்கு ஒன்றும் பலியாதெனவும், எண்கண் பலித்ததென்பது எண்ணத்தின்கண் அல்லது எண்ணப்படுங் கண்ணின்கண் பலித்ததேயாகவும் பேசப்பலியாதென மருட்டுதல் குய்யமொழியன்றி மெய்ம்மைமொழியன்றெனவும் இங்ஙனம் பிறபொருள்பட்டு நிற்பதும் ஓர்க. எண்கண்ணென்பதற்கு அக்கண்ணென அகரச்சுட்டாக்கலுமாம். பலித்தல்-கூட்டவிழைவுவாய்த்தல்.

ஆராமகிழ்வுதருமொருபேரழகரிவரூரொற்றியதா அ
நேராய்விருந்துண்டோவென்றார்நீர்தான்வேறிங்கிலையென்றேன்
வாரார்முலையாய்வாயமுதுமலர்க்கையமுதுமனையமுது
மேராயுளவேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஆரா மகிழ்வுதரும் ஒரு பேரழகர் இவர் ஊர் ஒற்றியதாம்—அது பவிக்கத் தெவிட்டாத மகிழ்வைத்தரும் ஒப்பற்ற மிக்க சுந்தரராகிய இவரது ஊர் ஒற்றிநகராம்; நேராய் விருந்து உண்டோ என்றார்—எனக்கு நேர்மையா வேறு விருந்து வந்ததுண்டோ என்றனர்; நீர்தான் வேறு இங்கு இலை என்றேன்—தேவரீரேயன்றி வேறொருவரில்லை என்றனன்; வார் ஆர் முலையாய்—கச்சையார்ந்த கொங்கைகளையுடையாய்!; வாயமுதும் மலர்க்கையமுதும்

மனையமுதும் வாய் உளவே என்கின்றார்—வாயமுதமும் மலர்போன்ற கைத் தெடுத்துவந்த அமுதமும் மனையிலுள்ள அமுதமும் அழகாக அமைந்திருக்கின்றனவே என்கின்றார்; எடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) நேராய்வராய் வினையெச்சத்திரிபுகள். நேர்-நேர்மை, தகுதி. நீர் தான் என்றதை ஜலமே என்று கூறியதாகக் கொண்டு மூவகை யமுதிருக்க இங்ஙனம் மொழிவது தகுமோ? என்று கூறியபடி. வாயமுது - அமுதுபோலும் வசனம், அதரபானம். கையமுது - கையிற் கொணர்ந்த அன்னம் கையாற் புரியும் ஆலிங்கனமாதியன. மனையமுது - வீட்டிலுள்ள அன்னம் கலப்பின்பம்.

அடுத்தார்க்கருளுமொற்றிநகரையரிவர்தாமிகத்தாகங்
கடுத்தாமென்றார்கடிதடநீர்கண்டீரையங்கொளுமென்றேன்
கொடுத்தாய்கண்டதிலையையங்கொள்ளுமிடஞ்சூழ்ந்திடுங்கலையை
யெடுத்தாற்காண்பேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அடுத்தார்க்கு அருளும் ஒற்றிநகர் ஐயர் இவர்தாம்—தம்மை யடுத்தோர்க்கருளுங் குணத்தரான ஒற்றிநகர் நாயகராகிய இவர்; மிக தாகம் கடுத்தாம் என்றார்—மிகவும் தாகம் அதிகரிக்கப் பெற்றோமென்றார்; (அதற்கு நான்) கடிதடம் நீர்கண்டீர் - மலர்மணம் வாய்ந்த குளத்தில் சலத்தைக் கண்டேயிருப்பீர் (அதனை அங்குப் பருகக் கடவீர்) : ஐயம் கொளும் என்றேன்—பிக்ஷையை இங்கு ஏற்றுக் கொளுமென்றேன்; (இதற்கிவர்) கொடுத்தாய் கண்டதில்லை ஐயம் கொள்ளும் இடம் சூழ்ந்திடும் கலையை எடுத்தால் காண்பேம் என்கின்றார்—கொடுத்ததனை கண்டதுமாத்திரமில்லை ஐயங்கொள்ளும் இடத்தைச் சூழ்ந்த கலையினை நீக்கினால் காண்போம் என்கின்றார்; எடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) கடிதடநீர் கண்டீரென்றாகலின் ஐயங்கொளும் என்றதனை, இவர் நிதம்பத்தை நீர் கண்டீராகலின் அதினுசரும் பிக்ஷையை நுகருமென்றதாகக்கொண்டு, நிதம்பமும் பிக்ஷையும் நீ உள்ளபடி யீந்தும் யாம்காணப்பெற்றிலேம்; இடையே மறைத்துள்ள ஆடையை நீக்கின் காணவும் நுகரவும் பெறுவேம் என்கின்றார் போலும் இது என் என்றபடி. இனி, தாக மிக்கோம் என்றாராகலின்; என்னிடை யுள்ளது உமது தாகந் தணிக்கவல்ல கடிதடநீர்கண்டீர் இதமுதன்மைபெற்ற ஜலம் உட்கொள்ளுமென்றேன்; இவர் நீ ஈந்த பொருளை மறைத்துள்ளகலையை நீக்கின் காண்பேமென்கின்றார், இது என் என்னலும் ஒன்று. தாகமென்பது நீர்வேட்கையையும் காமவேட்கையையும், கடிதடமென்பது மலர்மணமிக்க தடாகத்தையும் மகளிரல்குலையும், நீரென்பது முன்னிலையையும் ஜலத்தையும், கண்டீரென்பது முன்னிலை வினைமுற்றையும் முன்னிலையசையையும், ஐயமென்பது பிக்ஷையையும் அழகியஜலத்தையும், ஐயங்கொளுமிடமென்பது உண்டோ இல்லையோவென ஐயுறுதற்கிடமான இடையையும் சுரத்தையும், கலையென்பது இடையாடையையும் பிக்ஷையை மறைத்துக் கொணர்ந்த கையாடையையும் உணர்த்தி நின்றன. ௰

இந்தாரிதழியிலங்குசடையேந்தலிவரூரொற்றியதாம்
வந்தார்பெண்ணேயமுதென்றார்வரையின்சுதையிங்குண்டென்றே
னந்தார்குழலாய் பசிக்கினும்பெண்ணாசைவிடுமோவமுதின்றே
லெந்தாரந்தாவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) இந்து ஆர் இதழி இலங்கு சடை ஏந்தல் இவர் ஊர் ஒற்றியதாம்—சந்திரனும் ஆத்திமலரும கொன்றை மலரும் திகழப்பெற்ற கோடீரத்தையுடைய தலைவராகிய இவரது ஊர் ஒற்றிநகராம்; வந்தார் பெண்ணே அமுது என்றார்—(என்னருகில்) வந்தவராய்ப் பெண்ணே! அமுது தருவாய் என்றனர்; இங்கு வரை இன் சுதை உண்டு என்றேன்— இங்கே (ஐயரே!) கொள்ளத் தக்க இனியபால் உண்டு கொள்ளுமென்றேன்; அம் தார் குழலாய்—அழகியமாலை சூடிய கூந்தலையுடையவளே!; பசிக்கினும் பெண் ஆசை விடுமோ—பசித்திருக்கினும் பெண்ணாசை யகலுமோ?; அமுது இன்றேல்—அமுது இல்லையானால்; எம் தாரம் தா என்கின்றார்—எமது தாரத்தையாவது தருவாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஏந்தல் - ஏந்துதல், எவராலும் ஏந்தத்தக்க புகழினையுடையவர் என்றபடி, தொழிலாகுபெயர். வந்தார் - முற்றெச்சம். அமுதென்று கேட்டதற்கிணங்கச் சுதையுண்டென்றது சொன்னயம். வரையின் சுதையென்பது கொள்ளத்தக்க இனிய பாலெனவும் மலைத்தேனெனவும் பொருள் பயப்பவும் இவர் அங்ஙனம் கொள்ளாது மலைமகளாகிய பார்வதியாரெனப் பொருள் கொண்டு அமுதிடுதற்கு மனமின்றேல், எம்மனைவியாகிய மலைமகளைத் தா என்கின்றார். அமுதின்றெனை இன்மைமொழியுரையாது யான் இங்ஙனம் சுதையுண்டெனச் சொற்றதாகக் கொண்டனரோ இதுவென்னை? என்பது. சுதை - பால், அமுது, மகள். ௧௧

தன்னந்தனியாயிங்குநிற்குஞ்சாமியிவரூரொற்றியதா
மன்னந்தருவீரென்றார்நானழைத்தேனின்னையன்னமிட
முன்னம்பசிபோயிற்றென்றார்முன்னின்றகன்றேனிவ்வன்ன
மின்னந்தருவாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தன்னம் தனியாய் இங்கு நிற்கும் சாமி இவர் ஊர் ஒற்றியதாம்—மிக்கதனியராய் இங்கு நிற்கின்ற கடவுளாகிய இவரது ஊர் ஒற்றிநகராம்; அன்னம் தருவீர் என்றார்—பெண்களே! அன்னத்தை உதவுவீர் என்றனர்; அன்னமிட நின்னை நான் அழைத்தேன்—இவர்க்கு அமுதளிக்கத் (தோழியே!) நின்னை யானழைத்தனன்; முன்னம் பசி போயிற்று என்றார்—முன்னிருந்த பசி ஒழிந்ததென்றனர்; முன் நின்று அகன்றேன்—இது கூறலும் இவர் முன்னின்றும் மீண்டனன்; இ அன்னம் இன்னம் தருவாய் என்கின்றார்—இந்த அன்னத்தை இன்னுமொருமுறை தருதி என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) தன்னந்தனியென்பது பெண்ணம்பெரிது என்னுஞ்சிறிது கன்னங்கரிது என்பன போலத் தனிமை மிகுதியை யுணர்த்துவதோர் சொல். மூன்னமென்பதில் அம் சாரியை. அழைத்தற்கு முன்னமே யெனலுமாம். தோழியை யழைத்த இன்குரலோசையே பசியாற்றிற்றென்பார் பசிபோயிற்றெனவும், இவ்வன்ன நடையை இன்னுமொருகால் நடந்து காட்டுதி என்பார் இவ்வன்ன மின்னந்தருவாயெனவும் கூறினார். கூறவே, இன்குரலோசையும் இனியநடையுமே அமையும், வேறுணவும்வேண்டுமோ? என்றாராயிற்று. கஉ

மாறாவழகோடிங்குநிற்கும்வள்ளலிவரூரொற்றியதாம்
வீறாமுணவீயென்றார்நீர்மேவாவுணவிங்குண்டேன்றேன்
கூறாமகிழ்வேகொடுவென்றார்கொடுத்தாலிதுதானன்றென்றே
யேறாவழக்குத்தொடுக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மாறா அழகோடு இங்கு நிற்கும் வள்ளல் இவர் ஊர் ஒற்றியதாம்—நீங்காத அழகுடன் இங்கு நிற்கின்ற கொடையாளரான இவரது ஊர் ஒற்றிநகராம்; வீறு ஆம் உணவு ஈ என்றார்—பெருமை தங்கிய நல்ல உணவை நல்குவை என்றனர்; நீர் மேவா உணவு இங்கு உண்டேன்றேன்—நீரோடு கலவாத சுத்தவுணவு இங்கு உண்டு என்றனன்; கூறா மகிழ்வே கொடு என்றார்—பெண்ணே! இது சொல்லப்படாத மகிழ்வுதந்தது தருதி யென்றனர்; கொடுத்தால் இதுதான் அன்று என்றே—கொடுக்கப்புகில இது அல்லவென்று; ஏறா வழக்கு தொடுக்கின்றார்—பிறரொவ்வாத அழிவழக்கைத் தொடுக்கின்றனர்; எடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) புனல் கலவாதவும் புதியவும் கனியாதியவுமாகிய உணவுகளைச் சுட்டி நீர் மேவா வுணவென்று உணர்த்தினேனாக; இவர் தவக்கோலமுடைய நீர் இதுகாறும் மேவிய வுணவு பேரின்பமளிப்பனவே அவை ஈங்குக்கிட்டா: நீர்மேவாத சிற்றின்பமளிக்கு முணவே ஈங்குள்ளன என்றதாகக்கொண்டு; யான் அவ்வுணவுகளைத்தரின நீ கூறியது ஈதல்லவேயென்று நியாயசபைக்கேலாத வழக்கை யிசைக்கின்றாரென்பது. நீரென்பது ஜலத்தையும் மூன்னிலையையும், மேவா வென்பது கலவாத விரும்பாத வென்னும் பொருளையும், உணவென்பது உணவையும் அநுபவத்தையும் விளக்கி நின்றன. நீர்மேவா வுணவென்பது நீர்விரும்பிய விடம்போல்வதல்லாத வுணவெனவும் பொருள் பட்டுநிற்பதோர்க. ஏறாவழக்கு - பிறமகளிரைககாதலித்தோர் அது காரணமாக இசைக்கும் அநீதிவழக்கு. கங

வண்மையுடையார்திருவொற்றிவாணரிவர்தாம்பலியென்றா
ருண்மையறிவீர்பலியென்னையுணர்கிலீரொன்றுஐயென்றேன்
பெண்மைசிறந்தாய்நின்மலையிற்பேசும்பலிக்கென்றடைந்ததுகா
மெண்மையுணர்ந்தேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வண்மை உடையார் திருவொற்றியோர் இவர்தாம் பலி என்றார்—கொடைக்குணமுடையராய்த் திருவொற்றியூரில் வாழ்பவராகிய இவர் பலி என்று வந்தனர்; உண்மை அறிவீர்—உண்மையை உணர்ந்தவரே!; என்னுழை பலி எண்மை உணர்கிலீர் என்றேன்—என்னிடத்தில் பிச்சையேற்குமெளிமையை அறிகிலீர் என்றேன்; பெண்மை சிறந்தாய் நின் மனையில் பேசும் பலிக்கென்று நாம் அடைந்ததும்—பெண்ணியல்பிற் சிறந்தவளே! நினது இல்லத்தில் வியக்கும் பிக்ஷைக்கென நாமடைந்ததும; எண்மை உணர்ந்தே என்கின்றார்—நீ எளிமையிற் பிக்ஷையளிப்பையென்பது துணிந்தே என்கின்றார்; எடி சேடி இது என்? எ - று.

(வி-ரை.) அறிவீர் - காலமயக்கு. பெண்மை - பெண்தன்மை; மை தன்மைப் பொருட்டு. கொடைக்குணத்தராயும் உண்மையுணர்ந்தவராயு மிருக்கிற நீர் பெண்ணியல்புடைய என்னிடம் எற்றல் இழிவென வுணர்ந்திரில்லை என்றேனாக; இவர் பலி எண்மை என்பதற்குப் பலிக்குமிலேசுத்தன்மை எனப்பொருள்கொண்டு பலியெண்மை யுணர்ந்தே அடைந்தது என்கின்றாரென்பது. இவர் பலி வேண்டுமென்னலும், யான் எனதுள்ளத்துள்ள மையை யறிவீர், அந்த மையிருத்தலால் என்னுழைப் பலியெளிதாகச் சித்திக்குமென்பதை யுணர்கிலீரென்றேனாக; நாம் அடைந்ததும் எண்மை யுணர்ந்தேயென்கின்றாரென்பதொரு பொருளுக்குடைமையும் அறிக. எனவே, அகத்துள்ள மையையே மையாகப் பலியேற்க வேண்டிய வாறாயிற்று. இதில் மை - மயக்கம், ஆடு. பலி யென்பது பிக்ஷையையும் பலிப்பாயாக வென்னும் முற்றையும் தேவதா பலியையும், உண்மை யென்பது சத்தியத்தையும் உளதாந் தன்மையையும உள்ளமயக்கத்தையும், எண்மை யென்பது எளிமையையும் எண்ணத்தியல்பையும் எணணப்படு மயக்கத்தையும், பேசும் பலி யென்பது வியக்கும் பிக்ஷையையும விநோதமாகப் பேசிக்கொண்டுவருவதற்கேதுவாகக் கொண்ட பலிதொழிலையும உணர்த்தின. ௧௭

திருவையளிக்குந்திருவொற்றித்தேவரீர்க்கென்விழைவென்றேன்
வெருவலுனதுபெயரிடையோர்மெய்நீக்கியநின்முகமென்றார்
தருவலதனைவெளிப்படையாற்சாற்றுமென்றேன்சாற்றுவனேல்
இருவைமடவாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) திருவை அளிக்கும் திருஒற்றி தேவரீர்க்கு விழைவு என் என்றேன்—அன்பர்க்கு இம்மை மறுமை வீடென்னும் பேறுகளைப் பாலிக்கும் திருவொற்றியூரிலமரும் தேவரீர்க்கு இஷ்டம் யாது என்று வினவினேன்; வெருவல் உனது பெயரிடை ஓர் மெய் நீக்கிய நின்முகம் என்றார்—பெண்ணே! அஞ்சற்க: நினது பெயரின் இடையில் ஒரு மெய்யை எடுக்கப்பட்ட நின்னுடைய முகமே விருப்பம் என்றனர்; அதனை தருவல் வெளிப்படையால் சாற்றும் என்றேன்—அதனைத் தருவேன் வெளிப்படையாகச்சொல்வீர் என்றேன்; மடவாய் சாற்றுவனேல் இருவை என்கின்றார்.

பெண்ணே ! நான் சொல்லுவனேல் வைவையே என்கின்றார் ; எடி சேடி இது என் ? எ-று.

(வி-கு.) நம்பி யென்பது ஆடவரிற்சிறந்தார்க்கும் நங்கை யென்பது பெண்களிற்சிறந்தார்க்கும் உரிய பெயராகலின், பெண்களிற்சிறந்த இவட்குரிய சிறப்புப்பெயர் அதுவேயாதல்பற்றி உனது பெயரென்றார். எனவே, நங்கை என்பதில் அது இடையொற்று நீக்க 'நகை' எனநின்று 'முகம்' என்பதுகூட நகைத்லையுடைய முகமெனப் பொருள்பட்டு நின்றது. நகைமுகந்தருவையேல் போதுமென்பது கருத்து. 'நகைமுகம்'-அணிகளணியத்தக்க இடம் எனக்குறிப்புரையாக்கித் தனம் எனக்கோடலும் ஒன்று. முகம் - இடம். என்விழைவென்பது எனது விருப்பமெனவும் யாதுவிருப்பமிருக்கின்றதெனவும் பொருள் பயப்பதும் உணர்க. இருவை - இரண்டுவை ; அது வைவவை என்பது ; திட்டுவை யென்னும் பொருட்டு. ௧௫

முக்கைதமறையோன்புகழொற்றிமுதல்வரிவர்தம்முகநோக்கிக்
கந்தையுடையீரென்னென்றேன்கழியாவுன்றன்மொழியாலே
யிந்துமுகத்தாயெமக்கொன்றேயிருநான்குனக்குக்கந்தையுள
திந்தவியப்பென்னென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) முக்கை மறையோன் புகழ் ஒற்றி முதல்வர் இவர் தம்முகம் நோக்கி—அநாதியான வேத முணர்ந்த பிரமனால் புகழப்பெற்ற ஒற்றி நகரின் முதல்வரான இப்பெருமானது முகத்தை நோக்கி ; கந்தை உடையீர் என்னென்றேன்—கந்தையையே உடையாகக் கட்டியுள்ளீர் இது என்னை யென்றனன் ; இந்து முகத்தாய் எமக்கு ஒன்றே—சந்திரவதனியே ! எமக்கு ஒரு கந்தையே உளது ; கழியா உன்றன் மொழியாலே உனக்கு இருநான்கு கந்தையுளது—பெருமித நீங்காத உனது சொற்களாலே உனக்கு எட்டுக் கந்தையுளதே ; இந்தவியப்பு என் என்கின்றார்—இந்த ஆச்சரியம் என்னையோ? என்கின்றனர் ; எடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) பிரம தேவர் பூசித்து யாகநடாத்திப் புகழ்ந்த தலமாகலின் மறையோன் புகழொற்றி யெனவும், இறைவர் துன்னம்பெய் கோவணமாக உடைகொண்டிருத்தலின் கந்தையுடையெனவும் விசேடிக்கப்பட்டன. இருநான்கு - எட்டு, எட்டென்னும் எண்ணைக் குறிக்கும் அகரத்தைக் கந்தையோடு சேர்க்க அகந்தை என்று பொருள்படும். படவே, தியாகேசராகிய நம்மைக் கந்தையுடையீரென்று பழித்தது உனதகந்தையே யாகலின் எமக்கு ஒரு கந்தையும் உனக்கு எட்டுக்கந்தையும்உண்டென்று எதிர்பழித்தபடி. ௧௬

துன்னலுடையாரிவர்தமைநீர் துன்னும்பதிதான்யாதென்றே
னென்னைவிராவிலைமைத்தெளிவானின்றினதுபெயரென்று
ருன்னலுறுவீர்வெளிப்படவீதுரைப்பீரென்றேனுரைப்பேனே
லின்னில்லைடாவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) துன்னல் உடையார் இவர்தமை நீர் துன்னும் பதிதான் யாது என்றேன்—வைத்த சிலையையுடைய இவரை நீவிர் வசிக்கும் பதியாதென்று கேட்டனன்; நென்னல் இரவில் எமை தெளிவானின்ற நினது பெயரென்றார்—நேற்றிரவில் (எமக்குங் காதலுளதோவென்று) எம்மை உணரமுயன்று நின்ற நினது பெயரே என்றனர்; உன்னல் உறுவீர்—யாவராலுந் தியானிக்கப்படும் பெரியீரே!; ஈது வெளிப்பட உரைப்பீர் என்றேன்—நீர் கூறியதைத் தெளிவாக உரைக்கக்கடவீரென்றேன்; உரைப்பேனேல் இன்னல் அடைவாய் என்கின்றார்—யான் கூறுவனேல் நீ மிக்க துன்பமுறுவை என்கின்றார்; வடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) தெளிவானின்ற நினது பெயரென்பது தலைவர் கருத்துணரும்படி ஒற்றை விடுத்து ஆய்ந்துநின்றமையிற் போந்த ஒற்றியென்னும் பெயர் சுட்டி நின்றது. ஒற்றி - ஒற்றையாளுதலுடையவள். ஒற்றென்பது அரசு அமைச்சு என்பனபோல அன் விகுதி குன்றியபெயர். ஒற்றன் - உளவறிபவன். ஒற்றியெனவே ஒற்றியூரென்றாராயிற்று. இன்னலென்பது யாம் இரவு இரகசியமாக நடாத்தியதை இவர் உணர்ந்துகொண்டதுமன்றிப் பலரறிய வெளிப்படுத்தலுஞ் செய்தனரே யென்னு நாணமும், இதனால் இனி யாது விளையுமோ வென்னும் அச்சமுங்காரணமாக நேரும் வருத்தமிகுதியின் மேற்று.

சிமைக்கொள்சூலத்திருமலர்க்கைத்தேவர்நீரெங்கிருந்ததென்றே கவ
னமைக்கண்டளவின்மாதேநீயிருந்ததெனயாமிருந்ததென்றா
ரமைக்குமொழியிங்கிதமென்றேனுமுன்மொழியிங்கிதமன்றோ
விமைக்குமிழையாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) சிமை கொள் சூலம் திரு மலர் கை தேவர் நீர் எங்கு இருந்தது என்றேன்—முச்சிகையுள்ள சூலப்படையை அழகிய மலர்போலுங் கரத்திற் கொண்ட தேவரே! நீர் எங்கு இருந்தது என்றனன்; மாதே யாம் இருந்தது எமை கண்டளவில் நீ இருந்ததென என்றார்—பெண்ணே! யாம் இருந்தது எம்மைக் கண்டவளவில் நீ இருந்ததுபோல என்றனர்; அமைக்கும் மொழி இங்கிதம் என்றேன்—நீர் விடையமைத்துக் கூறிய மொழி மிகக் குறிப்புடையதென்றனன்; ஆம்—அஃதுண்மையே; இமைக்கும் இழையாய்—மின்னும் அணிகலையுடையாய்!; உன்மொழி இங்கிதம் அன்றோ என்கின்றார்—உனது கூற்று மிகக்குறிப்புடையதன்றோ? என்கின்றனர்; வடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) திருமலர்-இலக்குமிக்கு இருப்பிடமான தாமரையுமாம். கண்டளவில் என்பதில் அகரந்தொக்கது. எமைக்கண்டளவில் காதலைக் காட்டாது ஒதுங்கி நீ ஒற்றியிருந்தாயன்றோ? அங்ஙனமே நாமும் ஒற்றியிருந்தது என்றனர்; எனவே, ஒற்றியூர் எமதூர் என்றபடி. இங்கிதமென்பது குறிப்பு மொழியெனவும், இங்கு இதமெனவும் பொருள்பட்டு நின்றது. நீயிருந்ததென ஆமிருந்தது எனப்பாடமோதி, நீரெங்கிருந்த தென்பதற்குப் புனலெங்கிருக்

நமென்று வினவியதாகக்கொண்டு, எமைக்கண்டபோது நீ முகதாமரையி னின்று கண்ணீர்வடிய நின்றதுபோலப் புனலும் கண்ணீர்வடியத் தாமரையிருந்த இடத்தில் இருந்தது என்று ஓர் விநோதப் பொருளுரைத்ததாகக் கூறுதலும் வுண்டு. (கண்ணீர்=கண் + நீர்) கஅ

நடங்கொள்பதத்தீர்திருவொற்றிநங்கள்பெருமானீரன்றோ
இடங்கொள்புகழ்க்கச்சூரிடஞ்சேர்ந்தீரென்றேனின்னடுநோக்காக்
குடஞ்சேர்ந்ததுமாங்கஃதென்றார்குடம்யாதென்றேனஃதறிதற்
கிடங்கர்நடுநீக்கென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நடங்கொள் பதத்தீர் திருஒற்றி நங்கள் பெருமான்—நடனமிடும் பதங்களையுடையீரே! ஒற்றியூரில் அமரும் எங்கள பெருமானே!; நீர் அன்றோ இடம்கொள் புகழ் கச்சூர் இடம் சேர்ந்தீர் என்றேன்—தேவரீரல்லவா? அழிவற்ற புகழ்ச்சியுடைய திருக்கச்சூரென்னுந் தலத்திலுஞ் சேர்ந்திருப்பவர் என்றனன்; நின் நடு நோக்கா குடம் சேர்ந்ததும் அஃது என்றார்—நினது இடையின் மெலிவை நோக்காத குடம் இருந்தும் கச்சூர் இடமே என்றனர்; குடம் யாது என்றேன்—குடமென்பது யாதென்றனன்; அஃது அறிதற்கு இடங்கர் நடுநீக்கு என்கின்றார்—அதை நீ யுணர்தற்கு இடங்கரின் நடுநீக்கு என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) ஆங்கு-அசை. திருக்கச்சூர் சுந்தரமூர்த்திநாயனருக்குப் பெருமான் பிச்சையெடுத்து அமுதருந்திய ஓர் திருத்தலம். ஒற்றியூரரே! கச்சூரிலிருந்தவரென்று கொண்டது, அங்கும் தியாகேசரெனத் திருநாமங்கொண்டு அமரும் ஒற்றுமையால் என்க. கச்சு ஊர் இடம் - கச்சு ஊர்கின்ற இடமாகிய மார்ப. நடுநோக்காக் குடமென்றது விளங்கவைத்தல். நடு - இடை, நடுநிலைமை. இடைநோக்காமை-அதனது நுண்மை குறியாமை. ஏனைகுடங்கள் இடையை ஆதரவாகக்கொண்டு அதுபற்றிநிற்க, தனகுடங்கள் அதனைப் பற்றாதனபோன்று மெலித்திறுமாந்து நிற்றலின் நடுநோக்காக்குடமென்றது. இடங்கர்-நீர்வாழ் விலங்காகியமுதலை; இதில் நடுவெழுத்தை நீக்க முலையென்றாகிக் குடம்யாதென்பதற்கு விடையாய் நின்றது. ககூ

சங்கமருவுமொற்றியுளீர்சடைமேலிருந்ததென்னென்றேன்
மங்கைநினதுமுன்பருவமருவுமுதனீத்திருந்ததென்றார்
கங்கையிருந்ததேயென்றேன்கமலையனையாய்கழுக்கடையு
மெங்கையிருந்ததென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) சங்கம் மருவும் ஒற்றியுளீர்—சங்குகள்தவழும் திருவொற்றியூரிலுள்ளவரே!; சடைமேல் இருந்தது என்னென்றேன்—சடைமீதிருந்தது என்னவென்றனன்; மங்கை நினது முன்பருவம் மருவுமுதல் நீத்து இருந்தது என்றார்—பெண்ணே! நினது முன்பருவம் தான்மருவிய முதலெழுத்தை விட்டதென்றனர்; கங்கையிருந்ததே என்றேன்—கங்கைநீர் இருந்ததே என்றனன்; கமலையனையாய்—இலக்குமி போல்பவளே!; கழுக்கடையும் எம்

கை இருந்தது என்கின்றார்—சூலமும் எமது கரத்திலிருந்தது என்று சொல்கின்றனர்; வடி சேடி இது என்? எ-று.

(வி-கு) செய்தனிலத்தலமாதலால் சங்கம் கடற்சங்கம் என்க. சங்கம கல்விச்சங்கமுதலியனவுமாம். மங்கை என்று விளித்தமையால் அதன் முன் பருவம் பெதுமையாம; அதில் முதனீத்தது—தும்பை; மங்கைப்பருவம (௧௩) வயது வரையும, பெதும்பைப் பருவம் (௧௧) வயதுவரையும். தும்பையேயன்றிக் "கங்கையுமிருந்ததே என்ன, பெருமான் கம் கை இருந்ததென்றதாகக்கொண்டு, நமது கையில் கம்மாத்திரம அன்று, கழுக்கடையுமிருந்தது என்கின்றாரென்பது; கம்-பிரமகபாலம். கழுக்கடை-சூலம். ௨0

துதிசேரொற்றிவளர்தருமதுரையேநீர்முன்னாடலுறும்
பதியாதென்றேனடிபெயர்முற்பகரெழுத்தைப்பறித்ததென்றார்
நிதிசேர்திடுமப்பெயர்யாதுநிகழ்த்துமென்றேனீயிட்ட
தெதுவோவதுகாணென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்) துதிசேர் ஒற்றிவளர் தருமதுரையே நீர் முன் நாடலுறும் பதியாது என்றேன்—அனைவராலும துதிக்கப்பெற்ற ஒற்றியில் ஓங்கிய தருமப்பிரபுவே! தேவரீர் முன்விரும்பிய பதி எதுவோ? என்றேன்; நம்பெயர் முன்பகர் எழுத்தை பறித்தது என்றார்—நமது பெயரில் முன்னே சொல்கின்ற இரண்டு எழுத்தை நீக்கியதென்றனர்; நிதி சேர்திடும அப்பெயர் யாது நிகழ்த்தும என்றேன்—பொருள்போற் போற்றத்தக்க அப்பெயர் யாதோ? கூறவேண்டும் என்றனன்; நீ இட்டது எதுவோ அது காண் என்கின்றார்—நீ இட்டபெயர் எதுவோ அதுதான் என்கின்றனர்; வடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) யான் பொதுப்பட முன் நாடலுறும் பதியாதென்று வினவ, முன் ஆடலுறும பதியாதென்று வினவியதாகக்கொண்டு, அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்தருளிய பதி மதுரையென்றாரென்பது. தருமதுரையே. யென்று விளித்தமைபற்றி நீயிட்டழைத்ததெதுவோ? அதுவென்று கூட்டுணமையின், தருமதுரையென்பதில் முதலீரெழுத்தை நீக்க மதுரையெனப் பொருள்படுவதோர்க. ௨௧

உடற்குச்சுயிராமொற்றியுளீருமதுதிருப்பேர்யாதென்றேன்
குடக்குச்சிவந்தபொழுதினைமுன்கொண்டவண்ணராமென்றார்
விடைகளுக்கருத்தாவாநீர்தாம்விளம்பன்மிகக்கற்றவரென்றே
னிடகருப்புகன்றுமென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) உடற்கு அச்சு உயிராம் ஒற்றியுளீர்—உடலுக்கு உயிர்போல உயிருக்கு உயிராய் விளங்கும் ஒற்றியில்வாழ்பவரே!; உமது திருப்பேர் யாது என்றேன்—உமது திருநாமம் என்னவென்று வினவினேன்; குடக்கு சிவந்த பொழுதினை முன்கொண்ட வண்ணராம் என்றார்—மேற்குச்

சிவக்க பொழுதின்பெயரை முன்னேகொண்ட வண்ணரென்றார்; விடைக்கு கருத்தா ஆம் நீர் தாம் விளம்பல் மிக கற்றவர் என்றேன்—உத்தரமளித்தற்குக் கருத்தாவாகிய நீர் பேசல் மிகக் கற்றவர் என்றனன்; இடக்கு புகன்றாய் என்கின்றார்—பெண்ணே! நீ இடக்குப் பேசுகின்றாய் என்கின்றார்; வடிசேடி இது என்? எ-று.

(வி-ரை.) குடக்குச்சிவந்த பொழுது - அந்தி; அதுமுன்கொண்டவண்ணர் அந்திவண்ணர். விடைக்குக் கருத்தா வென்பது இடபநாயகரென்பதுஞ் சுட்டியது. உன்கேள்விக்கியைந்தவிடை பகர்ந்து நிற்கவும், தருமவிடையையுடைய நம்மைப் பேச்சுக்கற்றவரென்று அதர்மமாகக் கூறினையென்பார், இடக்குப்புகன்றாயென்றார். இடக்கு-வறுபாறு; இறைவர் ஏறு இடபமாதலால், மாறு-அதர்மமாதலறிக. ௨௨

மணங்கேதகைவான்செயுமொற்றிவள்ளலிவரைவல்விரைவேன்
பிணங்கேஞ்சிறிதுநில்லுமென்றேன்பிணங்காவிடினுநென்னலென
வணங்கேநினக்கொன்றினிற்பாதியதிலோர்பாதியாகுமிதற்
கிணங்கேஞ்சிறிதுமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கேதகை மணம் வான் செய்யும் ஒற்றிவள்ளல் இவரை—தாழைமலர்கள் வாசனையை விண்ணுலகயளவும் வீசுந் திருவொற்றியூரிலயரும் தியாகேசராகிய இவரை; வல்விரைவு என்—நீர் அதிவிரைவாகச் செல்லுதல் எற்றுக்கு; சிறிதும் பிணங்கேம் நில்லும் என்றேன்—சிறிதும் மாறுபடோம் நிற்பீரென்றேன்; அணங்கே பிணங்காவிடினும் நென்னல் என—பெண்ணே! நீ மாறுபடாயாயினும் முன்னை நாளைப்போல்; நினக்கு ஒன்றினிற்பாதி அதில் ஓர்பாதி ஆகும்—(அம்மாறுபாடு) உனக்கு அரையதில் ஒருகால் சேரும்; இதற்கு சிறிதும் இணங்கேம் என்கின்றார்—இவ்வேண்டுகோளுக்கு அற்பமும் உடன்படோம் என்றியம்புகின்றார்; வடிசேடி இது என்? எ-று.

(வி-ரை.) நீ பிணங்காவிடினும் நினது அரை பிணங்குதல் ஒருதலையென்பார், ஒருகால் பிணங்குமென்றார். அரைபிணங்குமென்றது உபசாரம். பிணங்குதலாவது—பிணங்கினார் போன்று ஆடையணிகளையொழித்தல். இவ்வியல்பு கூடிச் சுகித்தாலல்லது அகலாதாகலின், இதிலிணங்கேம் என்கின்றார் என்பது. நென்னல் - முன்னைநாள். ஒன்றினிற்பாதி - அரை; அதிலோர் பாதி-ஒருகால். முன்னையநாள் என்பது முன்னைக்நாட்களையும், அரையென்பது இடையையும், ஒருகாலென்பது ஒருகாலத்தையும், ஆகுமென்பது தப்பாமல் பிணங்குமென்பதையும் உணர்த்தின. ௨௩

ஒற்றிநகராரிவர்தமைநீருவந்தேறுவதிங்கியாதென்றேன்
மற்றுன்பருவத்தொருபங்கேமடவாயென்றார்மறைவிடையீ
திற்றென்றறிதற்கரிதென்றேனெம்மையறிவாரன்றியஃ
தெற்றென்றறிவாரென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றி நகரார் இவர்தமை நீர் உவந்தேறுவது, யாது என்றேன்—ஒற்றிப்பதியரான இவரை நீர் விரும்பி இவர்வது எது என்றனன்; மடவாய் உன்பருவத்து ஒருபங்கே என்றார்—மடப்பமுடையவளே! உனது பருவத்தில் ஒரு பங்கையே என்றனர்; ஈது மறைவிடை இற்று என்று அறிதற்கு அரிது என்றேன்—ஐயரே! இது அறியவிடையாகின்றது இதனை இதுவென்று அறிதற்கு அருமையே யென்றனன்; அஃது எம்மை அறிவார் அன்றி எற்றென்று அறிவார் என்கின்றார்—அதனை எங்கிலை அறிபவரான அடியரன்றி ஏனையோர் என்னவென்று அறியவல்லார் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) இங்கு - மற்று - அசைகள். வாலை தருணை பிரவிடை விருத்தை யென்னும் நால்வகைப் பருவப்பெண்களுள் ஈண்டு வினவினள் பிரவிடையே யாகலின் உன்பருவத்தெனவும், விடையென்பது அதிற்பாதிமொழி யாதல் பற்றி ஒருபங்கெனவுங்கூறினர். பிரவிடை—முப்பதுக்குமேல் ஐம்பத்தைந்து வயதுக்குட்பட்டவள். நீர்கூறுவது பொருள் விளங்காத உத்தரமென்னும் கருத்தால், இதுமறைவிடையென்றேனுக; இறைவர் வேதவுருவாகிய இடபம் என்றதாகக்கொண்டு எம்விடையை எம்மையறிவாரன்றிப் பிறரறியாரென்கின்றாரென்பது. எம்மை யென்புழி, ஐ—தலைமையுமாம். உச

கண்ணின்மணிபோலிங்குநிற்குங்கள்வரிவரூரொற்றியதாம்
பண்ணின்மொழியாய்நின்பாலோர்பறவைப்பெயர்வேண்டினம்படைத்தான்
மண்ணின்மிசையோர்பறவையதாவாழ்வாயென்றாரொன்னென்றே
னெண்ணியறிநீயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கண்ணின் மணிபோல் இங்கு நிற்கும் கள்வர் இவர் ஊர் ஒற்றியதாம்—கண்ணின் கருமணிபோல் இங்கு வீற்றிருக்கும் கள்வராகிய இவரது ஊர் ஒற்றிநகரமாம்; பண்ணின் மொழியாய்—பண்போலும் இனிய மொழியுடையவளே!; நின்பால் ஓர் பறவைப்பெயர் வேண்டினம்—உன்னிடம் ஓர்பக்ஷியின் பெயரை விரும்பிவந்தனம்; படைத்தால்—எமக்கு அதனைத் தந்தால்; மண்ணின்மிசை ஓர்பறவையதா வாழ்வாய் என்றார்—இவ்வுலகில் ஒருபக்ஷியதாய் வாழ்வை என்றனர்; என்னென்றேன்—அதுயாது என்றனன்; எண்ணிஅறி நீ என்கின்றார்—நீதானித்து அறிகுவை என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) கண்ணின்மணி என்றது அருமை விளங்குதற்கு. பறவையதா - ஈறுதொக்கது. முன்னர்க்கூறிய பறவை அன்னம் - (சோறு.) பின்னர்க்கூறிய பறவை கிளி - (சுகம்.) ஆகவே, சோறுபடைத்தால் சுகமாகவாழ்வாய் என்றபடி. உரு

சேடார்வளஞ்சூழொற்றிநகர்செல்வப்பெருமானிவர்தமைநா
ளேடார்கரத்தீரொன்டோள்களுடையீரொன்னென்றுரைத்தேனீ
கோடாகோடிமுகநூறுகோடாகோடிக்களமென்றே
யீடாயுடையாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) சேடு ஆர் வளம் சூழ் ஒற்றிநகர் செல்வப்பெருமான் இவர் தமை—பெருமைமிக்க வளஞ்சூழ்ந்த ஒற்றிநகரச்செல்வரான இவரை; நான் ஓடு ஆர் கரத்தீர் எண்தோள்கள் உடையீர் என் என்று உரைத்தேன்—ஓடுதங்கிய கரத்தையுடையீர்! எட்டுத்தோள்களை யுடையவராயிருக்கின்றீர் இது என்னை என்றேன்; நீ கோடாகோடி முகம் நூறுகோடாகோடி களம் என்றே ஈடா உடையாய் என்கின்றார்—நீ கோடாகோடி முகமென்றும் நூறு கோடாகோடிகண்டமென்றும் ஒப்பாகவுடையாய் என்றுரைக்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-க.) என்னே யென்றும் பாடங்கொள்ளின், என்னேயென்பது வியப்பிடைச்சொல் என்க. கோடியென்னும் எண்ணைக் கோடியாற்பெருக்கின் பதுமமென்னும் பேரெண்ணும், அப்பதுமத்தை நூற்றாற்பெருக்கின் சங்கமென்னும் பேரெண்ணும் ஆகும்; ஆகவே, பதுமத்தைமுகமென்றும், சங்கத்தைக் கழுத்தென்றும் ஒப்பாக உடையாய் என்பது. கோடிகோடியென்பது கோடாகோடி யெனத்திரிந்து நின்றது. ஈடாகவென்பது ஈறுதொக்கது; பதுமம் - தாமரை. சங்கம் - சங்கு. ஈடு - ஒப்பு. உசு

தருமஞ்செழிக்கும்பொழிலொற்றித்தோன்றலிங்குநீர்வந்த
கருமஞ்சொலுமென்றேனிவண்யாங்கடாதற்குன்பாலெம்முடைமைத்
தருமம்பெறக்கண்டாமென்றார்தருவலிருந்தாலென்றேனில்
லிருமந்தரமோவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தருமம் செழிக்கும் பொழில் ஒற்றித் தோன்றல்—மரங்கள் செழித்திருக்கும் பொழில்வளைந்த ஒற்றிநகர்த்தோன்றலே!; நீர் இங்குவந்த கருமம் சொலும் என்றேன்—தேவரீர் ஈங்கு எழுந்தருளிய காரியத்தை இயம்புவீரென்றனன்; எம்முடைமை தருமம் இவண் பெறக்கண்டு யாம் உன்பால் கடாதற்கு ஆம் என்றார்—எமதுரிமைப்பொருளாகிய தருமம் இங்கே நீவாய்க்கக்கண்டு (அதற்குமேல்) உன்பால் விரும்பியதை வினவுதற்காம் யாம்வந்தது என்றார்; இருந்தால் தருவல் என்றேன்—நீர் விரும்பியதிருந்தால் ஈவேனென்றனன்; இல் இரு மந்தரமோ என்கின்றார்—நீ ஈவேனென்றிசைப்பதற்கு நின்வீடு தேவலோகமும் மந்தரமலையுமோ? என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-க.) ஒருமுழ யிருப்பினும் சீர்த்தியாதியவற்றால் யாண்டும் தோற்ற முடையனுதல்பற்றித் தோன்றலென்றது; இது தொழிலாகுபெயர். ஈவதுளதாயின் இசைக்கலாமென்னுங் கருத்தாற் போந்தனமாகலின், எமக்குரியதருமம் நின்பால்திகழின் வினவுவது உத்தேசமென்பார் 'வந்தகருமம் எம்முடைத் தருமம் பெறக்கண்டு கடாதற்காம்' என்றும், யாம்விரும்பியது அமுதமேயாகலின் அதனைத் தேவலோகமும் மந்தரமலையுமே யன்றி நின்வீடு ஈயவல்ல தன்றேயென்பார், 'இல் இருமந்தரமோ?' என்றுங்கூறினார். மந்தரம்-தேவலோகம், மந்தரமலை, தேவலோகஞ்சுட்டுங்கால் அந்தரமென்றும் பிரிக்கலாம்,

இறைவரூர்தியாகிய விடை தருமதேவதையேயாகலின், எம்முடைத்தரும மெனப்பட்டது. ஈண்டுவிடை - ஈவேனென்னும் உடன்பாட்டுப்பதிலுத் தரம். அமுது - சோறு. இல்லிற்றங்கினல் தருவேனென்றதாகக்கொண்டு நினது இல் ஒருவருமில்லாத பெரிய வெளியிடமோ என்றேனும், (இங்கே) நில், (விலகி) இரு, இரகசியமோ? என்றேனும் பொருள்கோடலும் ஒன்று. இங்ஙனம் கொள்ளுங்கால் முறையே அந்தரமெனவும், மந்தரமெனவும் பிரிக்க. மந்தரம் - மந்தவோசை; அதுமெல்ல வசனித்தலின்மேற்று. உள

ஒருகைமுகத்தோர்க்கையனொறுமொற்றித்தேவரிவர்தமைநான்
வருகையுவந்தீரொன்றணைநீர்மருவியணைதல்வேண்டுமென்றேன்
றருகையுடனேயகங்காரந்தனையெம்மடியார்தமைமயக்கை
யிருகைவளைசிந்தென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒருகை முகத்தோர்க்கு ஐயரெனும் ஒற்றித்தேவர் இவர்தமை நான்—ஒற்றைக்கை வாய்ந்த முகத்தையுடைய விநாயகக்கடவுளுக்குத் தந்தையாரென்னும் ஒற்றியூர்த்தலைவராகிய இவரையான்; வருகை உவந்தீர்—(என்னைப்பொருட்படுத்து) வருதலைவிரும்பினவரே!; என்றணை நீர் மருவி அணைதல் வேண்டும் என்றேன்—அடியேனைத் தேவரீர் கலந்தணைதல்வேண்டும் என்றனன்; தருகையுடன் அகங்காரந்தனை எம்மடியார்தமை மயக்கை-ஈகையுடனே அகங்காரத்தையும் எம்மடியவரையும் மயக்கத்தையும்; இருகைவளை சிந்து என்கின்றார்—இரு கைவளை சிந்து என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-த.) சிற்றின்பம் விழைந்தணைதலை விரும்புவையேல் நின்பாற்றங்கிய சிறுமையையும் அகத்திலுள்ள கடுங்குணத்தையும் எம்மடியவரை மருட்டுதலையும் இருகையினுமுள்ள வளைகளையும் விடுவாயாகவென்றும், பேரின்பம் விழைந்தணைதலை விரும்புவையேல் ஈகையோடு இரு, அகங்காரந்தனை கை, எம்மடியவரை வளை, மயக்கை சிந்து, என்றுங் கூறியதாகக்கொள்க. தருகை-தங்கிய சிறுமை, ஈகை. அகங்காரம் - அகத்திலுள்ளகாரம், செருக்கு. நீ யெம்மையே வெஃகியது உண்மையேல் அவ்விரகமிகுதியுண்மை புலப்படக்கைவளை சிந்தெனவும், சாயுச்சியம் வேண்டிய துண்மையேல் தருகையுடனிருத்தலாதிய நான்கும் வேண்டுமென்பது தோன்ற அந்நான்கையும் முன்னிலைவினைமுற்றின் நிரனிறையாக்கி இருகைவளை சிந்தெனவும் இயம்பியபடி. கை - வெறு; வளை - தழுவிக்கொள் என்க. நீர்மருவியென்பதற்கு நீர்நிரம்பிய கடலெனக் கொண்டு இதில்விருப்பமேல் சிந்துவை இருகையாலும் அணையென விரோதப்பொருளின் வைத்துரைக்க. உஅ

திருத்தமிகுஞ்சீரொற்றியில்வாழ்தேவரேயிங்கெதுவேண்டி
வருத்தமலர்க்காலுறநடந்துவந்தீரொன்றேன்மாதேநீ
யருத்தந்தெளிந்தேதிருவாணமாகவுன்றனகத்திருக்க
விருத்தவடைந்தேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) திருத்தம் மிகும் சீர் ஒற்றியில்வாழ் தேவரே—விளக்கமிக்க சிறந்தஒற்றிநகரில் வாழ்கின்றதேவரே!; இங்கு எது வேண்டி மலர்க்கால் வருத்தம் உற நடந்து வந்தீர் என்றேன்—இங்கு எதனை விரும்பி மலர்போலுந்திருவடிகள் துன்புற நடந்துவந்தீர் என்றனென்; மாதே நீ அருத்தம் தெளிந்தே நிருவாணமாக—பெண்ணே! நீ உண்மை தெளிந்து நிருவாணம்பெற; உன்றன் அகத்து அருட்கண் இருத்த அடைந்தேம் என்கின்றார்—உனது உள்ளத்தில் நமது அருட்கண் பதிவிக்க அடைந்தனம் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? ஏ-று.

(வி-ரு.) அருத்தம் - பொருள், அஃது உண்மை மேற்று. உண்மை தெளிந்து முத்திபெறவெனப் பேரின்பப்பொருளும், எமது குறிப்புமொழிக் கருத்தறிந்து வெற்றரையாகவெனச் சிற்றின்பப்பொருளும் பயப்பது உணர்க. நிருவாணமென்பதற்கு அம்மணக்கோலமெனக்கொண்டு, அந்தமணக்கோலத்தைக்கொள எனலுமாம். உக

வளஞ்சேரொற்றிமாணிக்கவண்ணராகுமிவர்தமைநான்
குளஞ்சேர்ந்திருந்ததுமக்கொருகண்கோலச்சடையீரழகிதென்றேன்
களஞ்சேர்குளத்தினெழின்முலைக்கண்காணவோரைந்துனக்கழகீ
திளஞ்சேல்விழியாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வளம்சேர் ஒற்றி மாணிக்கவண்ணர் ஆகும் இவர்தமை நான்—சகலவளங்களும் நிரம்பிய ஒற்றியூரிலமரும் மாணிக்க நிறத்தினராகிய இவரையான்; கோலம் சடையீர்—அழகுவாய்ந்த சடைமுடியையுடையவரே!; உமக்கு ஒருகண் குளம்சேர்ந்திருந்தது இது அழகு என்றேன்—தேவரீருக்கு ஒருநேத்திரம் நெற்றியை யிடமாகக்கொண்டு இருந்தது இது வியப்பு என்றனென்; (அதற்கு இவர்) இளஞ் சேல் விழியாய்—இளமைவாய்ந்த சேல்மீன்போலும் கண்களையுடையவளே!; குளத்தின் களம் சேர் எழில் முலைக்கண் காண ஓர் ஐந்து உனக்கு அழகு ஈது என்கின்றார்—உனது தடாகத்திலும் கரவமைந்த அழகிய முலையிடத்திலே காண ஒரு அஞ்சுகண்உண்டு ஈதுவியப்பு என்கின்றனர்; ஏடி சேடி இது என்? ஏ-று.

(வி-ரு.) யான் உமக்குக் குளத்தினிடத்தில் ஒருகண் கரவுற்றிருந்தது என்றேனாக, அதற்கு இவர் உனக்கும் தடாகத்தின் முலையிடத்துக் கரவமைந்த அஞ்சுகண் உண்டு என்கின்றாரென்பது. குளம் - நெற்றி, நீர்த்தடாகம். இளமையில் யாவராலும் காணப்படுவனவாய் நிலவி, யௌவனத்திலே பிறர்காண அஞ்சப்படுவனவாய்க் கரவமைந்திருத்தலின் 'களஞ்சேர் மூலைக்கண்' எனப்பட்டது. களம் - கள்ளம்; இடைக்குறை. களமென்பதற்குக் கண்டமெனக்கொண்டு, கண்டதடாகத்தின் மூலைக்கண்காண அஞ்சுகண்ணுயின எனலும் ஒன்று. தடாகம் - ஈண்டு விசாலமாகிய மார்பின்மேற்று. எழில் - எழுச்சியுமாம்; இல் தொழிற்பெயர்விகுதி. உண்டு என்பது சொல்லெச்சம். உஉ

பலஞ்சேரொற்றிப்பதியுடையீர்பதிவேறுண்டோநுமக்கென்றே
னுலஞ்சேர்வெண்பொன்மலையென்றாருண்டோநீண்டமலையென்றேன்
வலஞ்சேரிடைத்தவ்வருவித்தமலைகாணதனின்மம்முதல்சென்
றிலஞ்சேர்ந்ததுவுமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பலம் சேர் ஒற்றிப் பதியுடையீர் வேறுபதி உண்டோ நுமக்கு என்றேன் — பிரளயத்திலும் அழியாத வலிமையுடைய ஒற்றிப்பதியீரே! (அதுவன்றி) வேறுபதி யுண்டோ நுமக்கு என்றனன்; உலம்சேர் வெண் (மலை) பொன்மலை என்றார் — திரட்சிவாய்ந்த கயிலைமலையும் மேருமலையும் உண்டென்றார்; நீண்ட மலை உண்டோ என்றேன் —(உமக்கு) நீண்டமலையும் இருக்கிறதோ? என்றதிசயித்தேன்; வலம் சேர் இடை த வருவித்தமலை (உண்டு) —(அதற்கிவர்) வலிமைமிக்க இதன் இடையில் தகரமிட்ட மலையு முண்டு; அதனில் முதல் ம சென்று இலம் சேர்ந்ததுவும் உண்டு காண் என கின்றார்—முற்கூறியதில் முதலிலுள்ள மகரம்நீங்கி வீடுசேர்ந்ததுவும் உண்டு காணுதி என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஒற்றிப்பதியுடையீர் - என்பதற்கு அடகுவைத்த பதியுடையீர் என்று தலைவி கூறியதாகக்கொண்டு, நமக்கு வெள்ளி பொன் மலைகளுண்டு என்றும், உண்டோ என்று அதிசயித்ததை மலை என்பதில் முதலெழுத்து நீண்டதாகிய மாலையுண்டோவென்று கேட்டதாகக்கொண்டு நமக்குக் கொன்றைமாலையும் தலைமாலையுமுண்டென்றும் விடைகூறினர் என்க. மலை என்பது இடையே தகரம்வருவிக்க மதலையென்றாகிக் கொன்றைமாலையையும், மதலையென்பது முதலிலுள்ள மகரம் நீங்கிவிடுதலடையத் தலையென்றாகித் தலைமாலையையும் உணர்த்தின. பலம் - போகமோக்ஷங்களுமாம். வெண் பொன் - வெள்ளியுமாம். உண்டென்பதை ஆங்காங்கு கூட்டுக. இலம் - வீடு, (விடுதல்) வீட்டிற்குத் தாமம் எனவும் பெயருண்டாகலின் மகரநீங்கித் தாமஞ்சேர்ந்ததெனக் கூட்டித் தலைமாலையெனலும் ஒன்று. தாமம் - மாலை. ௩௧

வயலாரொற்றிவாணரிவர்வந்தார்நின்றார்வாய்திறவா
செயலார்விரல்கண்முடக்கியடிசேர்த்தீரிதழ்கள்விரிவித்தா
மயலாருளத்தோடென்னென்றேன்மதித்தோர்விரலாலென்னுடைய
வியலார்வடிவிற்சுட்டுகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வயலார் ஒற்றி வாணர் இவர் வந்தார் நின்றார் வாய்திறவார்— வயல்கள் சூழ்ந்த ஒற்றியில் வாழ்பவரான இவர் வந்துநின்று பேசாதவராகி; செயல் ஆர் விரல்கள் முடக்கி அடிசேர்த்து ஈரிதழ்கள் விரிவித்தார்—தொழிலமைந்த விரல்களில் சிறுவிரலையும் மோதிரவிரலையும் முடக்கிக் கையடி சேர்த்துச் சுட்டுவிரலும் நடுவிரலுமாகிய இருவிரல்களை விரித்தனர்; மயல் ஆர் உளத்தோடு என்னென்றேன் — மயங்கியமனத்தோடு அக்குறிப்பு என்னை என்றனன்; மதித்து ஓர் விரலால் என்னுடைய இயல் ஆர் வடிவில் சுட்டுகின்றார்—பின்னும் ஒருவிரலால் எனது அழகமைந்த வடிவில் சுட்டிக் காட்டுகின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) வந்தார் நின்றார் வாய்திறவார் முற்றெச்சங்கள். பெருவிரலை அங்குஷ்டமென்றும், சுட்டுவிரலைத் தற்சனி யென்றும், நடுவிரலை மத்திமை யென்றும், ஆழிவிரலை அநாமிகையென்றும், சிறுவிரலைக் கனிஷ்டையென்றும் கூறுப. கை தாமரையும் விரல்கள் இதழ்களும் போலுதலால், இதழ்களெனப்பட்டன. மூவிதழ்கள் விரிவித்தாரென்றது ஈரிதழ்கள் விரிவித்தாரென்றது பெருவிரல் தனித்து விரிந்தே யிருப்பதுநோக்கியென்க. இயலார் வடிவென்றது ஈண்டுத் தனத்தின்மேற்று. மோனை நயங்கருதாது வியலார்வடிவெனப்பிரித்து அகலமார்ந்த தனமென்னலும் ஒன்று. வியல்-அகலம். (மார்பு) இங்ஙனம் தனஞ்சுட்டி வேண்டுதலை * "குன்றுமுதுகுன்றுடையான்" என்னுஞ் செய்யுளான் அறிக. ஓர் விரலென்றது சுட்டுவிரலை. ௩௨

பேர்வாழொற்றிவாணரிவர்பேசாமௌனயோகியராய்ச்
சீர்வாழ்நமதுமனையினிடைச்சேர்ந்தார்விழைவென்செப்புமென்றே
னோர்வாழடியுங்குழலணியுமொருநல்விரலாற்சுட்டியுந்தம்
மேர்வாழொருகைபார்க்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பேர் வாழ் ஒற்றி வாணர் இவர் பேசா மௌனயோகியராய்—கீர்த்திவாழ்கின்ற ஒற்றிநகரில் வாழ்பவரான இவர் பேசாத மௌனசித்தராய்; சீர்வாழ் நமது மனையினிடை சேர்ந்தார்—சிறப்பமைந்த நமதில்லத்திலடைந்தனர்; விழைவு என் செப்பும் என்றேன்—தேவரீர் விரும்பியது யாது சொல்லுமென்றனன்; ஓர்வு ஆழ் அடியும் குழல் அணியும் ஒரு நல் விரலாற் சுட்டி—தியானித்தலமைந்த தமதடியையும் (எனது) குழலில் அணிந்த ஓர் அணியையும் ஒரு நல்லவிரலாற் சுட்டிக் காட்டி; உந்தம் ஏர்வாழ் ஒருகை பார்க்கின்றார்—உங்களுடைய அழகமைந்த ஒருகரத்தை நோக்குகின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஆழ்தல்-ஈண்டு அமைதல். தம்முடைய அடியோடு 'குழலணியினொன்றாகிய சில் என்பதனையுஞ் சுட்டவே, விழைவு என்னையென வினவிய தலைவிக்கு அடிசில் விழைவு என்றாராயிற்று. தோழியர், கையை நோக்கினது அவ்வடிசிலை அகத்தினின்று கொணர்வித்தற்காம். அடிசில்-சோறு. சில்-சடைப்பில்லையெனும் அணி. தமது விழைவை ஓர்மொழியின் விளக்குவதொழிந்து, தம்மடியையும் எனதோர்குழலணியையும் சுட்டிக்காட்டி, அது வேண்டி நுந்தம் கையையும் நோக்குவது வியப்பென்றபடி. ௩௩

பெருஞ்சீரொற்றிவாணரிவர்பேசாமௌனம்பிடித்திங்கே
விரிஞ்சீர்தரநின்றுடன்கீழுமேலுநோக்கிவிளைந்தார்யான்
வருஞ்சீருடையீர்மணிவார்த்தைவகுக்கவென்றேன்மார்பிடைக்கா
ழிருஞ்சீர்மணியைக்காட்டுகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பெருஞ்சீர் ஒற்றிவாணர் இவர் பேசா மௌனம்பிடித்து—மிகு சிறப்புமைந்த திருவொற்றியூரில் வாழ்பவராகிய இவர் வசனியாத

* பிக்ஷாடன நவமணிமாலை - ௨.

மௌன நிலைகொண்டு; இங்கே விரிஞ்சு ஈர்தர நின்று—ஈண்டு விரிந்து அன்புநிலைபெற நின்று; உடன் கீழும் மேலும் நோக்கி விரைந்தார்—உடனே கீழும் மேலும் உற்றுநோக்கி விரைந்தனர்; யான் வருஞ்சீர் உடையீர்—அதுகண்டயான் ஈங்கெழுந்தருளிய சீர்த்தியுடையவரே!; மணி வார்த்தை வகுக்க என்றேன்—(குறித்ததை) மணிவார்த்தையால் விளக்குக என்றனன்; மார்பு இடை காழ் இருஞ் சீர் மணியை காட்டுகின்றார்—மார்பிலணியப்பட்ட வடத்திலுள்ள பெரிய அழகிய முத்தத்தைக் காட்டுகின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-து.)** பயன்படும் பொருளமைதியுடைய சொல்லை மணிவார்த்தையெனவும், அஃதில்லதைப் பதர்வார்த்தையெனவும், கூறும் உலகவழக்குப்பற்றி மணிவார்த்தை வகுக்க என்றேனாக; இவர் நவமணிகளுள் ஒருமணிசுட்டி உமது குறிப்புணர்த்துக என்றதாகக்கொண்டு, மார்பின் வடத்திலுள்ள முத்தத்தைக் காட்டுகின்றாரென்பது. காட்டவே, கீழ்நோக்கியது கலவிப்பிரியத்தையும், மேனோக்கியது வாய்முத்தங்கொள்ளுதலையும், விரைந்தது இவ்விரண்டும் சித்திக்காமையின் இனி விடுகையே சித்தித்ததென்பதையும் விளக்கியவாறாயிற்று. முத்தமென்பது - ஈண்டுப்பிரியம், வாய்முத்தம், விடுகை என்னும் முப்பொருள் குறித்துநின்றது. விரிந்தென்பது விரிஞ்செனப் போலியாயும், ஈரமென்பது ஈரெனக் கடைக்குறையாயும் வந்தன. ஈரம்—அன்பு. தருதல் - தங்குதல்.

௩௪

வலந்தங்கியசீரொற்றிநகர்வள்ளலிவர்தாம்மௌனமொடு
கலந்திங்கிருந்தவண்டசத்தைக்காட்டிமூன்றுவிரனீட்டி
நலந்தங்குறப்பின்னடுமுடக்கிநண்ணுமிந்தநகத்தொடுவா
யிலந்தங்கரத்தாற்குறிக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** வலம் சீர் தங்கிய ஒற்றிநகர் வள்ளல் இவர்தாம் மௌனமொடு கலந்து—அழியாச் சிறப்பமைந்த ஒற்றிநகரிறைவராகிய இவர் மௌனமொடு ஒன்றணைந்து; இங்கு இருந்த அண்டசத்தை காட்டி — ஈங்கு முன்னரே யிருந்த ஒருபறவையை (ஒருவிரலாற்) காட்டி; மூன்று விரல் நீட்டி—(அச் சுட்டுவிரலோடு) மற்றை மூன்றுவிரல்களையும் நேரே நீட்டி; பின் நலம்தங்குற நடு முடக்கி — பின்பு நன்மையமைய அந்நான்குவிரல்களையும் நடுவே முடக்கி; நண்ணும் இந்த நகு அத்தொடு வாய் இலம் தங்கரத்தால் குறிக்கின்றார் — பொருந்திய இந்த நகுவதனோடு வாய்ந்த இலத்தைத் தமது திருக்கரத்தால் குறிக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-து.)** வலம் - பிரளயத்தும் அழியாவன்மை. தாம் - அசை. அண்டஜம் - முட்டையிற்றோன்றுவன; ஈண்டுமயில். கொங்கையடியிற் பெருவிரல் பொருந்த மேலே மற்றைநான்குவிரல்களையும் நீட்டி நடுமுடக்கி அவற்றின் நகங்களால் இரேகைபடப் பதிப்பது **மயூரபாத**மென்னு நகக்குறியாகலின், கொங்கையில் அக்குறிபுரிதலில் வேட்கையுடைமை விளக்கியவாறு, நகுவொடு

வாய்ந்த இலம் - நகிலம்; (கொங்கை.) இல்லத்திற்குச் சரணமென்பதோர் பெயருமுண்டாகலின், அண்டசத்தைக் காட்டி நகத்தொடு சரணத்தைக் குறிக்கின்றா ரெனக்கொண்டு மயூரபாதநகக்குறியெனினும் இயையும். ஆணும் பெண்ணுமாகக் கலந்திருந்த மயில்களைக்காட்டி நகுசெயலோடு கலவிக்கு வாய்ப்புடைத்தாகிய இல்லத்தைக்குறிக்கின்றாரெனலுமாம். இவ்வகையால் நகத்தொடு என்பது நகுவென்பதனோடு நகுவதனோடு நகத்தோடு எனமுப் பொருள்பட்டு நின்றது. இல்லமென்பது இடைக்குறைந்தது. ௩௫

தேனார்பொழிலாரொற்றியில்வாழ்தேவரிவர்வாய்திறவாராய்
மானார்கரத்தோர்நகந்தெறித்துவாளாநின்றார்நீளார்வந்
தானாருளத்தோடியாதென்றேன்றங்கைத்தலத்திற்றலையையடி
யேனாடுறவேகாட்டுகின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) தேன் ஆர் பொழில் ஆர் ஒற்றியில்வாழ் தேவர் இவர் வாய்திற வாராய்—வண்டுகள் மொய்க்கும் சோலையார்ந்த ஒற்றியில்வாழும் தேவரிவர் மௌனராகி; மான் ஆர் கரத்து ஓர் நகம் தெறித்து வாளாநின்றார்—மானா ர்ந்த கரத்தில் ஒரு நகத்தை ஓசையுண்டாகத் தெறித்துப் பேசாதுநின்றனர்; நீள் ஆர்வம் ஆர் உளத்தோடு யாது என்றேன்—மிக்க ஆசையுடைய சித்தத் தோடு என்னை என்று கேட்டனன்; தம் கைத்தலத்தில் தலையை அடியேன் நாடுறவே காட்டுகின்றார்—தமது கையிலுள்ள தலையோட்டை யான் காணக் காட்டுகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) தான் - அசை. மான் ஆர் கரம்-மானேந்திய கரம்; அது இடக் கை. இடக்கை-ஒருவாச்சியம்; அதில் நகம் தெறித்தல் ஓசையையுண்டாக்கிப் பிறரை யழைத்தற்கென்க. நகந்தெறித்தல் - வாய்பேசாது பிறரையழைக்கும் ஓர்வகைக்குறிப்புமாம். கைத்தலத்துத் தலையைக்காட்டல் - தமதுகரத்துள் ளது (உயிர்) போனகம் என்றுணர்த்தற்கு. கம்-தலை. போனகம் - அன்னம். அது வேண்டும் என்றபடி. அன்றி, இப்பாத்திரம் வெறுமையாயிருப்பதை நோக்கு; இதில் உணவையிடு என்னும் குறிப்புமாம். ௩௬

செச்சையழகர்திருவொற்றித்தேவரிவர்வாய்திறவாராய்
மெச்சுமொருகாற்கரந்தொட்டுமீண்டுமிடற்றக்கரம்வைத்தார்
பிச்சரடிகேள்வேண்டுவதுபேசீரென்றேன்றமைக்காட்டி
யிச்சையெனையுங்குறிக்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) செச்சை அழகர் திருவொற்றி தேவர் இவர் வாய்திறவாராய்—வெட்சிமலர்போலும் அழகரான திருவொற்றித் தலைவராகிய இவர் வாய்திற வாராய்; ஒருகால் மெச்சும் கரம் தொட்டு மீண்டும் மிடற்று அக்கரம் வைத் தார்—ஒருமுறை வியக்கத்தக்க கரத்தைத் தொட்டு மீளவுங் கண்டத்தில் அக்கரத்தைவைத்துக் காட்டினார்; பிச்சர் அடிகேள் வேண்டுவது பேசீர் என்றேன்—பித்துக்கொண்ட அடிகளே! விரும்பியது பேசக்கடவீரென்ற னன்; தமைக்காட்டி இச்சை எனையும் குறிக்கின்றார்—(அதற்கிவர்) தம்மைக்

குறிப்பித்து இச்சைகொண்ட எனையுங் குறித்துக்காட்டுகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) தொட்டது அவர்கரமெனக்கொள்ளின், யாம் கங்கணமணிவே மென்பதும், தலைவிகரமெனக் கொள்ளின், பாணிக்கிரகணம்பண்ணுவே மென்பதும் குறிப்பித்ததெனவும்; மிடற்றுக்கரம் வைத்தது மாங்கலிய சூத்திரம் அணியவிருப்பமென்பதும், தம்மையுந் தலைவியையுங் குறித்தது நீயும் யாமும் இங்ஙனமாதல்வேண்டுமென்பதும் குறிப்பித்ததெனவுங்கொள்க. பாணிக்கிரஹணம் - கரத்தைப்பற்றல்; கிரஹணம் - பற்றல். ௩௭

மன்றார்நிலையார்திருவொற்றிவாணரிவர்தாமௌனமொடு
நின்றாரிருகையொலியிசைத்தார்நிமிர்ந்தார்தவிசினிலைகுறைத்தார்
நன்றாரமுதுசிறிதுமிழ்ந்தார்நடித்தாரியாவுமையமென்றே
னின்றாமரைக்கையேந்துகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மன்று ஆர் நிலையார் திருவொற்றி வாணர் இவர்தாம் மௌனமொடு நின்றார்—சிற்சபையிலமர்ந்த நிலையினையுடையரான ஒற்றிவாணரிவர் மௌனத்தோடு நின்றாராய்; இருகை ஒலி யிசைத்தார் நிமிர்ந்தார் தவிசின் நிலை குறைத்தார் நன்று ஆர் அமுது சிறிது உமிழ்ந்தார் நடித்தார் யாவும் ஐயமென்றேன்—இருகையையும் தட்டி ஒலிகாட்டினார் பின் நிமிர்ந்து நின்றார் தமது ஆசனத்தின் முதல்நிலையைக் குறைத்தார் நன்றார்ந்த எச்சிலைச் சிறிது உமிழ்ந்தார் கூத்தாடினார் (இவற்றைக்கண்டயான் ஐயரே!) யாவும் சந்தேகமே: (தெளியப்படவில்லை) என்றனன்; இன் தாமரைக்கை ஏந்துகின்றார்—(இப்படிக்கூறியஎன்முன்) இனியதாமரைபோலுங் கரத்தை ஏந்திக் காட்டுகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) இருகை யொலியிசைத்தல் - அமலை; நிமிர்தல் - நேராதல்; தவிசினிலைகுறைத்தல் - ஆசனமென்பதன் முதனிலை ஆகாரம் குறைந்த மாத்திரையதாகி அசனமெனப்பொருள்பட அம்முதலெழுத்தினோசையைக் குறைத்துரைத்தல்; உமிழ்தல் - துப்புதல்; (துப்பு.) நடித்தல் - சதி. ஆகவே, அமலை நிமிர்தல் அசனம் துப்பு சதி யென்னும் சொற்கள் சோர்ந்தறயுணர்த்துமாறறிக. பொருள்விளங்காமையின் குறிப்பித்தசெயலனைத்தும் ஐயப்பொருளன என்றேனாக; இவர் நீர் விரும்பிவந்த பிக்ஷையைக் குறித்தன என்றதாகக்கொண்டு கையேந்துகின்றாரென்பது. ௩௮

வாராவிருந்தாய்வள்ளலிவர்வந்தார்மௌனமொடுநின்றார்
நீராரெங்கேயிருப்பதென்றேனீண்டசடையைக்குறிப்பித்தா
ரூராவைத்ததெதுவென்றேனென்கையோடென்னிடத்தினில்வைத்
தேரார்கரத்தாற்சுட்டுகின்றாரிதுதான்சேடியென்னேடீ

(இ-ள்.) வாரா விருந்தாய் வள்ளல் இவர் வந்தார் மௌனமொடு நின்றார்—வருதற்கரிய புதுவிருந்தாக வள்ளலாகிய இவர் வந்தனராய்ப் பேசாது

கின்றனர் ; நீர் ஆர் எங்கே இருப்பது என்றேன்—நீவிர் யாவர் எங்குவசிப்பது என்றனன் ; நீண்ட சடையைக் குறிப்பித்தார்—(அதற்கிவர்) நீண்ட தமது சடையைச் சுட்டிக்காட்டினர் ; ஊரா வைத்தது எது என்றேன்—ஊராகத் தாம்கொண்டிருப்பது எதனை என்று கேட்டனன் ; ஓர் கை ஓடு என்னிடத்தினில் வைத்து ஏர் ஆர் கரத்தால் சுட்டுகின்றார்—ஒள்ளிய தமது கையிருந்த ஓட்டினை என்னிடத்து வைத்து (பின்பு) அழகார்ந்த தமது கரத்தாற் சுட்டிக் காட்டுகின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) வாராவிருந்து - வருதற்கரிய புதிய விருந்தென்பதனை ; * "ஒருநாள் விதுரனுக்கு-வாரா விருந்தான் வரை" என்பதானுமுணர்க. விருந்தாய் எச்சத்திரிபு. வந்தார் - முற்றெச்சம். யார் - ஆர்எனமருவியது. நீரார் எங்கே இருப்பது என்பதற்கு நீர்வடிவான கங்காதேவியார் எவ்விடத்தி லிருப்பது என்று தலைவிகேட்டதாகக்கொண்டு, சடையைக்குறிப்பித்தமையும் ; ஊரா வைத்தது எது என்றுகேட்டதற்கு ஓட்டைவைத்துத் தூரச்சென்று அதைக் குறித்து ஒற்றியாகவைத்தது என்று குறிப்பித்தமையுங் குறிப்பி னுணரத் தக்கவை. ஒற்றி - ஒற்றிநகர். ௩௯

செங்கேழ்கங்கைச்சடையார்வாய்திறவாராகவீண் டடைந்தா
ரெங்கேயிருந்திங்கணைந்ததுகாணெங்கள்பெருமானென்றேனென்
னங்கேழருகினகன்றுபோயங்கேயிறைப்போதமர்ந்தெழுந்தே
யிங்கேநடந்துவருகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) செங்கேழ் கங்கை சடையார்—செவந்த நிறத்தையும் கங்கையையுங் கொண்ட சடையையுடைய இவர் ; வாய்திறவாராக ஈண்டு அடைந்தார்—மௌனராய் இங்குவந்தனர் ; எங்கள் பெருமான் எங்கே இருந்து இங்கு அணைந்தது என்றேன்—எமது தலைவரே ! நீர் எங்கிருந்து இவ்விடம் வந்தடைந்தது என்றனன் ; அங்கு என் அருகின் ஏழ் அகன்று போய்—ஆங்கு என்னருகிருந்து ஏழடிதூரம் அகன்றுசென்று ; அங்கே இறைபோது அமர்ந்து எழுந்தே இங்கு நடந்து வருகின்றார்—அங்குச் சற்றிருந்து பின்னெழுந்து இங்கு நடந்துவருகின்றார் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) ஏழ் - எண்ணலளவையாகுபெயர். காண் - முன்னிலையசை. எங்கே இருந்து அணைந்தது என்று வினவினதற்கு மௌனராய் வந்தமையின் நடந்து குறிப்பாற் காட்டினார். காட்டவே, அருகினகன்றது - ஒற்றி ; இறைப்போதமர்ந்தது - இருந்து ; வருகின்றது - வருகிறது. என ஒற்றியூரிலிருந்து வருகின்றோம் என்று உணர்த்தியவாறாயிற்று. ௪0

கொடையாரொற்றிவாணரிவர்கூறுமௌனராகின்றார்
தொடையாரிதழிமதிச்சடையெந்துரையேவிழைவேதுமக்கென்றே
னுடையார்துன்னற்கந்ததனையுற்றுநோக்கிநகைசெய்தே
யிடையார்கழுமுட்காட்டுகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

* திருவேங்கடமாலை. ௧௮.

(இ-ள்.) கொடையார் ஒற்றி வாணர் இவர் கூறு மௌனராகி நின்றார்— தியாகரான ஒற்றிப்பெருமான் இவர் பேசா மௌனராகி எதிர்நின்றனர்; ஆர் இதழி தொடை மதிச்சடை எம்துரையே உமக்கு ஏது விழைவு என்றேன்—ஆத்தியும் கொன்றையுமாகிய மாலைகளையும் பிறையுமுடித்த சடையினையுடைய தலைவரே! உமக்கு என்ன இஷ்டம் அருளுவீர் என்றேன்; உடையார் துன்னல் கந்தைதனை உற்று நோக்கி நகைசெய்து—எல்லாமுடையவர் தாம் தரித்துள்ள தையலுடைய கந்தையை உற்றுப்பார்த்து நகைத்து; இடை ஆர் கழுமுள் காட்டுகின்றார்—தம்மிடத்திலுள்ள சூலத்தைக் காட்டுகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) கொடை ஆர்ந்த ஒற்றி, தொடுத்தலார்ந்த இதழி, எனக்கோடலுமாம். விழைவு ஏதுவென விளவுங்கால், கந்தையைக் குறிப்பித்து நகைத்துக் குளிருடையேனென்கின்றாரன்றி, அது பரிகரிக்கத் தாம் விழைந்தபொருள் விளம்புகின்றாரில்லை யென்பதுகருத்து. இடையாக்கழுமுள் என்னும் பாடங்கொள்ளின், (குளிர்க்கு) உடையார் உடைந்தார்போன்று குளிர்காட்டுகின்றாரென்க. விழைந்தமை விளக்குவார் கந்தையைக் குறிப்பித்துக் காளத்தைக் காட்டுகின்றாரெனலுமாம். கழுமுள் - சூலம்; குளிர் காளம் என்பன, அச்சூலத்திற்குரிய பரியாயநாமங்கள். யான் விழைவு ஏது என்றேனாக; இவர் சந்திரன் முதலியவை புனைதலாற் குளிருடையீராகலின் வேது விழையும் என்றதாகக்கொண்டு, தம்பாற்றுன்னிய நல்லாடையையுற்று நோக்கி (இஃதுண்டாயிருக்க இக்குளிர் யாதுசெய்யுமென்னுங் குறிப்பால்) குளிரை நகைசெய்து காட்டுகின்றாரெனினும் அமையும். கந்தை - தலைவிபாற்றுன்னிய நல்லாடையுமாம். கந்தையென்பது ஈண்டுப் பீறற்றுணியையும், நற்போர்வையையும் உணர்த்திநின்றது. வேது - வெம்மையுடையது; குளிர்காலத்தில் வெம்மையையும் வெம்மைக்காலத்தில் குளிரையும் நல்குவதெனப் பாராட்டப்படுவது தனையாகலின் வேது என்பது ஈண்டு அத்தனத்தின் மேற்று. நீர் எல்லாம் உடையவர் உமக்கு விழைவுயாதுளது என்றேனாக; யாம் கந்தையுமிசையாம் கருத்துடையோம் என்பார் போன்று, அதை அலக்ஷியமாக நோக்கி நகைத்துக் கழுமுளைக் காட்டுகின்றாரெனினும் பொருந்தும். கழும் உள் - கழுவிய உள்ளம். மலமாசுகழுவிய அன்பருள்ளத்திலல்லது பிறிதில் விழைவில்லை என்றுணர்த்தியபடி.

சுக

பொன்னைக்கொடுத்தும்புணர்வரியபுனிதரிவரூரொற்றியதா
முன்னைத்தவத்தாலியாங்காணமுன்னேநின்றார்முகமலர்ந்து
மின்னிற்பொலியுஞ்சடையீரென்வேண்டுமென்றேனுணச்செய்யா
ளின்னச்சினங்காணென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பொன்னை கொடுத்தும் புணர்வு அரிய புனிதர் இவர் ஊர் ஒற்றியதாம் — பொருள்கொடுத்தும் அடைதற்கரிய சுத்தராகிய இவரது ஊர் ஒற்றிநகராம்; யாம் முன்னை தவத்தால் காண முன்னே நின்றார் — முன்பு புரிந்த தவங்காரணமாக யாம் காணுமாறு முன்னெழுந்தருளினர்;

முகமலர்ந்து—யான் முகமலர்ச்சியுடையவளாய்; மின்னில் பொலியும் சடையீர் என் வேண்டும் என்றேன்—மின்போல் விளங்குஞ் சடையையுடையவரே! என்னை வேண்டும் என்றனன்; உன்ன செய்யாளின் நச்சினம் என்றார்—உண்ணும்படி இலக்குமிபோல விரும்பினம் என்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) யாதுவேண்டுமென்னுங் கருத்தால் என்வேண்டுமென்றேனாக இவர் என்னை யென்பதில் ஐகாரந்தொக்கதாகக்கொண்டு அநுபவித்தற்கு உன்னைத் திருமகளினும் வேட்டனமெனவும், இலக்குமியின் இல்லமெனப்படும் பாற்கடலை விரும்பும் இனமாகிய அன்னம் வேட்டனமெனவும், அப்பாலின் பரியாயப் பெயர்குறித்து அமுதுவேட்டனமெனவும், இல்லமாகிய தாமரை வேட்டனமெனவும், இங்ஙனம் பலபொருள்படக் கூறுகின்றாரொன்பது. அன்னம் அமுது - சோறு. தாமரை - தாவும் அரை; அது ஈண்டு விரும்பும் நிதம்பம். தாவுமென்பது தாமெனத் தொகுத்தலாயிற்றென்க. என் வேண்டுமென்றவழி பாற்கடலிலுதித்த நஞ்சின் றொகுதி வேண்டுமென்கின்றாரெனலுமாம். சஉ

வயலார்சோலையெழிலொற்றிவாணராகுமிவர்தமைநான்
செயலாரடியர்க்கருள்வீர்நுஞ்சிரத்துமுரத்துந்திகழ்கரத்தும்
வியலாய்க்கொண்டதென்னென்றேன்விளங்கும்பிநாகமவைமூன்று
மியலாற்காண்டியென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வயல் சோலை ஆர் எழில் ஒற்றி வாணராகும் இவர்தமை நான்—வயல்களும் சோலைகளும் சூழ்ந்த எழிலமைந்த ஒற்றிவாணராகும் இவரை நான்; செயல் ஆர் அடியார்க்கு அருள்வீர்—தொண்டினையுடைய அடியவர்க்கு அருள்பாலிப்பவரே!; நும் சிரத்தும் உரத்தும் திகழ்கரத்தும் வியலாய் கொண்டது என் என்றேன்—நுமது சிரத்திலும் மார்பிலும் விளங்குங் கரத்திலும் பெருமையாகக் கொண்டது என்னை என்றனன்; அவை மூன்றும் விளங்கும் பிநாகம் இயலால் காண்டி என்கின்றார்—அவை மூன்றும் விளங்கத்தக்க பிநாகம் அவற்றை இலக்கணத்தால் அறிதி என்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) வியலாய்-வினை எச்சத்திரிபு. இயல் - இலக்கணம். அது எழுத்துப்பெருக்கம் (அக்ஷரவர்த்தனை) என்பது. மூவிடத்தும் தலை காணப்படுதல் பற்றி வியந்து தலைவி கேட்டாளாக; இறைவர் யாம் கொண்டது சிரத்தில் கம், உரத்தில் நாகம், கரத்தில் பிநாகம் என எழுத்துப் பெருக்கத்தால் விடைகூறியவாறு. கம் - நீர். நாகம் - பாம்பு. பிநாகம்—இறைவர்வில். சங

பொதுநின்றருள்வீரொற்றியுளீர்பூவுந்தியதென்விழியென்றே
னிதுவென்றறிநாமேறுகின்றதென்றாரேறுகின்றதுதா
னெதுவென்றுரைத்தேனதுநடுவோரெழுத்திட்டறிநீயென்றுசொலி
யெதிர்நின்றுவந்துநகைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ - ள்.) பொதுநின்று அருள்வீர் ஒற்றியுளீர் விழி பூவுந்தியது என் என்றேன்—அம்பலத்தில் ஆடல்புரிந்துநின்று அன்பர்க்கருள்பவரோ! உமது கண்கள் பூவைக் கடந்தது ஈ தென்னை வியப்பு என்றனன்; நாம் ஏறுகின் றது இது என்று அறி என்றார்—நாம் விரும்பி ஏறுகின்றதும் பூவுந்தியதெ ன்று அறிவாய் என்றனர்; ஏறுகின்றது எது என்று உரைத்தேன்—தேவ ரீர் இவர்ந்தேறுவது எது என்றுவினவினன்; எது நடுவு ஓர் எழுத்திட்டு அறி நீ என்று சொலி எதிர்நின்று உவந்து நகைக்கின்றார்—எது என்பதன் நடுவில் ஒரு எழுத்தைச்சேர்த்து அதனை நீ அறிந்துகொள்வாய் என்றுகூறி என்னெ திரினின்று மகிழ்ந்து நகைக்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி - கு.) ஏனையோர் விழி தாமரைமலரை நிகர்ப்பது, உமது விழியோ? அம்மலரை நிகர்ப்பதன்றென ஒதுக்கியது ஈதுவியப்பென்றேன்; இவர் என் விழி பூவுந்தியதென்றதாகக்கொண்டு நின்விழிமட்டோ? நாம் இவர்வதும் பூவுந்தியதென்கின்றாரென்பது. இறைவரிவர்வது திருமாலாகிய இடபமென் பது குறிப்பித்தபடி. பூவுந்தியது - பூவை உந்தியாகவுடையது, புவியைத் தாளாலளந்து கடந்த தென்பதும் ஒன்று. எது என்பதன் இடையில் ருகரத் தையிடின் எருது என்றாதல் காண்க. நகைத்தல் - தலைவி பொருள் தெரியா மைநோக்கி எள்ளலின்மேலது. "* பூவிற்குத்தாமரையே" என்றும் "† பூவெ னப்படுவது பொறிவாழ்பூவே" என்றும் விதக்கப்படுதற் சிறப்புநோக்கிப் பொதுப்படத் தாமரைமலர் பூவெனப்பட்டது.

சச

இட்டங்களித்ததொற்றியுளீரீண்டிவ்வேலையெவனென்றேன்
சுட்டுஞ்சுதனேயென்றார்நான்சுட்டியறியச்சொலுமென்றேன்
பட்டுன்மருங்குற்பாவாய்நீபரித்ததன்றேபாரென்றே
யெட்டுங்களிப்பாலுரைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றியுளீர் ஈண்டு இவ்வேலை இட்டம் களித்தது எவன் என் றேன்—ஒற்றியி லுறைபவரோ! இங்கே இச்சமயத்தில் இஷ்டமாக மிகவுவந் திருந்தது யாது என்றேன்; சுட்டும் சுதனே என்றார்—குறிக்கத்தக்க நமது புதல்வனே என்றார்; நான் சுட்டியறிய சொலும் என்றேன்—யான் குறித் தறியக் கூறுமென்றனன்; பட்டு உன் மருங்குல் பாவாய் நீ பரித்தது அன் றே பார் என்றே—பட்டுடையணிந்த இடையையுடைய பாவைபோல்பவ ளே! (யாம் உரைத்தது) நீ கூறியமொழியைச் சுட்டியல்லவா? அம்மொழி யைக்கொண்டு நோக்குக என்றே; எட்டும் களிப்பால் உரைக்கின்றார்—மிக்க களிப்பினாலே விளம்புகின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி - கு.) சுட்டுதல் - இலக்காகக்கொண்டு யாவரும் தியானித்தல். பா வை - கண்ணின்பாவை; பிரதிமையுமாம். ஈண்டு இச்சமயம் மிகவுவந்திருந் தது யாது என்று வினவியதற்கு, வேலை உவந்திருந்தது என்றதாகக்கொ ண்டு, வேலை உவந்திருந்தது யாமன்று, எமது புதல்வனே யெனவும்; அப்

* ஒளவையார்தனிப்பாடல். † நால்வர் நான்மணிமாலை.சo.

புதல்வன் யாரென்றதற்கு நீ கொண்டுழைத்ததாகிய வேலை யென்னுமொழி கொண்டோர்கவெனவும் கூறியவாறு. வேல் ஐ - வேலுக்குரிய தலைவராகிய குமரர். நீ அணியாகப் பரித்தபொன்னின் பரியாயப் பெயராகிய சாமியென்னும் மொழிப்பொருளாயுள்ள குமரனென்னலும் ஒன்று. இனி, வேல் ஐ யாவனென்றேனுக ; சுதனே , யென்றானெனலுமாம். வேளையென்னும் பாடங் கொள்ளின் வேளாகிய தலைவனென்க. ௪௫

பாற்றக்கணைத்தா ரிவர்காட்டுப்பள்ளித்தலைவரொற்றியினின்
றுற்றப்பசித்துவந்தா ராமன்னமிடுமினென் றுரைத்தேன்
சோற்றுக்கிளைத்தோமாயினும்யாஞ்சொல்லுக்கிளையேங்கீழ்ப்பள்ளி
யேற்றுக்கிடந்தாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) இவர் பாற்று அக்கணைத்தார்—தோழிமீர் ! ஈண்டுநிற்கும் இவர் யாவும் அழிக்கத்தக்க சிறந்த பூதகணத்தையுடையவர் ; காட்டுப்பள்ளித் தலைவர்—திருக்காட்டுப் பள்ளித்தலைவர் ; ஆற்ற பசித்து ஒற்றியினின்று வந்தாராம்—மிகவும் பசியுடையவராய் ஒற்றிநகரினின்று வந்தாராம் ; அன்னம் இடுமின் என்றுரைத்தேன்—அன்னத்தை யிடுவீரென்று உரைத்தனன் ; சோற்றுக்கு இளைத்தோம் ஆயினும் யாம் சொல்லுக்கு இளையேம்—சோற்றுக்கு மெலிந்தோமாயினும் யாம் சொல்லுக்கு மெலியோம் ; கீழ்ப்பள்ளி ஏற்று கிடந்தாய் என்கின்றார்—நீ கீழ்ப்பள்ளியையடைந்து கிடந்தனை என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) பாற்றல் அழித்தல் ; இது ஈண்டு சருவசம்மாரத்தையும் ; அகரம் உயர்த்தற்பொருளையும் தந்தன. காவிரிக்கரையிலுள்ள திருக்காட்டுப் பள்ளித்திருப்பதிக்குத் தலைவரென்றதைக் காட்டில் வசிக்கும் பள்ளிச்சாதிக்குத் தலைவரென்றதாகக் கொண்டு, நீ கீழ்ப்பள்ளியேற்றுக் கிடந்தாயன்றோ என்கின்றார் என்பது. கீழ்ப்பள்ளி - கீழாகியபள்ளிச்சாதி ; நிலத்திற்படுக்கை எனச் சிலிஷ்டமாதல் காண்க. நிலத்திற்படுக்கை - விரகமேலீட்டால் பஞ்சணையாதியன விரும்பாது வெறுநிலத்தே சயனித்துக்கிடப்பது. கீழ்ப்பள்ளியேற்றுக்கிடக்கும் நீ ஐயமிடுமினெனத் தோழியரையேவி எம்மை அலக்ஷியம்செய்தற்குரியையோ ? என்று எதிரிழித்தவாறு. ௪௬

குருகாரொற்றிவாணர்பலிகொள்ளவகையுண்டோவென்றே
னொருகாலெடுத்தீண்டுரையென்றாரொருகாலெடுத்துக்காட்டுமென்றேன்
வருகாவிரிப்பொன்னம்பலத்தேவந்தாற்காட்டுகின்றாம்வீ
ழிருகாலுடையாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) குருகு ஆர் ஒற்றிவாணர் பலிகொள்ள வகை உண்டோ என்றேன்—பறவைகள் நிரம்பிய (சோலையாதிய சூழ்ந்த) திருவொற்றிவாணரே ! நீர் பலிகொள்ள வகையுண்டோ என்றனன் ; ஈண்டு ஒருகால் எடுத்து உரை என்றார்—இங்கே ஒரு முறையெடுத்துச்சொல் என்றார் ; ஒருகால் எடுத்துக் காட்டு மென்றேன்—ஒருமுறை யெடுத்துக்காட்டுவீரென்றேன் ; வீழ் இரு

கால் உடையாய்—வீழ்கின்ற இருகாலுடையவளே!; வருகாவிரி பொன்னம் பலத்தே வந்தால் காட்டுகின்றோம் என்கின்றார் — பெருகிவரும் காவிரிநதி சூழ்ந்த சிதம்பரத்திலுள்ள கனகசபையின்கண்ணே வந்தால் காட்டுகின்றோம் என்கின்றனர்; ஏடி. சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஒற்றியில்வாழும் தியாகேசரெனப்படும் நீர் கொடுத்தலொழிந்து பலிகொள்ளக் காரணமுண்டோ என்றதை இவர், ஊரிலின்றி ஒற்றி வாழ்பவராகிய வுமக்குப் பலியேற்குந் திறமையுண்டோ? என்றிழித்ததாகக் கொண்டு, (பெண்ணே! நீ எமதெதிர்) ஒருகால் பலியேற்று ஏற்கும் வகையைச்சொல்; எம்மை எடுத்துக்காட்டும் என்பையேல் சபையில்வந்தால் ஒருகால் எடுத்துக்காட்டுகின்றோம் என்கின்றாரென்பதுகருத்து. பெண்கள் பயிலும் ஈன்ற நிர்வாணியாகிப் பலியேற்க முறையுண்டோ? என்றேனாக, அரையிற் சரிகின்ற உடையையுடையவளே! இதை இன்னும் ஒருகால் எடுத்துச் சொல், யாம் ஒருகாலெடுத்துக்காட்டவேண்டுமேல் அம்பலத்துக்குவா என்கின்றாரெனலுமாம்; நிர்வாணியாகிய நீயோ? நம்மை நிர்வாணியென்னத்தக்கவள் என்றவாறு. இளமையார்ந்த ஒற்றிவாணரெனலுமாம். இருகால்வீழ் உடை - விரகமேலிட்டால் அரையினின்றும் சரிகின்றவுடை. நழுவி இரு காலில் வீழ்கின்ற உடையுமாம். வீழும் அரையையுடையவளே எனலும் ஒன்று; வீழ்தல் - விரும்பல். அரை - ஈண்டு அல்குல்; இருகால் அரை. ௪௭

வேலைஞாலம்புகழொற்றிவிளங்குந்தேவரணிகின்ற
மாலையாதென்றேனயன்மான்மாலையகற்றுமாலையென்றார்
சோலைமலரன்றேயென்றேன்சோலையேநாந்தொடுப்பதென
வேலைமுறுவல்புரிகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வேலை ஞாலம் புகழ் ஒற்றி விளங்கும் தேவர்—கடல்வளைந்த உலகுபுகழும் ஒற்றியில்விளங்கும் தேவரே!; அணிகின்ற மாலையாது என்றேன்—நீர் அணிகின்ற மாலை என்னவென்றேன்; அயன் மால் மாலை அகற்றும் மாலை என்றார்—பிரமவிட்டுணுக்களின் மயலை அகற்றற்குக் காரணமாகிய மாலை என்றனர்; சோலை மலர் அன்றே என்றேன்—சோலையில் மலர்ந்த மலரல்லவோ? என்றனன்; சோலையே நாம்தொடுப்பது என—சோலையையே நாம் அணிவது என்று; ஏலமுறுவல் புரிகின்றார்—இணங்க நகைசெய்கின்றார்; ஏடி. சேடி இது என்? எ-று.

(வி-ரை.) சிவபெருமானொருவரே அழிவற்ற முதற்பொருளல்லது யாம் அன்றெனத்தேர்ந்து தருக்குறுதொழுகற் பொருட்டே பிரம விட்டுணுக்களுடைய தலைகளை மாலையாகத் தரித்துள்ளாராகலின், அயன்மால் மாலை யகற்று மாலை எனப்பட்டது. சோலைக்குத் தண்டலை என்னும் பெயருண்மையால் அத்தண்டலையே யாம் தரிப்பதென்பார், சோலையே யாம் தரிப்பதென்றார். தண்டலை - குளிர்ந்ததலைமாலை. மாலை - மயக்கம் - மால் ஐ - மயக்கத்தால் சேர்ந்த தலைமைத்தன்மையென்க. ௪௮

உயிருளுறைவீர்திருவொற்றியுடையீர்நீரென்மேற்பிடித்த
வயிரமதனைவிடுமென்றேன்வயிரியலநீமாதேயான்
செயிரதகற்றுன்முலையிடங்கொள்செல்வனலகாண்டெளியென்றே
யியல்கொண்முறுவல்புரிகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) உயிருள் உறைவீர் திரு ஒற்றியுடையீர் நீர் என்மேல் பிடித்த வயிரமதனை விடுமென்றேன்—உயிர்கடோறும் வியாபித்து அந்தர்யாமியாய் நிற்பவரே! திருவொற்றியையரே! நீவிர் என்மேற்கொண்ட வயிரத்தை விடக்கடவீர் என்றனன்; நீ வயிரி அல—நீ கடும்பகைமை யுடையவளுமல்ல; மாதே—பெண்ணே!; செயிரது அகற்று உன்முலை இடங்கொள் செல்வன் யாம் அல காண் தெளி என்றே—குற்றமற்ற உனது முலையை இடமாகக்கொண்ட செல்வனும் யாமல்ல நீ பிரத்தியக்ஷமாகநோக்கு தெளிவாய் எனறே; இயல் கொள் முறுவல் புரிகின்றார்—பண்பமைந்த புன்முறுவலைச் செய்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) எனக்கு அருளாது என்மேற் கொண்டுள்ள கடுஞ்சினத்தை விடும் என்றதை, இவர் நீர் பிடித்த வச்சிராயுதத்தை என்மேல் விடும் என்றதாகக் கொண்டு வரயிஞ்செலுத்தற்கு நீ விரோதியுமல்ல; நாம் வயிரஞ்செலுத்தும் இந்திரனும் அல்ல; நமதுருவமுதலியவற்றை நன்குநோக்கு; என் வார்த்தையை நம்பு; என்றபடி. வயிரம் - வயிரமுடைப்பொருள்களின்மீதே ஏவப்படுவது; நீ மலை அசுராதியர்போல வயிரமுடையையல்லை; பெண்ணேயாகலின் நின்மீது அவ்வயிரம் செலுத்தற்குரிய தன்றென்பது தோன்ற 'வயிரியல நீ மாதே' என்றாரென்க. வயிரமென்பது கடும்பகை வன்மை வச்சிராயுதம் என்னும் முப்பொருள்களையும் முலைக்குரிய சுவர்க்கமென்னும் பரியாயப்பெயர் ஈண்டுச் சுவர்க்கலோகத்தையும் உணர்த்தின. செயிரது அது பகுதிப் பொருள்விகுதி. காண் - முன்னிலைமுற்று; முன்னிலையசையுமாம். சகூ

தண்காவளஞ்சூழ்திருவொற்றித்தலத்திலமர்ந்தசாமிநும்கை
யென்கார்முகமாப்பொன்னென்றேனிடையிட்டறிதலரிதென்றார்
மண்காதலிக்குமாடென்றேன்மதிக்குங்கணைவில்லன்றென்றே
யென்காணகைசெய்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தண் காவளம் சூழ் திருவொற்றி தலத்தில் அமர்ந்த சாமி—தண்ணிய சோலைகளும் மற்றும் வளங்களும் சூழ்ந்த திருவொற்றித் தலத்தமர்ந்த சாமியே!; நும் கை என் கார்முகம் மா பொன் என்றேன் — நுமது கையிலுள்ள என்னைத்தக்க வில் சிறந்த பொன்னல்லவா? என்றனன்; இடை இட்டு அறிதல் அரிது என்றார்—(அதற்கிவர்) அதனை எடை எடுத்து அறிவது அருமையாம் என்றனர்; மண் காதலிக்கும் மாடு என்றேன்—அது உலகத்தவர் விரும்பத்தக்க பொன் என்றனன்; மதிக்கும் கணை வில் அன்று என்றே — பெண்ணே! நீ கூறியது மதிக்கத்தக்க கணையேயன்றி வில்லல்லவே என்று; என் காண் நகை செய்தருள்கின்றார்—என்னை மறியத்தக்க நகையினைச் செய்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) எடை என்பது இடையென மரீஇயது. எடையெனப் பாடங் கொள்ளினு மிழுக்காது ; எடுக்கப்படுவது எடை. யான் மகத்தாகிய பொன்னென்றதை ஒருமாவென்னும் அளவினதாகிய பொன்னென்றதாகக் கொண்டு, அது பெரியதொரு மலையேயாகலின், நிறுத்து அளவிடுதலரிதெனவும், அக்கார்முகம் உலகர்விரும்பும் உயர்பொன்னென்றதை மத்திய சங்காரகாலத்தில் இவ்வுலகையுண்டு தனக்குளொடுக்கும் மால்விடையென்றதாகக்கொண்டு, அம்மாடு நமது கணையேயன்றி வில்லன்றெனவுங் கூறுகின்றாளொன்பது. மா என்பது காலென்னும் சிற்றெண்ணின் அளவில் ஐந்தில் ஒருகூறு. ௫௰

செய்கான்வளஞ்சூழொற்றியுளீர்திருமான்முதன்முத்தேவர்கட்கு
மைகாணீ[illegible]ன்றேனிதன்மேலணங்கேநீயேழடைதியென்றார்
மெய்காணதுதானென்னென்றேன்விளங்குஞ்சுட்டுப்பெயரன்றே
யெய்காணுறவேநகைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) செய் கான் வளஞ்சூழ் ஒற்றியுளீர் திருமால் முதல் முத்தேவர்கட்கும் நீர் ஐ என்றேன்—வயல்கள் தோன்றப்பெற்ற வளஞ்சூழ்ந்த ஒற்றியுள்ளவரே! விஷ்ணுமூர்த்திமுதலிய முத்தேவர்கட்கும் நீர் தலைவரன்றோ என்றனன் ; அணங்கே இதன்மேல் நீ ஏழ் அடைதி என்றார்—பெண்ணே ! நீ கூறிய இதற்குமேல் ஏழ் அடைந்திருக்கின்றாய் என்றனர் ; மெய் அது என் என்றேன்—மெய்தான் அது யாது தெரியச்சொல்லும் என்றனன் ; விளங்கும் சுட்டுப்பெயரொன்றே எய் காணுறவே நகைக்கின்றார் — (நீ கூறியது) விளங்கத்தக்க சுட்டுப்பெயரொன்று கூறி யாவருங்காணும்படி சிரிக்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-கு.) முத்தேவர் - ஈண்டுத்திருமால் பிரமன் இந்திரன். கான் தான் - அசைகள். எய்த்தல் - அறிதல். யாம் ஒரு ஐ, நீ ஏழ் ஐயாயிருக்கின்றாயென்னு நயந்தோன்ற ஏழடைதியென்றபடி. ஏழ் ஐ - ஏழை (பேதை.) அடைதியென்பதன் இகரம் நிகழ்காலங்குறித்தது. அதுவென்று சுட்டியது யாது? கூறும் என்று வினவ, இவர் அதுவென்பது யாதென்று வினவியதாகக்கொண்டு அது சுட்டுப்பெயரொன்று விடைகூறி, நீ ஏழையாதலால், ஈது தெரிந்திலையென்று நகைக்கின்றாரொன்பது. ௫௧

விண்டுவணங்குமொற்றியுளீர்மென்பூவிருந்தும்வன்பூவில்
வண்டுவிழுந்ததென்றேனெம்மலர்க்கைவண்டும்விழுந்ததென்றார்
தொண்டர்க்கருள்வீர்மிகவென்றேன்றோகாய்நாமேதொண்டனென
வெண்டங்குறவேநகைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) விண்டு வணங்கும் ஒற்றியுளீர்—விஷ்ணுமூர்த்திவணங்கும் ஒற்றியிலுள்ளவரே! ; வண்டு மென்பூ இருந்தும் வன்பூவில் விழுந்தது என்றேன்—வளையலானது மெல்லிய பூப்போலுங் கரத்திலிருந்தும் வலிய பூவில்

விழுந்தது (என்செய்வேன்) என்றனன்; எம் மலர்க்கை வண்டும் விழுந்தது என்றார்—எமது மலர்க்கையிலிருந்த வண்டும் பூமியில் விழுந்ததுதான் என்றார்; தொண்டர்க்கு மிக அருள்வீர் என்றேன்—நீர் அடியர்கட்கு மிக அருளும் வள்ளல் என்றனன்; தோகாய் நாமே தொண்டன் என என் தங்குறவே நகைக்கின்றார்—தோகைபோல்வாளே! நாமே தொண்டன் என்று யாவர்க்கும் மதிப்பமைய நகைசெய்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) பூவிற்சிறந்ததாகலின் பூவென்றது ஈண்டுத் தாமரைப்பூவைச் சுட்டிநின்றது. மலரிலிருத்தற்குரியனவாகலின், இதுவும் சங்கு வண்டென்பதுதோன்ற வண்டு விழுந்ததெனவும், திருமாலாகிய அம்பு தலத்திற் சயனித்தல் பற்றித் தலசயனமெனவே ஓர்தலமு முண்டென்பதுதோன்ற மலர்க்கைவண்டும் விழுந்ததெனவும், தொண்டனென்பதற்குப் பழைமையானென்பதும் ஒருபொருளாகலின் யாமே அநாதியரென்பார், நாமே தொண்டனெனவும் கூறியபடி. அன்றி, ஏற்கவந்தமையின் நாமே தொண்டனாயினேமெனலும் ஒன்று. வண்டு - சங்கு, கைவளை, அம்பு. விழுதல் - வீழ்தல், சயனித்தல். தலசயனம் - திருக்கடன்மல்லை (மாவலிபுரம்.) ௫௨

மட்டார்மலர்க்காவொற்றியுளீர்மதிக்குங்கலைமேல்விழுமென்றே
னெட்டாமெழுத்தையெடுத்துநாமிசைத்தேமென்றாரெட்டாக
வுட்டாவுறுமவ்வெழுத்தறியவுரைப்பீரென்றேனந்தணரூர்க்
கிட்டார்நாமமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மட்டு ஆர் மலர் கா ஒற்றியுளீர் மதிக்கும் கலைமேல் விழும் என்றேன்—தேனூர்ந்த மலர்நிறைந்த சோலைகளையுடைய ஒற்றியிலுள்ளவரே! மதிக்கத்தக்க தமது வஸ்திரம் மேல்விழும் (ஆகையால் ஒற்றியிரும்) என்றனன்; எட்டாம் எழுத்தை எடுத்து நாம் இசைத்தேம் என்றார்—பெண்ணே! எட்டென்னும் எண்ணைக்குறிக்கும் எழுத்தை இப்பொழுதே எடுத்துக் கொண்டது நாம்சொல்லினேம் (அறிவாய்) என்றனர்; எட்டு ஆக உள் தாவுறும் அவ்வெழுத்து அறிய உரைப்பீர் என்றேன்—எட்டென்னும் எண்ணைக் குறிப்பதாக உமதுளத்திற்கொண்ட அவ்வெழுத்தை யானறிய உரைத்தருளுவீர் என்றனன்; அந்தணர் ஊர்க்கு இட்டு ஆர் நாமம் என்கின்றார்—பிராமணர்களுடைய ஊருக்கு இட்டு வழங்கும் பெயரே என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) கலை மேல்விழுமெனத் தலைவி பெருமான் கலையைச்சுட்டிக் கூறினளாகப் பெருமான் நின் கலை மேல்விழுவதன்று; இப்பொழுதே அவிழுகின்றது காத்துக்கொள் என்று எதிரியம்பியவாறு. விழும் என்பதின்மேல் எட்டு என்னும் எண்ணைக்குறிக்கும் அகரம் சேர்க்கில், அவிழும் என்றாதலையுணர்க. அதையுணராது மயங்கினட்கு அந்தணரூர்க்கு இட்டார் நாமமாகிய அகரம் என்று குறிப்பித்ததாம். அகரம் - அக்கிரகாரம். ௫௩

ஒற்றிநகரீர்மனவசிதானுடையார்க்கருள்வீர்நீரென்றேன்
பற்றியிறுதிதொடங்கியதுபயிலுமவர்க்கேயருள்வதென்றார்
மற்றிதுணர்கிலேனென்றேன்வருந்தேலுள்ளவன்மையெலா
மெற்றிலுணர்தியென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றி நகரீர் நீர் மநவசிதான் உடையார்க்கு அருள்வீர் என்றேன்—ஒற்றிநகரத்தரே! நீர் மனவசியமுடைய யோகிகட்கே அருளவல்லீர் என்றேன்; இறுதிபற்றி தொடங்கி அதுபயிலும் அவர்க்கே அருள்வது என்றார்—நீ சொன்னதைக் கடையை முதலாகக்கொண்டு தொடங்கி உச்சரிப்பவருக்கே நாம் அருள்வது என்றனர்; இது உணர்கிலேன் என்றேன்—இது யான் தெரிந்திலேன் என்றனன்; வருந்தேல் உள்ள வல் மை எல்லாம் எற்றில் உணர்தி என்கின்றார்—வருந்தாதே (உனக்கு) உள்ள வலிய அஞ்ஞானங்களெல்லாம் அகற்றுவையேல் உணர்வாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) மற்று - அசை. மநவசி என்பதை இறுதிதொடங்கிப் பயிலல் சிவநமஃ என்றுசெபித்தல். (சிவநமஃ - சிவமேவந்தனம்) என்னும் பொருட்டு.

வான்றோய்பொழிற்சூழொற்றியுளீர்வருந்தாதணைவேறோவென்றே
னூன்றோயுடற்கென்றார்தெரியவுரைப்பீரென்றேனோவிதுதான்
சான்றோருமதுமரபோர்ந்துதரித்தபெயர்க்குத்தகாதென்றே
யென்றோர்மொழிதந்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வான் தோய் பொழில்சூழ் ஒற்றியுளீர் வருந்தாது அணைவேறோ என்றேன்—வானளவு ஓங்கிய சோலைசூழ்ந்த ஒற்றிவாணரே! (மன்மதன் வாட்ட) வருந்தாது உம்மைச்சேருவேறோ? என்றனன்; ஊன் தோய் உடற்கென்றார்—(அது) மாமிசப்பற்றுடைய உடலுக்கேயன்றி உயிர்க்குப்பயனில்லை என்றனர்; தெரிய உரைப்பீர் என்றேன்—நீர் கூறுவதை விளங்கக்கூறுவீர் என்றனன்; ஓ இதுதான் சான்றோர் உமது மரபு ஓர்ந்து தரித்த பெயர்க்கு தகாது என்றே—ஓ ஓ! இது அறிஞர் உமது மரபையுணர்ந்து உமக்குச் சூட்டிய பெயருக்குத் தக்கதன்றே என்று; என்று ஓர்மொழி தந்தருள்கின்றார்—மேற்கொண்டு ஒருமொழியைத் தந்தருள்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) வரும் தாது அணைவேறோ? என்றதற்கு வளரும் பொன்னணி பூணப்பெறுவேறோ? என்றதாகக்கொண்டு அப்பூண் உயிர்க்குரித்தன்று, ஊன்றோயுடற்குரித்தென்றுரென்றும், சத்ததாதுக்கள் முதலியன அணைவு ஏறோ? என்றதாகக்கொண்டு உடலோடுங்கூடி வாழ்தற்கென்றுரொன்றும், தெரியக் கூறுவீரென்றதற்கு இங்ஙனம் மீட்டுமீட்டும் கேட்டல் உமதியல் பறிந்திட்ட பெண்ணுதிய பெயர்க்குத் தகாதென்றுரொன்றும் கூறியவாறு. தாது வாசனைப்பொடியாதியவெனலும், வலிய பூணுதியன தாங்கப்பெறு

தல் நமது மென்மையுணர்ந்தே இடப்பட்ட மெல்லியரென்னும் பெயர்க்குத் தகாதென்று கூறினானெனலும் ஒன்று. ௫௫

தீதுதவிர்க்குமொற்றியுளீர்செல்லலறுப்பதென்றென்றே
னீதுநமக்குத்தெரிந்ததென்றாரிறையாமோவிங்கிதுவென்றே
னோதுமடியார்மனக்கங்குலோட்டுநாமேயுணரன்றி
யேதுமிறையன்றென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தீது தவிர்க்கும் ஒற்றியுளீர் செல்லல் அறுப்பது என்று என்றேன்—தீமைகளை அடியர்க்கு அகற்றும் ஒற்றிவாணரே! எமது துன்பத்தை அகற்றுவது என்றோ என்றனன்; ஈது நமக்கு தெரிந்தது என்றார்—இது நமக்குத் தெரிந்த விஷயமே என்றனர்; இங்கிது இறை ஆமோ என்றேன்—இது உத்திரமாகுமா? என்றனன்; ஓதும் அடியார் மனக்கங்குல் ஓட்டும் இறை நாமே உணர் அன்றி ஏதும் அன்று என்கின்றார்—துதிக்கும் நமது அடியர்களுடைய மனவிருட்டை ஓட்டத்தக்க இறைவர் நாமே உணருவாயாக நாமன்றி மற்றெப்பொருளும் (இறை) அன்று என்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) 'செல்லல் அறுப்பது என்று' என்றதை, செல்லாநின்ற அல்லையறுப்பது சூரியனென்றதாகவும்; இது பதிலுத்தரமாமோ? வென்றதை, இச்சூரியன் கடவுளாமோ? என்றதாகவுங் கொண்டு, இங்ஙனம் மாறுபட இசைக்கின்றாரென்பது. அல் - இருள். என்று - எந்நாள், சூரியன். இறை - ஒருவர் மொழிக்குப்பதிலாக இறுக்கப்படுவதாகியவிடை, தலைமை. ௫௬

ஒண்கைமழுவோடனலுடையீரொற்றிநகர்வாழுத்தமர்நீர்
வண்கையொருமைநாதரென்றேன்வண்கைப்பன்மைநாதரென்றா
ரெண்கணடங்காவதிசயங்காணென்றேன்பொருளன்றிவையதற்கென்
றென்சொன்மணிதந்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒள் கை மழு ஓடு அனல் உடையீர் ஒற்றி நகர்வாழ் உத்தமர்—ஒள்ளிய கரத்தில் மழுவும் ஓடும் அனலும் உடையவரே! ஒற்றிநகர்வாழும் உத்தமரே!; நீர் வண்கை ஒருமை நாதர் என்றேன்—நீர் வளந்தருங் கரத்தையுடைய ஒற்றுமைத்தலைவர் என்றனன்; வண் பன்மை கை நாதர் என்றார் — (அதற்கிவர்) வளவிய பலகையுடைய நாதரென்றனர்; எண்கண் அடங்கா அதிசயம் என்றேன் — எண்ணத்தில் அடங்காத அதிசயம் இது என்றனன்; அதற்கு இவை பொருள் அன்று என்று—நீ சொல்லுமிவை அதற்கு அருத்தம் அல்லவே என்று; என் மணி சொல் தந்தருள்கின்றார்—மதிக்கத்தக்க மாணிக்கம்போலும் சொற்களைத் தருகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) மழுவோடு அனலு முடையீர் என்றதும் ஒன்று. வண்மை என்பதில் மையீறு கெட்டது. எண் - கணக்குமாம். அடங்கா - ஈறுகெட்ட

எதிர்மறைப் பெயரெச்சம். காண் - அசை. ஒருமையென்பதற்கு ஒன்றெனப்பொருள்கொண்டு இறைவர் யாம் ஒருகையுடையம் அல்லேம், பலகையுடையேம் என்பார் போன்று, அத்தலத்தில் தமக்கு வழங்கும் பலகைநாதரென்னுந் திருநாமத்தை விளக்கியவாறு. பதர்போலப் பரிகரிக்கத்தக்கன வன்று; நென்மணிபோலப் போற்றத்தக்கனவென்பது தோன்றச் சொன்மணியெனப் பட்டதெனலுமாம். சொல் - நெல். ௫ள

ஒருவரெனவாழொற்றியுளீருமக்கம்மனையுண்டோவென்றே
னிருவரொருபேருடையவர்காணென்றாரென்னென்றேனெம்பேர்
மருவுமீறற்றயலகரம்வயங்குமிகரமானதென்றே
யிருவுமொழிதந்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வாழ் ஒற்றி ஒருவர் என உள்ளீர்—வாழ்கின்ற ஒற்றிப்பதியிலே ஒப்பற்றவரொன வீற்றிருப்பவரே; உமக்கு அம்மனை உண்டோ என்றேன்—உமக்கு நற்றாய் உண்டோ? என்றனன்; ஒருபேருடையவர் இருவர் என்றார்—ஒரேபெயரையுடையவர் இருவருண்டென்றனர்; என் என்றேன் — அப்பெயர் யாது என்றனன்; வயங்கும் எம்பேர் மருவும் ஈறு அற்று அயலகரம் இகரமானது என்றே—விளங்கும் எமதுபேரில் இறுதிபோய் அயலெழுத்து இகரமானபெயரே என்று; இருவும் மொழிதந்தருள்கின்றார் — உள்ளத்தில் பதிக்கத்தக்கதொரு மொழியைச் சொல்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) காண் - அசை. தாயுண்டோ? என்றதை, அழகியமனையுண்டோ? என்றதாகக்கொண்டு இங்ஙனம் கூறியபடி. எம்பேரென்றது சங்கரனென்னு மொழியை. இதன் ஈற்று னகரங்கெட்டு அயலகரம் இகரமாகியது சங்கரியென்னு மொழி. இது சம் கரி யெனவும், சங்கு அரி யெனவும் பிரிவுபட்டு முறையே சுகத்தைச்செய்யும் உமாதேவியையும், பாஞ்சஜந்யமென்னும் சங்கையுடைய திருமாலையும் உணர்த்திற்று. திருமாலும் ஓர் சத்தியாதலை மகாசாத்தாவின் உதிப்புக்குக் காரணமாக அவர்கொண்ட மோகினி வடிவத்தானும் தெளிக. ௫அ

பேராரொற்றியீருமைப்பெற்றாரெவரென்றேனவர்தம்
மேரார்பெயரின்முன்பினிரண்டிரண்டாமெழுத்தாரென்றாரென்
னேராயுரைப்பீரென்றேனீநெஞ்சநெகிழ்ந்தாலுரைப்பாமென்
றேராயுரைசெய்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பேர் ஆர் ஒற்றியீர் உம்மை பெற்றார் எவர் என்றேன்—பெருமை நிரம்பிய திருவொற்றிவாணரே! உம்மைப் பெற்றவர் யாவர் என்றனன்; அவர் நம் ஏர் ஆர் பெயரின் முன் இரண்டு எழுத்து பின் இரண்டு ஆம் எழுத்தார் என்றார்—நம்மைப் பெற்றவர் நமது அழகமைந்த பெயரின் முற்பட்டுநின்ற ஈரெழுத்து (தமதெழுத்திற்கும்) பிற்பட்டுநிற்கும் ஈரெழுத்தாலப்பெற்றவர் என்றனர்; என் நேராய் உரைப்பீர் என்றேன்—நீர் கூறுவதென்னை? இதனைச் (செம்பொருள்படச்) செப்புவீர் என்றனன்; நீ நெஞ்

சம் நெகிழ்ந்தால் உரைப்பாம் என்று ஏராய் உரைசெய்து அருள்கின்றார்— நீமனமுருகும் அப்பருவம் பெற்றால் அறைவோமென்று சிறக்க உரைத்தருள்கின்றார் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரு.) ஈன்றார் யாரொன்றதை உம்மையடைந்தார் யாரொன்றதாகக் கொண்டு இவ்வாறு இசைக்கின்றார் என்பது. நம்பெயரொன்றது சிவவென்னும்பெயர். அதன்முன்னின்ற ஈரெழுத்து நம என்பன. இவ்விரண்டும் ஆன்மவெழுத்திற்கும் பின்னுதலாவது - நமசிவ எனநின்றவை சிவயநமவென மாறிநிற்றல். இவ்வைந்தெழுத்தும் முறையே சிவம் - சத்தி-ஆன்மா - திரோதம் - மலமென்னும் ஐம்பொருள்குறிப்பனவாய்ச் சிவன்பொருட்டு வணக்கம் என்னும் அர்த்தத்தையுங்கொண்டு சூக்குமபஞ்சாக்கரமென விளங்கி, ஆன்மாக்களுக்குப் பரிபாகம் வருமளவும் திரோதமும் மலமும் முற்பட்டும், பரிபாகம் வந்தவழிச் சிவமுஞ் சத்தியும் முற்பட்டுநிற்கத் தாம் அவ்வான்மாக்களுக்குப் பிற்பட்டும் நிற்குநிலைமையாதியவற்றை யுணர்த்தும் மூலமந்திரமாதல்பற்றி, இது பரிபாகிகட்கே உரைக்கப்படுவதென்பார், 'நெஞ்சநெகிழ்ந்தால் உரைப்பாம்' என்றார். இதன்றிறம் விரிக்கிற்பெருகும். ௫௯

தளிநான்மறையீரொற்றிநகர்தழைக்கவாழ்வீர்தனிஞான
வொளிநாவரசையைந்தெழுத்தாலுவரிகடத்தினீரென்றேன்
களிநாவலனையீரெழுத்தாற்கடலின்வீழ்த்தினேமென்றே
யெளியேற்குவப்பின்மொழிகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நால் மறை தளியீர் ஒற்றிநகர் தழைக்க வாழ்வீர் — நான்கு வேதங்களாகிய கோயிலையுடையவரே ! ஒற்றிநகரில் உலகமுய்ய வாழ்பவரே ! ; தனி ஞான ஒளி நாவரசை ஐந்தெழுத்தால் உவரி கடத்தினீர் என்றேன்—ஒப்பற்ற ஞானதீபரான திருநாவுக்கரசுநாயனாரை ஐந்தெழுத்தின் உச்சரிப்பால் கடலைக்கடப்பித்துக் கரையேற்றினீர் என்றனன் ; களிநாவலனை ஈரெழுத்தால் கடலில் வீழ்த்தினேம் என்றே—களிப்பினையுடைய நம்பியாரூரனென்னும் ஒருநாவலனை (நாம்) இரண்டெழுத்தினாலே கடலில் அமிழ்த்தினேம் என்று ; எளியேற்கு உவப்பின் மொழிகின்றார் — பேதையாகிய எனக்கு உவப்பினோடு கூறுகின்றார் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரு.) அரசு என்றதற்கு இணங்க நாவல் என்றதும், பரவைக் கரையேற்றினீர் என்றதற்கிணங்கப் பரவையிலமிழ்த்தினேம் என்றதும் நயம். ஈரெழுத்து - இரண்டெழுத்தாகிய தூது. பரவையென்னும் பரியாயப்பெயரொற்றுமைநோக்கிக் கடலில் வீழ்த்தினேம் என்றது. வீழ்த்தல் - அங்நாச்சியாரது சுகோததியின் மூழ்குவித்தல். ஐந்தெழுத்து - பஞ்சாக்கரம். ௬௦

ஒமூன்றுளத்தீரொற்றியுளீருற்றோர்க்களிப்பீரோவென்றேன்
ஞமூன்றென்பார்க்கயன்மூன்றுந்தருவேமென்றாரம்மமிகத்
தேமூன்றினதும்மொழியென்றேன்செவ்வாயுறுமுன்னகையென்றே
யேமூன்றுறவேநகைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஓம் ஊன்று உளத்தீர் ஒற்றியுளீர் உற்றோர்க்கு அளிப்பீரோ என்றேன்—பிரணவத்தைப் பதித்துத் தியானிக்கும் (அன்பர்களுடைய) உள்ளத்தை இடமாக உடையவரோ! ஒற்றிநகரரோ! உம்மையடைந்தோர்க்கு (நீர் தியாகேச ராதலால் வேண்டியது வரையாது) அளிப்பீரோ? என்றனன்; தா மூன்று என்பார்க்கு அயல் மூன்றும் தருவேம் என்றார்—தாமூன்று என்பவர்க்குத் தாகாரத்துக்கு அயலிலுள்ளது மூன்றுந்தருவேம் என்றார்; அம்ம மிக தேம் ஊன்றின நும்மொழி என்றேன்—அம்ம மிகவும் இனிப்புடையது உமது மொழிஎன்றனன்; செவ்வாய் உறும் உன் நகை என்றே ஏம் ஊன்றுறவே நகைக்கின்றார்—(அதற்கிவர்) தேமூன்றின என்பது செவ்விய வாயிலுள்ள உன் நகைகளே என்றுகூறி இன்பம்தங்கும்படி நகைசெய்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) தாமூன்று-தா தா தா (முத்தா.) தாவுக்கு அயல்மூன்று-தி தி தி (முத்தி.) தேமூன்று தே தே தே (முத்தே) ஆம். முத்தாஎன்று ஒருகால் விளிப்பார்க்கு முத்திதருவோம் என்றும்; இனிமைபதிந்தனவெனப் பொருள்படத் தேமூன்றின வென்றதற்கு முத்தேயெனப் பொருள்கொண்டு, முத்து எம்மொழியன்று நின்பற்களென்று கூறுகின்றார் என்பது கருத்து. தா தா தா வென்பதற்கு தாதா (வே) தா எனவும்; ஏ மூன்று என்பதற்கு ஏ, ஏஏ, என்னும் இகழ்ச்சிக்குறிப்பெனவும் கோடலும் ஒன்று. ௬௧

மன்னிவிளங்குமொற்றியுளீர்மடவாரிரக்கும்வகையதுநான்
முன்னிலொருதாவாமென்றேன்முத்தாவெனலேமுறையென்றா
ரென்னிலிதுதானையமென்றேனெமக்குந்தெரியுமெனத்திருவா
யின்னலமுதமுகுக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மன்னி விளங்கும் ஒற்றியுளீர் மடவார் இரக்கும் வகையது முன்னில் ஒரு தாவு ஆம் என்றேன் — நிலைத்துவிளங்கும் ஒற்றிப்பதியீரோ! பெண்கள் உம்மை யாசிக்கும் வகையைப்பற்றி யோசிக்கில் அது ஒருபற்றுக்கோடேயாகும் என்றனன்; முத்தா எனலே முறை என்றார்—(அதற்கிவர்) முக்குற்றமென்று கூறலே முறைமை என்றனர்; என்னில் இது ஐயம் என்றேன்—இப்படி குறிப்பிற்கூறில் இது சந்தேகத்திற் கிடமாகிறது என்றனன்; எமக்கும் தெரியும் என திருவாயில் நல் அமுதம் உகுக்கின்றார்—எமக்கும் (நீ கூறியது) தெரியுமெனத் திருவாயினின்று நல்ல அமுதத்தைச் சொரிகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) மடவார் - அறிவீனர், இளம்பெண்கள். தான் இரண்டும் அசைகள். பெண்களிரப்பது தமக்கு ஒருபற்றுக்கோடே என்றேனாக; இவர் ஒருதா - காமமென்னும் ஒருகுற்றமெனக்கொண்டு, காமம் சித்தியாதவழி வெகுளியும், அதுபற்றி மயக்கமும் உண்டாவது திண்ணமாகலின், முக்குற்றமெனலே முறையென்று சொன்னும்; குறிப்பொன்றுகிடக்க மற்றொன்று நீர் கூறுவது ஐயத்திற் கிடமாகின்றது என்றேனாக, என்னுடையவீடு இது

தான் பிக்ஷைவேண்டுமென்று யான் பிக்ஷையாசித்ததாகக்கொண்டு இது நின்வீடென்பது நீமக்குத்தெரியுமெனக்கூறி, எனது திருவாயிலில் (தாம் கொணர்ந்த) நல்ல அமுதத்தைச் சொரிகின்றார் என்றும் கூறியபடி. இங்ஙுனம் கொள்ளுங்கால் வாயிலில் என ஏழனுருபு விரித்துக்கொள்க. எனதில் இதுதான், ஐயம் ஏற்றுக்கொள்ளும், என்று கூறத்தொடங்கிய என்வாக்கிய முடியுமுன் இவர் இது எமக்குத்தெரியுமெனத் திருவாயினின்றும் நல்லு அமுதம்போலும் சொற்களைச் சொரிகின்றார் எனலுமாம். இன்னல் அமுதமெனப்பிரித்துத் துன்பத்தை விளைக்கும் அமுதமொழியெனினு மியையும். ௬௨

வளஞ்சேரொற்றியீரெனக்குமாலையணிவீரோவென்றேன்
குளஞ்சேர்மொழிப்பெண்பாவாய்நின்கோலமனைக்கண்மகிழ்வா
லுளஞ்சேர்ந்தடைந்தபோதேநின்னுளத்திலணிந்தேமுணரென்றே
யிளஞ்சேர்நகைசெய்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வளம்சேர் ஒற்றியீர் எனக்கு மாலை அணிவீரோ என்றேன்—சகல வளங்களும் திரண்ட ஒற்றிவாணரே! எனக்கு உமது மணமாலையை அணிவீரோ? என்றனன்; குளம்சேர் மொழி பெண் பாவாய் நின்கோல மனைக்கண்—வெல்லம்போலும் மொழியையுடைய பெண்பதுமை போல்பவளே! நினது அழகிய இல்லத்தின்கண்; நாம் மகிழ்வால் உளம் சேர்ந்து அடைந்தபோதே—யாம் உவகையோடு உள்ளமொத்து வந்து சேர்ந்தபோதே; நின் உளத்தில் அணிந்தேம் உணர் என்றே—நினது உள்ளத்திலேயே (அம்மாலையை)ச் சூடினேம் உணரக்கடவாயென்று; இளமை சேர் நகை செய்தருளுகின்றார்—இளமையான நகையினைச் (புன்முறுவலை) செய்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) நாம் மாலையை புறத்தில் பிறரறிய அணிதற்குமுன், அகத்திலேயே அணிந்தனம் என்றபடி. மால்-விரகமயக்கு. 'சீர்நகை' என்பதும் பாடம்.

வீற்றாரொற்றிநகரமர்ந்தீர்விளங்குமலரேவிளம்புநெடு
மாற்றாரென்றேனிலைகாணெம்மாலைமுடிமேற்பாரென்றார்
சாற்றாச்சலமேயீதென்றேன்சடையின்முடிமேலன்றென்றே
யேற்றாதரவான்மொழிகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வீற்று ஆர் ஒற்றிநகர் அமர்ந்தீர் விளங்கும் அலரே விளம்பும் நெடுமாற்றார் என்றேன்—தனிமையார்ந்த ஒற்றிநகர் அமர்வீரே! (உம்மைக் காமித்தமை காரணமாகப்) பரவப்பெற்ற அலர்மொழிகளே என்னையிழித்தியம்பும் பகைவர்களாய் அமைந்தன என்றனன்; எம்மாலை இலை முடிமேற்பார் என்றார் — (பெண்ணே) எமதுமாலை இலைவடிவே அதனை முடிமேல் நோக்குக என்றனர்; சாற்றா சலமே ஈது என்றேன் — சொல்லப்படாத பொய்யே இது என்றனன்; சடையில் முடிமேல் அன்று என்றே ஏற்று ஆதரவால் மொழிகின்றார்—நீ கூறியது சடையிலுள்ளது முடிமேலது அன்றென்று எதிராக ஆதரவோடு சொல்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) காண் - அசை. உம்மைப்பற்றி இசழ்ந்த அலரே பகைவராயின என்றதை, உம்முடைய மலர் மாலையே எனக்கு மாலைவிளக்குமாலையாயின என்றதாகக்கொண்டு எனது மாலை அலரன்று, வில்வபத்திரமுதலிய இலைகளாற் சமைந்தது என்றும், யான்கூறுவதைக் கூறியதாகக்கொண்டு கூறலின், இது கூறப்படாத பொய்யே என்றேனாக; ஜலமென்பதை நீரெனக்கொண்டு அது சடையது, முடியது அன்றென்றும் கூறுகின்றானென்பது. அலர் - பழிமொழி, மலர். மால்தார் - மாலைவிளக்குந்தார், பெருமை பெற்றதாருமாம். சலம் - பொய், நீர். ௪௪

புயப்பாலொற்றியீரச்சம்போமோவென்றேனுமென்றார்
வயப்பாவலருக்கிறையானீர்வஞ்சிப்பாவிங்குரைத்ததென்றேன்
வியப்பாநகையப்பாவெனும்பாவெண்பாகலிப்பாவுரைத்துமென்றே
யியற்பான்மொழிதந்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றியீர் அச்சம் புயப்பால் போமோ என்றேன்—ஒற்றிப்பதியீர்) காமனால் விளைந்த எனது அச்சம் உமது புயத்தின்கண் (அணைத்தலால்) நீங்குமோ என்றனன்; ஆம் என்றார்—ஆம் என்று கூறினர்; வயம் பாவலருக்கு இறை ஆனீர் வஞ்சிப்பா இங்குரைத்தது என்றேன்—வெற்றியையுடைய கவிகளுக்கு இறையானவரே! (அடியாளிடம்) நீர்கூறியது வஞ்சிப்பாவே என்றனன்; வியப்பு ஆ நகை அப்பா எனும்பா வெண்பா கலிப்பா உரைத்தும் என்றே—(நாம் வஞ்சிப்பாமட்டுமன்று) ஆசிரியப்பாவெனும் பாவும் வெண்பாவும் கலிப்பாவும் உரைத்துள்ளோம் என்று; இயல்பால் மொழிதந்து அருள்கின்றார்—இலக்கணப் பகுதியமைந்த மொழியைக்கூறுகின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) போமெனவும் ஆமெனவும் இருபொருள்படும்படி ஆமென்றுரைத்தாராகலால், தலைவி இது பொருள்விளங்காதபடி இங்குவஞ்சிப்புஆக உரைத்தது என்றுகூறலும், தலைவர் நீர் உரைத்தது வஞ்சியெனும்பா என்றதாகக்கொண்டு, (பெண்ணே! நீகூறியது) வியப்பு; இதுமட்டோ? ஏனைப்பாக்களும் சங்கப்புலவராய் அமர்ந்து இசைத்துள்ளோம் என்றாரென்பது கருத்து. பாவலர்-சங்கப்புலவர். வஞ்சிப்பாவென்பது வஞ்சிப்புஆக, வஞ்சியென்னும் பாஎன்றும்; ஆநகையப்பாவென்பது ஆ யாவரும்நகைக்கும் அப்பா, ஆசிரியமெனும்பா என்றும்; இங்ஙனமே வெண்பாவென்பது அறியாமைப்பா வெள்ளையெனும்பாவென்றும்; கலிப்பா என்பது வஞ்சகப்பா கலியெனும்பா என்றும் பொருள்படுவதோர்க. வஞ்சிப்பு ஆ - வஞ்சனையாக. ஆநகையப்பா என்னுங்கால், ஆ - ஆச்சரியம், நகை - சிரி என்னும் பொருளது. ௪௫

தண்ணம்பொழில்சூழொற்றியுளீர்சங்கங்கையிற்சேர்த்திடுமென்றேன்
றிண்ணம்பலமேல்வருங்கையிற்சேர்த்தோமுன்னர்தெரியென்றார்
வண்ணம்பலவிம்மொழிக்கென்றேன்மடவாயுனதுமொழிக்கென்றே
யெண்ணங்கொளநின்றுரைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தண்ணம் பொழில் சூழ் ஒற்றி உளீர் சங்கம் கையில் சேர்த்திடும் என்றேன்—குளிர்மைவாய்ந்த சோலைசூழ்ந்த திருவொற்றியூரிலமர்பவரே! வளைகள் என்கரங்களில் நிலைபெறப்பண்ணும் என்றேன்; மேல்வரும் பலகையில் முன்னர் சேர்த்தோம் தண்ணம் தெரி என்றார் — மேல்வளரப்பெற்ற பலகையில் முன்னர்ச்சேர்வித்தோம் இது நிச்சயம்; நீகண்டறி என்கின்றார்; இம்மொழிக்கு வண்ணம் பல என்றேன்—நுமது இவ்வார்த்தைக்குப் பொருள்விதம் பல என்றுகூறினேன்; மடவாய் உனது மொழிக்கு என்று எண்ணம் கொளநின்று உரைக்கின்றார் — பெண்ணே! உனதுமொழிக்கே பொருள்விதம் பலவென்று ஆலோசனை யமையநின்று சொல்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) விரகத்தாலுண்டாகிய தேகமெலிவால் நழுவிவிழும் வளைகளைக் கைகளில் நிலைபெறுவியும் என்றுயான் வேண்டினேனாக; இவர் பொதுப்படக் கையில்வளையிடும் என்றதாகக்கொண்டு, முன்னர் மதுரையில் பலபெண்கள்கையில் இட்டோமென்றும்; வித்துவசங்கமெனக்கொண்டு யாம் புலவர்க்குப் பலகையளித்து அதிற் சங்கம்சேர்த்தோமென்றுங்கூறி, மேலும் நும்மொழிக்குப் பொருள்பல என்னுங்கால், உனதுமொழியே (வளைகளைக்கரத்தில் நிலைபெறுத்தும், வளைகளைக்கையிற்கொண்டு எமக்கிடும், வித்துவ சங்கத்தை ஒழுக்கத்தில் நிலைபெறுத்தும்) என்றிங்ஙனம் பலபொருள்படுகின்றனவென்று யாம் யூகிக்கும்படி சொல்கின்றாரென்பது கருத்து. வளையலிட்டமையும் பலகையளித்தமையும் திருவிளையாடற் புராணத்துணர்க. தண்ணம்-தண்மை. பலமேல் வருங்கை யென்பதற்கு பல என்னு மொழிமேலே வரப்பெற்றதாகிய பலகை எனலுமாம். வண்ணம் - பொருள்விதம். சுசு

உகஞ்சேரொற்றியூருடையீரொருமாதவரோநீரென்றேன்
முகஞ்சேர்வடிவேலிரண்டுடையாய்மும்மாதவர்நாமென்றுரைத்தார்
சுகஞ்சேர்த்திடுநம்மொழிக்கென்றேன்றோகாயுனதுமொழிக்கென்றே
யிகஞ்சேர்நயப்பாலுரைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) உகம் சேர் ஒற்றி ஊர் உடையீர் நீர் ஒரு மாதவரோ என்றேன்—யுகங்கடோறு நிலைபெற்ற ஒற்றித்தலவாசரே! நீர் ஒப்பற்ற மாதவரோ என்றனன்; முகம்சேர் இரண்டு வடிவேல் உடையாய் நாம் மும்மாதவர் என்றுரைத்தார்—முகத்தில் விளங்கும் (கண்களாகிய) இரண்டு கூரிய வேலினையுடையவளே! நாம் மும்மாதவர் என்று உரைத்தனர்; நும் மொழிக்கு சுகம் சேர்த்திடும் என்றேன்—ஐயரே! நுமது சொற்களுக்குச் சுகஞ் சேர்த்திடும் என்றனன்; தோகாய் உனது மொழிக்கு என்றே இகம் சேர் நயப்பால் உரைக்கின்றார் — தோகைபோல்பவளே! உனது மொழிக்கே (சுகம் சேர்த்திடும்) என்று கூறி இகபோகம் விளைக்கும் நயப்போடு உரைக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஒருமாதவர் என்றதை ஒருமாதினையுடையவர் என்று பொருள்கொண்டு, யாம் உமை கங்கை திருமால் என்னும் மும்மாதையுடையவ

றொன்றும்; நும்மொழிக்கு இன்பம் விளையுமென்றதை கிளியும் விரும்பி யணையுமென்றதாகக்கொண்டு, அது உனது மொழிக்கே சேர்ந்திடும் என்றும் கூறினார் என்க. சுகம் - இன்பம், கிளி. ௪௭

ஊராமொற்றியீராசையுடையேனென்றேனெமக்கலது
நேராவழக்குத்தொடுக்கின்றாய்நினக்கேதென்றார்நீயெனக்குச்
சேராவணமீதென்றேன்முன்சேர்த்தெழுதித்தந்தவர்தாம்
யாராமடவாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றி ஆம் ஊரீர் ஆசை உடையேன் என்றேன்—ஒற்றியாகிய ஊரை உடையவரே! யான் ஆசையுடையேன் என்றனன்; எமக்கு அலது நினக்கு ஏது நேராவழக்கு தொடுக்கின்றாய் என்றார் — ஆசையுடையோம் என்பது எமக்கேயன்றி நினக்கேது நீ ஒவ்வாவழக்கு உரைக்கின்றாய் என்றனர்; நீர் எனக்கு ஈது சேராவணம் என்றேன் -- ஐயரே! எனக்கு இவ்வாறு உரைப்பது நீர் என்னைச் சேராதவகையேபோலும் என்றனன்; மடவாய் முன் சேர்த்து ஈது எழுதித்தந்தவர் யார் ஆர் என்கின்றார்—மடப்பத்தை யுடையவளே! முன்னே எம்மைச் சேர்த்து இதனை எழுதித்தந்தவர் யார் யார் (கூறு) என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) யான் உம்மிடம் ஆசையுடையேனென்று கூறுங்கால், ஆசையென்றது திக்கு எனக்கொண்டு திக்கை உடையோம் யாமே: திகம்பரநாமம் நினக்கேது என்றும், நீர் சேராவணம் ஈது என்று கூறுங்கால், நீர் சேர்ந்த முறிச்சீட்டு ஈது எனக்கொண்டு, ஈதெழுதித்தந்தவர் யாரென்றும் கூறுகின்றாரென்பதாம். ௪௮

வருத்தந்தவிரீரொற்றியுளீர்மனத்திலகாதமுண்டென்றே
னிருத்தந்தொழுமடியவரைநினைக்கின்றோரைக்காணினது
வுருதன்பெயர்முன்னெழுத்திலக்கமுற்றேமற்றவெல்லையகன்
றிருத்தலறியாயென்கின்றாரிதுதான்சேடியெனனேடீ.

(இ-ள்.) ஒற்றியுளீர் வருத்தம் தவிரீர் மனத்தில் அகாதம் உண்டு என்றேன் — ஒற்றிவாணரே! வருத்தத்தைத் தவிர்க்காதவராக விருக்கின்றீர் உமது மனத்தில் வஞ்சனை உண்டு என்றனன்; நிருத்தம் தொழும் அடியவரை நினைக்கின்றோரை காணின் — நமது பஞ்சகிருத்திய நடனத்தைத் தொழும் நமது அடியவரைத் தியானிக்கின்றவரைக் கண்டால்; அது உரு தன் பெயர் முன் எழுத்து இலக்கமுற்றே மற்று அவ் எல்லை அகன்றிருத்தல் அறியாய் என்கின்றார்—நீகூறிய வஞ்சனையென்னும் பொருடரும் அகாதம் என்னும் பெயரில் முதலிலுள்ள எழுத்துக் கணக்கெழுத்தாகி அக்கணக்கெல்லையளவும் அகன்றிருத்தலை நீ அறியாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) நிருத்தம் - சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்னும் ஐவகைத்தொழில் காரணமாக நடிக்கும் நடனம். அகாதம் - வஞ்

(இ-ள்.) தண்ணம் பொழில் சூழ் ஒற்றி உளீர் சங்கம் கையில் சேர்த்திடும் என்றேன்—குளிர்மைவாய்ந்த சோலைசூழ்ந்த திருவொற்றியூரிலமர்பவரே! வளைகள் என்கரங்களில் நிலைபெறப்பண்ணும் என்றேன்; மேல்வரும் பலகையில் முன்னர் சேர்த்தோம் திண்ணம் தெரி என்றார்—மேல்வளரப் பெற்ற பலகையில் முன்னர்ச்சேர்வித்தோம் இது நிச்சயம்: நீகண்டறி என்கின்றார், இம்மொழிக்கு வண்ணம் பல என்றேன்—நுமது இவ்வார்த்தைக்குப் பொருள்விதம் பல என்றுகூறினேன்; மடவாய் உனது மொழிக்கு என்று எண்ணம் கொளநின்று உரைக்கின்றார—பெண்ணே! உனதுமொழிக்கே பொருள்விதம் பலவென்று ஆலோசனை யமையநின்று சொல்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) விரகத்தாலுண்டாகிய தேகமெலிவால் நழுவிவிழும் வளைகளைக் கைகளில் நிலைபெறுவியும் என்றுயான் வேண்டினேனாக; இவர் பொதுப்படக் கையில்வளையிடும் என்றதாகக்கொண்டு, முன்னர் மதுரையில் பலபெண்கள்கையில் இட்டோமென்றும்; வித்துவசங்கமெனக்கொண்டு யாம் புலவர்க்குப் பலகையளித்து அதிற் சங்கம்சேர்த்தோமென்றுங்கூறி, மேலும் நும்மொழிக்குப் பொருள்பல என்னுங்கால், உனதுமொழியே (வளைகளைக்கரத்தில் நிலைபெறுத்தும், வளைகளைக்கையிற்கொண்டு எமக்கிடும், வித்துவ சங்கத்தை ஒழுக்கத்தில் நிலைபெறுத்தும்) என்றிங்ஙனம் பலபொருள்படுகின்றனவென்று யாம் யூகிக்கும்படி சொல்கின்றாரென்பது கருத்து. வளையவிட்டமையும் பலகையளித்தமையும் திருவிளையாடற் புராணத்துணர்க. தண்ணம்-தண்மை. பலமேல் வருங்கை யென்பதற்கு பல என்னு மொழிமேலே வரப் பெற்றதாகிய பலகை எனலுமாம். வண்ணம் - பொருள்விதம். ௬௬

உகஞ்சேரொற்றியூருடையீரொருமாதவரோநீரென்றேன்
முகஞ்சேர்வடிவேலிரண்டுடையாய்மும்மாதவர்நாமென்றுரைத்தார்
சுகஞ்சேர்த்திடுநும்மொழிக்கென்றேன்றோகாயுனதுமொழிக்கென்றே
யிகஞ்சேர்நயப்பாலுரைக்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) உகம் சேர் ஒற்றி ஊர் உடையீர் நீர் ஒரு மாதவரோ என்றேன்—யுகங்கடோறு நிலைபெற்ற ஒற்றிநகர்வாசரே! நீர் ஒப்பற்ற யாதவரோ என்றனன்; முகம்சேர் இரண்டு வடிவேல் உடையாய் நாம் மும்மாதவர் என்றுரைத்தார்—முகத்தில் விளங்கும் (கண்களாகிய) இரண்டு கூரிய வேலினையுடையவளே! நாம் மும்மாதவர் என்று உரைத்தனர்; நும் மொழிக்கு சுகம் சேர்த்திடும் என்றேன்—ஐயரே! நுமது சொற்களுக்குச் சுகஞ்சேர்த்திடும் என்றனன்; தோகாய் உனது மொழிக்கு என்றே இகம் சேர் நயப்பால் உரைக்கின்றார்—தோகைபோல்பவளே! உனது மொழிக்கே (சுகம் சேர்த்திடும்) என்று கூறி இகபோகம் விளைக்கும் நயப்போடு உரைக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஒருமாதவர் என்றதை ஒருமாதினையுடையவர் என்று பொருள்கொண்டு, யாம் உமை கங்கை திருமால் என்னும் மும்மாதையுடையவ

றொன்றும்; நும்மொழிக்கு இன்பம் விளையுமென்றதை கிளியும் விரும்பி யணையுமென்றதாகக்கொண்டு, அது உனது மொழிக்கே சேர்ந்திடும் என்றும் கூறினர் என்க. சுகம் - இன்பம், கிளி. ௧௭

ஊரமொற்றியீராசையுடையேனென்றேனெமக்கலது
நேராவழக்குத்தொடுக்கின்றாய்நினக்கேதென்றார்நீயெனக்குச்
சேராவணமீதென்றேன்முன்சேர்த்தீதெழுதித்தந்தவர்தாம்
யாரார்மடவாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றி ஆம் ஊரீர் ஆசை உடையேன் என்றேன்—ஒற்றியாகிய ஊரை உடையவரோ! யான் ஆசையுடையேன் என்றனன்; எமக்கு அலது நினக்கு ஏது நேராவழக்கு தொடுக்கின்றாய் என்றார் — ஆசையுடையோய் என்பது எமக்கேயன்றி நினக்கேது நீ ஒவ்வாவழக்கு உரைக்கின்றாய் என்றனர்; நீர் எனக்கு ஈது சேராவணம் என்றேன்—ஐயரோ! எனக்கு இவ்வாறு உரைப்பது நீர் என்னைச் சேராதவகையேபோலும் என்றனன்; மடவாய் முன் சேர்த்து ஈது எழுதித்தந்தவர் யார் ஆர் என்கின்றார்—மடப்பத்தையுடையவளே! முன்னே எம்மைச் சேர்த்து இதனை எழுதித்தந்தவர் யார் யார் (கூறு) என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) யான் உம்மிடம் ஆசையுடையேனென்று கூறுங்கால், ஆசையென்றது திக்கு எனக்கொண்டு திக்கை உடையாக வுடையோம் யாமே: திசாம்பரநாமம் நினக்கேது என்றும், நீர் சேராவணம் ஈது என்று கூறுங்கால், நீர் சேர்ந்த முறிச்சீட்டு ஈது எனக்கொண்டு, ஈதெழுதித்தந்தவர் யாரென்றும் கூறுகின்றாரென்பதாம். ௧௮

வருத்தந்தவிரீரொற்றியுளீர்மனத்திலகாதமுண்டென்றே
னிருத்தந்தொழுநம்மடியவரைநினைக்கின்றோரைக்காணினது
வுருத்தன்பெயர்முன்னெழுத்திலக்கமுற்றேமற்றவெல்லையகன்
றிருத்தலறியாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றியுளீர் வருத்தம் தவிரீர் மனத்தில் அகாதம் உண்டு என்றேன் — ஒற்றிவாணரே! வருத்தத்தைத் தவிர்க்காதவராக விருக்கின்றீர் உமது மனத்தில் வஞ்சனை உண்டு என்றனன்; நிருத்தம் தொழும் நம் அடியவரை நினைக்கின்றோரை காணின் — நமது பஞ்சகிருத்திய நடனத்தைத் தொழும் நமது அடியவரைத் தியானிக்கின்றவரைக் கண்டால்; அது உருதன் பெயர் முன் எழுத்து இலக்கமுற்றே மற்று அவ் எல்லை அகன்றிருத்தல் அறியாய் என்கின்றார்—நீகூறிய வஞ்சனையென்னும் பொருடரும் அகாதம் என்னும் பெயரில் முதலிலுள்ள எழுத்துக் கணக்கெழுத்தாகி அக்கணக்கெல்லையளவும் அகன்றிருத்தலை நீ அறியாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) நிருத்தம் - சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்னும் இவ்வைந்தொழில் காரணமாக நடிக்கும் நடனம். அகாதம் - வஞ்

சனே ; அகாதமென்னும்பெயரின் முதலெழுத்தை எட்டு என்னும் இலக்கமாக்கி, அகாதம் எம்மிடத்திலில்லை ; எம்மடியாளை நினைக்கின்றோரைக்காணினும் அது எண்காதமளவும் அகலும் என்றாயிற்று. ௬௯

மையலகற்றீரொற்றியுளீர்வாவென் றுரைப்பீரோவென்றேன்
செய்யவதன்மேற்சிகரம்வைத்துச்செவ்வனுரைத்தாலிருவாவென்
றுய்யவுரைப்பேமென்றார்நும்முரையென்னுரையென்றேனிங்கே
யெய்யுன்னுரையையென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) ஒற்றியுளீர் மையல் அகற்றீர் வாவென்றுரைப்பீரோ என்றேன் — ஒற்றிப்பதியீர்! எனது மயக்கத்தை நீக்கினீரில்லீர் (ஆயினும்) வா என்றேனும் அழைப்பீரோ? என்றேன் ; செய்ய அதன்மேல் சிகரம்வைத்து செவ்வன் உரைத்தால் இருவா என்று உய்ய உரைப்பேம் என்றார்—பெண்ணே! செம்மையையுடைய வா என்னும் அதன்மேல் சிகரத்தைவைத்து முறைப்பட ஜபித்தால் இருவா (வாவா) என்று நீ உய்யும்படி கூறுவேம் என்றனர் ; நும் உரை என் உரை என்றேன்—ஐயரே! நுமதுசொல் என் சொல் என்றனன் ; இங்கே உன் உரையை எய் என்கின்றார்—இப்போது உனதுசொல்லையே உய்த்துணர்க என்கின்றனர் ; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) வா என்பதன்மேல் சிகரம் வைக்கில் சிவா என்றாதலும் ; இருவா என்பதற்கு வாவா என்று பொருளாதலும் உணர்க. சிவா என்று கூறுவாரை நாம் அழைப்பேம் என்றபடி. இருவா என்பதற்கு இருப்பாய், சமீபத்தில்வருவாய், என்று பொருளாக்கலும் ஒன்று. எய்தல் - அறிதல். ௭௦

தாவென்றருளுமொற்றியுளீர்தமியேன்மோகதாகமற
வாவென்றருள்வீரென்றேனவ்வாவின்பின்னர்வருமெழுத்தை
மேவென்றதனிற்சேர்த்ததிங்கேமேவினன்றோவாவென்பே
மேவென்றிடுகண்ணேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடி,

(இ-ள்.) தா என்றருளும் ஒற்றியுளீர்—(பிக்ஷையைத்) தா என்று கேட்கும் ஒற்றியூர் நிவாசரே!; தமியேன் மோகதாகம் அற வாவென்று அருள்வீர் என்றேன்—தமியளான (அடியாளது) மோகதாகம் போக (என்னருகில்) வருவாயென்று அருளுவீர் என்றேன் ; அவ்வாவின் பின்னர்வரும் எழுத்தை மேவு என்று அதனில் சேர்த்தது இங்கே மேவின் அன்றோ வா என்பேம்—அந்த வாவென்னும் எழுத்தின்பின்னர் வரும் வி என்னும் எழுத்தை என்னுடன் மேவு என்று தன்னுடன் கூட்டிக்கொண்டது இங்கிருக்கப்பெறினன்றோ? (உன்னை) வாவென்றழைப்பேம் ; ஏ வென்றிடுகண் என்கின்றார்—அம்பினையும் வெல்லும் கண்களையுடையவளே! என்கின்றனர் ; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஏவென்றிடுகண் - பண்மொழித்தொடர் அன்மொழித்தொகை. நங்கையே! நீ மோகதாகமுடைமையால் வாவி இங்கிருந்தாலன்றோ? உனது தாகமற நாமழைப்பேமென்றனரென்க ; வாவி - தடாகம் ; அன்றி,

வாவி (அவாவி) நீ இங்கே அடைந்தாலன்றோ யாம் அழைப்பேம் என்றலு மாம். வாவல் - அவாவுதல். ௭௧

என்மேலருள்கூர்ந்தொற்றியுளீரென்னையணைவானினைவீரேற்
பொன்மேல்வெள்ளியாமென்றேன்பொன்மேற்பச்சையாஞ்சதன்மே
லன்மேற்குழலாய்சேயதன்மேலலவனதன்மேன்ஞாயிறஃ
தின்மேலொன்றின்றென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றியுளீர் என்மேல் அருள்கூர்ந்து என்னை அணைவான் நினைவீரேல்—ஒற்றியூரிலமர்பவரே! என்னிடம் அருளுடையீராய் என்னை அணையும்படி நினைப்பீரேல்; பொன் மேல் வெள்ளி ஆம் என்றேன்—பொன்னெனப்படும் இலக்குமியும் இனி வெள்ளியெனப்படுவாள் என்றுகூறினேன்; அல் மேல் குழலாய்—இருளினும் மேம்பட்ட கரிய கூந்தலையுடையவளே!; பொன் மேல் பச்சை—பொன்மேல் புதனும்; — அதன்மேல்சேய்—அதற்கு மேல் செவ்வாயும்; அதன்மேல் அலவன் — அதனமேல் திங்களும்; அதன் மேல் ஞாயிறு—அதன்மேல் சூரியனுமாம்; அஃதின்மேல் ஒன்றின்று என்கின்றார்—அதன் மேல் ஒன்றுமில்லை எனகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஆங்கு - அசை. துயரின் மூழ்கியோர்க்கு உடல்வெளுத்த லியல்பாகையால், நீர் எம்மை யணைவான் நினைவீரேல், இதுபோதும் சுகம் தனக்கு வாய்க்காமைபற்றி இலக்குமியும் துயரின்மூழ்கி வெண்ணிறமுடையவளாய் இனி வெள்ளியென்னப்படுவாள் என்று யான் கூறினேனாக; இவர் பொன்னெனப்படும் வியாழனுக்கு முன்னுள்ளது வெள்ளியென்றதாகக்கொண்டு, வெள்ளி பின்னுள்ளதே பொன்மேலுள்ளவை புதனாதியவைகளே யென ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம வெள்ளியென வழங்கு முறைப்படி வகுத்துக்கூறுகின்றாரென்றவாறு. கிரகம் ஏழனுள் சனியை விதந்துகூறாமை அது சுபக்கிரகம் அன்றென்பது விளக்குதற்கென்க. ௭௨

வயலாரொற்றிமேவுபிடிவாதர்நாமமியாதென்றேன்
மயலாயிடுமிப்பெயர்ப்பின்னர்வந்தவிளையநாமமென்றார்
செயலார்காலமறிந்தென்னைச்சேர்வீரென்றேன்சிரித்துனக்கிங்
கியலாரயலாரென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வயலார் ஒற்றி மேவு பிடிவாதர் நாமம் யாதென்றேன்—வயனிரம்பிய ஒற்றியில்வாழும் பிடிவாதகுணமுடைய உம்முடைய நாமம் யாதோ? என்றனன்; மயலாய் இடும் இப்பெயர் பின்னர் வந்த இளைய நாமம் என்றார்—மயலையுடையவளே! உன்னால் இடப்பட்ட இப்பெயருக்குப் பின்னர் வந்த இளையநாமமே நமக்குரிய தென்றனர்; (ஆயின்) செயல் ஆர் காலம் அறிந்து என்னை சேர்வீர் என்றேன்—கலவிச் செய்கைக்கு உரியகாலம் இதுவென அறிந்து என்னைச் சேர்ந்தணைவீரென்றேன்; சிரித்து உனக்கு இங்கு இயலார் அயலார் என்கின்றார்—(அதனைக்கேட்டஇவர்) சிரித்து மங்கை

யே! உனக்கு உறவினர்யாவர்? அயலவர்யாவர்? அதனைக்கூறுவாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என? எ-று.

(வி-ந.) பிடிவாதரென்றது பிடிவாதங்கொண்டு காளியோடு நடித்த நடனமூர்த்தியைச் சுட்டியதாகத் தலைவர் கொண்டு, எமக்குரிய இருபத்தைந்துமூர்த்தங்களுள் நீசுட்டிய அந்தச்சபாபதி மூர்த்தத்துக்குப் பின்வைத்து வழங்கப்படும் கலியாணசுந்தரமூர்த்திப்பெயரே நமது பெயரென்பார், 'பின் வந்த இளையநாமம்,' என்றார். எனவே, உனது உறவுடைமைகளை உள்ளவாறுரைக்கின் விக்கினநிகழாவண்ணம் முறைப்படி கலியாணசுந்தரரென்னும் பெயர்க்கிசைய நாம் மணப்போம் என்றாராயிற்று. ௭௩

நாலாரணஞ்சூழொற்றியுளீர்நாசம்வாங்கலென்னென்றேன்
காலாமிரண்டிற்கட்டவென்றார்கலைத்தோல்வல்லீர்நீரென்றேன்
வேலார்விழியாய்புலித்தோலும் வேழத்தோலும்வல்லேமென்
றேலாவமுதமுகுக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நால் ஆரணம் சூழ் ஒற்றியுளீர் நாசம் வாங்கல் என் என்றேன்—நான்குவேதங்களும் சூழ்ந்து துதிக்கவல்ல ஒற்றிப்பதியீரே! மலையை வளைத்தல் ஏதற்கென்றனன்; கால் இரண்டில் கட்ட என்றார்—மங்கையே காலிரண்டிலும் கட்டுதற்கு என்றனர்; நீர் கலைத்தோல் வல்லீர் என்றேன்—ஐயரே! நீவிர் கலைத்தோலில் வல்லவா என்றனன்; வேல் ஆர் விழியாய் புலித்தோலும் வேழத்தோலும் வல்லோம் என்று—வேல்போலும் விழியையுடையவளே! புலித்தோலும் யானைத்தோலும் புனையவல்லோமென்று; ஏலா அமுதம் உகுக்கின்றார்—ஒன்றற்கொன்றேலாத அமுதம்போலும் சொற்களைச் சொரிகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ந.) ஆங்கு, அசை. மலைவளைத்தல் யாதுக்கென்னும் கருத்தால் நாசம் வாங்கல் என் என்றவினுவை; இவர் ஆடைவாங்கலென்னென, வினவியதாக மற்றொருவினுவும் அதில் நிகழ்த்திக்கொண்டு, இருநுனியிலும் நாணினைக் கட்டவெனவும், அரையிற்றரிக்கவெனவும், பொருள்படக் காலிரண்டிற் கட்டவென்ன விடையளித்தமையால், நீர் கலைத்தோல் வல்லீர் என்றேன்; அதுகேட்டலும் கலைத்தோலன்று; புலித்தோலும் யானைத்தோலுமே புனையவல்லோம் எனகின்றார்; இது என் என்றபடி. கலைத்தோல் - நூலுணர்வாற்பெற்ற தோலென்னும் ஓர் அழகு. அஃதாவது * "இழுமென்மொழியால் விழுமியது நுவறல்" ஆம். நாசம் - மலை, ஆடை. காலிரண்டு - இரண்டுநுனி, அரை. கலை - நூல், மான். தோல் - ஓர் அழகு, சருமம். ஏலாவமுதம் - கிடைத்தற்கரிய அமுதமுமாம். ௭௪

முடியாவளஞ்சூழொற்றியுளீர்முடிமேலிருந்ததென்னென்றேன்
கடியாவுள்ளங்கையின்முதலைக்கடிந்ததென்றார்கயலமென
வடிவார்கரத்திலென்னென்றேன்வளைந்தவதனீறகன்றதென்றே
யிடியாநயத்தினகைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

* தொல்காப்பியம் பொருளதிகாரம். செய் - உ௩௬.

(இ-ள்.) முடியா வளம் சூழ் ஒற்றியுளீர் முடிமேல் இருந்தது என் என்றேன்—அழிவற்ற வளஞ்சூழ்ந்த ஒற்றிநகரீர்! உமது முடியின்கணிருந்தது என்னென்றனன்; கடியா உள்ளங்கையின் முதலை கடிந்தது என்றார்—நீக்கமில்லாத உள்ளங்கையின் முதலெழுத்தை நீக்க எஞ்சிநின்றதென்றார்; கமலம் என வடிவு ஆர் கரத்தில் என் என்றேன்—பதுமம் போலும் வடிவமைந்த கரத்திலிருப்பது என்னை என்றனன்; வரைந்த அதன் ஈறு அகன்றதென்றே—(நாம் முன்) வரைந்துகூறிய அச்சொல்லில் ஈறுகழிந்தது என்று; இடியா நயத்தின் நகைக்கின்றார்—இடிபோல இன்பமாக இரைந்து நகைசெய்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) உள்ளங்கை - அகங்கை; இதில் முதலெழுத்தகன்றது கங்கை; இதில் ஈற்றெழுத்தகன்றது கம்; எனவே, முடிமேலிருந்தது கங்கையெனவும், கரத்திலிருந்தது கம் எனவும் கூறியபடி. கம் - தலை (பிரமகபாலம்.) கமலமெனக் கரத்திற்குவமித்த அம்மொழியின் ஈறாகிய லமென்பது அகன்ற கம் என்பதே கரத்திலுள்ளது எனலும் ஒன்று. வரைதல்-உவமையாகச் சொல்லல். இயத்தல் - வற்புறுத்தலுமாம். ௭௫

ஒன்றும் பெருஞ்சீரொற்றிநகருடையீர் யார்க்குமுணர்வரியீ
ரென்றும் பெரியீர் நீர் வருதற்கென்ன நிமித்தமென்றேன் யான்
றுன்றும் விசும்பேகாணென்றார் சூதாமுமது சொல்லென்றே
னின்றுன் முலைதானென்கின்றாரிதுதான் சேடியென்னேடீ.

(இ-ள்.) பெருஞ்சீர் ஒன்றும் ஒற்றி நகருடையீர் — பெருஞ்சிறப்புகள் ஒன்றிவிளங்கும் ஒற்றிநகரீர்!; யார்க்கும் உணர்வு அரியீர்—எத்தகையராலும் உணரற்கரியீர்!; என்றும் பெரியீர் — காலபேதமின்றி எந்நாளும் தலைவராயிருப்பீர்; நீர் வருதற்கு நிமித்தம் என்ன என்றேன்—நீவிர் இங்கு வருதற்குக் காரணம் என்னை என்றனன்; துன்றும் விசும்பே காண் என்றார்—பெண்ணே! அறியாயோ? வியாபித்த ஆகாயமே காரணமாமென்றனர்; உமது சொல் சூது ஆம் என்றேன்—ஐயரே! உமது சொற்களெல்லாம் சூதாகும் என்றனன்; இன்று—எமது சொல்லில் சூதுத்தன்மை இல்லை; உன் முலை தான் என்கின்றார்—உனது முலைதான் சூதாவது என்று விடைபகர்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) இறைவர் வருகைக்கு நிமித்தம் தலைவி கேட்டவழி, நிமித்தம் மேகத்தின் பரியாயப்பெயராகிய பயோதரப்பெயர் கொண்ட நினது தனமேயென்றும்; நீர் - ஜலமெனக்கொண்டு சலம்வருகைக்கு மேகமே காரணமென்றும் கூறியவாறு. நீர் - நீரொன்னுமுன்னிலை, சலம். விசும்பு - மேகம், பயோதரம், (முலை.) சூது - மறைவு - சூதாடுகருவி. ௭௬

வானோர் வணங்குமொற்றியுளீர் மதிவாழ்சடையீர் மரபிடைநீர்
தானூரென்றேனணிப்பள்ளித் தலைவனேவேசாற்றினர் கா
ணானொலாற்றியிருமென்றேனுண்டேயிருந்து வந்தனஞ்சே
யீனுந்தவணீயென்கின்றாரிதுதான் சேடியென்னேடீ.

(இ-ள்.) வானோர் வணங்கும் ஒற்றியுளீர் மதிவாழ் சடையீர் — தேவர் குழும் வணங்கப்பெறும் ஒற்றிவாசரே! மதிவாழும் சடையீரே!; நீர் மர பிடை ஆர் என்றேன் — நீவிர் என்னமரபுடையீரென்றனன்; நனிபள்ளி தலைவர் எனவே சாற்றினர் — யாம் நனிபள்ளித்தலைவர் என்று கூறினர்; ஆனால் ஒற்றியிரும் என்றேன் — அங்ஙனமாயின் ஒற்றியிருப்பீரென்றேன்; ஆண்டே இருந்துவந்தனம் — பெண்ணே! நாம் அவ்விடமிருந்தேவந்தனம்; நீ சேயினறுதவள் என்கின்றார் — நீ பிள்ளைபெறாப்பேதை என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) நான் - பன்மையிலொருமை மயக்கு. யார் ஆர் எனத்திரிந்தது. காண் - அசை. பெண்ணே! நீ பிள்ளையைப்பெறுவந்தியாதலால், இரக்கமின்றி ஒற்றியிருமென்றாய், பெற்றவளாயின் இப்படிச்சொல்லாய் என்றும்; ஒற்றியிரும் என்பதை ஒற்றிநகரிலிருமென்று கூறியதாகக்கொண்டு, ஆண்டேயிருந்து வந்தனம் என்றும் கூறினர். பிள்ளைபெறாதவட்கு வந்தி என்று ஒருபெயருண்மையால், நாம் ஒற்றியிருந்து வந்தோம்; நீ நம்மைவந்தி என்று கூறியதுமாம். வந்தி - வந்திப்பாய், வணங்குவாய் என்பது. நனிபள்ளி - சோணாட்டிலுள்ள திருநனிபள்ளியென்னும் திருப்பதி. நனிபள்ளித்தலைவரென்பது - மிக்க பள்ளிச்சாதிக்குத் தலைவரெனவும் பொருள் தருதலால் ஒற்றியிருமென்றாள் என்க. ௭௭

பற்றுமுடித்தோர்புகழொற்றிப்பதியீர்நுமதுபசுவினிடைக்
கற்றுமுடித்ததென்னிருகைக்கன்றுமுழுதுங்காணென்றேன்
மற்றுமுடித்தமாலையொடுன்மருங்குற்கலையுங்கற்றுமுடிந்
திற்றுமுடித்ததென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பற்று முடித்தோர் புகழ் ஒற்றி பதியீர் — சகலபற்றுக்களையுமொழித்த ஞானியர்புகழும் திருவொற்றிநகரீர்; என் இருகை கன்று முழுதும் நுமது பசுவின் இடைக்கற்று முடித்தது என்றேன் — எனது இருகரத்தினுமிருந்த கன்று முழுமையும் உமது எருதின்இடைக்கன்று ஒழித்தது என்றனன், — கற்று முடிந்து — (பெண்ணே! நின்கைக்கன்றை யொழித்த) அவ்வெருதின்கன்று தான் இறந்ததாயிருந்துகொண்டு; மற்றும் முடித்தமாலையொடு உன்மருங்குல் கலையும் இற்று முடித்தது என்கின்றார் — மேலும் நீ சூடிய மாலையோடு உனது இடைக்கலையையும் இத்தன்மைத்தாக ஒழியச்செய்தது (வியப்பு) என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) அம்பிகையின் கட்டளைப்படியே சிவபெருமான் நெற்றிக்கண்ணால் தகிக்கப்பட்டு உருவிலியாகியமன்மதன் திருமாலின் கிருஷ்ணவதாரத்தில் பிரத்தியும்நனென உருவுடையனாகி யுதித்தானென்பது புராணசித்தமாகலால் பிரமதேவரை மூத்தப் புதல்வராகவும், மன்மதனை இடைப்புதல்வனாகவும், பிரத்தியும்நனைக் கடைப்புதல்வனாகவும் முறைகூறுவாள், திருமாலை இடபமென்றதற்கேற்க, மன்மதனை இடைக்கன்றென்றாள். பசுவினிடத்ததாகிய

ன்றெனலுமாம். இவ்விடைக்கன்று தனது பாணப்பிரயோகத்தால் எனக்கு மோகமேலிடச்செய்து எனக்கைக்கன்று முழுமையும் ஒழித்தது வியப்பென்று தலைவிகூற, இறைவர் அக்கன்று உருவிலதாயிருந்துகொண்டு மேலும் உனது பிணையும் கலையும் ஒழித்தது அதனினும் வியப்பென்றபடி. ஏனையவற்றையும் இழந்திருக்கவும் மாலை ஆடைகளைமட்டும் விதந்து கூறியது அவை மானின் பெண் ஆண்களைக்குறிக்கும் பிணை கலை என்னும் பெயர் பெற்றிருத்தலின் அக்கன்று நின்கன்று மட்டுமோ? நின்பிணையும் கலையுங்கூட முடித்ததென்பது ஓர் சாதுரியம் பற்றியென்க. பசு - எருது. கற்று - கன்றென்பது வலிந்தது. கன்று - கைவளை. எஅ

வானங்கொடுப்பீர்திருவொற்றிவாழ்வீரன்றுவந்தெனது
மானங்கெடுத்தீரென்றுரைத்தேன்மாநன்றிஃதுன்மானன்றே
யூனங்கலிக்குந்தவர்விட்டாருலகமறியுங்கேட்டறிந்தே
யீனந்தவிர்ப்பாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வானம் கொடுப்பீர் திருவொற்றி வாழ்வீர் அன்றுவந்து எனது மானம் கெடுத்தீர் என்று உரைத்தேன்—(வந்தித்த அன்பர்கட்கு) சுவர்க்க போகத்தை வழங்கவல்லீரே! ஒற்றியில்வாழ்பவரே! முன்வந்து எனது மானத்தைக் கெடுத்தீரோ என்று கூறினேன்; மா நன்று இஃது உன் மானன்றே—பெண்ணே! நீ கூறுவது மிகநன்று இது உனது மானல்லவே; ஊனம் கலிக்கும் தவர் விட்டார்—(கருமமேபலமுறுத்துமென்னும்) தவறுதலைழக்கப் பெற்ற தாருகவனத் தபசிகள்விட்டனர்; உலகம் அறியும்—இது உலகமுற்றும் அறியும்; கேட்டு அறிந்து ஈனம் தவிர்ப்பாய் என்கின்றார்—இதனைக் கேட்டுத் தெளிந்து உனது ஈனவெண்ணத்தை விடுவாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை) எனது மானம் கெடுத்தீர் என்பதற்கு, எனதுமான் அங்கு எடுத்தீர் என்று பொருள்கொண்டு இங்ஙனம் கூறியபடி. எகூ

ஞானம்படைத்தயோகியர்வாழ்நகராமொற்றிநலத்தீர்மா
லேனம்புடைத்தீரணையென்பீரென்னையுவந்திப்பொழுதென்றே
னூனந்தவிர்த்தமலர்வாயினுள்ளேநகைசெய்திஃதுரைக்கே
னீனம்புகன்றாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஞானம் படைத்த யோகியர்வாழ் நகராம் ஒற்றிநலத்தீர்—ஞானத்தைப் படைத்துள்ள யோகியர்கள் வாழும் நகராகிய ஒற்றியில்வாழும் நற்குணமுடையவரே!; மால் ஏனம் புடைத்தீர்—விஷ்ணுவாகிய பன்றியின் கொம்பை முறித்தவரே!; என்னை உவந்து இப்பொழுது அணை என்பீர் என்றேன்—என்னைவிரும்பி இப்பொழுது அருகுவா என்று அழைப்பீர் என்றேன்; ஊனம்தவிர்த்த மலர்வாயின் உள்ளே நகைசெய்து இஃது உரைக்கேன் ஈனம் புகன்றாய் என்கின்றார்—குற்றந்தவிர்ந்த மலர்போலும் வாயினுள்ளே நகை செய்து இஃது யான் கூறேன்: நீ ஈனவசனம் கூறுகின்றாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) என்னை அருகுவாவென்றழையுமென்று யான்கூறியதை, இவர் அவரை யானணைக்க விரும்பிவேண்டியதாகக்கொண்டு, பெண்களைப் புருடர்கூடுதலியல்பன்றிப் புருடர் பெண்களைநோக்கி என்னை அணைப்பாயென்று கூறுவது ஈனமாமென்றாரென்பது. அன்றி, என்மனைவி யல்லாத வேற்றுமங்கையாயிருக்க நான் உன்னை இங்ஙனம் கூறுவது அடாதென்பார், ஈனமென்றாரென்னலுமாம். அஃது உடைத்தீர் என்னை உவந்து இப்பொழுது அணையென்பீர் இம்மயக்கம் ஏன்? என்றிங்ஙனம் ஓர் தொனிப்பொருள் படுத்தலுமுண்டு.

கருமையளவும்பொழிலொற்றிக்கணத்தீர்முனிவர்கலக்கமறப்
பெருமைநடத்தினீரொன்றேன்பிள்ளைநடத்தினனென்றார்
தருமமலவிவ்விடையென்றேன்றருமவிடையுமுண்டெம்பா
லிருமைவிழியாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கருமை அளவும் பொழில் ஒற்றி கணத்தீர்—கருமை செறிந்த சோலைவளைந்த ஒற்றிநகரிற் கணங்கள் புடைசூழ இருப்பீரே!; முனிவர் கலக்கம் அற பெருமை நடத்தினீர் என்றேன்—தாருகவன முனிவர்களின் கலக்கம் போகுமாறு பெருமைபெற்ற நடத்தினைச்செய்தீர் என்றனன்; பிள்ளை நடத்தினன் என்றார்—(பெருமைபெற்ற அந்நடனமியற்றின் உலகந்தாங்காதெனப்பிள்ளைநடனமே அங்குப்புரிந்தனம் ஆதலால்) பிள்ளைநடனத்தினனேயான் என்றனர்; தருமம் அல இவ்விடை என்றேன்—(சுவாமி! நீர்எம்பால்) இவ்விடையளிப்பது தருமமல்ல என்றனன்; எம்பால் தருமவிடையும் உண்டு—எம்மிடத்துத் தருமவிடையும் உளது; மை இரு விழியாய் என்கின்றார்—மைதீட்டிய இரண்டு விழியையுடையவளே! என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) பெருமைநடம் என்றது பிக்ஷாடன மூர்த்தியாய்த் தாருகவனத்திற்கெழுந்தருளி இறுதியிற்செய்த ஆனந்தநடனத்தை. இந்நடனதரிசனம் பெற்றிலோமேயென்னும் கலக்கம் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்களுக்கு நீங்கச் சிதம்பரத்திற்புரிந்த ஆனந்தநடனமுமாம். பெருமை நடத்தினீரென்பதற்கு நாரதமுனிவர் கலக்கமறப் பெரியஆட்டைச் செலுத்தினீரென்றதாகக் கொண்டு, அது நமது இளையகுமரன் நடத்தினனென்றாரெனலும் ஒன்று. தருமவிடை-நீதியாகியவுத்தரம். இத்தருமவிடையென்பதற்குப் பெருமான் கொண்டது தருமதேவதையாகிய இடபத்தை. தருமவிடையல்லாதது திருமாலாகிய இடபம். கருமை யென்பது கரிய மேக மெனவும், பெருமை நடத்தினீரென்பது உமது பெருந்தன்மையைக்காட்டினீ ரெனவும், வேறு பொருள் குறித்து நிற்பதும் ஓர்க. ௮௧

ஒசியவிளங்குமிடையாரையொற்றியிருந்தேமயக்குகின்ற
வசியர்மிகநீரொன்றேனெம்மகன்காணென்றார்வளர்காமப்
பசியதொடையுற்றேனென்றேன்பட்டமவிழ்த்துக்காட்டுதியே
லிசையக்காண்பேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒசிய இடுகும் இடையாரை ஒற்றியிருந்தே மயக்குகின்ற மிகவசியர் நீர் என்றேன்—நடனத்தால் ஒடியும்படி அவ்வளவு சிறுத்த இடையினையுடைய மங்கையரை ஒற்றிநகரிலிருந்தே மயக்குகின்ற மிகவசியத்தை யுடையீர் நீர் என்றனன்; எம் மகன் காண் என்றார் — பெண்ணே! இவ்வியல்புடையோம் யாமன்று: எமதுமகனே யென்றனர்; வளர் காமம் பசிய தொடை உற்றேன் என்றேன்—வளர்ச்சிபெற்ற காமமாகிய பசியமயக்கத்தை யுடையேன் என்றனன்; பட்டம் அவிழ்த்து காட்டுதியேல் இசைய காண்பேம் என்கின்றார்—வஸ்திரம் அவிழ்த்துக்காட்டுதியாகில் நன்றாகக்காண்பேமென்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) தொடையின் பிரதிபதம் மாலை; அது ஈண்டு மயக்கம். வசியர்-வசியஞ்செய்பவர். வசியர் என்பதற்கு வணிகர் என்றுபொருள்கொண்டு, உருத்திரசருமனென்னும் வணிகனுயினுன் நம்மகன் என்றும் காமப்பசிய தொடை என்பதற்குக் காமத்தால் பசலைபடர்ந்த தொடையென்னும் உறுப்பாகப்பொருள்கொண்டு, ‘பட்டம் அவிழ்த்துக்காட்டுதி’ என்றும் பகர்ந்தார் என்க.

அஉ

கலையாளுடையீரொற்றிநின்றீர்காமமளித்தீர்களித்தணைவீர்
மலையாளுமதுமனையென்றேன்மருவின்மலையாளல்லளென்று
ரலையாண்மற்றையவளென்றேனறியினலையாளல்லளுனை
யிலையாமணைவதென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கலை ஆள் உடையீர்—எனது ஆடையை உமக்குரிமையாகக் கவர்ந்து கொள்ளுதலுடையீர்!; ஒற்றிநின்றீர்—ஒற்றியூரில் நிலைபெற்றீராய் அணுகாது விலகிநின்றீர்; காமம் அளித்தீர்—காமத்தைமட்டும் எனக்குத் தந்தீர்; களித்து அணைவீர்—(இனியேனும்) களித்து அணைப்பீர்; உமது மனை மலையாள் என்றேன் — உமது மனைவி மலைப்பெண்ணல்லவா! என்றேன்; மருவின் மலையாள் அல்லள் என்றார்—கூடப்பெறின் மலைப்பெண்ணாக இராள்: (மிக்க சரசியாகவிருப்பாள்) என்றனர்; மற்றையவள் அலையாள் என்றேன்—மற்றொருத்தி நீர் மகள் என்றேன்; அறியின் அலையாள் அல்லள்—ஆராய்ந்தறியின் அவள் நீராயிராள்; (நன்னீர்மையுடைய மங்கையே யாவள் (இவ்வாறிருத்தலால்) உனை யாம் அணைவது இலை என்கின்றார்—உன்னையாமணைவது இல்லை என்று வெறுக்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) கலையாளுடையீரென்பதற்கு வேதாதிகலைகளால் ஆளப்படுவீர், அக்கலைகளை ஆள்வீர், ஆண்மானைக்கரத்தில் ஆளுதலுடையீர் என்றும்; இடைக்குறையாகக்கொண்டு, கல்லை - கைலை மலையை ஆளுதலுடையீரென்றும் பொருள் கொள்ளலாம். தலைவி, அம்பிகையை மலைப்பெண்ணென்றும் கங்கையைச் சலப்பெண்ணென்றும் இகழ்ந்ததாகக்கொண்டு, இங்ஙனம் தலைவர் கூறியபடி. அன்றி, நீ அணையமருவின் மலைப்பெண் உன்னைச் சண்டையிடாதவளல்லள், அலைப்பெண் அறியின் உன்னை அலைக்காதவளல்லள் ஆகையால் இனியாம் அணையவேண்டுவது இல்லையே: (வீட்டையே) என்கின்றாரெனவுமாம்.

சீலம்படைத்தீர்திருவொற்றித்தியாகரேநீர்திண்மையிலோர்
சூலம்படைத்தீரென்னென்றேன்றோன்றுமுலகுய்ந்திடவென்று
ராலங்களத்தீரென்றேனீயாலம்வயிற்றாயன்றோநல்
லேலங்குழலாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) சீலம் படைத்தீர் திருவொற்றி தியாகரே—நல்லொழுக்கத்தை யுடையவரே! ஒற்றியூரில் வாழும் மாணிக்கத்தியாகரே!; நீர் திண்மையில் ஓர் சூலம் படைத்தீர்—நீர் வலிமையொடு ஓர் சூலத்தை ஏந்தி நின்றீர்; என்னென்றேன் — யாது காரணத்தாலென்றனன்; தோன்றும் உலகு உய்ந்திட என்றார் - தோற்றமடைந்த உலகிலுள்ளோர் உய்யும்படியே என்றனர்; ஆலம் களத்தீர் என்றேன்—விடத்தைக் கண்டத்திலுடையீர் என்றனன்; நல் ஏலம் குழலாய் நீ ஆலம் வயிற்றாய் அன்றோ என்கின்றார்—நல்ல மயிர்ச்சாந்துபூசிய கூந்தலையுடையவளே! நீ ஆலத்தை வயிற்றிலுடையாயல்லவோ? என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) உலகு உய்ந்திட என்றது, பிரமாதி தேவர் நாம் தாம் பரமென்றதை விலக்கி, அவரை இச்சூலத்தால் அடர்த்து அவர் பரமன்மையை விளக்கினமையை நாலாலுணர்ந்து உலகு உய்ந்திடுதற்கு என்ற குறிப்பு. தலைவி ஆலகண்டர் என்றமையின் நீ ஆலவயிற்றாய் என்றனர். ஆலம் - விடம், ஆலிலை; ஆலிலைபோலும் வயிற்றாய் என்றபடி. அன்றி, திண்மையில் ஓர் சூல் அம்பு அடைத்தீர் என்று கண்ணழித்து, திண்ணியமேகத்தில் ஓர் சூலுண்டாகச் சலத்தை அடைப்பித்தீர் என்று தலைவி கேட்டதாகக்கொண்டு அது பெய்து உலகை உய்விக்கத்தான் என்று கூறியதாகவும், கொள்க. ஏலம் - மயிர்ச்சாந்து. ஏலவார்குழலி என்று அம்பிகைக்குப் பெயருள்ளதும் தெளிக. அசு

ஞாலநிகழும்புகழொற்றிநடத்தீர்நீர்தானாட்டமுறும்
பாலரலவோவென்றேனைம்பாலர்பாலைப்பருவத்திற்
சாலமயல்கொண்டிடவருமோர்தனிமைப்பாலரியாமென்றே
யேலமுறுவல்புரிகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஞாலம் நிகழும் புகழ் ஒற்றிநடத்தீர் — உலகில் நிலைபெறும் புகழையுடைய ஒற்றியில் நடனத்தைச் செய்பவரே!; நீர் நாட்டம் உறும் பாலர் அலவோ என்றேன்—நீவிர் கண்ணமைந்த நெற்றியையுடையீரல்லவோ என்றனன்; ஐம்பாலர் பாலை பருவத்தில் சால மயல்கொண்டிட வரும் ஓர் தனிமை பாலர் யாம் என்றே—ஐம்பாலுடைய பெண்கள் பாலிய பருவத்தில் மிகவும் மயல் கொள்ளும்படி வரத்தக்க ஒப்பற்ற தனிமையினையுடைய பாலியர் (எவ்வனர்) யாம் என்று; ஏல முறுவல் புரிகின்றார்—பொருந்தும்படி மந்தகாசஞ் செய்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) தான் - அசை. நாட்டம் - கண். பாலர் - நெற்றியர். பாலம் - நெற்றி. நீர்தானாட்டமுறும்பாலரென்பது நீர்சொரிந்தழும் கண்ணுடைய இளம்பாலரெனவும், நீர் விளையாடலைச்செய்யும் பாலரெனவும், நீர் யாவரும்

நாடத்தக்க பாலரெனவும் பொருள்பட நிற்றலின், யாம் அத்தகைய பாலரல்லே; மற்றெத்தகையரெனின், ஐம்பாலர் பாலைப்பருவத்தில் மயல் கொள்ளவரும் ஒரு தனிப்பாலராகிய யவ்வனர் என்று தமது நிலைமை சாற்றியபடி. ஐம்பால்-கூந்தல், இது உச்சியில் முடித்தலால் முடி என்றும், பக்கத்தில் முடித்தலால் கொண்டை என்றும், பின்னே செருகலால் சுருள் என்றும், சுருட்டி முடித்தலால் குழலென்றும், பின்னிவிடுத்தலால் பனிச்சை என்றும் ஐம்பகுப்பு பெற்றமையால் வந்த காரணப்பெயர். தலைவி ஒருபாலர் என்றதற்குத் தலைவர் ஐம்பாலர் மயல்கொள்ளும் தனிமைப்பாலர் என்றது நயம். ௮௫

வண்மைதருவீரொற்றிநகர்வாழ்வீரென்னைமருவீரென்
னுண்மையறியீரென்றேனியாமுணர்ந்தேயகலநின்றதென்றார்
கன்மையிலரோநீரென்றேன்களமையுடையேங்கன்மையுற
லெண்மைநீயேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

**(இ-ள்.)** வண்மை தருவீர் ஒற்றிநகர் வாழ்வீர் என்னைமருவீர்—தியாகமருளும் வள்ளலே! ஒற்றிவாசரே! என்னை அணையாதிருக்கின்றீர்; என் உண்மை அறியீர் என்றேன்—எனது நம்பிக்கையை நீர் அறியீர் என்றேன்; உள் மை உணர்ந்தே அகல நின்றதென்றார்—உனது உள்ளத்திலுள்ள மயக்கத்தை உணர்ந்துதான் தூரநின்றது என்றனர்; கன்மை இலரோ நீர் என்றேன் — நீர் (சற்றேனும்) தாக்ஷணியமில்லாதவரோ? என்றேன்; களம் மை உடையேம்—நாம் களத்தில் கறுப்புடையேம்; எண்மைநீயே என்கின்றார்—(கண்ணளவில் மையிடும்) எளியை நீயே என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-ரை.)** உண்மை - சத்தியத்தன்மை. உள்மை - உள்ளத்திலுள்ள மை. மை - மயக்கம், அல்லது அஞ்ஞானம். கன்மை - கண்ணின்றன்மை; (தாக்ஷணியம்) கண்ணின்கண் மை. எண்மை-எளிமை; ஏழைமைத்தன்மை. பெண்களை ஏழை என்பதும் ஒருவழக்கு. கன்மை இலரோ என்பதற்குக் களமையுடையேம், என்றதுநயம். அகலநிற்றல் - ஒற்றியிருத்தலென இருபொருள் படநின்றது. ௮௬

தவந்தங்கியசீரொற்றிநகர்தனைப்போனினைத்தென்மனையடைந்தி
ருவந்தென்மீதிற்றேவர்திருவுள்ளந்திரும்பிற்றேவென்றேன்
சிவந்தங்கிடநின்னுள்ளமெம்மேற்றிரும்பிற்றதனைத்தேர்ந்தன்றே
யிவர்ந்திங்கணைந்தாமென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

**(இ-ள்.)** தவம் தங்கிய சீர் ஒற்றிநகர் தனைப்போல் நினைத்து என்மனை அடைந்தீர் — தவநிலைபெற்ற சிறப்புமிக்க ஒற்றிநகரைப்போல நினைத்து எனது மனையையும் அடைந்தீர்; தேவர் திருவுள்ளம் உவந்து என்மீதில் திரும்பிற்றே என்றேன்—தேவரீரது திருவுள்ளம் விரும்பி என்னிடம் இன்றுதான் திரும்பிற்றே என்றேன்; நின் உள்ளம் சிவம் தங்கிட எம் மேற்றிரும்பிற்று அதனை தேர்ந்தன்றே—நினது உள்ளம் மங்கலமுறுமாறு

எம்மிடந்திரும்பினது அதனை அறிந்தல்லவா?; இங்கு இவர்ந்து அணைந்தாம் என்கின்றார் — இப்போது விரும்பி வந்தணைந்தோம் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) நீ விரும்பாதபோது நாம் திரும்பாதிருந்தோம். நீயும் விரும்பினை யாமும் விரையவந்தனம் என்பது. சீவன் தன்னையே நோக்கிக்கொண்டிருந்தபோது சிவம் எதிரிடாமையும், சீவன் சிவத்தைநோக்கில் சிவம் எதிரீடாதலும் குறிப்பித்தபடி. சிவம் - மோக்ஷமுமாம். இவர்தல் - விரும்பல். ௯௭

ஒன்னார்புரமூன்றெரிசெய்தீரொற்றியுடையீரும்முடைய
பொன்னார்சடைமேல்வெள்ளெருக்கம்பூவைமிலைந்திரொன்னென்றே
னின்னாரளகத்தனங்கேநீமெட்டிமிலைந்தாயிதிலதுகீ
ழென்னாருலகரென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒன்னார் மூன்று புரம் எரிசெய்தீர் ஒற்றியுடையீர் — பகைவரது மூன்று புரத்தினையும் எரித்தவரே! ஒற்றிநகர்வாசரே!; உம்முடைய பொன்னார்சடைமேல் வெள்ளெருக்கம் பூவை மிலைந்தீர் என் என்றேன் — உமது பொன்மயமான சடையில் வெள்ளெருக்கம் பூவைச்சூடினீர் என்னென்று கேட்டனன்; அனங்கே நின் ஆர் அளகத்து நீ மெட்டி மிலைந்தாய் இதில் அது கீழ் என்னார் உலகர் என்கின்றார் — தெய்வப் பெண்போல்பவளே! நினது செறிந்த கூந்தலில் நீ சடையைச்சூடினை இதனிலும் அதனைக் கீழென்றுகூறார் உலகர் என்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஒன்னார் - பகைவர்; பகைவராவார் தாரகாக்ஷன், கமலாக்ஷன் வித்துன்மாலி என்பவர். பொன் என்பது உவமை ஆகுபெயராய் கொன்றையை உணர்த்திற்றென்றுகொண்டு, கொன்றையும் ஆத்தியும் புனைந்தசடை எனலும் ஒன்று. யாங்கள் உமக்கிணங்காவிடில் மடலூருங்குறிப்போ எருக்கலர் சூடியதெனக் குறிப்பாகத் தலைவி கேட்டமைக்கிணங்கத் தலைவரும் எமதுகூட்டம் பெருமையானன்றோ நீயும் ஒப்பனையின்றி உனது கூந்தல் சடைபடப்பெற்றாய் என்று குறிப்பாகக் கூறியதாகக் கோடலுமாம். ௯௮

கனிமாணிதழிமுலைச்சுவடுகளித்தீரொற்றிக்காதலர்நீர்
தனிமானேந்தியாமென்றேன்றடங்கண்மடந்தாய்நின்முகமும்
பனிமானேந்தியாமென்றார்பரைமான்மருவினீரொன்றே
னினிமான்மருவியென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கனி மான் இதழி முலைச்சுவடு களித்தீர் ஒற்றி காதலர் — கோவைக்கனியை மானும் இதழையுடைய உமாதேவியின் முலைச்சுவட்டிற்குக் களிப்படைந்தவரே! ஒற்றிநகரிற்காதலரே!; நீர் தனிமான் ஏந்தியாம் என்றேன் — நீவிர் ஒற்றைமானை ஏந்தினவாரம் என்றனன்; தடம் கண் மடந்தாய் — விசாலித்த கண்களையுடைய பெண்ணே!; நின்முகமும் பனி மான் ஏந்தியாம் என்றார் — நினது முகமும் குளிர்ந்ததலையுடைய மானை ஏந்தினதாம் என்

றனர் ; பரை மால் மருவினீர் என்றேன்—நீர் உமையினது மையலை மருவினவர் என்றனன் ; இனி மால்மருவி என்கின்றார் — பெண்ணே ! நீயும் இப்பொழுது மாலை மருவினவளாயினை என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) மானுதல் - ஒத்தல். காதலர் - அன்னைமவிளி. ஒற்றியிருக்கும் எனது நாயகரோ ! என்றதுமாம். தனிமானேந்தி என்றதற்குப் பனிமானேந்தி என்றதும், பரை மால் மருவி என்றதற்கு இனிமால் மருவி என்றதும் நயம். இனியென்பது - நிகழ்காலத்தின் கண்வந்தது ; * " பண்டறியேன் கூற்றென்பதனை யினியறிந்தேன் - பெண்டகையாற் பேரமர்க் கட்டு " என்னுந் திருக்குறளிற்போல. ௮௯

சிறியேன்றவமோவெனைப்பெற்றார்செய்ததவமோவீண்டடைந்தீ
ரறியேனொற்றியடிகேளிங்கடைந்தவாறென்னினைத்தென்றேன்
பொறிநேருனதுபொற்கலையைப்பூவார்கலையாக்குறநினைத்தே
யெறிவேல்விழியாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) சிறியேன் தவமோ எனைப்பெற்றார் செய்ததவமோ அறியேன் ஈண்டு அடைந்தீர்—சிறியளாகிய எனது தவந்தானோ என்னைப்பெற்றார் செய்த தவந்தானோ அறியேன் (தேவர்) ஈண்டடைந்தீர் ; ஒற்றி அடிகேள் இங்கு அடைந்தவாறு என் நினைத்து என்றேன்— ஒற்றிநகர்த்தலைவரே ! இங்கு அடைந்தவிதம் யாதுநினைத்து என்றனன் ; எறிவேல் விழியாய்— எறியத்தக்க வேற்படைபோன்ற கண்களையுடையவளே !; பொறிநேர் உனது பொற்கலையை பூவார்கலை ஆக்குற நினைத்தே என்கின்றார்—இலக்குமிக்கு ஒத்த உனது பொன்னுடையை பூவாசிகளது வஸ்திரம் ஆக்குதற்கு நினைத்தே என்கின்றார் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) பூவார்கலையாக்குதலாவது மண்பட்டு மாசுண்டதாகச் செய்தல், அரையினின்றும் வீழுங்கலையாக்கல், வீழ்ந்து கிடத்தலால் பூவுலகர்கவருங் கலையாக்கல், புட்பபாணம் பாய்ந்த கலையாக்கல் என்றிங்ஙனம் இசைத்தலுமாம். புள்ளிநேர்ந்த பொற்கலையெனக்கூட்டலும் இயையும். பொறி-புள்ளி.

அளிக்குங்குணத்தீர்திருவொற்றியழகரோநீரணிவேணி
வெளிக்கொண்முடிமேலணிந்ததுதான்விளியாவிளம்பத்திரமென்றேன்
விளிக்குமிளம்பத்திரமுமுடிமேலேமிலைந்தாம்விளங்கிழைநீ
யெளிக்கொண்டுளாயேலென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அளிக்கும் குணத்தீர் திருவொற்றி அழகரே—சர்வான்மாக்களுக்குஞ் சரணாகவிருந்து இரக்ஷிக்கும் குணத்தரே ! திருவொற்றி நகரவாசரான சௌந்தரரே ! ; நீர் அணிவேணி வெளி கொள் முடிமேல் அணிந்தது தான் விளியா இளம்பத்திரம் என்றேன்—கங்கைதரித்த சடையினையுடைய

* தகையணங்குறுத்தல் - ௩.

ஒளிகொண்ட முடியின்மேல் அணிந்தது (இளமை) குன்றாத இளம் பத்திரம் என்றேன்; விளங்கிழை — விளங்கும் ஆபரணத்தையுடைய பேதாய்!; விளிக்கும் இளம்பத்திரமும் முடிமேல் மிலைந்தாம்—நம்மால் மடிக்கப்பட்ட இளைய பத்திரத்தையும் முடிமேல் அணிந்தோம்; நீ எளிக்கொண்டு உரையேல் என்கின்றார்—நீ எளிமையாக ஒன்றுமுரையாதே என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) அழித்தல் அழைத்தலாதிய பெறாத தளிர்ப்பத்திரமே வேணியி லுள்ளது எனப்பொருள்படுதலால் அழித்தலாதியவுடைய இளம்பத்திரமும் உள்தென்று கூறியபடி. இப்பத்திரம் - கொக்குருவாய் வதிந்து உலகமெலாம் கொறித்துமிழ்ந்துகொண்டிருந்த குரண்டாசுரனென்னும் கொக்கினைத் தடிந்துகொண்ட அதன் இறகு. இந்த இறகணிந்தமை இலிங்கபுராணமாதியவற் றான் அறிக. சுகு

வாசங்கமழுமலர்ப்பூங்காவனஞ்சூழொற்றிமாநகரீர்
நேசங்குறிப்பதென்னென்றேனீயோநாமோவுரையெனறார்
தேசம்புகழ்வீர்யானென்றேன்றிகழ்தைத்திரிதித்திரியேயா
மேசங்குறிப்பதென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) வாசம் கமழும் மலர் பூங்காவனம் சூழ் ஒற்றிமாநகரீர்—மணம் வீசுகின்ற மலர்களையுடைய நந்தனவனங்கள் அடர்ந்த திருவொற்றிமாநகரீர்!; தேசம் புகழ்வீர்—உலகத்தோரால் துதிக்கப்படுவீர்!; நேசம் குறிப்பது என் என்றேன்—அன்புவிளைக்குஞ் சுகத்தையே நாடுவது என்னை என்றனன்; நீயோ நாமோ உரை என்றார்—நீ நாடுவதோ? அல்லது நாம்நாடுவதோ? கூறென்றனர்; யான் என்றேன்—யான் நாடுவதே என்றனன்; (அதற்கிவர்) திகழ்தைத்திரி தித்திரியே யாமே சம் குறிப்பது என்கின்றார்—விளங்குகின்ற தைத்திரி தித்திரியே யாமே சுகநாடுவது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) ஒற்றிமாநகரீர் நேசம் யான்குறிப்பதெனவும் ஒற்றிமாநகரீராகிய நீர் நேசங்குறிப்பதெனவும் இருபொருட்பட இயம்பினமையின், யார் குறிப்பதென்பார் 'நீயோ நாமோ' என்றும்; நீகுறிப்பதாகவுரைப்பது மரபியார் வார்த்தையென்பார் 'தைத்திரிதித்திரியே' என்றும்; நீயும் சுகங்குறித்தற்கு உரியவளாயினும் நீ சுகவிளைவுக்குத் தானமே: இதைநாடி யனுபவிப்பது நாமே என்பார் 'யாமே சம் குறிப்பது' என்றுங் கூறினர். நே-அன்பு. சம் - சுகம். திகழ்தலாவது ஒருவன் முறையையறியாது ஒன்றை மொழியுங்கால் இவன் தைத்திரிதித்திரியென உளறுகின்றானென உலகவழக்கில் எடுத்தாளப்பட்டு வழங்கல்; குறிப்பு நோக்கமும் தப்பாது பொருள்கவர்தலாதிய குணங்களுமுடைமையின். தைத்திரியமருளிய தித்திரிப்பறவையைத் தலைவிக்குவமித்ததுமாம். இனி, ஒற்றிமாநகரீர் உமதுநேசம் யான் மதித்துரைப்பது எத்தன்மையதென்று வினவ; இது தைத்திரி தித்திரியேயாம்; (ஆயி

னும் தெரிந்தமட்டும் உரைப்பதாதல்பற்றி) அவரவர் மதித்துரைப்பதையும் யாம் ஏசுதலைச்செய்யோம் என்கின்றா ரெனலுமென்க. இப்பொருட்கண்ணும் தித்திரிபோல்பவளே! (உள்ளவாறு மதித்துரைக்கின்றா யாகலின்) நீ உரைப்பதை யாம் அவமதித்துரையோம் என்கின்றாரெனவும் அமைத்துக் கொள்க.

முன்னொருகாலத்தில் வைசம்பாயன முனிவர் தம்மாணுக்கராகிய காத்தியாயன முனிவரை முனிந்து, நீ ஓதித்தெளிந்த எசுர்வேதத்தை இப்பொழுதே உமிழ்ந்துவிடென்று கூற; அவர் வணங்கிப் பிரார்த்தித்தும் ஆசிரியர் உடன்படாமையால் உமிழ்ந்துவிட்டனர். அப்பொழுது அவ்வேதம் தீச்சுடராய்ச் சொலிக்க; அதுகண்ட வியாஸமுனிவர் அவ்வெம்மையைத்தணித்து, அங்கிருந்த சிலமுனிவரைத் தித்திரி ரூபமெடுத்து உண்ணும்படிசெய்து, அப்பறவைகளால் மீட்டும் சொல்வித்தனமயின் அவ்வேதம் தைத்திரியமெனப் பெயர் பெற்றது. தித்திரி - மீன்குத்திப்பறவை; தித்திரிசம்பந்தம் தைத்திரி; தைத்திரிய மெனவும்படும். அது எசுர்வேதம். கூஉ

பேசுங்கமலப்பெண்புகழும்பெண்மையுடையபெண்களெலாங்
கூசும்படியிப்படியொற்றிக்கோவேவந்ததென்னென்றேன்
மாசுந்தரிநீயிப்படிக்குமயங்கும்படிக்குமாதருனை
யேசும்படிக்குமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றிக்கோவே—ஒற்றிநகரத்தலைவரே!; பேசும் கமலம்பெண் புகழும் பெண்மையுடைய பெண்கள் எலாம்—உலகம் புகழத்தக்க இலக்குமியும் கொண்டாடும் பெண்டன்மைவாய்ந்த பெண்களெல்லாம்; கூசும்படி இப்படி வந்தது என் என்றேன்—வெட்கும்படி இப்படி நிர்வாணமாய்வந்தது என்னை என்றேன்; மாசுந்தரி நீ இப்படிக்கு மயங்கும் படிக்கும் மாதர் உனை ஏசும் படிக்கும் என்கின்றார்—மிக்க அழகியே! நீ இப்பூமியில் மயங்கவும் (உன்னையொத்த) மாதர்கள் உன்னை ஏசவும் (வந்தது) என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-த.) அழகின் மிகுதியாலும் கல்விப்பெருக்கத்தாலும் திருமகளும் கலைமகளும் புகழுந்தரத்தளென்பார், 'கமலப்பெண்புகழும் பெண்கள்' என்றானும், யாம் நிர்வாணியாகவந்தது எம்மைப்போலவே நீயும் நிர்வாணியாதற்கே யென்பார், 'இப்படிக்கு மயங்கும்படிக்கு' என்றாறுமாம். கூந

கொடியாலெயில்சூழொற்றியிடங்கொண்டீரடிகள்குருவுருவாம்
படியாலடியிலிருந்தமறைப்பண்பையுரைப்பீரொன்றேனின்
மடியாலடியிலிருந்தமறைமாண்பைவகுத்தாயெனிலதுநா
மிடியாதுரைப்பேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கொடி ஆல் எயில் சூழ் ஒற்றியிடம் கொண்டீர் அடிகள்—கொடிகளசைகின்ற மதில்களுடைய ஒற்றியை இடமாகக்கொண்டீர் அடி

களே!; குரு உரு ஆம்படி ஆலடியில் இருந்த மறைப்பண்பை உரைப்பீர் என்றேன்—நீர் குரு உருவமையும்படி கல்லாலடியிலிருந்த இரகசிய நிலைமையை உரைத்தருள்வீர் என்றனென்; நின் மடி ஆல் அடியில் இருந்த மறைமாண்பை வகுத்தாயெனில்—நினது மடிப்பையுடைய வயிறுகிய ஆலின் அடியிலிருந்த மறைந்த குணமுடைப்பொருளை உரைப்பாயானால்; நாம் அது இடியாது உரைப்பேம் என்கின்றார்—நாம் (நீ வினவிய) அதனைக் குன்றாது கூறுவேம் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) குருவுருவாதல் - தக்ஷிணாமூர்த்தி கோலமாதல். மறைப்பண்பு - வேத இரகசியார்த்தமும், மறைந்தகுணமுடைப்பொருளாகிய நிதம்பமுமாம். நினது இரகசியஸ்தானத்தை வெளிப்படுத்துவையேல் யாமும் அவ்விரகசியத்தை வெளிப்படுத்துவமென்பது கருத்து. மறை மாண்பு - அன்மொழித்தொகை. இடியாதுரைத்தல் - குன்றாது கூறுதல்; அப்பொருள் சொல்லாமற் சொல்லப்படுவதாதல்பற்றியே, * "சொல்லாமற் சொன்னவரை" என்று பிறருங் கூறினர். அன்றிக் கடுமொழியாற் கூறாது இனிதாகக்கூறலுமாம். ௬௫

என்னேருளத்தினமர்ந்தீர்நல்லெழிலாரொற்றியிடையிருந்தீ
ரென்னேயடிகள்பலியேற்றலேழ்மையுடையீர்போலுமென்றே
னின்னேகடலினிடைநீபத்தேழ்மையுடையாய்போலுமென
வின்னேயங்கொண்டுரைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நல் எழில் ஆர் ஒற்றியிடை இருந்தீர் என் நேர் உளத்தில் அமர்ந்தீர்—சிறந்த அழகமைந்த ஒற்றி நகரின்கண் வீற்றிருந்தீர்! அடியேனது ஒற்றுமைப்பட்ட மனத்திற் குடிகொண்டீர்!; அடிகள் பலி ஏற்றல் என்னே—(இத்தகைய) தேவரீர் பிக்ஷையேற்பது யாது காரணத்தாலோ?; ஏழ்மை உடையீர் போலும் என்றேன்—நீர் ஏழ்மையுடையீர்போலும் என்று கூறினேன்; இன்னே கடலின் இடை நீ பத்து ஏழ்மை உடையாய்போலும் என—இங்ஙனமே கடலின்கண் நீ பத்து ஏழ்மையுடையாய்போலும் என்று; இன் நேயம் கொண்டு உரைக்கின்றார் — இனிய அன்பினால் இசைக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) எல்லாமுடைய நீர் பலியேற்கின்றீர் ஏழ்மையுடையீரென்னத் தக்கவரோ? என்று தலைவி வியந்து கூறினளாகத் தலைவர் ஏழ்மையுடையீரென்றதாகவேகொண்டு, நீ பத்து ஏழ்மையுடையாயென்றது - எம்மினும் பதின்மடங்கு ஏழ்மையுடையை யெனவும், எழுபதுமையையுடையை எனவும் பொருள்பயந்து நின்றது. கடலினிடை எழுபதுமை - பாற்கடலினுதித்தெழுந்த பதுமைபோலும் இலக்குமி. எனவே, எம்மை ஏழ்மையுடையமென்ற நீ செல்வத்திற் சிறந்த இலக்குமியையும் கைவசமுடையாய்கொல் என்று இழித்ததாம். அன்றி, ஏழ்மையுடையமென எம்மையிகழ்ந்த பாவமேலீட்டால் இப்பொழுதே இந்நேமியிடை எம்மினும் பதின்மடங்கு ஏழ்மையை

* திருவிளையாடற்புராணம் பாயிரம் - ௧௩

ஆய்விட்டனை யென்றும், இல் நேயம் எனக் கண்ணழித்து, மனைவியாம் விருப்பமென்றும் கோடலும் ஒன்று. நேமி - கடல், பூமி. ௬௫

நல்லார்மதிக்குமொற்றியுளீர்நண்ணுமுயிர்கடொறுநின்றீ
ரெல்லாமறிவீரென்னுடையவிச்சையறியீர்போலுமென்றேன்
வல்லாயறிவின்மட்டொன்றுமனமட்டொன்றுவாய்மட்டொன்
றெல்லாமறிந்தோமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நல்லார் மதிக்கும் ஒற்றி உளீர் நண்ணும் உயிர்கள் தொறும் நின்றீர்—மங்கையரால் மதிக்கும் ஒற்றியில் வாழ்பவரே ! நிலைபெறும் உயிர்கடோறும் இருப்பவரே ! ; எல்லாம் அறிவீர் என்னுடைய இச்சை அறியீர் போலும் என்றேன்—எல்லாம் அறிவீராயினும் எனது இச்சையைமட்டும் அறிகிலீர்போற் றோன்றுகின்றது என்றனன் ; வல்லாய் அறிவின் மட்டு ஒன்று மனம் மட்டு ஒன்று வாய்மட்டு ஒன்று எல்லாம் அறிந்தோம் என்கின்றார் — வல்லவளே ! அறிவினளவில் ஒன்றும் மனமளவில் ஒன்றும் வாயளவில் ஒன்றும் (ஆகப் பிரிந்துள்ள உனதிச்சை) யாவும் அறிந்தோம் என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) நல்லார் - ஞானிகளுமாம். உயிர்கடோறு நிற்றல் - அவ்வவ்வுயிர்க்குயிராய் நிற்கும் அந்தரியாமித்துவம். யாவும் அறிந்துள்ள எமக்கு நினதிச்சையை யறிவது அரிதல்ல ; உனதறிவிலுதிப்பதொன்றும், மனத்திற் கருதுவது மற்றொன்றும், வாயிற் சொல்வது பிறிதொன்றுமாயிருத்தல் பற்றியே அறியாதுபோன்றுள்ளோம் ; நினதிச்சை ஒற்றுமைப்பட்டிருப்பின் முன்னமே முடித்திருப்போம் என்பது கருத்து. ௬௬

மறிநீர்ச்சடையீர்சித்தெல்லாம்வல்லீரொற்றிமாநகரீர்
பொறிசேருமதுபுகழ்பலவிற்பொருந்துங்குணமேவேண்டுமென்றேன்
குறிநேரெமதுவிற்குணத்தின்குணத்தாயதனால்வேண்டுற்று
யெறிவேல்விழியாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மறி நீர் சடையீர் சித்து எல்லாம் வல்லீர் ஒற்றி மாநகரீர்—மறிந்து விழும் அலைகளையுடைய கங்கையை அணிந்த சடையை யுடையீர் ! சித்துக்க ளெவற்றினும் சிறந்தீர் ஒற்றிமாநகரத்தீர் ! ; பொறி சேர் உமது புகழ் பலவில் பொருந்தும் குணமே வேண்டும் என்றேன்—பொலிவுபெற்ற உமது புகழ்கள் பலவற்றுள்ளும் பொருந்துகின்ற குணமே என்னால் விரும்பத்தக்கதாகும் என்றேன் ; எறிவேல் விழியாய்—குத்துவேல்போன்ற கண்களையுடையாய் ! ; குறிநேர் எமது விற்குணத்தின் குணத்தாய் அதனால் வேண்டுற்றாய் என்கின்றார்—இலக்கியப்பொருளை நாடியுள்ள எமது வில்லாகிய பொன்மலையின் தன்மையையொத்த குணத்தவள் ஆதலால் நீ குணத்தையே வேண்டுகின்றனை என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) மறித்தல் - தடுத்தலுமாம். சித்து - அஷ்டமாசித்திகள். பொருந்துங்குணமென்பது கூடுதலாகிய புணர்ச்சிக்குணம், அல்லது நிக்கிர

காறுக்கிரகங்களுள் அநுக்கிரக குணமெனவும், விற்குணத்தின் குணமென்பது வில்லாகிய பொன்மலைபோல உருகுங்குணம், வில்லிணுணுகிய அரவின் குணமெனவும், பொருள்பட்டும் நின்றன. அரவின் குணங்கொள்ளின், அரவை நிகர்த்த குறியையுடைய குணத்தாயென்க. பலவிற்பொருந்தும் உமதுபுகழ்க்குணம் என அந்வயித்து பலாக்கனிபோன்று இனிமை வாய்ந்த உமது புகழாகியகுணம் என்றலும் ஒன்று. ௯௭

ஊரூரிருப்பீரொற்றிவைத்தீரூர்தான்வேறுண்டோவென்றே
னோருர்வழக்கிற்கரியையிறையுன்னிவினவுமூரொன்றே
பேரூர்தினையூர்பெரும்புலியூர்பிடவூர்கடவூர்முதலாக
வேரூரனந்தமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** ஊர் ஊர் இருப்பீர் ஊர் ஒற்றிவைத்தீர்—ஒவ்வொரு நகரினும் வசிப்பீர் உமக்குரியதொரு நகர் ஒற்றியாகவைத்தீர்; வேறு உண்டோ என்றேன்—வேறு உரியதொரு நகர் உளதோ வென்று வினவினேன்; (அதற்கிவர்) ஓரூர் வழக்கில் கரியை இறை உன்னி வினவும் ஊர் ஒன்றே—நமக்கு உரியதொரு நகர் ஒற்றியென வழங்குவதில் நீ சாக்ஷியையாகி விடையுன்னியெம்மை வினவும் நகர் ஒன்றுதானோ?; பேரூர் தினையூர் பெரும்புலியூர் பிடவூர் கடவூர் முதலாக ஏர் ஊர் அனந்தம் என்கின்றார்—பேரூர்முதலாக அழகிய நகரம் அனந்தம் (எமக்குண்டு) என்றிசைக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-நு.)** ஒவ்வொருவூரினும் இருப்பீராயினும், உரியது திருவொற்றியூராகக்கொண்டுள்ளீர், இதுபோல உரியதொருவூர் வேறும் உண்டோவென்று யான் வினவ, இவர் உமதூரை அடகாக வைத்துவிட்டீரோ, வேறு சுதந்தரவூர் உமக்குண்டோவென்று கேட்டதாக வுட்கொண்டு, உரியவூர் பலவுள்ளன வென்பார் 'ஏரூர் அனந்த மென்கின்றார்' என்றும், நமதூர் ஒற்றியென வழங்குவதைப் பலரறியத் தேற்றுவதில் நீ சாக்ஷியாயினை யென்பார் 'ஓரூர் வழக்கிற்கரியை' என்கின்றாரென்றும் கொள்க. தான் - அசை. வழக்கு-வழங்குவது. கரியை - முன்னிலைவினைமுற்று வினையெச்சம். இறை - பதிலுத்தரம். அது வேறு நகரமுமுண்டு, அல்லது இன்று எனத்தெளிவிப்பது. ஒற்றிவைத்தல் - விலக்கிவைத்தலுமாம். ௯௮

விழியொண்ணுதலீரொற்றியுளீர்வேதம்பிறவியிலரென்றே
மொழியுநுமைத்தான்வேயீன்றமுத்தரெனலிங்கென்னென்றேன்
பழியன்றணங்கேயவ்வேய்க்குப்படுமுத்தொருவித்தன்றதனு
லிழியும்பிறப்போவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** விழி ஒள் நுதலீர்—அக்கினிக்கண்ணை அழகிய நெற்றியிலுடையீரோ!; ஒற்றியுளீர்—ஒற்றியூர் வாசரே!; வேதம் பிறவியிலர் என்று மொழியும் நுமை—வேதங்கள் பிறப்பற்றவரென்று மொழியாநின்றன தேவரீரை; இங்கு வேய் ஈன்ற முத்தர் எனல் என் என்றேன் — இவ்வுலகில் மூங்கில்

லீனப்பட்ட முத்தர் என்றுகூறல் என்னையோ? என்றனன்; அணங்கே பழி அன்று—தெய்வம் போல்பவளே! அப்படிக்கூறல் பழியல்ல; படு முத்து அவ் வேய்க்கு ஒரு வித்து அன்று—தோன்றிய அம்முத்தம் அம்மூங்கிலுக்கு ஒரு வித்தாகாது; அதனால் இழியும் பிறப்போ என்கின்றார் — அதனுனே அது இழிந்த பிறப்பாகுமோ? என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) தான் - அசை. முத்து மூங்கிலினாற் பெறப்பட்டதாயினும், அது மற்றொருமூங்கில் தோன்றற்குக் காரணமாகாமையால், அம்மூங்கிலி னுதிப்பு பழிக்கப்படுவதன்று. தோற்றத்தான் மாத்திரத்தினாலேயே முத்து இழிபிறப்பினதாகிவிடுமோ? என்றபடி. எனவே, கன்மவசத்தானுதிக்கும் மற்றைத்தோற்றங்கள் போல்வதாகாது, ஆன்மாக்களை ஆட்கொள்ளும் கருணை வசத்தானுதித்த தோற்றமே யாதலால், அது பிறப்பின்பாற்பட்டதல்லை யெனத் தேற்றித் நமக்குப் பிறப்பில்லாமை சாதித்தவாறாயிற்று. பிரளய காலத்திலே தேவராதியரும் அழிதல் கண்ட வேதங்கள் தாமும் அவ்வாறு அழியாமல் நித்தியமாக வாழ்தலைவிரும்பிக் கயிலையிற் சிவபெருமானை வழி பட்டு அக்கடவுளருளியவாறு மீண்டுத் திருநெல்வேலியை யடைந்து மூங்கில் வனமாகித் தம்மிடத்தே சிவபெருமான் முத்தெனத்தோன்றி விளங்கப் பெற்றனவென்பது அத்தலபுராணம். கக

விண்ணார்பொழில்சூழொற்றியுளீர்விளங்குந்தாமமிகுவாசத்
தண்ணார்மலர்வேதனையொழிக்கத்தருதல்வேண்டுமெனக்கென்றேன்
பண்ணார்மொழியாயுபகாரம்பண்ணுப்பகைவரேனுமிதை
யெண்ணாரெண்ணாரென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) விண் ஆர் பொழில் சூழ் ஒற்றியுளீர்—விண்ணுலகை யளாவிய சோலைகணெருங்கும் ஒற்றி நகரவாசரே!; மிகு வாசம் தண் ஆர் மலர் வேத னை ஒழிக்க விளங்கும் தாமம் எனக்கு தருதல் வேண்டும் என்றேன்— மிக்கமணமும் தண்மையுமமைந்த பஞ்சபாணமாகிய புட்பங்களின் வேத னையை யான் ஒழிக்குமாறு விளங்குகின்ற உமது கொன்றைமாலையை எனக்கு அருளவேண்டுமென்றனன்; பண் ஆர் மொழியாய் — பண்ணினது மினிமை யார்ந்த மொழியை யுடையாளே!; உபகாரம் பண்ணு பகைவரேனும் இதை எண்ணார் எண்ணார் என்கின்றார்—பிறர்மாட்டு உபகார சித்தமிலாத பகைவர் களாயிருக்கினும் (அவர்மாட்டும்) இத்தகைய நினைவை ஒருவரும் நினையார் நினையார் ஈதென்னே என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) எண்ணார் என்ற அடுக்கு இரக்கத்தின்மேலது. மன்மதபாண வேதனை யொழிக்க நினதுதாமம் தருதி என்ற தலைவியின் கருத்தை நோக் காது மலரின்மேய பிரமனை ஒழிக்கவேண்டியதாகக்கொண்டு, இது பகைவர் மாட்டும் கருதத்தக்க தன்றென்கின்றாரென்பது. இனிப் பிரமதேவனை யொழிக்க நினது பரந்தாமத்தைத் தருதல்வேண்டும் என்று வேண்டிய தாகக்கொண்டு, உபகாரிகளெல்லாரிடத்தும் இதை நினையார், அங்ஙனமாகத்

தனுவாதி யீந்து பாகம்வரப்பண்ணும் பிரமதேவரிடம் இதை நினைக்கலாமோ? என்றாரெனினும் அமையும். ஒழித்தல் - பிறப்பாதியநல்க அணுகவொட்டாதகற்றல். விளங்குந்தாமம் - ஒளிரும் பரந்தாமமெனப்படும் முத்தியுலகம். (௧௦௦)

செம்பான்மொழியார்முன்னரெனைச்சேர்வீரென்கோதிருவொற்றி
யம்பார்சடையீருமதாடலறியேனருளல்வேண்டுமென்றேன்
வம்பார்முலையாய்காட்டுகின்றாமன்னும்பொன்னாரம்பலத்தே
யெம்பால்வாவென்றுரைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** திருவொற்றி அம்பு ஆர் சடையீர்—திரு ஒற்றியூரில் வாழும் கங்கையையும் ஆத்தியையும் அணிந்த சடைமுடியீரே!; செம்பால் மொழியார் முன்னர்—செவ்விய பால்போலு மினிய சொற்களையுடைய இம்மங்கையர் முன்னர்; எனை சேர்வீர் என்கோ—என்னை அணைவீர் என்பேனோ; உமது ஆடல் அறியேன் அருளல்வேண்டும் என்றேன் — உமது நடிப்பையானறியேன் எனக்கு அருள்பாலித்தல் வேண்டுமென்றனன்; வம்பு ஆர் முலையாய்—கச்சணிந்த தனத்தவளே!; மன்னும் பொன் ஆர் அம்பலத்தே எம்பால் வா காட்டுகின்றாம் என்றுரைக்கின்றார் — நிலைபெற்ற பொன்னம்பலத்தில் எம்மிடம்வருதி அங்கு அதனைக் காட்டியருள்வோமென்றுரைக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-ரை.)** செம்மை - இனிமைப்பண்பு. உமது திருவிளையாடலறியேனென்று கூறியதை, இவர் உமது நடனமறியேனென்றதாகக்கொண்டு, பொன்னம்பலத்தே வா என்கின்றாரெனவும், ஓ என்பதை வியப்பிடைச்சொல்லாக்கி என்னைச் சேர்வீரென்பேன் என்றதாகக்கொண்டு மங்கையர்முன் இதை விரும்பிய நீ அம்பலம் வெளியாய் இரகசியஸ்தானமுமா யிருத்தலால் ஆங்குவா என்கின்றாரெனவும், மங்கையர் முன்னர் எனைமருவ வாருமெனக்கூற நாணிநின்றேனென்ற தலைவிக்கு இங்காயின் சிலரறிவர் அம்பலத்திலாயின் பலரறிவராகலின் ஆங்குவா வெனப்பரிகசிக்கின்றாரெனவும் பொருள்பட்டு நிற்பதும்; இவைக்கிணங்க ஆடலென்பதும் நடித்தலையும் கலத்தலையும் குறித்து நிற்பதும் ஓர்க. என்கு - என்பேன், தன்மையொருமை வினைமுற்று. ௧௦௧

மைக்கொண்மிடற்றீரூரொற்றிவைத்திருண்டோமனையென்றேன்
கைக்கணிறைந்ததனத்தினுந்தங்கண்ணினிறைந்தகணவனையே
துய்க்குமடவார்விழைவரெனச்சொல்லும்வழக்கீதறிந்திலையோ
வெய்க்குமிடையாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** மை கொள் மிடற்றீர் ஊர் ஒற்றிவைத்திர் மனை உண்டோ என்றேன்—கருமைபெற்ற கண்டத்தீர் ஊரை ஒற்றியாகவைத்திர் மனையுண்டோ? என்றனன்; எய்க்கும் இடையாய்—துவளு மிடையையுடையவளே!; துய்க்கு மடவார் — போகநுகரும் யவ்வனமங்கையர்; கைக்கண் நிறைந்த

தனத்தினும் தம் கண்ணில் நிறைந்த கணவனையே விழைவர் — கையில் நிறையப்பெற்ற திரவியத்தினும் தமது கண்ணிலனுபவிக்கத்தக்க அழகுநிறைந்த கணவனையே விரும்புவர்; எனச்சொல்லும் வழக்கிது அறிந்திலையோ என்கின்றார்—என்று கூறும் உலகவழக்கிதனை உணர்ந்திலையோ? என்றிசைக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) ஒற்றியை ஊராகக் கொண்டீர் உமக்கு வீடுண்டோ? வென்று யான்கேட்க; இவர் ஊரை அடகுவைத்த வுமக்கு மனைவியுண்டோ? என்று அசதியாடியதாகக்கொண்டு, அழகரான எம்மை அணைய விரும்பாதவருமுண்டோ? உலகில்வழங்கும் பழமொழியு மறியாய்கொல், எம்மைக்கண்டமாத்திரத்தே இறுமாந்து பூரித்த முலையால் வருந்தும் இடையையுடையவளே! நீ இரும்பினின்றும்போலப் பலர்விரும்புவரொன் றிசைத்தவாறாயிற்று. மை கொள்மிடறு - நீலகண்டம். மனை - வீடு, மனைவி. சு0உ

ஆறுமுகத்தார்தமையீன்றவைந்துமுகத்தாரிவர்தமைநான்
மாறுமுகத்தார்போலொற்றிவைத்தீர்பதியையென்னென்றே
றுறுமலர்ப்பூங்குழனீயோநாமோவைத்ததுன்மொழிமன்
றேறுமொழியன்றென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஆறு முகத்தார் தமை ஈன்ற ஐந்து முகத்தார் இவர் தமை நான்—சடானன முடையராகிய முருகக்கடவுளையீன்ற பஞ்சானன முடையராகிய இப்பெருமானை யான் (நோக்கி); மாறுமுகத்தார் போல் பதியை ஒற்றிவைத்தீர் என் என்றேன்—மாறுமுகமுடையீர்போல உமது நகரை ஒற்றியாகவைத்தீரே இது என்னையென்றனன்; நாறும் மலர் பூ குழல்—மணக்கும் மலர்கள்சூடிய அழகிய கூந்தலையுடையாய்!; நீயோ நாமோ வைத்தது— நீயா நமா ஒற்றிவைத்தது; உன் மொழி மன்று ஏறும் மொழி அன்று என்கின்றார் — உனதுவார்த்தை சான்றோரவையிற் சாரத்தக்க வார்த்தையல்ல என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) ஐந்துமுகம் - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பன. இவற்றோடு அதோமுகங்கூட்டிச் சிவபிரானுக்கும் ஆறுமுகங் கோடலும் உண்டு. பதியை ஒற்றி நகராகக்கொண்டீர் என்று யான்கூற, இவர் எமது நகரத்திற்கு அணுகிய நகராக்காது பகைவர்போல உமதுநகரை அதிதூரத்ததாக வைத்தீரென்றதாகக்கொண்டு, எப்பதியும் எமதுபதியேயாகவும் அதிதூரத்ததாகிய ஒற்றி நகராகவைத்தது நீயேயென்கின்று ரென்பது கருத்து. இனி விற்குந்தன்மையர்போலப் பதியை ஒற்றி வைத்தீரென்றதாகக்கொண்டு பதியென்பதற்குக் கணவனெனப் பொருள் கொண்டு, பதியை ஒற்றிவைத்தது நீயேயென்கின்றாரெனலும் ஒன்று. ஒற்றி-அடகுமாம். பதி - நகர், கணவன். ஒற்றிவைத்தல் - தூரமாகவைத்தல், அடகுவைத்தல். சு0௩

வள்ளன்மதியோர்புகழொற்றிவள்ளாலுமதுமணிச்சடையின்
வெள்ளமகண்மேற்பிள்ளைமதிவிளங்கலழகீதென்றேனின்
னுள்ளமுகத்தும்பிள்ளைமதியொளிகொண்முகத்தும்பிள்ளைமதி
யெள்ளலுடையாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) வள்ளல் மதியோர் புகழ் ஒற்றி வள்ளால் — வள்ளற்றன்மையுடைய அறிஞர் புகழத்தக்க ஒற்றிநகருடைய தியாகேசரே!; உமது மணி சடையில்—நுமது பவளம்போன்ற சடையில்; வெள்ள மகள்மேல் பிள்ளை மதி விளங்கல் அழகு ஈது என்றேன்—வெள்ளவடிவான கங்கையின்மேல் இளமதிவிளங்குதல் மிக அழகிது என்றனன்; எள்ளல் உடையாய்—கங்கையை இவ்வாறு இகழ்தலுடையவளே!; உள்ள முகத்தும் பிள்ளைமதி ஒளிகொள் முகத்தும் பிள்ளைமதி என்கின்றார்—உனக்கு உள்ளத்தும் இளமதியே ஒளி தங்கிய முகத்தும் இளமதியே இது அறியாயோ? என்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) மணி - அழகுமாம். எள்ளலுடையாய் என்றது பிறர் நகைக்கும்படி அவிழ்ந்த ஆடையை உடையவளே என்பதுங் குறித்தவாறு. முகம் - ஏழனுருபு. எம்மைக் காதலித்தமை காரணமாகப் பொறாமைகொண்டு, கங்கைபால் ஒரு சிறுமதிவாய்ந்தமைபற்றிச் செப்புகின்றாய் நின்பால் இரு சிறுமதிக ளிருக்கின்றனவே என்றெள்ளியபடி. உள்ளத்துப் பிள்ளைமதி - அற்ப அறிவு. முகத்துப்பிள்ளைமதி - அர்த்தசந்திரன், அர்த்தசந்திரன்போல் வதாகிய நெற்றி முகத்தின் ஒருறுப்பாகலின் முகத்தும் பிள்ளைமதி யென்றார்.

உள்ளத்தனையேபோலன்பருவக்குந்திருவாழொற்றியுளீர்
கள்ளத்தவர்போலிவணிற்குங்கருமமென்னீரின்றென்றேன்
மெள்ளக்கரவுசெயவோநாம்வேடமெடுத்தோநின்சொனினை
யெள்ளப்புரிந்ததென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) உள் அத்தனையேபோல் அன்பர் உவக்கும் திருவாழ் ஒற்றியுளீர்—கருதும் அவ்வளவுபோலவே அன்பர்கள் அநுபவித்துக் களித்தற்கேதுவாகிய ஐசுவரியங்களமைந்த ஒற்றிநகரிலமர்பவரே!; இன்று கள்ளத்தவர் போல் இவண் நிற்கும் கருமம் என் என்றேன் — இன்று அகத்தணுகாத வஞ்சகர்போல இச்சடையில் நிற்கும் காரியமென்னையோ? என்றனள். மெள்ள கரவு செயவோ நாம் வேடம் எடுத்தோம்—பெண்ணே நாம் மெல்ல வஞ்சகம் செய்வதற்கோ இவ்வேடந் தரித்தது; நின்சொல் நினை எள்ளப் புரிந்தது என்கின்றார்—நினது சொல்லே நின்னை இகழச்செய்தது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) கருதும் அளவுப்படியே அநுபவித்தலாவது வேண்டிய பொருள்களை வேண்டியவளவிற் குறையாது நுகர்தல்; தனை - அளவு. போல் - அசையுமாம். கள்ளத்தவரென்பது வஞ்சகத்தவர், களவுசெய்யும் அத்தவர் கள்ளக்கணவர், என்றிங்ஙனம் பலபொருள் தந்துநிற்க அச்சொல்லை கூட

யோகித்தமையால், நின்சொல் நின்னை எள்ளப்புரிந்த தென்றுணர்க. கள்ளல் - களவுசெய்தல். கள்ளக்கணவர்போலென்றுஞ் சுட்டினமையின் நாம் மெள்ளக் களவுசெய்தற்கோ இவ்வேடங்கொண்டது, இப்பொழுதே மயக்கி நின்னைக் கவர்தற்கன்றோ? என்றுங் கூறியவாறாயிற்று. மெள்ள - மெல்ல, (ளவொற்றுமை.) இவன் என்று புறங்குறித்தமையால் அகமென்பது வருவிக்கப்பட்டது. ௧0௫

அச்சையடுக்குந்திருவொற்றியவர்க்கோர்பிச்சைக்கொடுமென்றேன்
விச்சையடுக்கும்படிநம்பான்மேவினோர்க்கிவ்வகிலநடைப்
பிச்சையெடுப்பேமலதுன்போற்பிச்சைக்கொடுப்பேமலவென்றே
யிச்சையெடுப்பாயுரைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அச்சை அடுக்கும் திருவொற்றி அவர்க்கு ஓர் பிச்சை கொடும் என்றேன்—உள்ளீடாகி உயிரை அடுத்து நிற்கும் வியாபகராகிய இத்திருவொற்றி வாணருக்கு ஒரு பிச்சையைக் கொடுப்பீர் என்றனன்; (அதற்கிவர்) விச்சை அடுக்கும்படி நம்பால் மேவினோர்க்கு இ அகில நடை பிச்சை எடுப்பேம் அலது—பெண்ணே! ஞானமுறும்படி நம்பால் அடைந்தோர்க்கு இந்த உலக நடையாகிய பைத்தியத்தை விலக்குவோம் அல்லாமல்; உன்போல் பிச்சைகொடுப்பேம் அல என்றே—நின்னைப்போலப் பிச்சைக்கொடுக்க வியலோம் என்றே; இச்சை எடுப்பாய் உரைக்கின்றார்—தமது இச்சையை எடுப்பாக (ஏளனமாக) உரைக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) அச்சை யடுக்கும் என்றது *"அகரவுயிர்போ லறிவாகி யெங்கும் - நிகரிலிறை நிற்கு நிறைந்து" என்றபடி எல்லா அக்கரங்களுக்கும் அகரம் முதலானதைப்போன்று எல்லாவுயிர்கட்கு முதலானவனென்பது கருத்து. அடுத்தல் - ஒத்தல். பிச்சு - மயல், பைத்தியம். யான் பிச்சையிடுமென்றியம்ப இவர் நீ நின்னையடைந்தார்க்குக் காமமயலைக் கலப்பிப்பாய், யாம் நம்மையடைந்தார்க்கு அகிலமயலை அகற்றுவமல்லது உடைவிப்போம் என்றிங்ஙனம் இசைக்கின்றார் ஈதென்னை என்றவாறு. ௧0௬

அள்ளற்பழனத்திருவொற்றியழகரிவர்தம்முகநோக்கி
வெள்ளச்சடையீருள்ளத்தேவிருப்பேதுரைத்தாற்றருவலென்றேன்
கொள்ளக்கிடையாவலர்குமுதங்கொண்டவமுதங்கொணர்ந்தின்று
மெள்ளத்தனைதாவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அள்ளல் பழனம் திருவொற்றி அழகர் இவர்தம் முகநோக்கி—சேறுமருவிய வயல் சூழ்ந்த ஒற்றியழகரான இவரது திருமுகத்தை நோக்கி; வெள்ளம் சடையீர்—கங்கையை ஆதரித்த சடையுடையீர்!; உள்ளத்தே விருப்பு ஏது உரைத்தால் தருவல் என்றேன்—உமது உள்ளத்தின்கண் யாது விருப்பம் அதை யியம்பில் தருவேனென்றனன்; கொள்ள கிடையா அலர்

* திருவருட்பயன் - ௧.

குமுதம் கொண்ட அமுதம் கொணர்ந்து இன்னும் எள்ளத்தனை தா என்கின்றார்—பிறருக்குக் கிட்டுதற்கரிய பரந்த அடுப்பிற்சமைத்த அன்னத்தைக் கொணர்ந்து இன்னும் எட்பிரமாணம் தருதி என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-த.) கொள்ளக்கிடையா அமுதமெனக் கூட்டுக. தேவரமுது அடாது அமைந்ததாதலின் அட்டவமுதே யாம் விரும்புவது என்பார், 'குமுதங்கொண்ட வமுதம்' என்றார். குமுதம் - அடுப்பு. அன்றிச் செவ்வல்லிமலர் போலும் உள்வாயிற் சுரக்கும் தேனூறல், அல்லது அத்தேன்போலும் இன்னுரை தா எனினும் அமையும். எள்ளத்தனை என்பது சிறிது என்னும் பொருட்டு. இன்னும் தா என்றதால் முன்னும் தந்துளதெனப் போதரும். முன்னுந்தந்தமை வந்தவுடன் பிக்ஷையமுதிட்டமையும், 'வெள்ளைச்சடையீர் உள்ளத்தே விருப்பேது உரைத்தால் தருவல்' என வார்த்தையமுதளித்தமையுமாம். க0எ

விஞ்சுநெறியீரொற்றியுளீர்வியந்தீர்வியப்பென்னிவணென்றேன்
கஞ்சமிரண்டுநமையங்கேகண்டுகுவிந்தவிரிந்திங்கே
வஞ்சவிருதாமரைமுகையைமறைக்கின்றனநின்பால்வியந்தா
மெஞ்சலறநாமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) விஞ்சும் நெறியீர் ஒற்றியுளீர் வியந்தீர் இவண் என் வியப்பு என்றேன்—மேன்மை வாய்ந்த நெறியினையுடையவரே! ஒற்றிநகரவாசரே! ஏதோ அதிசயித்தீர் இவ்விடத்து யாது வியப்புகண்டீர் என்றனன் ; நமை அங்கே கண்டு நின்பால் குவிந்த கஞ்சம் இரண்டு—நம்மைத் தூரத்தே கண்ட மாத்திரத்தே நின்பாற்குவிந்த இரண்டு தாமரைகள் ; இங்கே விரிந்து வஞ்ச இருதாமரை முகையை மறைக்கின்றன—சமீபித்த இங்கே விரிந்து வஞ்சனைவாய்ந்த இருதாமரை அரும்புகளை மறைத்தலைச்செய்கின்றன ; நாம் எஞ்சலற வியந்தாம் என்கின்றார்—(இவைகண்டு நாம்) குறைவற வியந்தோம (ஈதேவியப்பு) என்கின்றார் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-த.) இருகஞ்சம் - இருகைகள். அவைகுவிந்தமை - அஞ்சலிசெய்தமை. வஞ்சம் - ஆடவரை மயல்கொள்வித்தல். இருதாமரைமுகை - இருதனங்கள். மறைத்தல் - ஆடையகன்ற அத்தனங்களை நாணங்காரணமாக மூடல், அல்லது மூலை விம்மலா லொசிகின்ற இடைக்குதவியாக அம்முலைப் பாரம் தாம் தாங்கல்போன்று பொதிதலுமாம். எனவே, நாம் ஒற்றியிருந்தமைகண்டு அஞ்சலியாகக் குவிந்த கைத்தாமரைகள் யாம் நெருங்கியமை கண்டு விரிந்து தனவரும்புகளை மறைக்கின்றமை நோக்கி வியந்தோமென்றவாறு. கூந்தலவிழ்த்தலும், முடித்தலும், மூலைமுகந்திறத்தலும், மூடலும், ஆடையவிழ்த்தலும், உடுத்தலும் முதலியன விரகமேலிட்ட மங்கையர்க்குரிய இங்கிதமாதலால் அதுகுறிப்பித்ததும் ஒக்கும். க0அ

அளியாரொற்றியுடையாருக்கன்னநிரம்பவிடுமென்றே
னளியார்குழலாய்பிடியன்னமளித்தாற்போதுமாங்கதுநின்
ளெளியார்சிலம்புசூழ்கமலத்துளதாற்கடகஞ்சூழ்கமலத்
தெளியார்க்கிடுநீயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அளியார் ஒற்றியுடையார்க்கே நிரம்ப அன்னம் இடும் என்றேன்—(தோழியைநோக்கி) கிருபையுடைய ஒற்றிநகர்க்கிறைவராகிய இவருக்கு நிரம்ப அன்னத்தை இடுவீர் என்றனன்; அளியார் குழலாய்—வண்டு மொய்க்கும் கூந்தலை யுடையவளே!; பிடி அன்னம் அளித்தால் போதும்—பிடியன்னம் நமக்கீந்தாற்போதும்; அது நின் ஒளியார் சிலம்பு சூழ் கமலத்து உளது—அப்பிடி யன்னம் நினது ஒண்மையார்ந்த சிலம்பணி சூழ்ந்த கமலத்தினுகணுள்ளது; நீ கடகம் சூழ் கமலத்து (உளது) எளியார்க்கிடு என்கின்றார் - நீ கடகம் சூழப்பெற்ற கமலத்தில் உள்ளது எளியவர்க்கிடுதி என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) தலைவி தோழியைநோக்கி இவருக்கு நிரம்ப அன்னமிடும் என்றமைகேட்ட தலைவர் எமக்குவேண்டுவது பிடியன்னமே யென்பார், 'பிடியன்னமளித்தாற் போதும்' என்றும், அதுபிடியும் அன்னமும் போல வுலவி நீ நம்பக்கலணுகுவதே யென்பார், பிடி சிலம்பிலும் அன்னம் கமலத்திலும் உள்ளன வாகலின், அந்நயமுந்தோன்றச், 'சிலம்பு சூழ்கமலத்துளது' என்றும், காலாலளிக்கும் அஃதன்றிக் கையாலளிக்கும் பிடியன்னம் எமக்குவேண்டுவதன்றென்பார், 'கடகஞ்சூழ் கமலத்துளது நிரம்ப எளியார்க்கிடுக' என்றும் கூறினர். ஆங்கு ஆல் அசைகள். பிடியன்னம் - பிடியும் அன்னமும்; கைப்பிடியளவினதாகிய அன்னம், பிடித்தவன்னமுமாம். பிடி - பெண்யானை. சிலம்பு - மலை, காற்சிலம்பு. உளதென்பது பின்னுங்கூட்டப்பட்டது. கடகஞ்சூழ் கமலத்துளதென்பது கடகம் - பிடி; கமலம் - கை; அதிலுள்ளது - அன்னம் எனவும் பொருள்பட்டுக் கையிற் பிடியன்னமெனக் குறிப்பிப்பதும் ஓர்க. ௧0௯

விச்சைப்பெருமானெனுமொற்றிவிடங்கப்பெருமானீர்முன்னம்
பிச்சைப்பெருமானின்றுமணப்பிள்ளைப்பெருமானுமென்றே
னச்சைப்பெறுநீயம்மணப்பெண்ணாகியிடையிலையங்கொள்
ளிச்சைப்பெறும்பெண்ணென்கின்றாரிதுதான்சேடியேன்னேடீ.

(இ-ள்.) ஒற்றி விச்சை பெருமான் எனும் விடங்கப்பெருமான் நீர் முன்னம் பிச்சைப்பெருமான்—ஒற்றியில் வாழும் ஞான சொரூப னெனப்படும் சுயம்பு மூர்த்தியே! தேவரீர் முன்பு பிக்ஷாடனரா யிருந்தீர்; இன்று மணப்பிள்ளைப் பெருமானும் என்றேன்—இன்று எம்மால் (விரும்பப்பட்டமையின்) மணவாளப்பெருமானுயினீர் என்றேன்; அச்சை பெறும் நீ அம்மணப்பெண் ஆகி இடையில் ஐயம்கொள் இச்சை பெறும் பெண் என்கின்றார்—எமக்கு ஒத்தவுருவம் பெற்றுள்ள நீ அழகிய மணத்துக்கு உரிய பெண்ணாகி இடை

யில் ஐயங்கொள்ளுகின்ற விருப்பம்பெறும் பெண்ணாயிருக்கின்றனை என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) விச்சை - ஞானம். விடங்கர் - டங்கத்தினாற் றுளைக்கப்படாதவர்; சுயம்பு என்றபடி. டங்கம் - உளி. விடங்கம் - அழகுமாம். முன்னம் மகளிரை மயக்க அதிசுந்தர பிக்ஷாடனர் போன்று நடித்து, இடையில் இன்று கலியாணசுந்தரராயினீர் என்று தலைவி கூறியதற்கேற்பத் தலைவரும் பெண்ணே! எம்மையொத்தநீயும் முன் கலியாணசுந்தரியாகி இடையில் ஐயங்கொள்ளும் கோலம் உடையையாயினை என்று எதிரியம்பியவாறு. அச்சு - அடையாளம்; அஃதாவது - பெருமானுக்கொத்த மங்கலவடிவமும் காதன்மேலீட்டால் ஆடையிழப்பு முதலியனவும் உடைமை. அம்மணம் - அழகியமணம், திருவாமணம். இடை - நுசுப்பு, மத்தி. ஐயம் - கண்டோர் இடையுண்டோ இன்றோ எனக்கொள்ளுஞ் சந்தேகம், பிச்சை. இச்சை - போகவிருப்பம். ௧௧௦

படையம்புயத்தோன்புகழொற்றிப்பதியீரரவப்பணிசுமந்தீர்
புடையம்புயத்திலென்றேன்செம்பொன்னேகொடையம்புயத்திலுநன்
னடையம்புயத்துஞ்சுமந்தனைநீநாளுமரவப்பணிமற்று
மிடையம்புயத்துமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) படை அம்புயத்தோன் புகழ் ஒற்றி பதியீர் புடை அம் புயத்தில் அரவப்பணி சுமந்தீர் என்றேன் — படைப்புத் தொழிலினையுடைய பிரமனால் புகழப்பெற்ற ஒற்றி நகரீர்! தேவரீர் இரண்டு அழகிய புயத்தில் சருப்பாபரணங்களைச் சுமந்தீர் என்றனன்; செம்பொன்னே — செவ்விய இலக்குமி போல்பவளே!; கொடை அம்புயத்திலும் — கொடுத்தலைப்புரியும் தாமரைபோலும் கரத்திலும்; நல் நடை அம்புயத்தும் — நல்ல நடையினைச்செய்யும் பாததாமரையிலும்; மற்றும் இடை அம்புயத்தும் — இன்னும் இடையிலுள்ள அம்புயத்திலும்; நீ நாளு அரவப்பணி சுமந்தனை என்கின்றார் — நீ பலப்பல அரவப்பணிகளைச் சுமந்தனையே என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) அம்புயத்தில் அரவப்பணி சுமந்தீரே மணியணியணியமாட்டீரோ? என்று எள்ளிய தலைவிக்கு நாம் புயத்தினளவில் அப்பணிசுமந்தோம், நீ கொடையம்புயத்தும் நடையம்புயத்தும் இடையம்புயத்தும் அப்பணி சுமந்தனையே என்று எதிரெள்ளியபடி. அரவப்பணி - சர்ப்பாபரணமும், அசைதலால் ஒலிசெய்யும் ஆபரணங்களுமாம். அரவம் - பாம்பையுணர்த்தும்போது தமிழ்ச்சொல், அரா என்பது ஈறு குறைந்து உகரச்சாரியையும் அம்முப்பெற்றது. ஒலியை உணர்த்தும்போது வடசொல்; ரவம்-ஒலி; இது முதலில் அகரம்பெற்றுவந்தது. அம்புயத்தை யுவமிக்கும் பன்னிரண்டுறுப்புக்களுள் நிதம்பமும் ஒன்றாகலின் இடையம்புயத்துமென்றார். இடை

யம்புயம் - இடையை யடுத்த அம்புயமென்க ; இதனை "* திருமுகங் கமலமிணைவிழி கமலஞ் செய்யவாய் கமலநித் திலந்தாழ் - வருமுலை கமல மிணைக் கரங் கமலம் வலம்புரி யுந்திபொற் கமலம் - பெருகிய வல்குன் மணித்தடங் கமலம் பிடிநடைத் தாள்களுங் கமல - முருவவட் கிவ்வா றுதலி னன்றே வுயர்ந்தது பூவினுட் கமலம்." என்னும் செய்யுளாலும் உணர்க. ககக

கூம்பாவொற் றியூருடையீர் கொடும்பாம் பணிந்தீரென் னென்றேன்
ஓம்பா துரைக்கிற் பார்த்திடி னுள்ளுன் னில்விட மேற்றுன் னிடைக்கீழ்ப்
பாம்பாவதுவே கொடும்பாம் பெம்பணிப் பாம்பதுபோற் பாம்பலவென்
றேம்பா நிற்ப விசைக்கின் றாரிது தான்சேடி யென்னே டீ.

(இ-ள்.) கூம்பா ஒற்றி ஊர் உடையீர் கொடும் பாம்பு அணிந்தீர் என் என்றேன் — அழிவுறாத ஒற்றியூரை யுடையவரே! கொடிய பாம்புகளை அணிந்தீரே! இது என்னை என்றனன்; உன் இடைக்கீழ் பாம்பு ஆவதுவே ஓம்பாது உரைக்கில் பார்த்திடில் உள் உன்னில் விடம் ஏற்று கொடும்பாம்பு— மங்கையே! உனது இடையின் கீழுள்ள பாம்பே ஒதுக்காமல் வாயால் உச்சரிக்கினும் கண்ணால் பார்க்கினும் உள்ளத்தில் நினைக்கினும் விடத்தையேற்றுவிக்கும் கொடும்பாம்பு; எம் பணி பாம்பு அதுபோல் பாம்பு அல என்று ஏம்பா நிற்ப இசைக்கின்றார் —எமது அணியாகிய பாம்பு அதுபோலக் கொடும் பாம்பு அல்லவென்று யான் ஏங்கிநிற்கும்படி பேசுகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) கூம்பாமை - பிரளயத்தும் அழியாமை. இடைக்கீழ்ப்பாம்பு - அல்குல். ஆவது - சொல்லுருபு. ஓம்புதலாவது வாயால் உச்சரித்தலாதியன புரியினும் உயிர்கவர்வதாகலின், இது முக்காரணங்களானும் பற்றப்படாததென்று ஓதுக்கல். ஏம்பல் - வருந்தல். ககஉ

புயல்சூழொற் றியுடையீரென் புடையென் குறித்தோ போந்ததென்றேன்
கயல்சூழ்விழியாய் தனத்தவரைக் காணலிரப் போரெதற்கென்றார்
மயல்சூழ்தன மிங்கிலையென் றேன்மறையா தெதிர்வைத் திலையென்ற
லியல்சூழறமன் றென்கின் றாரிது தான்சேடியென் னேடீ.

(இ-ள்.) புயல் சூழ் ஒற்றியுடையீர் என் புடை என் குறித்தோ போந்தது என்றேன்—மேகங்கள்தவழும் (மாளிகைகளும் சோலைகளுமுடைய) ஒற்றி நகரவாணரே! என்னிடத்து யாது குறித்தோ வந்தது என்றனன்; கயல் சூழ் விழியாய்—கயல்மீனும் அவாவிச்சூழும் விழியினையுடையாய்!; இரப்போர் தனத்தவரைக்காணல் எதற்கு என்றார்—யாசிப்பவர்கள் தனமுடையாரைக்காணுதல் யாதுக்கு? நீ யோசிப்பாயாக என்றனர்; மயல்சூழ் தனம் இங்கு இலை என்றேன்—மையலை விளைக்கும் தனம் இங்கு இல்லையே என்றனன்; மறையாது எதிர் வைத்து இலை என்றல் இயல்சூழ் அறம் அன்று

* தணிகைப்புராணம் - களவுப்படலம் - சரு.

என்கின்றார்—பெண்ணே ! மறைக்காமல் முன்னேவைத்துக்கொண்டு இல்லையென்று கூறுதல் ஒற்றுமையமைந்த தருமமன்று என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) புடை - ஏழனுருபு. தனம் - ஸ்தனம், பொருள். தனமுடையளாகியும் அத்தனமில்லை என்றல் தருமமல்ல, நாம் உனது மையலையேற்றும் தனத்தை விரும்பியே வந்தனம் என்றபடி. கக௩

நடவாழ்வொற்றியுடையீர்நீர்நாகமணிந்தழகென்றேன்
மடவாயதுநீர்நாகமெனமதியேலயன்மான்மனநடுங்க
விடவாயுமிழும்படநாகம்வேண்டிற்காண்டியென்றேயென்
னிடவாயருகேவருகின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நட வாழ்வு ஒற்றியுடையீர்—நடனவாழ்க்கையையுடைய ஒற்றி நகரத்தவரே ! ; நீர் நாகம் அணிந்தது அழகு என்றேன்—நீவிர் பாம்புகளையணிந்தது மிக்க அழகே என்றனன் ; மடவாய் அது நீர்நாகம் என மதியேல்—மடமையுடையவளே ! அது நீர்நாகமென்று மதியாதே ; அயன் மால் மனன் நடுங்க விடம் வாய் உமிழும் படம் நாகம்—பிரம விட்டுணுக்கள் மனநடுங்கும்படி ஆலகாலத்தை வாய்வழி யுமிழும் படத்தையுடைய பாம்பாகும்; வேண்டில் காண்டி என்றே என் இடவாய் அருகே வருகின்றார்—நீ விரும்பில் காணுவாய் என்று என்னிடத்தில் அருகாக வருகின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) மனன் - போலி. இடவாய் - வாய் ஏழனுருபு. ஆடுந்தொழிலையுடையீராதலால் ஆடும்பாம்பை அணிந்தீர் இது அழகே என்று தலைவி கூற, இறைவர் நீர்நாகமென்பதனைத் தண்ணீர்ப்பாம்பெனப் பொருள்கொண்டு நீ மடமையளாதலால் அங்ஙனமதித்தாய் அது படநாகமென வுணர்தி என்று பகர்ந்தாரென்க. கக௪

கோடாவொற்றியுடையீர்நுங்குலந்தான்யாதோகூறுமென்றேன்
வீடார்பிரமகுலந்தேவர்வேந்தர்குலநல்வினைவசியப்
பாடார்குலமோர்சக்கரத்தான்பள்ளிக்குலமெல்லாமுடையே
மேடார்குழலாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கோடா ஒற்றி உடையீர் — மாறுபடாத ஒற்றிநகரை யுடையவரே ! ; நும் குலம் யாதோ கூறும் என்றேன் — நுமது குலம் எதுவோ அதனைக் கூறுவீர் என்றனன் ; ஏடு ஆர் குழலாய்—பூவிதழ் சூடிய கூந்தலையுடையாய் ! ; வீடார் பிரமகுலம் தேவர்குலம் வேந்தர்குலம் பாடு ஆர் நல்வினை வசியகுலம் ஓர் சக்கரத்தான் பள்ளிகுலம் எல்லாம் உடையேம் என்கின்றார்—வீடடைதற்குரிய பிரமகுலம் தேவகுலம் அரசகுலம் பெருமை பெற்ற நல்வழியிற் பொருளீட்டும் வசியகுலம் ஒப்பற்ற குயவகுலம் வன்னியகுலம் மற்றும் எல்லாக்குலமும் உடையேம் என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) தான் - அசை. ஏடு - சினையாகுபெயர். குலமென்பதற்கு மரபெனக்கொண்டதுமன்றி ஆலயமெனவும் பொருள்கொண்டு, தேவர் அந்தணராதியரமைத்த ஆலயமெல்லா முடையோம், இக்குலங்களே யல்லது வேறுகுலம் நமக்கில்லையென்று தத்துவார்த்தமும் விளக்கியபடி. சக்கரத்தானென்பது பூமிக்குரிய சூத்திரனெனவும், சக்கரத்தான்பள்ளியென்னும் இருமொழிகளும் ஒருங்குசேர்ந்து, சக்கரமுடையராய்ச் சயனகோலம்வாய்ந்த திருமாலெனவும் பிறபொருள்பயந்து நின்றன. குலம் ஆலயமென்பது "ஊராணோர் தேவகுலம்" என்பதனானுமறிக. ஆலயம் - இருதயாலயமுமாம்.

நலமாரொற்றியுடையீர்நீர்நல்லவழகரானாலும்
குலமேதுமக்குமாலையிடக்கூடாதென்றேனின்குலம்போ
லுலகோதுநங்குலமொன்றோவோராயிரத்தெட்டுயர்குலமிங்
கிலகாநின்றதென்கின்றீரிதுதான்சேடியென்னே.

(இ-ள்.) நலம் ஆர் ஒற்றியுடையீர் நீர் நல்ல அழகர் ஆனாலும்—பலவளங்கள் ஆர்ந்துள்ள ஒற்றிவாணரே! நீவிர் மிகநல்ல அழகர் ஆயினும்; உமக்கு குலம் ஏது மாலை இடக்கூடாது என்றேன்—உமக்குக் குலம் இல்லையே (ஆதலின் யான்) மாலைசூடக்கூடாதே என்றனன்; நின் குலம்போல் உலகு ஓதும் நம் குலம் ஒன்றோ—(பெண்ணே!) நினது குலம்போல உலகமோதும் நமதுகுலம் ஒன்றோ; ஓராயிரத்தெட்டு உயர்குலம் இங்கு இலகாநின்றது என்கின்றீர்—ஒரு ஆயிரத்தெட்டு என்றெண்ணும் உயர்ந்தகுலம் இவ்வுலகில் விளங்காநின்றது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) இன்ன சாதியரென்று ஏற்படாதவரை மணம்புரிவது மரபல்லாமையால் குலமில்லா வும்மை மணக்க ஏலாது என்றதலைவிக்கு, உனக்கு ஒரு குலம், நமக்கு ஆயிரத்தெட்டுக்குலமுண்டென்று கூறியவாறு. குலம் - சாதி, ஆலயம். சிவாலயம் ஆயிரத்தெட்டென்பது உலகறிபிரசித்தம். இவை, தானேதோன்றியதாகிய சுயம்புலிங்கமும், விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் முதலியகணங்களால் தாபிக்கப்பட்டதாகிய காணலிங்கமும், திருமாலாதிய தேவர்களால் தாபிக்கப்பட்டதாகிய தைவிகலிங்கமும், இருடிகளாதியரால் தாபிக்கப்பட்டதாகிய ஆரிடலிங்கமும், மனுடரால் தாபிக்கப்பட்டதாகிய மானுடலிங்கமுமாகிய ஐவகையிலிங்கங்களுள் ஒவ்வொன்றற்குத் தானமாக அமைந்துள்ளனவாம். ௧௧௬

மதிலொற்றியினீர்நும்மனையாண்மலையின்குலநும்மைந்தருளோர்
புதல்வர்க்கானைப்பெருங்குலமோர்புதல்வர்க்கிசையம்புலிகுலமா
மெதிரற்றருள்வீர்நுங்குலமிங்கெதுவோவென்றேன்மனைவியருள்
ளிதுமற்றொருத்திக்கென்கின்றீரிதுதான்சேடியென்னே.

(இ-ள்.) மதில் ஒற்றியினீர் — மதில் வளைந்த ஒற்றியிலுள்ளீர்!; நும் மனையாள் மலையின்குலம்—நுமது மனைவியோ மலைக்குலத்தளாவள்; நும் மைந்தருள் ஓர் புதல்வர்க்கு பெரு ஆனை குலம்—உமது புத்திரருள் மூத்தபுதல்

வர்க்குப் பெரியயானைக்குலம் உரித்தாயது; ஓர் புதல்வர்க்கு இசை அம்புலி குலமாம்—இளையபுதல்வர்க்கு இசைவாய்ந்த அழகிய வேங்கைக்குலம் உரித்தாகும்; எதிர் அற்று அருள்வீர்—ஒப்பற்று அன்பர்க்கு அருள்பாலிப்பவரே!; நும்குலம் இங்கு எதுவோ என்றேன்—நுமதுகுலம் இங்கு யாதோ? நுவல்வீர் என்றனன்; இது மனைவியருள் மற்றொருத்திக்கு என்கின்றார்—நீ எதுவெனக்கூறிய இது எமது மனைவியருள் மற்றொரு மனைவிக்குரியகுலம் என்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) உமாதேவியார் இமவான் மகளாதல்பற்றி மலைக்குலமென்றதற்கிணங்க, விநாயகக்கடவுள் யானைமுகமுடைமையும் முருகக்கடவுள் வள்ளிநாச்சியாரை மணம்புரியச் சென்றபோது வேங்கைமரமாதலுடைமையும்பற்றி யானைக்குலமும் புலிக்குலமுமாகப்புகன்றபடி. முருகக்கடவுள் சந்திரகுலத்தில் உக்கிரப்பெருவழுதியாராய் அவதரித்தமைபற்றி அம்புலிக்குலமென்றுரைனலும் ஒன்று. எதுகுலத்துதித்த கண்ணனும் ஒருமனைவியே என்பார், எதுகுலம் மற்றொருத்திக்கென்றார். கண்ணபிரானைக்கூறியது திருமாலென்னும் ஒற்றுமைபற்றி என்க. எது - ஓரரசன். ககஎ

தேமாம்பொழில்சூழொற்றியுளீர்திகழுந்தகரக்காற்குலத்தைப்
பூமாநிலத்தில்விழைந்துற்றீர்புதுமையிஃதும்புகழென்றே
னுமாகுலத்திலரைக்குலத்துள்ளிணைந்தேபுறமற்றக்குலங்கொண்
டேமாந்தனைநீயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தே மா பொழில் சூழ் ஒற்றியுளீர்—இனிய மாஞ்சோலைவளர்ந்த ஒற்றியூரிலுள்ளவரே!; திகழும் தகரம் கால்குலத்தை மா பூ நிலத்தில் விழைந்து உற்றீர்—விளங்கும் தகராலயத்தைப் பெருமையுற்ற பூமியில் விரும்பி அமர்ந்தீர்; உம் புகழ் இஃது புதுமை என்றேன்—உமது புகழ்ச்சி இது மிக்க புதுமையுடையதென்றனன்; ஆமாகுலத்தில் அரைக்குலத்து உள் இணைந்தே மற்று அரைகுலம் புறம்கொண்டு நீ ஏமாந்தனை என்கின்றார்—ஆமாகுலத்துள்ளே பாதிகுலத்தை உள்ளத்துள்ளே வைத்து மற்றைப் பாதிகுலத்தைப் புறத்திற்கொண்டு நீ களித்திருக்கின்றாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீகவீட்டினுள்ளே ஆகாசமாகிய சிவம் விளங்குவதுபோலப் புறத்தும் இப்பிரமாண்டமே பிரமபுரமாகவும், இதனுள்ளே யிருக்கும் தில்லைவனமே புண்டரீக வீடாகவும், இதிலே நிருத்தஞ்செய்யுஞ் சிவமே ஆகாசமாகவும் விளங்குவதும்; இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம் ஆதலால் சிதம்பரமெனப்படுவதும், இச்சிதம்பரமாகிய சிவம் எந்நாளும் நீக்கமின்றி விளங்குந் தானமாதலால் தில்லைவனமும் சிதம்பரமெனப்பெயர்பெற்றதும் பற்றி, சாந்தோக்கிய உபநிடதத்திலே தகரவித்தை கூறப்பட்டிருத்தலையும், இத்தகரவித்தையை உபாசிக்குமுறைமை கைவல்லியோபநிடதத்தில் சிவ

னது தகரோபசனவிதிப்பிரகரணத்திலே சொல்லப்பட்டிருத்தலையுஞ் சிந்தித்து, விராட்புருடனது இருதயமாகிய தகரத்தின்கணுள்ள ஆலயத்தை இப்பூமியின்கண் விரும்பியமர்ந்திரென்று தலைவிகூற; ஆட்டுக்காற்குலத்தை விரும்பி யமர்ந்திரென்று கூறியதாகத் தலைவர் உட்கொண்டு, நீ ஆமாகுலத்தில் அனைக்குலத்தை உள்ளும் அனைக்குலத்தைப் புறத்தும் கொண்டிருப்பதுமல்லாமல், எமது மரபும் விசாரியாது எம்மையிச்சித்துத் துன்புறுகின்றனை; இப்படிப்பட்ட நீயோ? உயர்குலம் பாராட்டிக்கொண்டு எமதுகுலம் இழிக்கத்தக்கவளென்று எதிரியம்பியவாறு. ஆட்டின்காற்குலமென்றமையால் காட்டுப்பசுவின் அனைக்குலமென்று இழித்துரைத்ததொரு நயமும் இதிற்காண்க. ஆட்டுக்காற்குலம் - நடனபதத்தோடு கூடிய ஆலயம், (சிதம்பரம்.) ஆமாகுலத்தில் அனைக்குலம் - ஆகுலம்; (ஆகுலம் - துன்பம்.) மற்றனைக்குலம் - மாகுலம் (மாகுலம் - பெரியதொரு உயர்குலம்.) கால் - ஏழனுருபு, பாதம், காலென்னும் என் ; அல்லது இடம். இதனை வருஞ்செய்யுளானும் உணர்க. குலம் - மரபு, ஆலயம். ஆமா - காட்டுப்பசு. ௧௧அ

அனஞ்சூழொற்றிப்பதியுடையீரகிலமறியமன்றகத்தே
மனஞ்சூழ்தகரக்கால்கொண்டீர்வனப்பாமென்றேனுலகறியத்
தனஞ்சூழகத்தேயணங்கேநீதானுந்தகரத்தலைகொண்டா
யினஞ்சூழழகாமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அனம் சூழ் ஒற்றி பதியுடையீர்—அன்னங்கள் சூழப்பெற்று (வயனிறைந்த) ஒற்றிப்பதியையுடையவரே !; அகிலம் அறிய மன்று அகத்தே மனம் சூழ் தகரம் கால் கொண்டீர் வனப்பு ஆம் என்றேன்—உலக மறியும் படி சிற்சபையிலே மனம் விரும்புகின்ற ஆட்டுக்காலைக் கொண்டீர் இது மிக்க அழகே என்றனன்; தனம் சூழ் அகத்து ஏய் அணங்கே—திரவிய நிறைந்தவீட்டில் வசிக்கும் அணங்குபோல்பவளே !; நீதானும் உலகறியத் தகரம் தலைகொண்டாய் இனம் சூழ் அழகாம் என்கின்றார்—நீயும் உலகறியும் படி ஆட்டுத்தலையைக்கொண்டனை இது மிக்க அழகாகும் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) தான் - அசை. இனம் சூழ் அழகு - கூட்டமான மிக்க அழகு. தகர் - ஆடு; ஆடுதலைச்செய்யுங்கால், என்றதை ஆட்டுக்காலென்றதாகவே கொண்டு, நீ ஆட்டுத்தலை கொண்டாயென்று எள்ளியதாம். ஆட்டுத்தலை - (உமதியல்பு அழகாமென்று) ஆட்டுதலைசெய்யுந்தலை. தகரக்கால் - தகரமாகிய இடம். தகரத்தலை - மயிர்ச்சாந்தணிந்த தலை. அகமென்பது குறுக்கல் விகாரமெனக்கொண்டு தனஞ்சூழ் ஆக மெனவுமாம். ஆகம்-மார்பு. ௧௧௯

பங்கேருகப்பூம்பணையொற்றிப்பதியீர்நடவம்பரமென்னு
மங்கேயாட்டுக்காலெடுத்தீரழகென்றேனவ்வம்பரமே
லிங்கேயாட்டுத்தோலெடுத்தாயாமொன்றிரண்டுநீயென்று
லங்கேகின்சொல்லென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பங்கேருகம் பூ பண்ணை ஒற்றி பதியீர்—தாமரைகள் மலர்ந்த அழகிய வயனிறைந்த ஒற்றிப்பதியீரே!; நடு அம்பரம் என்னும் அங்கே—மத்திய ஆகாசமெனப் படுகின்ற சிதம்பரதலத்தே; ஆட்டு கால் எடுத்தீர் அழகு என்றேன்—ஆட்டுக்காலை எடுத்தீரோ (இது நல்ல) அழகு என்றனன்; அ அம்பரமேல் இங்கே ஆட்டு தோல் எடுத்தாய்—அந்த நடுவாகிய அம்பரத்தின்மேல் நீ ஆட்டுத்தோலை எடுத்தனை; யாம் ஒன்று நீ இரண்டு என்றால் நின்சொல் எங்கே என்கின்றார்—யாம் எடுத்தது ஆட்டுக்காலொன்று நீ எடுத்தது ஆட்டுத்தோல் இரண்டு ஆனால் நினது சொல் எங்கே வெல்லும் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) பணை - இடைக்குறை. விராட்புருடன் இருதயத்தானமாகலின் நடு என்றார். அங்கே எடுத்தீர் என்றதற்கு இங்கே எடுத்தாய் என்றும், ஆட்டுக்கால் என்றதற்கு ஆட்டுத்தோல் என்றும் கூறியது நயம். பிந்திய நடுவம்பரம் இடையாகிய ஆகாயம்; தோற்றமாகக் காணப்படுதலில்லாத இடை என்றபடி. ஆட்டுத்தோல் - அசையுமியற்கையுடைய யானை; முதலாகு பெயராய்க் கொம்பையுணர்த்திற்று. கொம்பு நிமிர்ச்சி சாயாமை வலிமையால் முலைக்குவமை. கஉ0

மாணப்புகழ்சேரொற்றியுளீர்மன்றார்தகரவித்தைதனைக்
காணற்கினிநான்செயலென்னேகருதியுரைத்தல்வேண்டுமென்றேன்
வேணச்சுறுமெல்லியலேயாம்விளம்புமொழியவ்வித்தையுனக்
கேணப்புகலுமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மாண புகழ்சேர் ஒற்றியுளீர் மன்று ஆர் தகரவித்தைதனை—மாட்சிமைப்பட்டபுகழ்மலிந்த ஒற்றிநகரரே! சிற்சபையிற்பொருந்திய தகரவித்தையை; இனி நான் காணற்கு செயல் என்னே கருதி உரைத்தல்வேண்டும் என்றேன்—இப்பொழுது யான் காணுதற்குச்செய்வது யாது சிந்தித்துச்செப்பியருளல்வேண்டும் என்றனன்; வேள் நச்சுறும் மெல்லியலே யாம் விளம்பும் மொழி அவ்வித்தை உனக்கு ஏண புகலும் என்கின்றார்—காமனும் காமுறும் மெல்லிய இயற்கையுடையவளே! யாம் கூறுகின்றமொழியே அத்தகரவித்தையை உனக்கு உறுதிபடக்கூறுகிற்கும் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) தகரவித்தை - இருதயாகாசத்தைக் காணுதற்குரிய ஆராய்ச்சிநெறி. இது (கசஅ) - வது செய்யுளுரையில் விளக்கப்பட்டது. விளம்புமொழி - சாந்தோக்கியமாதிய உபநிஷத்துகள். மௌனநிலையினிலவிக் கைக்குறிப்பிற்காட்டும் சின்முத்திரையாதிய சேஷ்டைகளுமாம். இவையும் சத்தானுமானத்தின் வழியால் குறித்தமெய்ப்பொருள்களைப் பிறர்க்கு விளக்குதலால் விளம்புமொழியெனப்பட்டதெனக்கொள்க. கஉக

நல்லாரொற்றியுண்டையீர்யானடக்கோவெறும்பூவணையணைய
வல்லீரவனும்முடன்வருகோவணையாதவலத்துயர்துய்க்கோ
செல்லாவென்சொன்னடவாதோதிருக்கூத்தெதுவோவெனவிடைக
ளெல்லாநடவாதென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நல்லார் ஒற்றியுடையீர் யான் வெறும் பூவணை அணைய நடக்கோ—நல்லவர் பரவும் ஒற்றிநாதரே! யான் தேவரீர் வீற்றிருக்கப்பெறாது வறிதுகிடக்கும் மலரணையைத்தனித்தடைய நடக்கவா?; அல்லால் அவண் நும்முடன் வருகோ—அன்றி (நீருள்ள) அவ்விடத்து உம்முடன் வருகவா?; அணையாது அவலம் துயர் துய்க்கோ—உம்மை அணையப்பெறாது வீணே துயரை அனுபவிக்கவா?; செல்லா என்சொல் நடவாதோ—பயன்படா வெறுந் புன்சொல் உம்மிடம் செல்லாதோ?; திருக்கூத்து எதுவோ என—தேவரீர் திருநடனம்யாதோ என்றுயான் வருந்திக்கேட்க; எல்லாம் விடைகள் நடவாது என்கின்றார்—யான் வினவிய வெல்லாவற்றிற்கும் விடைகளாக நடவாதென்று ஒருமொழிகூறி மருட்டுகின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை) நடக்கோ இதில் கு தன்மையொருமை விகுதி. யான் நடக்கோ என்பதற்கு நடஎன்பதும், வருகோ என்பதற்கு வா என்பதும், துயர் துய்க்கோ என்பதற்கு து (அனுபவி) என்பதும், என்சொல் நடவாதோ என்பதற்கு நடவாது என்பதும், கூத்து எதுவோ என்பதற்கு நடவாது (காளியுடன் ஒட்டியாடிய வாதுநடனம் என்பதும், விடைகளாக நடவாதென்னும் ஒருமொழியே பிரிந்தும் தொக்கும் மாறியும் பொருள்தருவது உய்த்துணர்க. அன்றி, நீவிர் விரகமேலீட்டால் கேட்கும் வினாக்களுக்கெல்லாம் விடைவிளம்பிக் கொண்டிருப்பது ஈண்டுநடவாது என்னுங்கருத்தால் விடைகளெல்லாம் நடவாதென்றாரெனலுமாம். கஉஉ

ஆட்டுத்தலைவர்நீரொற்றியழகிரதனாற்சிறுவிதிக்கோ
ராட்டுத்தலைதந்தீரென்றேனன்றலறவோரறம்புகல
வாட்டுத்தலைமுன்கொண்டதனாலஃதேபின்னரளித்தாமென்
றீட்டுத்தரமீந்தருள்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றி அழகிர் நீர் ஆட்டு தலைவர்—ஒற்றியில் வாழும் சுந்தரராகிய நீர் ஆட்டுக்குத்தலைவர்; அதனால் சிறுவிதிக்கு ஓர் ஆட்டுத்தலை தந்தீர் என்றேன்—அதனாலே சிறுவிதியாகிய தக்கனுக்கு ஒரு ஆட்டுத்தலையை யளித்தீர் என்றனன்; அன்று அறவோர் அறம்புகல ஆட்டு தலைமுன் கொண்டதனால் — (யாகஞ்செய்தவன்று ததீசி முனிவராதியர் தருமோபதேசஞ் செய்ய அதனைச் செவிசாய்த் துணராது) எள்ளுதலோடு ஆட்டுத்தலையுடையனாய் முன்னிருந்தமையால்; அஃதே பின்னர் அளித்தாம் என்று—அவ்வாட்டுத்தலையே அவனுக்கு உரியதென்று பின்பு தந்தோமென்று; ஈட்டு உத்தரம் ஈந்தருள்கின்றார் — எதிராக விடையளிக்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) ஆட்டு - நடனம்; ஆட்டு ஈட்டு முதனிலைத்திரிந்த தொழிற் பெயர்கள். ஆட்டுத்தலையனுன அவனுக்கு ஆட்டுத்தலையே யுரித்தென்று தங் தோமென்று தலைவிகூறிய சொல்லையே மறித்துக் கூறினாராதலால், ஈட்டு உத்தரம் என்றாள். ஆட்டுத்தலை - ஆட்டுதலைச்செய்யுந்தலை, ஆட்டினது தலை எனப்படும். ஆல் - அசை. ௧௨௩

ஒற்றிப்பெருமானுமைவிழைந்தாரூரில்வியப்பொன் றுண்டிரவிற்
கொற்றக்கமலம்விரிந்தொருகீழ்க்குளத்தேகுமுதங்குவிந்ததென்றேன்
பொற்றைத்தனத்தீர்நுமைவிழைந்தார்புரத்தேமதியந்தேய்கின்ற
தெற்றைத்தினத்துமென்கின்றாரிதுநான்சேடியேன்னேடீ.

(இ-ள்.) ஒற்றி பெருமான் உமை விழைந்தார் ஊரில் வியப்பு ஒன்றுண்டு—ஒற்றி நாயகரே! உமை விரும்பினவர் ஊரில் அதிசயம் ஒன்றுண்டு; இரவில் கொற்றம் கமலம் விரிந்து ஒரு குளத்துக்கீழே குமுதம் குவிந்தது என்றேன்—இரவில் குவியவேண்டிய சிறந்த கமலம் விரிந்து ஒரு குளத்தின்கீழே குமுதம் குவிந்ததென்றனன்; பொற்றை தனத்தீர் — மலைபோலும் முலையையுடையீர்; நுமை விழைந்தார் புரத்தே எற்றை தினத்தும் மதியம் தேய்கின்றது என்கின்றார் — உம்மை விரும்பினர் புரத்தில் எத்தினத்தும் மதியம் தேயாநின்றது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) இதில் நுமை விழைந்தார் புரத்தில் இரவில் மதி தேய்தலால் உமை விழைந்தார் புரத்தில் இரவிற் கமலம் விரிந்து குமுதம் குவிந்ததென்பது நயம். இனித் தியாகேசரே! நுமை விழைந்தாரூரில் இரக்கக் கைவிரிந்தும் கேட்கநாணி வாய்குவிந்தது வியப்பென்னலும், பெண்ணே! நீவிர் மலைபோலுந் தனத்திராகவும் நும்பால் இரக்க விரும்பினர்புரத்தில் இரக்க அறிவேசுருங்குகின்றது, ஈது அதிவியப்பென்கின்றாரெனினும் அமையும். அன்றி, தியாகேசராகிய உமைவிழைந்த ஆரூரில் உமது தாட்டாமரை நம்பியாரூரர் பொருட்டுத் தூது செல்லுதற்கு விரிய, வாய்க்குமுதம் இதமுறைக்கக் குவிந்ததென்னலும், மதியழகு குன்றலால் இங்ஙனம் கமலம் விரிந்து குமுதம் குவிந்தது என்றாரென்பதும் ஒன்று. இப்பொருட்கு விழைந்த வென்னும் பெயரெச்சத்தகரம் தொக்கதென்க. இரவு - இராத்திரி, யாசகம். கீழ்க்குளமென்பது முன் பின்னாகத் தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. * "கீழ்நீர்ச்செவ்வரும்பு" என்றார் மேலோரும். குளம் - தடாகம், நெற்றி. புரம் - நகரம், சரீரம். தனம் - கொங்கை, திரவியம், மதி-சந்திரன், அறிவு. இவற்றை ஏற்ற பெற்றிகொள்க. மங்கையர் மையலில் மிக்கழுந்துவோர்க்கு அறிவு மழுங்குமென்பது நூற்றுணிபு. இது † "தையலார் மயலிற்பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ" என்பதனானுமறிக. ௧௨௪

* திருமுருகாற்றுப்படை - க-ல், உக. † திருவிளையாடம்புராணம் இந்திரன் பழிதீர்த்தபடலம், ௯.

இடஞ்சேரொற்றியுடையீர்நீரென்னசாதியினரென்றேன்
றடஞ்சேர்முலையாய்நாந்திறலாண்சாதிநீபெண்சாதியென்றார்
விடஞ்சேர்களத்தீர்நும்மொழிதான்வியப்பாமென்றேனயப்பாநின்
னிடஞ்சேர்மொழிதானென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) இடம்சேர் ஒற்றியுடையீர் நீர் என்ன சாதியினர் என்றேன்—இடவிய ஒற்றிப்பதியீர்! நீர் எந்தசாதியினரோ? என்றனன்; தடம் சேர் முலையாய் நாம் திறல் ஆண்சாதி நீ பெண்சாதி என்றார்—பரவிய முலையையுடையாய்! நாம் திறலினையுடைய ஆண்சாதி நீபெண்சாதி என்றனர்; விடம் சேர் களத்தீர் நும்மொழிதான் வியப்பாம் என்றேன்—விடமமைந்த கண்டத்திரே! நுமது மொழிதான் வியப்பாகும் என்றனன்; நின்னிடம் சேர் மொழிநயப்பு என்கின்றார்—நின்னது மொழியோ நயப்புடையது என்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) தலைவி நீர் எச்சாதியரென்றதற்குத் தலைவர் யாம் ஆண்சாதியென்றமட்டிலமையாது நீ பெண்சாதியென்று கவர்பொருள்படவுங்கூறி, அதற்குமேலும் நும்மொழி வியப்பென்றதற்கிணங்க நின்மொழி நயப்பென்றும், நும்மொழி வியப்புடைய தண்ணீரென்னவும்படச் சாற்றியதற்கேற்பத் தாமும் அவ்வாறே நின்மொழிதான் நயப்புடையபால் என்றும் கூறியவாறுங்காண்க. பெண்சாதியென்பது மனைவியெனவும் பொருட்பட்டு வழங்குவது உலகவழக்கு. களத்திரென்பதற்குக் கள்ளத்திரெனலுமாம். ௧௨௫

உடையாரென்பாருமையொற்றியுடையீர்பணந்தானுடையீரோ
நடையாயேற்கின்றீரென்றேனங்காய்நின்போலொருபணத்தைக்
கடையாரெனக்கீழ்வைத்தருமைகாட்டேம்பணிகொள்பணங்கோடி
யிடையாதுடையேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஒற்றியுடையீர் உமை உடையார் என்பார்—ஒற்றிவாணரே! உம்மைப் பொருண்மிக்குடையவர் என்பார் உலகினர்; பணம் உடையீரோ—பணமுடையவர்தாமோ?; நடையாய் ஏற்கின்றீர் என்றேன் — (வீடுகளின் வாயிறோறும்) நடைகொண்டு பிச்சை ஏற்கின்றீரே (இதுவென்) என்றனன்; நங்காய் நின்போல் ஒருபணத்தை கடையார் என கீழ்வைத்து அருமை காட்டேம்—பெண்மணியே! நின்போல ஒருபணம்பெற்று அதை அற்பர்போன்று கீழ்மறைத்துவைத்து அருமைகாட்டேம்; பணிகொள் பணம்கோடி இடையாது உடையேம் என்கின்றார்—பணிகொண்டபணம் (பை) கோடியளவு குறையாது உடையேம் யாம் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) தான் - அசை. உடையாரென உலகர் கூறினும் நீவிர்கடைப் பிச்சை கொள்கின்றமையின் பணமேதேனும் உண்டோவெனத் தலைவி வினவ, நங்கையே! அற்பச்செல்வர்போல ஒருபணத்தைப்பெற்று அதனையும் சீலையின்மறைத்துக் கீழ்ப்புதைத்து நின்போல் அரிதுபாராட்டோம் என்பார், 'பணங்கொள் பணிகோடி இடையா துடையேம்' என்றாரென்பது. பணி-

பணத்தையுடையது. பணம் - காசு, பாம்பின்படம்; இதற்குப் பையென வும் ஒரு பரியாயநாமமுண்மையின் பணிப்பை கோடியுடையேம் என்றுரு மாயிற்று. இடையாதுடையேம், நீவேண்டில் பணிகொள், பணம்கோடி, என்பதொரு நயமும், அருமை யென்பதில் அருமயக்கமென்பதொரு வேறு நயமுங்காண்க. ௧௨௬

என்னாருயிர்க்கும்பெருந்துணையாமெங்கள்பெருமானீரிருக்கு
நன்னாடொற்றியன்றோதானவிலவேண்டுமென்றுரைத்தேன்
முன்னாளொற்றியெனினுமதுமொழிதலழகோதாழ்தலுயர்
விந்நானிலத்துண்டென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) என் ஆர் உயிர்க்கு பெரும் துணையாம் எங்கள் பெருமான் நீர் இருக்கும் நல் நாடு ஒற்றியன்றோ நவிலவேண்டும் என்றுரைத்தேன்—எனது அரிய உயிர்க்குப் பெருந்துணையாகின்ற எம்பெருமானே! நீவிர் அமரும் நல் லநகர் ஒற்றியன்றோ கூறவேண்டுமென்று உரைத்தனன்; முன் நாள் ஒற்றி எனினும் அது மொழிதல் அழகோ—முன்னாளில் ஒற்றியுடையதாயினும் அது இதுபோது எடுத்துக்கூறுவது தகுதியோ?; தாழ்தல் உயர்வு இ நானிலத்து உண்டு என்கின்றார்—தாழ்வும் உயர்வும் இந்த நால்வகைப்பட்ட நிலத்தில் (யாவருக்கும்) உண்டு என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) தான் - அசை. நாடு - ஈண்டுநகர். உயிர்க்குப் பெருந்துணை என்றது, *"என்னிலு மினியானொருவன் னுளன் . . . . இன்னம்பரீசனே" என்ற அருள்வாக்கின்படி. ஒற்றி - ஒற்றியூர், அடகுடைய ஊர். எவ்வூரும் எமதூரேயாகவும் அடைந்த இவ்வூரை விடுத்து அவ்வொற்றியூரைக் குறிப்பது முறையன்றெனவும் வேறு பொருள்பட 'அதுமொழிதலழகன்று' என்றும், செல்வம் ஆறிடுமேடுமடுவும்போல்வதெனவும் பொருள்படத் தாழ்த லுயர்வு 'இந்நானிலத்துண்டு' என்றும் கூறினார். நானிலமென்றது பாலை யொழித்துக் கூறியபடி; அதற்கென வேறு நிலமின்மையின். ஆசிரியர் தொல்காப்பியனார் "மாயோன் மேய காடுறை யுலகமும் - சேயோன் மேய மைவரை யுலகமும் - வேந்தன் மேய தீம்புன லுலகமும் - வருணன் மேய பெருமண லுலகமும் - முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச் - சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்றருளியதூஉ முணர்க. ௧௨௭

பெருந்தாரணியோர்புகழொற்றிப்பெருமானிவர்தம்முகநோக்கி
யருந்தாவமுதமனையீரிங்கடுத்தபரிசேதறையுமென்றேன்
வருந்தாதிங்கேயருந்தமுதமனையாளாகவாழ்விநீனாடு
மிருந்தாயடைந்தேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பெரும் தாரணியோர் புகழ் ஒற்றி பெருமான் இவர் முகம் நோக்கி—பெரிய உலகினர் புகழும் ஒற்றிப்பெருமானாகிய இவரது திருமுகத்தைப்பார்த்து; அருந்தா அமுதம் அனையீர்—உண்ணக்கிட்டா அமுது

* தேவாரம், திருவின்னம்பர், ௧. † தொல். பொரு. அகத்தி., ௫.

போலும் அருமையீர் ; இங்கு அடுத்த பரிசு ஏது அறையும் என்றேன்— இங்கு வலியவந்த தன்மை என்கருதி இயம்புக என்றனன் ; இங்கே வருந்தாது அருந்தமுதம் அனையாளாக வாழ்வினோடும் இருந்தாய் அடைந்தேம் என்கின்றார் — இங்கு யாதொரு வருத்தமின்றி அருந்தக்கூடிய அமுதம் போல்பவளாய் நல் வாழ்வினோடு நீ இருந்தனை ; ஆதலினால் யாம் வந்தேம் என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) தம் - சாரியை. அருந்தாத அமுதமென்று தலைவிகுறிப்புக் கேற்பத் தலைவர் அருந்தும் அமுதம் அனையாளாகவென்றும், அமுதமருந்தும் மனையாளாகவென்றும் பொருள்படக்கூறிப் பெண்ணே ! நீ வருந்தாது அநுபவிக்கும் மனைவியாதற்கே இருந்தாயாகையால் ஈங்கடைந்தோம் என்றருளியவாறு. அன்றி, யாமோ அமுதமருந்தாத வீட்டையுடையோம், இதனை நீ நம்மைவிளித்த வாக்கியமே இனிதுணர்த்தும் ; நீயோ அமுதமருந்தும் வீட்டையுடையவளாய் வாழ்வோடிருக்கின்றாய், ஆகலின் பசிப்பிணிகளைய அடைந்தேம் என்னலும் ஒன்று. இதில் தலைவியாற் பெறுதற்கரியவனென் பதுதோன்ற இறைவனை அருந்தா வமுதமென்றும், அவரால் பெறுதற்கெளிய ளென்பதுதோன்றத் தலைவியை வருந்தாது அருந்துமமுதனையாளென்றும் அமைத்த நுணுக்கம் காண்க. அமுதம் - அமிர்தம், சோறு, இன்பம். மனை - வீடு, மனைவி. கஉஅ

செம்மைவளஞ்சூழொற்றியுளீர்திகழாக்கரித்தோலுடுத்தீரே
யும்மைவிழைந்தமடவார்களுடுக்கக்கலையுண்டோவென்றே
னெம்மையறியாயொருகலையோவிரண்டோவனந்தங்கலைமெய்யி
லிம்மையுடையேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) செம்மை வளம் சூழ் ஒற்றியுளீர் திகழா கரி தோல் உடுத்தீரே— செவ்விய வளங்கள் சூழப்பெற்ற ஒற்றிவாணரே! விளக்கமற்ற யானைத்தோலை உடுத்தீரே!; உம்மை விழைந்த மடவார்கள் உடுக்க கலை உண்டோ என்றேன்— உம்மைக்காதலித்த மங்கையர் உடுப்பதற்கு (உம்மால் அவருக்குத்தரும்) வத்திரமுண்டோஎன்றேன் ; எம் ஐ அறியாய்—எமது தலைமையை நீ ஒன்று மறியாய் ; மெய்யில் இம்மை ஒருகலையோ இரண்டு (கலையோ) அனந்தங்கலை உடையேம் என்கின்றார்—நமது மேனியில் இவண் ஒருகலையா ? இரண்டுகலையா ? அனந்தகலையை உடையேம் என்கின்றனர் ; ஏடி சேடி இது ஏன் ? எ-று.

(வி-ரை.) திகழாத என்பதில் ஈற்றகரந்தொக்கது. கரித்துணியுமில்லாமல் கரித்தோலுடுத்தீரே நுமை விழைந்தமடவார் உடுப்பதற்கு அத்தோலேயோ அல்லது கலையுண்டோ என்று வினவினேனாக; இவர் ஏனைக்கடவுளர் பதினாறு அறுபத்துநான்கு ஆயிரத்தெட்டு என்றிவ்வாறு அம்சங்கள் படைத்திருப்பது போல உமக்குமுண்டோ என்றதாகவுட்கொண்டு, பெண்ணே! ஆயிரங்க திர்களையுடைய சூரியனும் எமது கலையில் கோடியிலொருகூறுபெற்று உலகை

விளக்குவானானல் எமதுகலை அளவிடத்தக்கனவோ என்பார் அனந்தமென்று ரென்பது. கலை சாத்திரங்களுமாம். கரித்தோலென்பது கருநிறத்தோல், யானைத்தோல், வேறு ஆடையில்லாமை குறிப்பிப்பதற்குக் கரியாக (சாக்ஷியாக) உடுத்ததோல் எனவும்; மடவாரென்பது இளமங்கையர் அறியாமையுடையவரெனவும்; கலையென்பது ஆடை, அம்சமெனவும்; மெய்யிலுடையோமென்பது உள்ளபடியுடையோம், திருமேனியிலுடையோ மெனவும்; பொருள்பட்டு இரட்டுறமொழிதலாயின. விழைந்தமடவார் கலையெல்லாம் கவர்ந்து வருகின்றீரே அவர் சீலை முற்றும் ஈண்டு உண்டோவென்ன எமதியல் அறியாத நினதொருகலைமட்டோ அவர்தம் அனந்தங்கலைகளுமுடையே மென்றுரென்றும், கரித்தோலுடுத்தீரே கலையுண்டோவென்ன, அனந்தங்கலைகளைக் கொண்டமெய்யில் இம்மையுடையோம் என்றுரென்றும் கோடலும் அமையும். இப்பொருட்கு, உடுக்கு - சீலை. கலை - மான். ஏமை - ஆடு என்க. கஉகூ

கற்றைச்சடையீர்திருவொற்றிக்காவலுடையீரீங்கடைந்தீ
ரிற்றைப்பகலேநன்றென்றேனிற்றையிரவேநன்றெமக்குப்
பொற்றைத்தனத்தாய்கையமுதம்பொழியாதலர்வாய்ப்புத்தமுத
மிற்றைக்களித்தாயென்கின்றாரிதுதானென்சேடியென்னேடீ.

(இ-ள்.) கற்றை சடையீர் திருஒற்றி காவலுடையீர் ஈங்கு அடைந்தீர்—நெருங்கிய சடைமுடியீர்! திருஒற்றிநகரையாள்வீர்! இங்கு எழுந்தருளினீர் ஆகலின்; இற்றை பகலே நன்று என்றேன்—இன்றையதினமே எனக்கு நல்ல வாய்ப்பாகியதினம் என்றேன்; பொற்றை தனத்தாய் எமக்கு இற்றை இரவே நன்று—மலைபோலும் தனமுடையவளே! எமக்கு இன்றிரவே நன்றாயிற்று; கை அமுதம் பொழியாது அலர்வாய் புத்தமுதம் இற்றைக்கு அளித்தாய் என கின்றார்—கையிற் கொணர்ந்த அன்னத்தையிடாமல் அலர்ந்த வாயிற்றோன்றிய புதிய அமுதத்தை இன்றளித்தாய் ஆதலால் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) தேவரீரது வருகையைப்பெற்ற இற்றைப்பகலே நற்பகலாயிற்று என்ற தலைவிமகிழ்வைத் தாமுமேற்று நீ வாயமுதுதந்த இற்றையிரவே நமக்குச் சுபதினமாயிற்றென்றார் என்க. இனி, பிச்சைக்கு வந்தானுக்குப் பெண்டு கிடைத்ததுபோலக் கையமுது ஏற்கவந்த நமக்கு வாயமுது கிடைத்தமையின் இற்றையிரவே நன்றென்றார் என்பதுமொன்று. இரவு - இராத்திரி, யாசகம். தனம் - திரவியம், கொங்கை. கையமுதம் - கைக்குமமுதம், சிறுமையமுதம், கைச்சோறுமாம். வாயமுதம் - வாயிற்சுரக்கும் ஊறற்றேன், இனிய மொழியுமாம். அலரிற்குடிகொண்ட புதியவமுத மென்பதொரு நயமுங் காண்க. கங0

கற்றீரொற்றீர்முன்பொருவான்காட்டிற்கவர்ந்தோர்நாட்டில்வளை
விற்றீரின்றென்வளைகொண்டீர்விற்கத்துணிந்தீரோவென்றேன்
மற்றீர்க்குழலாய்நீயெம்மோர்மனையின்வளையைக்கவர்ந்துகளத்
திற்றீதணிந்தாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** கற்றீர் ஒற்றீர் முன்பு ஒரு வான் காட்டில் வளை கவர்ந்து ஓர் நாட்டில் விற்றீர்—பலவுங்கற்றவரே! ஒற்றிப்பதியீரே! முற்காலத்து ஒப்பற்ற பெரிய தாருகாவனத்தில் முனிமங்கையர் கைவளைகளைக்கவர்ந்து ஒப்பற்ற மதுரைநாட்டில் செட்டிமங்கையருக்கு விற்றுள்ளீர்; என் வளை கொண்மடீர் விற்கத் துணிந்தீரோ என்றேன்—எனது கைவளைகளையும் இன்றுகொண்மடீர் இவற்றையும் விற்கத்துணிந்தீரோ? என்றனன்; ஈர் குழலாய் நீ எம் ஓர் மனையின் வளையை கவர்ந்து களத்தில் அணிந்தாய் ஈது என்கின்றார்—குளிர்ச்சியுடைய குழலினையுடையாய்! நீ எமது ஒரு மனைவியின் கைவளையைக்கவர்ந்து கண்டத்திலணிந்து கொண்டனை (இதுமிக்க) ஈது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-து.)** மிகக்கற்றவரே! முன் வளைகவர்ந்து விற்றீர், இன்றும் என்வளை கொண்மடீர் உமதுபதி ஒற்றியாயிருத்தலால் அது மீட்டுதற்பொருட்டு இவ்வளைகளையும் விற்கத்துணிந்தீரோ? (இக்களவுமிக நன்று) என்றேனாக; இறைவர் நீ எமது மனைவியருள் ஒரு மனைவியாகிய திருமாலின் பாஞ்சசன்னியத்தைக் கவர்ந்து கழுத்தில் மறைத்துள்ளாய் இக்களவுநிதன்றே என்றாரென்பது. ஒற்றியீரென்பது ஒற்றீரெனக்குறைந்து நின்றது. திருமாலும் ஓர் சத்தியாகலின் மனையெனவும், கண்டம் சங்கம்போலுதலின் களத்தணிந்தா யெனவுங் கூறினர். கைவளையைக் கள்ளத்திற் கவர்ந்து அணியுமிடமறியாது கழுத்திலணிந்தீர் ஈது புதுமை யென்னலுமாம். வளைவிற்றமை திருவிளையாடற் புராணத்துணர்க. கரு-க

உடுக்கும்புகழாரொற்றியுளாருடைதாவென்றார்திசையெட்டு
முடுக்கும்பெரியீரொதுகண்டோவுரைத்தீரென்றேன்றிசைமுழுது
மூடுக்கும்பெரியவரைச்சிறியவொருமுன்றானையான்மூடி
யெடுக்குந்திறங்கண்டென்கின்றாரிதுதான்சேடியென்னேமே.

**(இ-ள்.)** உடுக்கும் புகழார் ஒற்றியுளார் உடை தா என்றார்—கும்பத்த புகழினையுடையவர் ஒற்றிப்பதியிலமர்ந்தவர் ஒரு உடையினைத் தருவாய் என்றனர்; திசை எட்டும் உடுக்கும் பெரியீர் ஏது கண்டோ உரைத்தீர் என்றேன்—திசை எட்டினையும் உடையாக உடுக்கத்தக்க பெரியீரோ! என்னிடத்தில் எப்பெருமைகண்டு உடை யாசித்துநின்றீர் என்றனென்; திசை முழுதும் உடுக்கும் பெரியவரை சிறிய ஒரு முன்றானையால் மூடி எடுக்கும் திறம் கண்டு என்கின்றார்—திசைகள் முழுமையும் பரவும் பெரிய மலையைச் சிறிய ஒரு ஆடையின் சிறுமுற்பாகத்தால் மறைத்து எடுக்கத்தக்க நிலைமை நின்பாலிருப்பதைக்கண்டு என்கின்றனர்; ஏடி சேடி இது என்! எ-று.

**(வி-து.)** திசைமுழுதும் பரவிய இரு பெரிய மலைகளை ஒரு முன்றானையால் மறைக்கும் வகைகண்டு நீண்ட ஆடையுடைமை கருதி உடை யாசித்தோம் என்றபடி. உடுக்கும் புகழார் - புகழையே ஆடையாக வுடுத்தவர்; எனவே, கவிந்த பெரும்புகழுடையவரென்பது கருத்து. திசையெட்டும்

உடுப்பது விராட்புருடவடிவத்தில்; இதுபற்றியே திகம்பரரெனத் திருநாமம் போந்தமையும் அறிக. பெரியவரையைச் சிறு முன்றானையால் மூடல் - மார்பிடங்கொண்டு புடைத்த மலைபோலும் முலையை ஒரு சிற்றுடையின் முந்திய சிறுபாகத்தால் மறைத்தல். முன்றானை - சொன்னிலை மாறியபோலி. எடுத்தல் - மறைத்தலேயன்றி அம்மலைகளைத் தாங்கியுநிற்றல். மிக்கபெரியோரையும் முன்றானை வீச்சால் மதிமயக்கி மீட்கும்வகைகண்டு நீ ஆடைவீச்சுடையையாயிருத்தலால் எமக்கும் ஒரு ஆடைதா வென்றேம் என்றானெனலுமாம். கசுஉ

காவாயொற்றிப்பதியுடையீர்கல்லானைக்குக்கரும்பன்று
தேவாய்மதுரையிடத்தளித்தசித்தரலவோநீரென்றேன்
பாவாயிருகல்லானைக்குப்பரிவிற்கரும்பிங்கிரண்டொருநீ
யீவாயிதுசித்தென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) காவாய் ஒற்றிப்பதி உடையீர்—சோலைகள் நாற்புறமும் வாய்க்கப்பெற்ற ஒற்றிப்பதியினையுடையீரே!; மதுரை இடத்து அன்று கல்லானைக்கு கரும்பு தேவாய் அளித்த சித்தர் அலவோ நீர் என்றேன்—மதுரையென்னுந்தலத்தில் அபிடேகபாண்டியன் காலத்திலே கல்லானைக்குக் கரும்பினைத் தெய்வீக முடையராய் எழுந்தருளி அருத்துவித்த சித்தர் அல்லவா? நீவிர் என்றனன்; பாவாய் இரு கல் ஆனைக்கு பரிவில் இங்கு இரண்டு கரும்பு ஒரு நீ ஈவாய் இது சித்து என்கின்றார் — கண்மணிப் பாவைபோல்வாளே! இருகல்லானைக்கு விருப்பத்தோடு இங்கு இரண்டு கரும்பினை நீ ஒருத்தி ஈகின்றனை இது (அதனினும் மிக்க) சித்தன்றோ என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) கா-சோலை. யானை ஆனையென மரீஇயது. பாவை - செய்கைப் பிரதிமையுமாம். ஈவாய் - காலமயக்கம். ஒரு கல்யானைக்கு யாம் ஒரு கரும்பருத்தினேம், நீ இருகல்யானைக்கு இருகரும்பினை அருத்துகின்றாயென்றது வியப்பு. தலைவனைக்கண்டு, விரகத்தால் பூரித்த இருதனங்களையும் இடைபொறாதென இருகரத்தாலும் ஏந்திநின்ற நிலையைக்கண்டு இறைவர் இங்ஙனங் கூறியது. அன்றி, மார்புடன் இருகரஞ்சேர்த்து அஞ்சலித்த நிலையைநோக்கிக் கூறியதுமாம். கரும்புபோலக் கரங்களையும் யானைபோலத் தனங்களையும் உவமிப்பதுபற்றிக் கல்யானைக்குக் கரும்பருத்துகின்றாயென்றாரென்க. கல் - மலை; எனவே, மலைபோலுந் தோற்றமுடைய யானையென்றவாறு. செம்மணியாதிய கற்கள்பதித்த அணியணிந்த தனமுமாம். கசுங

ஊட்டுந்திருவாழொற்றியுளீருயிரையுடலாஞ்செப்பிடைவைத்
தாட்டுந்திறத்தீர்நீரென்றேனணங்கேயிருசெப்பிடையாட்டுந்
தீட்டும்புகழன்றியுமுலகைச்சிறிதோர்செப்பிலாட்டுகின்றா
யீட்டுந்திறத்தாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஊட்டும் திருவாழ் ஒற்றியுளீர்—உயிர்கட்கு வினைக்கீடாகச் சுக துக்கா நுபவங்களைத் துய்ப்பிக்கும் இலக்குமிவாழும் ஒற்றிநகரீர்!; உயிரை உட லாம் செப்பு இடை வைத்து ஆட்டும் திறத்தீர் நீர் என்றேன்—உயிர்களை உட லென்னும் செப்பினிடையேயிருத்தி அசைப்பிக்கும் திறத்தினையுடையீர் நீவிர் என்றனன்; அணங்கே உலகை இருசெப்பு இடை ஆட்டும் நீட்டும் புகழ் அன்றியும்—அணங்குபோல்பவளே! உலகை இருசெப்பினிடையே ஆட்டு கின்ற எழுதிப்பார்க்கத்தக்க புகழல்லாமலும் (அவ்வுலகை); சிறிது ஓர் செப் பில் ஆட்டுகின்றாய் ஈட்டும் திறத்தாய் என்கின்றார்—சிறியதொரு செப்பினும் ஆட்டுகின்றாயாகலின் அதனாற்பெற்ற வலிமையையும் உடையாய் என்கின் றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து) யாம் ஓருயிரை ஒருடற்செப்பில் ஆட்டுந் திறமுடையோம்; நீயோ? உலகையே இருசெப்பினிடை ஆட்டுவதன்றியும் ஒரு சிறிய செப் பினும் ஆட்டுகின்றாயாகலால், எங்கும் நீட்டிய புகழேயல்லாமல் ஈட்டிய வலி மையையும் எம்மினும் ஒருங்கு உடையையென்று விதந்துவிளம்பியபடி. இரு செப்பிடை ஆட்டுதலாவது - செப்புப்போலும் இருதனங்களினிடையே சிக் குண்டு சலிக்கச்செய்தல். சிறியதோர் செப்பில் ஆட்டலாவது - சிறியதொரு சொல்லால் மயக்கிச் சலிக்கச்செய்தல். இருசெப்பை அந்தரமாகிய இடை மேல் ஆட்டுதலன்றியும் உலகை ஒருசெப்பில் ஆட்டுகின்றாய் என்னலும் ஒன்று. உலகென்றது ஈண்டுயிர்களை. செப்பு - சிமிழ், சொல், தனம்; செப்பு சொல்லை யுணர்த்தும்வழி தொழிலாகுபெயராகவும், தனத்தையுணர்த் தும்வழி உவமவாகுபெயராகவுங்கொள்க. இடை - மத்தி, நுசுப்பு; ஏழனு ருபுமாம். நீட்டுதல் - பரப்புதல். கஈசு

கந்துவனஞ்சூழொற்றியுளீர்கண்மூன்றுடையீர்வியப்பென்றேன்
வந்தவெமைத்தான்பிரிபோதுமற்றையவரைக்காண்போதுஞ்
சந்தமிகுங்கண்ணிருமூன்றுந்நான்கொன்றுந்தானடைந்தா
யிந்தவியப்பென்னென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கந்தம் வனம் சூழ் ஒற்றியுளீர் கண் மூன்று உடையீர் வியப்பு என்றேன்—மணமல்கிய பொழில் சூழ்ந்த ஒற்றி நகரிலுள்ளவரே! திரிநேத் திரமுடையீர்! ஈது வியப்பென்றனன்; வந்த எமை பிரிபோதும் மற்றைய வரை காண்போதும்—உனது முன்னிலைப்பட்ட எம்மை நீ பிரியும்போதும் (எம்மையன்றிப்) பிறரைக்காணும்போதும்; சந்தம் மிகும் கண் தகும் இரு மூன்றும் நான்கு ஒன்றும் அடைந்தாய் இந்த வியப்பு என் என்கின்றார்— அழகுமிகுந்த நினது இருகண்களும் (முறையே) தக்க ஆறுகண்களும் அஞ்சு கண்களுமாக அடைகின்றாய் இந்த அதிசயம்யாதோ? என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) தான் - அசைகள். அடைந்தாய் - தெளிவுநோக்கிய காலமயக்கு. பிரிபோதும் காண்போதும் கண் இருமூன்றும் நான்கொன்றும் அடைந்தா

யென்றது முறைமிரனிறை. ஆறுகண் - பிரிவாற்றாமையால் ஆறுபோல நீரை யொழுக்கும் அழுகைக்கண். அஞ்சுகண் - அச்சத்தாலும் அருவருப்பாலும் காணுதற்கு அஞ்சுகின்றகண். யாம் எக்காலத்தும் ஒருபடித்தாக மூக்கண்களே யுடையோமாகையால் இது வியப்பன்று; நீ அவ்வக்காலங்களுக்கியைய ஆறுகண்களும் அஞ்சுகண்களும் உடையையாக மாறுபடுகின்றாயாகையால் ஈதே வியப்பென்றவாறு. ௧௯௫

ஆழிவிடையீர் திருவொற்றியமர்ந்தீரிருவர்க்கசமகிழ்வான்
வீழியதனிற்படிக்காசுவேண்டியளித்தீராமென்றேன்
வீழியதனிற்படிக்காசுவேண்டாதளித்தாயளவொன்றை
யேழிலகற்றியென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** ஆழி விடையீர் திருஒற்றி அமர்ந்தீர் இருவர்க்கு அசம் மகிழ்வான் வீழி அதனில் படிக்காசு வேண்டி அளித்தீர் ஆம் என்றேன்—கடலிலுறங்கும் இடபமுடையீர்! ஒற்றிநகரமர்ந்தீர் ஆளுடையபிள்ளையாரும் ஆளுடையவரசும் உள்ளங்களிகொள்ளுமாறு திருவீழிமிழலையென்னும் திருப்பதியில் படிக்காசினை (அவர்வேண்டாதிருக்கவே) நீர்வேண்டி அளித்தீராம் என்றனனே; வீழியதனில் அளவு ஒன்றை ஏழில் அகற்றி படிக்காசு வேண்டாது அளித்தாய் என்கின்றார்—(மங்கையே! நீ) வீழி என்பதனில் மாத்திரையொன்றை எழுவாயில் அகற்றிப் படிக்காசு வேண்டாதிருக்கவே அளித்தனை என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-ரை.)** திருப்பாற்கடலிலமரும் திருமாலாகிய இடபமென்பார், ஆழிவிடையென்றார்; சக்கரப்படையேந்திய இடபமெனலுமாம். படிக்காசு - படிச்செலவிற் குபயோகப்படுங்காசு, அல்லது படியில் வைக்கப்பட்ட காசு எனப்பொருள்படும். எழுவாயென்பது விகுதிகுன்றிப் பகுதிநீண்டு இல் லென்னும் ஏழனுருபு புணர்ந்து ஏழிலென்றாயிற்று என்க. எழுவாயென்பது வீழியென்னும் ஈரெழுத்துள் முதலெழுத்தைச் சுட்டிநிற்றலால் அதில் ஒரு மாத்திரைகுறைக்க விழியென்றாகும். ஆகவே, விழியினால் இப்பூமியிலுள்ளார்க்குத் துன்பத்தை அவர்வேண்டாதிருக்கவே நீ வலிய அளித்தாயென்று எதிரியம்பியபடி. படி - ஆகுபெயர். ஏழில் என்பதில் ஒருமாத்திரைகுறைத்து எழிலெனக்கொண்டு, விழிக்கனிபோலும் அதரத்தினால் எழிலகற்றிப் படிக்கு ஆசளித்தாய் எனினுமமையும். ௧௯௬

உற்றவிடத்தேபெருந்துணையாமொற்றிப்பெருமானும்புகழைக்
கற்றவிடத்தேமுக்கனியுங்கரும்புமமுதுங்கயவாவோ
மற்றவிடச்சீரொன்னென்றேன்மற்றையுபயவிடமுமுத
லெற்றவிடமேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

**(இ-ள்.)** உற்ற இடத்தே பெருந்துணை ஆம் ஒற்றிபெருமான்—(ஆபத்து) சேர்ந்தகாலத்திலே (அன்பர்க்குப்) பெரியதுணையாகி அருள்புரிகின்ற திருவொற்றி நகர்ப்பெருமானே!; உம் புகழை கற்றவிடத்து முக்கனியும் கரும்

பும் அமுதும் கயவாவோ—தேவரீர் சீர்த்தியைப் பயின்று உச்சரிக்கப்பெறின் (அந்நாவிற்கு) முக்கனியும் கரும்பும் அமுதுமாகிய இவற்றின்சுவைகளும் கசக்கமாட்டாவோ? (கசக்குமன்றே: அங்ஙனம்கசக்குமாயின்); மற்ற இடம் சீர் என் என்றேன்—மற்றையிடங்களின் புகழ் என்னசிறப்புடைத்து என்றனன்; மற்றை உபயம் இடமும் முதல் எற்று அவ்விடமே என்கின்றார்—ஏனை மேல்கீழென்னும் அவ்வீரிடங்களும் முதலெழுத்தைப்போக்கிய அவ்விடங்களே என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-த.) கற்றலென்பது தன்னோடு தன்சாரியமாகிய உச்சரித்தலையும் குறித்துநின்றது. இடத்து - வினையெச்சவிகுதி. முக்கனி - வாழை மா பலா இவற்றின்கனிகள். ஓகாரம் விருப்பொருட்டு. (கசக்குமன்றே: அங்ஙனம் கசக்குமாயின்) என்பது இசையெச்சம். மேலேழும் கீழேழுமாகிய பதினான்குலகமுந் தழுவ வுபயவிடமென்றார். அதன் முதலெழுத்தை நீக்கியவிடம் பயவிடம்; எனவே, ஏனையிடங்களெல்லாம் பயம்விளைக்கும் இடங்களேயாகலின், அந்த இடங்களின் சீர்த்திகளும் பயம்விளைக்கும் விடம்போல்வதே என்றிசைத்தவாறாயிற்று. இடத்திலுள்ளார் சீர் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்டது; இவ்வாறு உலகவழக்கிலும் மிக்குப் பயின்றுவருதல்காண்க. பயவிடமென்பது இரட்டுறமொழிதலாய் நின்றது. ௧௩௭

யான்செய்தவத்தின்பெரும்பயனேயென்னாரமுதேயென்றுணையே
வான்செயரசேதிருவொற்றிவள்ளால்வந்ததென்னென்றேன்
மான்செய்விழிப்பெண்ணேநீயாண்வடிவானதுகேட்டுள்ளம்வியந்
தேன்கண்டிடவேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) யான் செய் தவத்தின் பெரும்பயனே—யான் பூர்வசனனங்களிற் செய்த தவத்தின் பெரும்பயனாய் வாய்த்தவரே!; என் ஆர் அமுதே—எனது ஐம்புல அனுபவத்திற்குத் தெவிட்டாத அமுதுபோல்பவரே!; என் துணையே—எனக்கு எழுமைக்கும் தோன்றாத் துணையாயவரே!; வான்செய் அரசே—சிதாகாசத்திற் பேரரசுபுரிபவரே!; திருவொற்றி வள்ளால்—திருஒற்றியூரில் வாழும் தியாகப்பெருமானே!; வந்தது என் என்றேன்—என்னை நாடிவந்தது எதுகருதியோ? என்றனன்; மான்செய் விழி பெண்ணே நீ ஆண்வடிவானது கேட்டு உள்ளம் வியந்தேன் கண்டிடவே என்கின்றார்—மான்போலும் விழிகளையுடைய மங்கையே! நீ ஆண்வடிவானதுகேட்டு யான் உள்ளம் வியந்தேனாய் உன்னைக் கண்டிடவே வந்தது என்கின்றார்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-த.) வியந்தேன் - முற்றெச்சம். மான்செய் - இதில் செய் உவமவுருபு. நீ ஆண்வடிவானதுகேட்டு வந்தோம் என்பது - நீ வியந்த விசேடங்கட்குத் தக்கவாறின்றி நமக்குரிய சர்வசுதந்தரத்தில் பங்குகொண்டு புருஷாகாரியாய் நின்ற சுவதந்திரத்தை அறியவேவந்ததென்று பேருரையும், ஆணிற் சிறந்த வடிவழகனுக்குரிய நம்பியென்னும் பெயரை நீயும்பெற்றுள்ளாயாக

லின் இதுகேட்டுக் கண்டிடவந்தது என்று சிற்றுரையும் தருவதோர்க. ஈண்டு நம்பியென்பதற்கு நம்புதலுடையவள் என்பதுபொருள்.

கஙஅ
கருணைக்கடலேயென்னிரண்டுகண்ணே முக்கட்கரும்பேசெவ்
வருணப்பொருப்பேவளரொற்றிவள்ளன்மணியேமகிழ்ந்தனையத்
தருணப்பருவமிஃதென்றேனிறவிரன்றெனக்காட்டியதுன்ற
னிருணச்சளகமென்கின்றரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கருணை கடலே—கருணையைக் கடல்போலுடையவரே!; என இரண்டு கண்ணே—எனது இருகண் மணிபோலும் அருமையுடையவரே!; முக்கண் கரும்பே—முக்கண்களையுடைய கரும்புபோல்பவரே!; செம்மைவருணம் பொருப்பே—செவ்வண்ணச் சிலம்பே; வளர் ஒற்றி மணி வள்ளலே—வளங்கள் வளரப்பெற்ற ஒற்றிநகரத்து மாணிக்கத்தியாகரே!; மகிழ்ந்து அனைய இஃது தருணம் பருவம் என்றேன்—என்னை மகிழ்ச்சியோடு அணைதற்கு இது தருணமாகும் (சமயம்) என்றனன்; தவிர் அன்று என—இவ்வாறு கூறுவது ஒழி இதுதருணப்பருவம் அன்று என்று; உன்றன் இருள் நச்சு அளகம் காட்டியது என்கின்றார்—உனது இருளும்விரும்பும் கருமளகமே (இப்போது வெண்ணிறத்ததாய்ப் பிரவிடைஅன்றி விருத்தையே நீ எனக்) காட்டுகின்றது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) கருணைக்கடல் என்பதைக் கருணையாகிய கடலெனப் பண்புத்தொகையாகவாவது, கடல் கருணை எனமாற்றிக் கடல்போலுங் கருணையையுடையவரென உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகவாவது, கருணையையுடைய கடல்போல்பவர் என இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாகவாவது கொள்க; மிக்க கருணையுடையவரென்பது திரண்டபொருள். செவ்வண்ணப்பொருப்பு என்பது சோணசைலமுமாம். தலைவி எனையணைய ஈது தருணம் (சமயம்) என்றதைப் பருவப்பெயராக்கி, அத்தருணப்பருவமுடையளல்லளென்பதை உன் அளகமே காட்டாநின்றதென்றாரென்க. பெண்களுக்குப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற ஏழுபருவமேயன்றி, ஆடவர்க்கு வகுக்கும் பால்ய யவ்வன கௌமார வார்த்திகமென்னும் பருவம்போலப் பதினாறுவயதுவரையும் பாலையென்றும், முப்பதுவயதுவரையும் தருணியென்றும், ஐம்பத்தைந்து வயதுவரையும் பிரவிடையென்றும், அதற்குமேல் விருத்தையென்றும் வழங்குவதும் உண்டு.

கஙகூ
காவிக்களங்கொள்கனியேயென்கண்ணுண்மணியேயணியேயென்
னாவித்துணையேதிருவொற்றியரசேயடைந்ததென்னென்றேன்
பூவிற்பொலியுங்குழலாய்நீபொன்னினுயர்ந்தாயெனக்கேட்டுன்
னீவைக்கருதியென்கின்றரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) காவி களம் கொள் கனியே—கருங்குவளை மலர்போலும் கண்டமுடைய கனிபோல்பவரே!; என் கண் உள்மணியே—எனது கண்களுள்

அமரும் கருமணிபோல்பவரே!; அணியே—எனது அணிபோல்பவரே!; என் ஆவி துணையே—எனதுயிர்க்குத் துணையே!; திரு ஒற்றி அரசே—திருவொற்றியூருக்கு அரசராயினவரே!; அடைந்தது என் என்றேன்—தேவரீரெழுந்தருளியது எதை யுத்தேசித்து என்றனன்; பூவில் பொலியும் குழலாய் நீ பொன்னின் உயர்ந்தாய் என கேட்டு உன் ஈகை கருதி என்கின்றார்—பூவாற்பொலிவடைந்த கூந்தலுடையாய் நீ பொன்னின் உயர்வடைந்துள்ளாயெனக்கேட்டு உனது ஈகையை நாடிவந்தனம் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) காவி களங்கொள்களி கண்மணி என்றிவ்வாறு திருமால் நிறமாகியசுட்டியுந் தலைவிகூறினமையால், தலைவரும் நீயும் இலக்குமி போல்வையென்பார், 'பொன்னினுயர்ந்தாய்' என்றார். ஈகை-கலவியின்பநல்கல். ஈகை-என்பதற்கு வேளாண்மை எனப் பரியாயநாமமுண்மையின், வேளினது ஆண்மைக்கஞ்சி உனையணைந்தேமென்றும் பொருளாதல் உணர்க. 'ஒற்றிநகர்க்கரசே' என்றும் விளித்தாளாகலின், நீ பொன்னினுயர்ந்தா யெனக்கேட்டு நின்னால் அவ்வொற்றிநகரை மீட்கவேண்டி நினது ஈகையை விரும்பிவந்தனமென்றாரென்னலுமாம். ௧௪௰

கண்ணுமன முங்களிக்குமெழிற்கண் மூன் றுடையீர்கலையுடையீர்
நண்ணுந்திருவாழொற்றியுளீர்நடஞ்செய்வல்லீர்நீரென்றேன்
வண்ண முடையாய்நின்றனைப்போன்மலர்வாய்நடஞ்செய்வல்லோமோ
வெண்ணவியப்பாமென்கின் றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கண்ணும் மனமும் களிக்கும் எழில் கண் மூன்று உடையீர் கலையுடையீர்—கண்ணும் மனமும் களிக்கத்தக்க அழகமைந்த கண்கள் மூன்றுடையீர் சந்திரகலையுடையீர்!; திருவாழ் நண்ணும் ஒற்றியுளீர் நடம் செய் வல்லீர் நீர் என்றேன்—இலக்குமிவாழ்கின்ற நிலைபெற்ற ஒற்றிப்பதியீர் நடனமாட வல்லீர் நீவிர் என்றனன்; வண்ணம் உடையாய் நின்றனைப்போல் மலர்வாய் நடம் செய் வல்லோமோ எண்ண வியப்பு ஆம் என்கின்றார்—அழகை யுடையவளே! நின்னைப்போல மலர்ந்த வாயால் நடனஞ்செய்ய (யாம்) வல்லோமோ? இதை எண்ணுங்கால் மிகவியப்பு விளையாநின்றது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) எனவே, யாம் உள்ளபடி நடனமாடவல்லோம், உன்னைப்போல் வாய்நடமாடவல்லோமோ என்று இகழ்ந்தபடி. வாய்நடம் - வாயாடல்; அஃதாவது வாயால் எடுப்புரைகூறல். செய்யென்பகுதிகள் செயவென்னும் வினையெச்சப்பொருள் தந்துநின்றன; முதனிலைத்தொழிற்பெயர்களுமாம். கலையுடையீரென்பதற்கு மான்றோலுடையீர் அவிழ்ந்த ஆடையுடையீர் வேதாகமாதிகலைகளையுடையீரென்றும்; வண்ணமுடையாயென்பதற்கு அழகே உடையாயமைந்தவள், எனவே வேறு உடையில்லாதவள் அழகுசிதையப்பெறாதவள் என்றும் பொருள்கோடலும் அமையும். உடையாமை - சிதையாமை,

தாங்கும்விடைமேலழகிரொன்றன்னைக்கலந்துந்திருவொற்றி
யோங்குந்தளியிலொளித்தீர்நீரொளிப்பில்வல்லராமென்றேன்
வாங்குநுதலாய்நீயுமெனைமருவிக்கலந்துமலர்த்தளியி
லீங்கின்றொளித்தாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தாங்கும் விடைமேல் அழகீர் என்றன்னை கலந்தும் திருஒற்றி ஓங்கும் தளியில் ஒளித்தீர் நீர் ஒளிப்பில் வல்லீர் ஆம் என்றேன்—தாங்கத் தக்க இடபவாகனத்தி லமரும் அழகரே! என்னை அணைந்திருந்தும் திருவொற்றியூரில் ஓங்கியுள்ள கோயிலில் ஒளித்தீர் நீவிர் ஒளித்தலில் மிக்க வல்லீராம் என்றனன்; வாங்கும் நுதலாய் நீயும் எனை மருவி கலந்தும் மலர் தளியில் ஈங்கு இன்று ஒளித்தாய் என்கின்றார்—வளைந்த நெற்றியையுடையாய்! நீயும் என்னைச்சேர்ந்துகலந்தும் மலர்க்கோயிலில் ஈண்டு இன்று ஒளித்தனை என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) என்னை யணைந்திருந்தும் ஒற்றியுள்ள (தூரத்ததாகவுள்ள) கோயிலில் ஒளித்தீரோ என்றது தலைவிக்கு, நீயும் என்னை மருவியிருந்தும் மலர்த்தளியில் ஒளித்தாயென்றுரொன்க. மலர்த்தளி - ஈண்டு மனக்கமலம்; என்னுள்ளாலொளித்தனையே என்றபடி. தளி - ஆலயம், நீர்த்திவலை. நீர்த்திவலையில் ஒளித்தீராகலின் நீர் ஒளிப்பில் வல்லீரென்று தலைவி திருமாலெனச் சுட்டிக் கூறியதாக உட்கொண்டு, யாம் நீரிலொளித்தோம், நீ நீரின்முளைக்கும் கமலத்திலொளித்தாய் ஆதலின் நீ இலக்குமிபோல்வாய் என்று வியந்ததுமாம். எனை மருவியிருந்தும் மலர்த்து அளியில் ஒளித்தாய் என்னலும் ஒன்று. அளி - இருவை. சசஉ

அம்மையடுத்ததிருமேனியழகிரொற்றியணிநகரீ
ரும்மையடுத்தோர்மிகவாட்டமுறுதலழகோவென்றுரைத்தேன்
நம்மையடுத்தாய்நமையடுத்தோர்நம்போலுறுவரன்றெனிலே
தெம்மையடுத்ததென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அம்மை அடுத்த திருமேனி அழகீர்—அம்பிகை ஒற்றித்துச்சேர்ந்த திருமேனியையுடைய அழகரே!; ஒற்றி அணி நகரீர் உம்மை அடுத்தோர் மிக வாட்டம் உறுதல் அழகோ என்றேன்—ஒற்றியென்னும் அழகிய நகரமுடையவரே! உம்மை யடுத்தவர் மிகவும் வாட்டமடைதல் சிறப்பாமோ என்றனன்; நம்மை யடுத்தாய் நமை அடுத்தோர் நம்போல் உறுவர்—நம்மைக்காதலித்து அடுத்தவளே! நம்மை அடுத்தவர்கள் நம்மைப்போலவே பொருந்துவர்; அன்றெனில் எம்மை அடுத்தது ஏது என்கின்றார்—அங்ஙனம் பொருந்தாவிடில் எம்மை அடுத்தது ஏது? அடுத்ததில்லை என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-கு.) மிகவாட்டம் என்பதைத் தலைவர் மிக ஆட்டம் எனப்பொருள் கொண்டு, ஆடல்வல்லவரான நம்மை அடுத்தவர் நம்போலவே திரிகேத்திரமாதிய சின்னங்களையுடைய நம்முருப்பெற்று ஆடல்வல்லவராவர்; அங்ஙனம்

ஆகாவிடில் அவர் ஒருபேறும் பெற்றவரன்றாதலால் எம்மையடுத்தவரன்று என்றியம்பியபடி. சாரூபம் பெற்றார்க்குப் பஞ்சகிருத்திய ஆடலில்லையாகையால், ஈண்டுச் சுட்டியவாடல் ஆனந்தமேலீட்டால் நிகழ்வது என்றலு மொன்று. ௧௨௫

உண்கண்மகிழ்வாலளிமிழற்றும் மாறநிநகரீரொருமூன்று
கண்களுடையீரென்காதல்கண்டுமிரங்கீரேனென்றேன்
பண்கொள்மொழியாய்நின்காதல்பன்னாட்சுவைசெய்பழம்போலு
மென்கொண்டிருந்ததென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) கள் உண் மகிழ்வால் அளிமிழற்றும் ஒற்றிநகரீர்—மலர்த்தேன் பருகும் களிப்பால் வண்டுகள் இசைபாடும் (சோலைகளும் நீர்நிலைகளுஞ் சூழ்ந்த) ஒற்றிப்பதியீர்!, ஒரு மூன்று கண்கள் உடையீர் என் காதல் கண்டும் இரங்கீர் என் என்றேன்—ஒரு மூன்று கண்கள் (ஒருசேர) உடையீர் எனது காதற்பெருக்கைக் கண்டும் இரங்கமாட்டீர் ஏதென்னையோ? என்றனன்; பண்கொள் மொழியாய்—பண்ணின் இனிமையைக்கொண்ட மொழியையுடையவளே!; நின் காதல் பல்நாள் சுவைசெய் பழம்போலும் என்கொண்டு இருந்தது என்கின்றார்—உனது காதல் பலநாளும் சுவையைத்தருகிற பழம்போலும் மதிப்பைக்கொண்டிருக்கின்றது என்கின்றனர், ஏடிசேடி இது என்? எ-று.

(வி-ரை.) நின்காதல் நமக்கு நாளும் இன்பந்தருவதொன்றென்பார், 'பலநாளும் சுவைசெய்பழம்' என்றார். பழம்போலும் என் - பழம்போலப் பாராட்டப்படும் மதிப்பு. நின்காதல் இத்தன்மையதாமாயின் யாம் இரங்காதிருக்கக்கடவேமோ? இரங்கிலோமாயின், நின்பால் அடையவேண்டுவதில்லையேயென்பது கருத்து. காதல் - காதலானேர்ந்த மெலிவுமாம். நாள்சுவை நான்சுவையென மரீஇயிற்று, நீளுலகு * நீணுலகு, நள்ளனல் † நண்ணனல் எனமரீஇயினாற்போல. இருந்தது - காலமயக்கம். பலநாளும் சுவையயந்து கொண்டு அழிவில்லாமலிருப்பதொருபழம் இல்லாமையின், இது அபூதவுவமை. சுவை பயப்பதாயினும் அரிதன்றி நாளுநகிடைக்குங்கனியின்கண் காதல் மிகாதவாறுபோல, நின்காதல் நம்பால் விழைவு மிகுதலில்லாதிருத்தலால் இரங்கிலோமென்று குறிப்பித்ததுமாம். பல்நான்சுவைசெயபழம் - பல்கூசும்படி சுவைசெய்யும் புளியம்பழமெனக்கொண்டு, அப்பழம் தோற்றமாத்திரத்தானே கண்டவாக்குப் புனலூறுவிப்பதுபோல, நின்காதலும் எதிர்ப்பட்டார்க்கு விழைவை விளைவிப்பதாய் அப்பழம்போலப் பற்றற்றதாயிருக்கின்றதென்றானெனக் கொள்ளினும் அமையும். ௧௨௬

வணங்கேழிலங்குஞ்செஞ்சடையீரவளஞ்சேரொற்றிமாநகரீர
குணங்கேழ்மிடற்றீராபாலிருளைக் கொண்டீர்கொள்கையென்னென்றே
னணங்கேயொருபாலன்றிநின்போலெம்பாலிருள்கொண்டிடச்சற்று
மிணங்கேமிணங்கேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

---

* திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் - கோயில் (௪) மாணிபரல்.
† சிவஞானபோதம் பத்தாஞ்சூத்திரம் (௫) நண்ணனல்.

**(இ-ள்.)** வணம் கேழ் இலங்கும் செஞ்சடையீர் — நல்லழகும் நன்னிறமும் விளங்கும் சிவந்த சடைமுடியுடையீர் ! ; வளம்சேர் ஒற்றிமாநகரீர் — வளமை செறிந்த ஒற்றிமாநகரத்தீர் ! ; குணம் கேழ் மிடற்று ஓர்பால் இருளை கொண்டீர் கொள்கை என் என்றேன் — நன்னிறமிக்குடைய கண்டத்தின் ஒருபாகமான முற்புறத்தில் கருமையினைக்கொண்டீர் உமது கருத்தென்னையோ ? என்றனன் ; அணங்கே ஒருபால் அன்றி நின்போல் ஐம்பால் இருள் கொண்டிட சற்றும் இணங்கேம் இணங்கேம் என்கின்றார் — தெய்வமாது போல்பவளே ! ஒருபுறமேயன்றி நின்னைப்போல ஐம்பாலில் இருள்கொள்ளும்படிச் சிறிதும் யாம் பொருந்தோம் பொருந்தோம் என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

**(வி-கு.)** அடுக்கு - உறுதிப்பொருட்டு. ஒருபாலில் இருள்கொண்டீர் என்றதற்கு நீ ஐம்பாலில் இருள்கொண்டாயென்றது எதிர்விடை. ஐம்பால் கூந்தல் ; இது முடி கொண்டை சுருள் குழல் பனிச்சையென ஐந்துபிரிவினதாய் முடிக்கப்படுவதால் ஐம்பாலெனப்பட்டது. உச்சியின் முடிப்பது முடி ; பக்கங்கொண்டுமுடிப்பது கொண்டை ; சுருட்டி முடிப்பது சுருள் ; குழல் படப்பின்னே செருகிமுடிப்பது குழல் ; பின்னிவிடுவது பனிச்சையாம். பின்னே செருகிமுடிப்பது சுருளெனவும், சுருட்டிமுடிப்பது குழலெனவும் மாற்றியுரைப்பதும் உண்டு. இருள்கொண்டிருத்தல் - கறுத்தல். ௧௪௫

கரும்பிலினியீரென்னிரண்டுகண்களனையீர்கறைமிடற்றீ
பெரும்பையணியீர்திருவொற்றிப்பெரியீரெதுநும்பெயரென்றே
னரும்பன்முலையாய்பிறர்கேட்கவுறைந்தாலளிப்பீரெனச்சூழ்வ
ரிரும்பொனிலையேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

**(இ-ள்.)** கரும்பில் இனியீர் என் இரண்டு கண்கள் அனையீர் கறைமிடற்றீர் — கரும்பினும் சுவைபயப்பவரே ! எனது இரண்டு கண்மணிகளை ஒப்பவரே ! நீலகண்டரே ! ; பெரும்பை அணியீர் திருஒற்றி பெரியீர் நும்பெயர் எது என்றேன் — பெரியபாம்பை அணியாக உடையவரே ! திருவொற்றியில் வாழும் பெரியீரே ! நுமதுபெயர் எது என்றனன் ; அரும்பு அன்ன முலையாய் பிறர்கேட்க அறைந்தால் அளிப்பீர் என சூழ்வர் — அரும்புபோலும் முலையையுடையாய் ! (எமதுபெயரைப்) பிறர்கேட்கச் சொல்லில் எமக்குக் கொடுப்பீர் என எம்மைச்சூழ்வர் ; இரும் பொன் இலையே என்கின்றார் — (நம்மிடம்) மிகுபொன் இல்லையே என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

**(வி-கு.)** பை - படம் ; சினையாகுபெயராய்ப் பாம்பையுணர்த்திற்று. கரும்பில் - இல் ஐந்தாவது உறழ்பொருளது. அன் - உவமவுருபிடைச்சொல்- அரும்பு - முலைக்குவமை பகரும் தாமரை கோங்கு இவற்றின் அரும்புகள். எமது நாமங்கூறில் அளிப்பீரென்று பிறர்சூழ்வரென்ற குறிப்பால், தமத் நாமம் செம்பொற்றியாகேசரென்பதும், அப்பெயரை வெளியிடிற் சூழுமனி

வர்க்கும் ஈதற்கு மிகுதிரவியம் வேண்டுமேயென்பதும் குறிப்பித்தவாறு யிற்று. இனி, இரும்பொன் நிலையே எனக் கண்ணழித்து, நமக்குரிய மூல பண்டாரமென்னும் ஐசுவரியம் பக்குவிகளடைந் தனுபவித்தற்குரிய நிலையே றுன திரவியமாம்; அதனை அவரல்லாத பிறர் ஈகவெனக்கேட்கின் ஈதற்கிய லாதே என்செய்வதென்கின்று றெனலும் ஒன்று. பிறரென்பது ஈண்டு அப் பேறு பெறுதற்குரியரல்லாதாரை யுணர்த்திற்று. கசஅ

*நிலையைத்தவறுர்தொழுமொற்றிநிமலப்பெருமானீர்முன்ன*
*மலையைச்சிலையாக்கொண்டீர்நும்மாவல்லபமற்புதமென்றேன்*
*வலையத்தறியாச்சிறுவர்களுமலையைச்சிலையாக்கொள்வர்களீ*
*திலையற்புதந்தானென்கின்றாரிது தான்சேடியென்னேடீ.*

**(இ-ள்.)** நிலையை தவறுர் தொழும் ஒற்றி நிமலம் பெருமான்—ஆச்சிரம நிலையைத் தவறுதவர்கள் வணங்கும் ஒற்றியில்வாழும் மலரகிதராகிய பெருமானே!; நீர் முன்னம் மலையை சிலையா கொண்டீர் நும் மா வல்லபம் அற்புதம் என்றேன்—நீவிர் முன்னர் மலையைச்சிலையாகக் கொண்டீர் நுமது மகா வல்லபம் மிக ஆச்சரியம் என்றனன்; வலையத்து அறியா சிறுவர்களும் மலையை சிலையா கொள்வர்கள் ஈது அற்புதம் இலை என்கின்றார்—இந்நிலவுல கில் அறிவறியாச் சிறியவர்களும் மலையைச்சிலையாகவே கொள்வார்கள் இதில் ஆச்சரியம் சிறிதும் இல்லை என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

**(வி-ரு)** வலையமென்றதுபோலி; அது ஈண்டுப் பூமண்டிலம். அத்து - சாரியை. தான் - அசை. மலையை வில்லாகக்கொண்டீரென்று தலைவிகூறத் தலைவர் மலையைமலையாக அல்லது கல்லாகக்கொண்டீரென்றதாக வுட்கொண்டு, ஈது சிறுவரும் அறிந்ததே என்றாரென்பது. மலை பொன்னாயிருக்கினும் பொற்கல் லென்பதே வழக்காதலின் பொதுப்படச் சிலையெனப்பட்டது. கசள

*உதையச்சுடரேயனையீர்நல்லொற்றியுடையீரென்னுடைய*
*விதையத்தமர்ந்தீரென்னேயென்னெண்ணமறியீரோவென்றேன்*
*சுதையிற்றிகழ்வாயறிந்தன்றேதுறந்துவெளிப்பட்டெதிரடைந்தா*
*மிதையுற்றறிநீயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.*

**(இ-ள்.)** உதையம் சுடரே அனையீர் நல் ஒற்றி உடையீர்—உதய சூரியனை ஒத்தவரே! நல்ல ஒற்றிநகரரே!; என்னுடைய இதையத்து அமர்ந்தீர் என்னே என் எண்ணம் அறியீரோ என்றேன்—என்னுடைய இதயத்து அமர்ந்தீர் (அங்ஙனம் அமர்ந்தும்) என்னையோ எனதுகருத்து அறிகிலீரோ? என்றனன்; சுதையில் திகழ்வாய் அறிந்தன்றே துறந்து வெளிப்பட்டு எதிர் அடைந்தாம் — அமிழ்தம்போல விளங்குபவளே! உனது எண்ணம் அறிந்தல்லவா? உனது மனத்தினீங்கிப் புறத்தில் வெளிப்பட்டு எதிரிலடைந்தாம்; இதை நீ உற்றறி என்கின்றார்—இதனை நீ நன்கு குறித்தறிவாய் என்கின்றனர்; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) உதையம் இதையம் - போலிகள். உன் இதயத்தமர்ந்தமையின் உன் எண்ணமுணர்ந்து புறத்துங்காட்சிதந்தனம், இதனை உய்த்துணாதி என்றனர் என்க. எண்ணம் புறக்கலவிவிருப்பு: இதற்கு (யாவரும்) எண்ணத்தக்க என் அழகினை அறியீரோ என்றதாகக்கொண்டு, அறிந்தமையானே நமது வைராக்கியத்தைத் துறந்து வெளிப்பட்டு இப்பிக்ஷைக்கோலங்கொண்டு யாம் இங்குவந்தது என்றுரொனலுமொன்று. நம்மை இக்கோலமாக்கியது உன்னழகே என்றபடி. ௧௪௮

புரக்குங்குணத்தீர்திருவொற்றிப்புனிதரேநீர்போர்க்களிற்றை
யுரக்குங்கலக்கம்பெறவுரித்தருள்ளத்திரக்கமென்னென்றேன்
கரக்குமிடையாய்நீகளிற்றின்கன்றைக்கலக்கம்புரிந்தனைநின்
னிரக்கமிதுவோவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) புரக்கும் குணத்தீர் திருஒற்றி புனிதரே நீர் போர் களிற்றை உரக்கும் கலக்கம் பெற உரித்தீர் உள்ளத்து இரக்கம் என் என்றேன்—சராசரங்களைக் காக்கும் குணத்தவரே! திருவொற்றிப் புனிதரே! நீர் போராடும் யானையை அதும்கக் கலங்குதலைப்பெற உரித்தீர் உமது திருவுள்ளத்தில் இரக்கமிருந்தது என்னை (நன்று) என்றனன், கரக்கும் இடையாய் நீ களிற்றின் கன்றை கலக்கம் புரிந்தனை நின் இரக்கம் இதுவோ என்கின்றார்—தனபாரம் பொறுது வருத்தித் தேயும் இடையினையுடையாய்! நீ யானைக் கன்றை (நடையாற்) கலக்கம் செய்தனை நினது இரக்கம் இதுதானோ? என்கின்றனா; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) புரத்தல் - ஈண்டு அருளின்மேலது; எம்பெருமான் திருமுடிமுதல் திருவடிவரை எவ்வுறுப்பும் பிறாக்கு அருளும் குறிப்பே யுடைமையின், 'புரக்குங்குணத்தீர்' என்றது. இதனை "* இளையும் புனற்செஞ் சடைமுடியுங் கடுவார மிடறு மிளமதியம் - புளையுங் கனலி மருப்பொளிரும் திருமார் பகமும் புலியதள்சூ - ழரையுங் கரியின் றலைமிதித்த வழகார வெங்கையரன்றாளு - நிரையுஞ் சுரர்கண் டுருவனைத்து மருளே யென்று நினைவாரே." என்ற திருவிருத்ததாலுமுணாக. கரத்தல்-தேய்ந்தொளித்தல். யாம் யானையைக் கொன்று கலக்கமுறுவித்தோம், நீ யானைக்கன்றைக் கொல்லாது வதைப்பாரபோல் நடையாற் கலக்கினை, ஆகலின் இதுமிக்க இரக்கமோ? என்று ஏளனஞ்செய்தபடி. யானைக்கன்றுக்குக் களபம் என்றும் ஒரு பெயருண்மையின் களபத்தைக் கலக்கம் செய்தனையே எனலுமாம். களபம் - சந்தனக்கலவை. கலக்கம் - கலத்தல்; (குழைத்தல்.) ௧௪௯

பதங்கூறொற்றிப்பதியீர்நீர்பசுவிலேறும்பரிசுதுதான்
விதங்கூறறத்தின்விதிதானோவிலக்கோவிளம்பல்வேண்டுமென்றே
னிதங்கூறிடுநற்பசுங்கன்றைநீயுமேறியிடுகின்றா
யிதங்கூறிடுகவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

---

* திருவெங்கைக் கலம்பகம், ௯௯.

(இ-ள்.) பதம் கூறு ஒற்றி பதியீர் நீர பசுவில் ஏறும் பரிசுதான்—அருத்தமாக எடுத்துக் கூறத்தக்க ஒற்றிப்பதியீர்! நீர பசுவிலேறியுலாவுந் தன்மையானது; விதம் கூறு அறத்தின் விதிதானோ விலக்கோ விளம்பல் வேண்டும் என்றேன்—பலகூறுபாடாகக் கூறும் அறநூலின் விதியோ? அன்றி விலக்கோ? இதனை இயம்பல் வேண்டும் என்றனன்; கூறிடும் நல் பசு கன்றை நீயும் நிதம் ஏறியிடுகின்றாய் இதம் கூறிடுக என்கின்றார்—சில பிரிவுபட்ட நல்ல பசுக்கன்றை நீயும் நாளும் ஏறுகின்றனை இதற்குத்தக்க மறுமொழி இசைக்க என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) அருத்தமாகக்கூறல் வாச்சியப் பொருளாமெனல். பதம்-அருத்தமென்பதை * "சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க" என்பதனானுணர்க. அன்றிப் பதம் - பக்குவம், மேன்மையுமாம். பதம் என்பதை சினையாகு பெயராக்கி வேதவாக்கியங்கள் கூறுமெனலும் சிறப்பே. பரிசது அது பகுதிப்பொருள்விகுதி. கூறிடுக ஏறியிடுகின்றாய் என்பவற்றில் இடு துணைவினைவிகுதி. எருது என்பதை பசுவென்று ஆளல் கவிமரபு. † "பசுவேறு மெங்கள் பரமன்" என்றார் ஆளுடையபிள்ளையாரும். பசுவிலேறலும் அறமோ என்ற தலைவிக்கு, நீ பசுக்கன்றை இவரலும் அறமோ? என்று கூறியதாம். பசுங்கன்று - பசுமையுடைய கைவளை; ஏறியிடல் என்பதற்கு இவரல் என்ற பரியாயநாமமுண்மையின், இவரல் - விருப்பமெனக்கொண்டு பசுங்கன்றை விரும்புகின்றாய் எனினும் ஒன்று. கூ0

யோகமுடையாபுகழொற்றியூரிற்பரமயோகியராந்
தாகமுடையாரிவாதமக்குத்தண்ணீர்தரநின்றனையழைத்தேன்
போகமுடையாய்புறத்தண்ணீரபுரிந்துவிரும்பாமகத்தண்ணீ
ரீகமகிழ்வினெனென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) யோகம் உடையார் புகழ் ஒற்றி ஊரில் பரம யோகியர் ஆம் தாகம் உடையார் இவர் தமக்கு—சிவயோகமுடையவரால் புகழப்படுகின்ற திருவொற்றி நகரிலமரும் பரமயோகியராகும் நீர வேட்கையுடையராகிய இவருக்கு; தண்ணீர தர நின்றனை அழைத்தேன்—குளிர்ந்த சலங்கொடுத் தற்பொருட்டு உன்னை யழைத்தனன்; போகம் உடையாய் புறம் தண்ணீர் புரிந்து விரும்பேம் — போகமுடையவளே! புறத்தண்ணீரைக் காதலித்து இச்சியேம்; அகம் தண்ணீர் மகிழ்வின் ஈக என்கின்றார—அகத்தண்ணீரை மனக்களிப்பால் நல்கக்கடவை யென்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) பரமயோகியராம் இவர்தமக்கு எனக்கூட்டுக. சனகாதிய யோகிகளெல்லாம் வழிபட அவர்க்கருள்புரிந்து யோகத்தமர்ந்த தலைமையரென்பார், 'பரமயோகியர்', எனவும், இழிந்தவர்க்கு ஈயுமாறுபோலப் புறத்தே நீர்கொண்டுவந்துதரின் விரும்பேம், அகத்தே அன்பினழைத்து ஈகவென்றாரென்பார், 'மகிழ்வினீக', என்கின்றாரெனவும் கூறியவாறு. புறத்தில் அகத்திலென ஏழனுருபுகள் விரிக்க. புறநீரை விரும்பேம், அகத்தே

* திருவாசகம் திருவண்டப்பகுதி. † தேவாரம், வேயுறுதோளி.

யுள்ள தண்ணிய நீர்மைத்தாகிய இன்பந்தருகவென்றாரென்னலும் இயையும். போகம் - பெரும்பாக்கியம்; அன்றி அது உவமவாகுபெயராய் அரவின்படம் போலும் நிதம்பத்தை யுணர்த்திற்றெனக்கொண்டு, விரகதாகந் தணிவான் அவ்வின்ப நல்குதற்குரியதானஞ் சுட்டியதென்னலும், பூர்வ புண்ணியமுடையவர்க்கே அத்தலத்தைப் புகழ்தல் வாய்க்குமென்பதுபற்றி 'யோகமுடையார் புகழொற்றி' எனப்பட்டதென்னலும், யோகம் உடையாதவர், தாகம் உடையாதவர், போகம்உடையாதவள், எனக்கண்ணழித்துப் பொருள்கோடலும் பொருந்தும். ஈண்டுப்போகம் - அரவின்படம்; யோகம் - அதிஷ்டம்; உடையாமை - சிதையாமை என்க. ௧௫௧

வளநீரொற்றிவாணரிவாவந்தார் நின்றார் மாதேநா
முளநீர்த்தாகமாற்றுறுநீருதவவேண்டுமென்றார் நான்
குளநீரொன்றேயுளதென்றேன் கொள்ளேமிடைமேற்கொளுமிந்த
விளநீர்தருகவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நீர் வளம் ஒற்றி வாணர் இவர் வந்தார் நின்றார் —நீர்வளமுள்ள ஒற்றியில் வாழ்பவராகிய இப்பெருமான் என்முன்வந்தனராய் நின்றனர்; மாதே நாம் உளம் நீர் தாகம் மாற்றுறும் நீர் உதவவேண்டும் என்றார் — மாதே! நாம் உள்ளத்திற்கொண்ட நீர்வேட்கையை மாற்றும் நீரை உதவல் வேண்டும் என்றனர்; நான் குளம் நீர் ஒன்றே உளது என்றேன் — யான் குளத்துப்புனல் ஒன்றேயிருக்கிறது என்றனன்; கொள்ளேம் மேல் இடை கொளும் இந்த இளநீர் தருக என்கின்றார் — (நாம் குளநீரைக்) கொள்ளோம் மேலிடத்தைக்கொண்டுள்ள இவ்விளநீரைத் தருக என்கின்றனர்; சேடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) வந்தார் - முற்றெச்சம். மாற்றுறு - உறு துணைவினைவிகுதி. ஆற்றுறுமெனப்பிரித்தலுமமையும். மேலிடைகொள்ளும் இளநீர் - உயர்ந்த (தெங்கின்) இடமாக இருக்கும் இளநீர். உளம் நீர்த்தாகம் - உள்ளத்தின் குணமாகிய விரகதாகம். குளம் - நெற்றி; அது சினையாகுபெயராய் முகத்தை யுணர்த்திற்றெனக்கொண்டு, வடமொழியில் முகமென்பதற்கு வாய் எனவும் பொருளுண்மையின், வாய்நீருண்டெனத் தலைவிகூறத் தலைவர் அதரநீர்ப்பானமொன்றே விழையேம், இடைமேலுள்ள இளநீரும் (தனமும்) தருக என்றாரெனலும் தக்கதே. குளநீர் - வெல்லம் அல்லது சர்க்கரைகலந்த நீருமாம். இதில் (நீர்த்தாகம் உளம்) ஆற்றின் மிக்க நீருதவவேண்டுமென, ஆற்றுநீரின்று குளநீரொன்றே யுளதென்றதொருநயமும், பானகமெனப்படுவது நீர்த்தாகத்தை அறப்போக்காதாகலின் இளநீர் தருக என்றதொருநயமுங் காண்க. ௧௫௨

மெய்ந்நீரொற்றிவாணரிவர்வெம்மையுளநீர்வேண்டுமென்றா
ரந்நீரிலைநீர்தண்ணீர்தானருந்தலாகாதோவென்றேன்
முந்நீர்தனையையனையீரிம்முதுநீருண்டுதலைக்கேறிற்
றிந்நீர்காண்டியென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மெய் நீர் ஒற்றி வாணர் இவர் வெம்மை உள நீர் வேண்டும் என்றார்—உண்மை நிலைமைவாய்ந்த ஒற்றி நிவாசராகிய இவர் வெம்மையுள்ள நீர்வேண்டும் என்றனர்; அ நீர் இலை நீர் தண்ணீர் அருந்தல் ஆகாதோ என்றேன் — அவ்வெந்நீரில்லை தேவரீர் குளிர்ந்த நீரருந்தல் ஒவ்வாதோ? என்றனன்; முந்நீர் தனயை அனையாய் இ முதுநீர் உண்டு தலைக்கு ஏறிற்று — பாற்கடலின் புதல்வியாகிய இலக்குமியை நிகர்த்தவளே! இப்பழைய நீருண்டு சிரசிலேறிற்று; இ நீர் காண்டி என்கின்றார் — இந்நீரை நோக்குவாயாக என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) இம்முதுநீருண்டு தலைக்கு ஏறிற்று என்பது இப்பழையநீரே நமது சடையாற் பருகப்பட்டு நமக்குத் தலைப்பாரமாயிற்று; நின் புதுநீரால் யாதுவிளைவதாமோ வெனவும்; இம்மிக்க தண்ணீர் நம்பால் தலைக்கு மிஞ்சியிருக்கின்றது நீ தரவேண்டுவதில்லை யெனவும் பொருள்பட்டு நின்றது. யாம் வெம்மையுள்ளேம், இது சீதளகாலமாயிருத்தலின் நீர் நம்மை விரும்புமெனத் தலைவர் கூறினாராகத் தலைவி அவ்வெம்மை நீர்மையில்லை, தண்ணிய நீர்மையே உமது நீர்மையாகலின், உம்மை யநுபவித்தல் பொருந்தாதுபோலும் என்னலும்; இறைவர் முந்நீர் தனயையையனைய குளிர்மையையுடையாய்! இக்கங்கை யனுபவித்துக்கொண்டு தலையிற் குடியிருக்கிறது; இவ்வியல்பை நோக்கென இசைத்தனரென்னலுமாம். அன்றி நும்பால் யாம் காதலுள்ளேம் நீர் விரும்புவீராக வென்னுங் கருத்தால் 'வெம்மையுளம் நீர்வேண்டும், என்று தலைவர்கூறவும், அக்குறிப்புணராது வெம்மையுள்ள நீர் நம்பாலுண்டு வேண்டுமென்றதாகத் தலைவியுட்கொண்டு, அந்நீரில்லை, நும்பக்கல் தண்ணீர்தான் உள்ளது, ஓ அருந்தலாகாது என்றாளாக; பெண்ணே! நீ கூறிய முதியதண்ணீரும் தலையிற் குடியேறியதாகவுண்டு, (அதுபற்றி ஒன்றும் யாம் கூறிற்றிலம், யாம் கூறிய இக்குறிப்புப்பொருள்வேறு, இப்பொருளை ஆய்ந்தறியென்றாரெனவும்; சீதகாலத்தில் வெம்மைத்தன்மையுள்ளனவாகிய தனங்கள் வேண்டுமென்று விளம்பி, அத்தனங்க ளளிக்கத்தக்கவளெனக் குறிப்பிற்பொருள்பட இலக்குமியனையாயெனக் கூறினாரெனவும்; வெம்மையுள்ளேம் நீர்வேண்டும், அல்லது விருப்பமுள நீர்வேண்டும் என்றாரெனவும் கோடலுமாம். தனஞ்சுட்டுங்கால் வெம்மைநீருள்ளனவெனப் பதங்களை மாற்றுக. வெம்மை - வெப்பம், விருப்பம். நீர் - சலம், நீர்மை (தன்மை.) முந்நீர் - ஆக்கல் காத்தல் அழித்தலென்னும் மூன்று நீர்மையுடைய கடல்; பண்பாகுபெயர். தனம் சீதகாலத்தில் வெம்மைதருவது * "வாவியுறை நீரும் வடநிழலும் பாவகமு - மேவனைய கன்னி ளமுலையு - மோவியமே, மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனி - லின்பாருஞ் சீதளமா மே" என்பதனானும் அறிக. ௧௫௬

* நீதிவெண்பா. ௪௧.

சீலஞ்சேர்ந்தவொற்றியுளீர்சிறிதாம்பஞ்சகாலத்துங்
கோலஞ்சார்ந்துபிச்சைகொளக்குறித்துவருவீரென்னென்றேன்
காலம்போகும்வார்த்தைநிற்குங்கண்டாயிதுசொற்கடனோமோ
வேலங்குழலாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) சீலம் சேர்ந்த ஒற்றி உளீர் சிறிது ஆம் பஞ்சகாலத்தும்—ஒழுக்கம் அமைந்துள்ள ஒற்றிநகரவாணரே! சிறுமை தரத்தக்கதாகும் இவ்வற்கடகாலத்தும்; பிச்சை கொள குறித்து கோலம் சார்ந்து வருவீர என் என்றேன் — பிச்சைகொள்ள வுத்தேசித்துக் காளம் மேளமுதலிய அலங்கார சின்னம்வாய்ந்து வருகின்றீர் ஈதென்னை என்றனன்; ஏலம் குழலாய் — மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடையாய்! ; காலம் போகும் வார்த்தை நிற்கும்— இவ்வற்கடகாலம் சின்னாளிற் சிதையும் நீ கூறிய வார்த்தையொன்றே பன்னாணிற்கும்; இது சொல் கடனோமோ என்கின்றார்—இங்ஙனங் கூறுவது மரபாமோ? என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரு.) வருணாச்சிரம வொழுக்கமிகுந்த நகரென்பாள், 'சீலஞ்சேர்ந்த வொற்றி' என்றும், வானோர்க்கும் சிறப்பொடு பூசனைசெல்லாத சிறுவிலைக் காலமென்பாள், 'சிறிதாம்பஞ்சமென்றும்', மற்றைக் காலத்து வந்தால் வாய்த்தது உதவல்கூடும், யாமும் வறுமைப்படும் இக்காலத்து வந்து வருத்துவது மாண்பல்லவே யென்பாள், 'பஞ்சகாலத்தும்' என்றும், பிச்சைக்கெழுந்தருளும் உமக்கு இக்காள முதலியவை எற்றிற்கென்பாள், 'கோலஞ்சார்ந்து வருவீர்' என்றும் கூறினாளாகலின்; இறைவர் நங்கையே! எவரு மிடுதற்குரிய ஏனைக்காலத்துப் பிக்ஷையிடாதொழியினும் பஞ்சகாலத்து இயன்றவளை பரிந்து இடவேண்டியது பண்பேயாகவும், அவ்வாறு இடாமல் இழித்துரைத்தவளென்னும் இகழ்வு நின்னைச் சூழுமென்பார், 'வார்த்தைநிற்கும்' எனவும்; எமது சின்னங்களைப்பற்றி யிகழ்வது முறையோ வென்பார, 'இது சொற்கடனோமோ?' எனவும் கூறினரென்பது. ஏற்பதற்குச் சின்னம் வேண்டுவதில்லையென்றதை *"நச்சரவம் பூண்டதில்லை நாதரோ தேவரீர் - பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டு—முச்சிதமாங், காளமேன் குஞ்சரமேன் கார்க்கடல்போற் றன்முழங்கு-மேளமேன் ராஜாங்க மேன்." என்ற நிந்தாஸ்துதிச் செய்யுளானும் உணர்க. பஞ்சகாலத்து உமது கோலஞ்சார்ந்து எனப்பிரித்துரைத்தலுமாம். கோலம் பிக்ஷாடனகோலம் என்பதும் ஒன்று. வருவீர் காலமயக்கு. கண்டாய் முன்னிலையசை; குறித்து ஆய்வாயெனினும் பொருந்தும். கருச

ஊற்றாசடையீரொற்றியுளீருருரக்கத்துணிவுற்றீர்
நீற்றல்விளங்குந்திருமேனிநோதிங்கிளைத்தீர்நீரென்றேன்
சோற்றலினைத்தேமன் று[illegible]சொல்லாலினைத்தேமின்றினிநா
மேற்றலிகழ்வேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

---

* காளமேகப்புலவர் தனிப்பாடல்.

(இ-ள்.) ஊற்று ஆர் சடையீர் ஒற்றியுளீர் ஊர் ஊர் இரக்க துணிவு உற்றீர் — கங்கையார்ந்த சடையீரோ! ஒற்றியிலுள்ளவரே! ஊர்தோறும் பிச்சையெடுக்கத் துணிவுகொண்டீர் (அதனால்); நீர் நீற்றால் விளங்கும் திருமேனி நேர்ந்து இளைத்தீர் என்றேன்—தேவரீர் விபூதியால் விளங்குகின்ற திருமேனி மெலிந்து இளைத்தீராயினீர் என்றனன்; சோற்றால் இளைத்தேம் அன்று இன்று உனது சொல்லால் இளைத்தேம்—மங்கையே! நாம் சோற்றின்றி இளைத்தோமல்ல இன்று உனது மொழியாலேயே இளைத்தோம்; இனி நாம் ஏற்றால் இகழ்வே என்கின்றார் — இனி (உன்னிடம்) நாம் ஏற்கில் (அது மிக) இழிவே என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-நு.) ஊற்று - சுரப்பு; இது தொழிலாகுபெயராய்க் கங்கையை உணர்த்திற்று. ஆர் - ஆத்தியுமாம். இரப்போர்க்கு ஈவது தனமுடையார் இயல்பெனவுணராது நீ எள்ளினமையின், உன்சொல்லே நம்மை மெலிவித்ததென்பார், 'சொல்லாலிளைத்தேம்,' என்றும்; நீ பெருந்தனமுடைமையின் அஞ்சாது அசதியாடும் அகந்தையளாயினாய் நின்னிடம் ஏற்கத்தகாதென்பார், 'ஏற்றாலிகழ்வே' என்றுங் கூறினார். அன்று சோற்றால் நேர்ந்தோம், இன்று நினது சொல்லாலே இளைத்தோமாயினம் என்றாரென அவள்கூறிய வாக்கியத்தையே இருகூறாக்கியுரைத்தலும் ஒன்று. சொல்லாவது ஊரூர் இரக்கத்துணிவுற்றீர் அதனால் திருமேனி நேர்ந்திளைத்தீர் என்றது. இங்கு - அசை. கருரு

நீரைவிழுங்குஞ்சடையுடையீருளதுநுமக்குநீரூருந்
தேரைவிழுங்கும்பசுவென்றேன்செறிநின்கலைக்குளொன்றுளது
காரைவிழுங்குமெமதுபசுக்கன்றின்றேரைநீர்த்தேரை
யீரவிழுங்குமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) நீரை விழுங்கும் சடையுடையீர்—கங்கையை அடக்கிய சடைமுடியுடையீர்! நீர் ஊரும் தேரைவிழுங்கும் பசு நுமக்கு உளது என்றேன்—நீவிர் செலுத்தும் பூமியாகியதேரை விழுங்கத்தக்க மாடொன்று உமக்குளது என்றனன்; செறிநின் கலைக்குள்—பெண்ணே! கொய்சகச்செறிவினையுடைய நினது ஆடைக்குள்; காரை விழுங்கும் எமது பசு கன்றின் தேரை நீர் தேரை ஈர விழுங்கும் ஒன்று உளது என்கின்றார்—மேகத்தையும் உவமையில் வென்ற நிறமுடைய எமது பசுவினது கன்றின் தேரையும் நீரிலுலவும் தேரையையும் பிளவுபட விழுங்கத்தக்கது ஒன்றிருக்கிறது என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-நு.) நீரை விழுங்கலாவது - அதனை உட்கொள்ளுதல். காரை விழுங்கலாவது - அதனிறத்தைத் தனதுநிறத்துக்குள்ளாக்குதல். ஒன்று என்றது - நிதம்பத்தை; அது பாம்புபோறலின் தமது பசுவாகிய திருமாலின் புத்திரனை மன்மதனது தேராகிய தென்றலையும் தவளையையும் விழுங்குமென்றாரென்க. நுமது மாடு நீரூரும் தேரை விழுங்குமெனத் தலைவி ஒன்றுகூறத்

தலைவர் எதிராக இரண்டுகூறி எள்ளியவாறு. நீருருந்தேர் என்பதற்குக் கடல்சூழ்ந்தபுவித்தேர் எனலுமாம். சிவபெருமான் புவித்தேர் ஊர்ந்தது திரிபுரதகனகாலத்தில். கருசு

பொன்னேர்மணிமன் றுடையீர்நீர்புரிந்ததெதுவெம்புடையென்றே
னின்னேயுரைத்தற்கஞ்சுதுமென்றாரென்னென்றேனியம்புதுமேன்
மின்னேநினதுநடைப்பகையாமிருகப்பறவைதமைக்குறிக்கு
மென்னேயுரைப்பதென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) பொன் நேர் மணி மன்று உடையீர்—பொன்னலாகிய ஒத்த அழகிய அம்பலத்தையுடையீரே !; எம்புடை நீர் புரிந்தது எது என்றேன்—எம்மிடத்து நீர்விரும்பியது யாது கூறும் என்றனன் ; இன்னே உரைத்தற்கு அஞ்சுதும் என்றார் என் என்றேன்—பெண்ணே ! இங்கு அதனை உரைத்தற்கு அஞ்சுவே மென்றனர் ; அதுதான் யாது கூறுவீரென்றனன் ; மின்னே இயம்புதுமேல் - மின்போல்பவளேயாம் இயம்புவமாயின் ; நினது நடை பகையாம் மிருகம் பறவை தமை குறிக்கும்—நினது நடையின் பகையாகிய மிருகத்தின் பெயரும் பறவையின்பெயருமே சுட்டும்; என்னே உரைப்பது என்கின்றார்—(இதுவன்றி) வேறு எதை யாமுரைப்பது என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-ரை.) பொன் ஏர் மணிமன்று எனப்பிரித்துப் பொருள்கோடலுமாம். நடைப்பகை மிருகம் - பெண்யானை (பிடி); நடைப்பகைப்பறவை - அன்னம் ; எனவே, பிடிநடை அன்னநடையே யாம்விரும்பினது என்றவாறு. அன்றி, இருபதங்களையும் ஒன்றுகூட்டிப் பிடியன்னமே வேண்டினது என்றலுமாம். நடையை வேண்டினமை குறிக்கில் நீ வைவைகொல்லோ வென்னும் அச்சமுடையே மென்பார், 'உரைத்தற்கஞ்சுதும்' என்றார். கருஎ

அடையார்புரஞ்செற்றம்பலத்தேயாடுமழகீரென்பதிற்றுக்
கடையாமுடலின்றலைகொண்டீர்கரமொன்றினிலற்புதமென்றே
னுடையாத்தலைமேற்றலையாகவுன்கையீரஞ்ஞூறுகொண்ட
திடையாவளைக்கேயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) அடையார் புரம் செற்று அம்பலத்தே ஆடும் அழகீர்—பகைவர்களுடைய திரிபுரங்களை யழித்துச் சிற்சபையிலே திருநிருத்தம்புரிந்தருள் கின்ற அதிசுந்தரரே !; என் பதிற்று கடை ஆம் உடலின் தலை கரம் ஒன்றினில் கொண்டீர் அற்புதம் என்றேன்—எண்ணப்படுகின்ற தசப்பிரமர்களுடைய உடல்களுள் முடிவினதாகிய உடலினது தலையை ஒருகரத்திற்கொண்டீர் ஈதாச்சரியமென்றனன்; உடையாது ஆக இடையா வளைக்கு தலைமேற்றலை உன்கை ஈரைஞ்ஞூறு கொண்டது (அற்புதம்) என்கின்றார் — உடையாது அமையும்படி பின்னிடையாத வளைகளின் பாதுகாப்புப் பொருட்டுத் தலைமேற்றலையை உன்கைகளொவ்வொன்றும் ஆயிரங்கொண்டது ஈதாச்சரியம் என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-கு.) பிரமதேவர் புதல்வராய் அவர்க்குக் கீழமைந்து அவாந்தர சிருஷ்டிக்குக் காரணராயுள்ள மரீசி அத்திரி ஆங்கிரசர் புலத்தியர் புலகர் கிரது தக்ஷர் கர்த்தமர் காசிபர் என்னும் நவப்பிரமர்களுடலம் மத்தியப் பிரளயங்களில் அழிவுற்றனவாகப் பிரமதேவ ருடலமொன்றே அவராயுள்முடி வாகிய பிராகிருதப்பிரளய மளவும் நிற்பதென்பாள், 'பதிற்றில் கடையா முடல்' என்றும், அத்தகைய வுடற்றலை கரமொன்றினிற் கொண்டமை வியப் பென்பாள், 'அற்புதமென்றும், கூறினளாகலின்; இறைவரும், நின்வலைகள் கரத்திலணியப்பட்டு முன்னிற்பனவென்பார், 'இடையாவலை, என்றும், அவை உடையாதமையக் கங்கணமணிந்ததென்பார், 'உடையாதாகத்தலைமேற்றலை கொண்டது, என்றும், உன்கை நாணுரும் நவநவமாக அணியப்பட்டன மிகப் பலவென்பார், 'ஈரைந்நூறு, என்றும் கூறினர் என்க. இவள்கூறிய மரீசியாதிபி நவப்பிரமர்களுள் புலகர் கர்த்தமர் காசிபரென்னும் மூவரை நீக்கிப் பிருகு வசிட்டர் நாரதரென்பவரைக் கோடலும் புராணசித்தம். எண்- செயப்பாட்டு வினைப்படுவிகுதியும் அகரச்சாரியையும் தொக்க வினைத்தொ கை. பதிற்றென இற்றுச்சாரியைபெற்று ஏழனுருபு பெறுதுநின்ற பத்தென் னும் எண் பிரமர்பதின்மரையு முணர்த்தலின் எண்ணுகுபெயர். உடையா- ஈறுகெட்ட வினையெச்சம். கங்கணமென்பது - தலைக்கூட்டமெனவும் பிறி தொருபொருள்பயத்தலின் 'தலைமேற்றலை, என்றார். கம் - தலை. கணம் - கூட்டம். ஒருகரத்தில் ஓருடற்றலை கொண்டீர் என்றதற்கெதிராக உன் ஒவ்வொருகைகளும் தலைக்கூட்டம் ஆயிரங்கொண்டதெனப் பழித்தவாறு. ஆயிரம் ஈண்டு அளவின்மைப் பொருட்டு. *"வேதாயாவையுமளிப்ப மேனாட்- டெரிந்தருள் பதின்மராகுஞ் சீர்கெழுகுமரர்" என்பதும் நூற்றுணிபாக லால் பிரமதேவரை ஒருவராகக்கொள்ளாது அவர் புதல்வருள் நவப்பிர மார்க்களாகக் கொள்ளப்பட்டவரோடு அவரல்லாத வேறொருவரை உடன் கூட்டித் தசப்பிரமர் என்பதும் உண்டு. இவ்வாறுகொள்ளின் பதிற்றினது கடையாம் உடலென்க. பதிற்றினதுகடை - பதிற்றுக்கு அப்பாற்பட்டது. கடை - முடிவு. கடுஅ

தேவர்க்கரியவானந்தத்திருத்தாண்டவஞ்செய்பெருமானீர்
வேமக்குகுகுகுகுகுவணிவேணியுடையீராமென்றேன்
தாவக்குகுகுகுகுகுகுகுத்தாமேயைந்துவிளங்கவணி
யேவற்குணத்தாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தேவர்க்கு அரிய ஆனந்தம் திருத்தாண்டவம் செய் பெருமான் — தேவர்க்கும் காண்டற்கரிய ஆனந்தத் திருநடனத்தைப்புரிந்தருளும் தலை வரோ !; நீர்மேவ குகுகுகுகுகு அணிவேணி உடையீர் ஆம் என்றேன்—தேவ ரீர் நிலைபெற அறுகு அணியும் சடையுடையீர்போலும் என்றனன் ; தாவு அக்குகுகுகுகுகுகுகு ஐந்து விளங்க அணி ஏவல் குணத்தாய் என்கின்றார் —

---

* கந்தபுராணம் தக்ஷகாண்டம் உபதேசப்படலம் - ரு.

நீளுகின்ற அந்த குகுகுகுகுகுகு ஐந்துவிளங்க அணியும் பெருமைக்குணத்தையுடையாய் நீ என்கின்றனை ;—ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-கு.) ஆறு+கு—அறுகு என்றாகி அறுகம்புல்லையும், எட்டு + கு — இவ்விரண்டு+கு, ஒருதொடராக நாலு குகுவென்றாகிக், கூந்தலையும் உணாத்தின்றன. குகு வென்பதற்குச் சந்திரதரிசனமில்லாதது என்பதுபொருள், * "கூடினமா வாசைபதி ஞான்கிறுதிக் கூறுதனிற் — கூடுமதற் குப்பெயா குகு." என்றதும் இப்பொருள்பற்றியே யாதலின் குகுவென்பது ஈண்டு இருளுடையதெனப் பொருள்பட்டு, நீளுதலோடு தொங்குதலையுடைய குகுவென விசேஷித்தமையால் கூந்தலைக் குறிப்பின் உணாத்திற்றென்க. தாவுதல் - நீளுதல். நாலுதல் - தொங்குதல். ஐந்துவிளங்கவணிதல் - முடி கொண்டை சுருள் குழல் பனிச்சையென்னும் ஐவகை மயிர்முடியமைய அலங்கரித்தல். தலைவி அறுகு அணி வேணியுடையரொன்றுளாகலின், தலைவா யாம் தனித்தனியாக அமைந்த அறுகு அணிந்துள்ளேம்; நீ இரு+கு, ஒருங்கு சேர்ந்தனவாகிய நாலுகுகு ஐந்துவிளங்க அணிந்துள்ளாய் அதனினும் இது வியப்பன்றோ என்கின்றாளென்பது நயம். ஏவலென்பது அதற்குரிய வியமென்னும் பரியாயப் பெயரினைமேற்று. வியங்கோளெனவும் பெயருண்மையின் விரிந்தகோள்சொல்லுங் குணமுடையாயெனினும் இழுக்காது. வியம் - பெருமை, விரிவு. இனி, எட்டென்னும் எண்ணைக்குறிக்கும் அகரவெழுத்துச் சுட்டுப்பொருள்படநின்று குவ்வொடு புணருங்கால் ககரமிரட்டிக்க அக்கு என்றாகிச் சங்கவளையல்களை யுணாத்திற்றெனவும், எண்கு - கரடியெனக்கொண்டு, இது கரடியின் பற்களாலாகிய ஐந்து ஆபரணத்தை யுணாத்திற்றெனவும் கோடலுமாம். சிங்களமுதலிய தேயங்களில் அழுக்காமையென வழங்கும் ஓர்வகை ஆமையின் ஓடு, சங்கு, புலிநகமாதியவற்றால் கைவளையாகிய அணிகளியற்றுமாறுபோலக் கரடிப் பற்களாலும் சிலவணிகளியற்றுவதுண்டென்பது பிரசித்தம். தாம் ஏ - அசைகள் ; அவைகளேயென்னும் பொருள்பட நின்றதெனலும் ஒன்று. ௧௫௯

கொன்றைச்சடையீர்கொடுங்கோளூர்குறித்தீர்வருதற்கஞ்சுவல்யா
னென்றப்பெருங்கோளென்மீதுமுரைப்பாருண்டென்றுணர்ந்தென்றேன்
நன்றப்படியேற்கோளிலியாநகருமுடையேநங்காய்நீ
யின்றச்சுறலெனவென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கொன்றை சடையீர் கொடுங்கோளூர் குறித்தீர் — கொன்றை சூடிய சடாமகுடமுடையீர் நீவிர் கொடுங்கோளூரைக் குறியிடமாகக் குறித்தீர் (ஆகையால்,) ; என்மீதும் பெரு கோள் ஒன்ற உரைப்பார் உண்டு என்று உணர்ந்து யான் வருதற்கு அஞ்சுவல் என்றேன் — என்னிடத்தும் பெரியதொரு குற்றம் பொருந்தும்படி உரைப்பவர் ஆங்கு உளராவரென்றுணர்ந்து (யான் குறியவயின்) வர அஞ்சுகிறேன் என்றனன் ; நங்காய் நன்று அப்படி

* மகாசிவராத்திரிகற்பம் - ௧௧.

யேல் கோளிலி ஆம் நகரும் உடையேம் — பெண்மணியே ! நல்லது அங்ஙனமாயின் நாம் கோளிலியென்னும் நகருமுடையேம் ; நீ இன்று அச்சுறல் என்கின்றார் — நீ என் (அக்குறிவயின் வரலாம்) இன்று அச்சமுறுதல் யாதுக்கு? என்கின்றனர் ; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-நு.) கொன்றை மாலையையுணர்த்தலின் இருமடியாகுபெயர். தலைவர் தம்மூர் கொடுங்கோளூர் என்று குறிக்கத், தலைவி கொடிய கோளுளாக்குமூரெனப் பொருள்கொண்டு, என்கரவறிந்து அலர்தூற்றுவார் பலர் அங்குளராவரொன்று வருதற்கு அஞ்சுகின்றேன் என்றவழி ; நாம் கோளிலியாகிய நகருமுடையோம் ஆங்கணுகலா மென்று தேற்றியவாறு. கொடுங்கோளூர் - மலைநாட்டில் திருவஞ்சைக்களத்தையடுத்ததலம். கோளிலி - சோணாட்டுத் தலங்களுள் ஒன்று. ககo

புரியுஞ்சடையீரமர்ந்திடுமூர்புலியூரெனிலெம்போல்வார்க்கு
முரியும்புலித்தோலுடையீர்போலுறுதற்கியலுமோவென்றேன்
றிரியும்புலியூரன்றுநின்போற்றெரிவையரைக்கண்டிடிற்பயந்தே
யிரியும்புலியூரென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) புரியும் சடையீர்—முறுக்கேறிய சடையையுடையீரே ! அமர்ந்திடும் ஊர் புலியூர் எனில்—நீர் வசிக்குமூர் புலியூராயின் ; உரியும் புலி தோல் உடையீர்போல் உறுதற்கு எம் போல்வார்க்கும் இயலுமோ என்றேன்—உம்மால் உரிக்கப்படும் புலித்தோலை உடையாகத்தரித்த உம்மைப் போல (அவ்வூரில்வாழ) அடைதற்கு எம்போல்வார்க்கும் கூடுமோ? என்றனன் ; திரியும் புலி ஊர் அன்று—மாதே ! காட்டிற்றிரியும் புலிகள் பலவாழும் ஊரல்ல ; நின்போல் தெரிவையரை கண்டிடில் பயந்தே இரியும் புலி ஊர் என்கின்றார்—நின்னைப்போன்ற மங்கையரைக் கண்டால் அஞ்சி அகன்றோடும் தூற்றைப்புலிவாழும் ஊரே அது என்கின்றனர் ; ஏடி சேடி இது என் ? எ-று.

(வி-நு) புலியூர் - சிதம்பரம். புலிகள் பலவாழுமூரில் புலியைக்கொன்றுரித்துத்தரித்த நீர் வாழ இயலும், யாம் வரவுமியலுமோ? என்று குறியிடஞ்சேறற் கஞ்சிய தலைவியைத்தேற்றியபடி. தவத்திற்கு மங்கையர் பார்வையுங் கூடாதென்பதால், 'தெரிவையரைக் கண்டிடில் பயந்து இரியும்புலி' என்றார். ஈண்டுப் புலியென்றது வியாக்கிரபாத முனிவரை. கசுக

தெவ்வூர்பொடிக்குஞ்சிறுநகையித்தேவர்தமைநானீரிருத்த
லெவ்வூரென்றேனகைத்தணங்கேயெழூர்நாலூரென்றார்பின்
னவ்வூர்த்தொகையினிருத்தலரிதாமென்றேன்மற்றதிலொவ்வூ
ரிவ்வூரெடுத்தாயென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) தெவ் ஊர் பொடிக்கும் சிறுநகை இத்தேவர்தமை நான் நீர் இருத்தல் எவ்வூர் என்றேன்—பகைவர் ஊரை நீறுபடுத்தும் புன்னகையையுடைய இந்தத் தேவரை நான் நீரிருத்தல் எந்தவூரிலென்றனன் ; நகைத்து

அணங்கே ஏழூர் நாலூர என்ருர—(அதற்கிவர்) நகைசெய்து பெண்ணே! ஏழூரும் நாலூரும் நாமிருப்பதென்றனர; பின் அவ்வூர்த்தொகையின் இருத்தல் அரிது ஆம் என்றேன - பின்னர் (நீர்கூறிய) அவ்வூர்த்தொகையில் நீர ஒருவரிருப்பது ஒவ்வாதாகும் என்றனன்; அதில் ஒவ்வு ஊர இவ்வூர் எடுத்து ஆய் என்கின்ருர—அப்படி நாமிருத்தலில் ஒவ்விய ஊர்களே இவ்வூர்கள் அவ்வூர்த்தொகைகொண்டு ஆய்வாயாகஎன்கின்றனர; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) பதினொரு ஊரெனவும் ஏழூரும் நாலூருமாகிய இரண்டெனவும் பொருள்படக் கூறினமையின், இவ்வளவு ஊர்களில் ஒருவரிருப்பது இணங்காதென்றேனுக; இவர் இவ்வளவு ஊரும் நாமிருப்பதல் இணங்கியவூர்களே யென்றும், ஏழூரும் நாலூருமாகிய அவைகள் க்ஷேத்திரக்கோவைகளுள் இல்லையேயென்றதாக இவைவருட்கொண்டு இவையும் அதில் ஒவ்வொருதலங்களேயெனறும், ஐயரின் நூல்கொண்டு ஆய்வாயாகவென்றும் கூறுகின்ருரென்பது கருத்து. பிற்பொருட்கண் அவ் - அவையென்னும் பன்மைச்சுட்டு. ஒவ்வொரு வூரென்பது ஒவ்வூரென மருவியிற்று. ஊர்தொகையில் ஒவ்வூரென்பதனைத் திருநாவுக்கரசுநாயனர் திருமுறையில் க்ஷேத்திரக்கோவை, திருவடைவுத் திருத்தாண்டகங்களிற்காண்க. மற்று - அசை. ௧௬௨

மணங்கொளிதழிச்சடையீர்நீர்வாழும்பதியாதென்றேனின்
குணங்கொண்மொழிகேட்டோரளவுகுறைந்தகுயிலாம்பதியென்ரு
ரணங்கின்மறையூராமென்றேனஃதன்றருளோத்தூரிஃது
மிணங்கவுடையேமென்கின்ருரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) மணம் கொள் இதழி சடையீர நீர் வாழும் பதி யாது என்றேன்—மணங்கொண்ட கொன்றைசூடிய சடையையுடையீரே! நீர அமரும் பதி எது என்றனன்; நின் குணம் கொள் மொழி கேட்டு ஓரளவு குறைந்த குயிலாம் பதி என்ருர—பெண்ணே! நினது குணமமைந்த மொழியைக் கேட்டு (தனக்கு இவ்வினிமை இல்லையேஎன்று நாணி) ஒருமாத்திரையளவு குறைந்த குயிலாம்பதி என்றனர; அணங்கின் மறையூர ஆம் என்றேன்—(நீரகூறிய பதி) தெய்வகமுடைய மறைப்பதியாகும் என்றேன்; அஃதன்று அருள் ஓத்தூர—மங்கையே! நீகூறிய மறைப்பதி அதுவன்று அருளுடைய திருஓத்தூராகும்; இஃதும் இணங்க உடையேம் என்கின்ருர்—இந்த ஓத்தூரென்னும் நகரமும் பொருத்தமாக உடையோம் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-து.) காளம்போல முழங்கும் கண்டமுடைமையின் மன்மதனுக்குக் காளவாத்தியமெனக் கூறப்பட்டுக் காளகண்டமென வழங்குங்குயில், நின் மொழிக்கெதிர விடம்போல வெறுக்கப்படும் ஒலியுடையதாயினமையின் களகண்டமெனப் பெயர்பெற்றதென்பார் ஓரளவுகுறைந்த குயிலென்ருர், அளவு-மாத்திரை. அது, ஈண்டு நெட்டெழுத்து குற்றெழுத்தாதல் சுட்டிநின்றது,

காளகண்டம் அல்லது களகண்டமென்னும் இந்த க்ஷேத்திரம் இமாலயத்திற்குச் சமீபத்தில் கௌசிகிநதி யுற்பத்தித்தானத்திலுள்ள நீலகண்டக்ஷேத்திரம்போலும்; இத்தலம் தணிகைப்புராணம் புராணவரலாற்றுப்படலத்தில் விதந்துகூறும் (௯௪) சிவத்தலங்களிலொன்றும். நீர் கூறும்பதி பொருளறிய முடியாத பதியாயிருக்கின்ற தென்னுங் கருத்தால் மறைப்பதியென்று தலைவி கூற, வேதப்பதியென்றநாகத் தலைவர் பொருள்கொண்டு அந் திருஓத்தூரே யாமென்று விடைகூறியபடியாம். இத்தலம் ஓத்தின்பொருளைச் சிவபெருமான் அந்தணர்க்குபதேசித்த தலமாகலின் ஓத்தூரெனப்பட்டது. ஓத்து - வேதம். ௧௬௨

ஆற்றுச்சடையாரிவர்பலியென்றடைந்தார்நுமதூரியாதென்றேன்
சோற்றுத்துறையென்றார்நுமக்குச்சோற்றுக்கருப்பேன்சொலுமென்றேன்
றோற்றுத்திரிவேமன்றுநின்போற்சொல்லுங்கருப்பென்றுலகியம்ப
வேற்றுத்திரியேமென்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ-ள்.) ஆறு சடையார் இவர் பலி என்று அடைந்தார் நுமது ஊர் யாது என்றேன்—கங்கையாற்றையடக்கும் சடையையுடையராகிய இவர் பிச்சையென்று இயம்பிக்கொண்டு எங்கடைந்தனர் யான் உமது ஊர் எதுவென்று வினவினேன்; சோற்றுத்துறை என்றார் — திருச்சோற்றுத்துறையென்று விடைபகர்ந்தனர்; நுமக்கு சோற்று கருப்பு ஏன் சொலும் என்றேன்—உமக்குச் சோற்றுவறுமை ஏன்கூறும் என்றனன்; தோற்று திரிவேம் அன்று — பெண்ணே! உள்ளபொருளையிழந்து (அநருல்) மாறுபடுவோம் அல்லேம்; சொல்லும் கருப்பு என்று உலகு நின்போல் இயம்ப ஏற்று திரியேம் என்கின்றார்—(அன்றியும்) நீசொல்லும் சோற்றுக்கருப்பு (உடையோம்) என்று உலகர் நின்போற்கூறப் பிச்சையேற்று உழலோம் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) சோற்றுத்துறை - ஒருதிருப்பதி; இதனைச் சோறுமிகுதியுமுள்ள இடமெனவும் பொருள்படக் கூறினமையின், சோற்றுத்துறையுடைய உமக்குச் சோற்றுக்கருப்பு உலகு ஏன்சொல்லும் என்று யான் புகழ்ந்துகூறினேனாக; இவர் உமக்குச் சோற்றுவறுமை ஏன்வந்தது சொல்லும் என்றதாகவுட்கொண்டு, ஏதேதோ வுரைக்கின்றார் ஈதென்னை என்றபடி. இனி, நாம் நின்வினாவிற்கியைந்த விடைபகர வகையறியாது தோற்று மாறுபடுவோமன்று; அன்றியும், சோறு உண்டு இல்லையென்று கூறும் சொல்லிலும் கருப்புடைய நின்போலப் பஞ்சமுடையோ மென்று உலகர்கூற அவ்விழிபுரையேற்றுத் திரியோம்; (நீ ஒருத்தியே சோற்றுவறுமையுடையோமாக எம்மைக் கூறியது; யாம் தியாகரேயாம்) என்று குறிப்பின்விளங்கக் கூறுகின்றாரெனலும் ஒன்று. அரிதென்னும்பொருள்படச் சொல்லும் கரும்பென்றுரெனலுமாம். இப்பொருட்குக் கருப்பு வலித்தல்விகாரமென்க. உலகு - ஆகுபெயர். ௧௬௩

ஓங்குஞ்சடையீர்நெல்வாயிலுடையேமென்றீருடையீரேற்
றாங்கும்புகழ்நும்மிடைச்சிறுமைசார்ந்ததெவனீர்சாற்றுமென்றே
னேங்கும்படிநும்மிடைச்சிறுமையெய்திற்றலதீண்டெமக்கின்று
லீங்குங்காண்டிரென்கின்றாரிதுதான்சேடியென்னேடி.

(இ-ள்.) ஓங்கும் சடையீர் நெல்வாயில் உடையேம் என்றீர்—(மகுடமாக) மேனிமிர்ந்த சடையினையுடையீரே! திருநெல்வாயிலை உடையோம் என்றீர்; உடையீரேல் புகழ் தாங்கும் நும் இடை சிறுமை சார்ந்தது எவன் நீர் சாற்றும் என்றேன்—(நெல்வாயிலை) உடையீரானால் புகழினைக்கொண்டுள்ள நும்மிடத்து (இப்பிச்சையேற்கும்) குறைவு எய்தியது எதுபற்றி நீர் கூறுவீர் என்றனன்; ஏங்கும்படி நும் இடை சிறுமை எய்திற்று அலது ஈண்டு எமக்கு இன்று—(கண்டோர்) கலங்கும்படி நுமது இடையிலேயே நொய்மை அடைந்துள்ளதல்லது ஈங்கெமக்கு ஒன்றும் அடைந்திலது; ஈங்கும் காண்டிர் என்கின்றார்—(வேண்டில் பிச்சைக்குவந்த) இவ்விடத்தும் (எம்மிடைமெலிவில்லாமையைக்) காணுதிர் என்கின்றனர்; ஏடி சேடி இது என்? எ-று.

(வி-ரை.) நெல்வாயிலென்பது ஒருதலம். இம்மொழி நெல்லையுடையவாயிலெனவும், நெல்லைவாய்ந்த இல்லமெனவும், நெல்லீட்டுதற்குரிய ஏதுவெனவும் பொருள்பட்டுநிற்றலின், இங்ஙனம் நெல்லின் பெருக்கமுடைய நும்மிடைச் சிறுமையெய்தவேண்டுவதில்லையே யென்றாளாகலின், இறைவர் எம்மிடைச் சிறுமையில்லை, நும்மிடையே சிறுமையுள்ளதென எதிரியம்பியபடி. இடைச் சிறுமை - இடைக்கண் சிறுமை. இடை—இடம், நுசுப்பு. சிறுமை - வறுமை, நுண்மை. ஏங்குதல் - இத்தனைபாரத்தால் இந்நுசுப்பு இறுங்கொல்லோ வெனக்கவலுதல். ஏல் - எனினென்பதன் மரூஉ. ஆல் - அசை. வாயில் - ஏது. ()

இங்கிதமாலை உரை முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

---

40868

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1 சென்னை-1

# பரிசோதனைபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪ | ௮ | தட்டின் | தட்டில் |
| ௬ | ௨௫ | அரியார் | அரியீர் |
| ௭ | ௩௮ | கொங்கலை | கொங்கைகலை |
| ௧௨ | ௭ | அது இடை | இடை |
| ௧௪ | ௧௫ | இருந்தும் | இருந்ததும் |
| ௧௬ | ௨௨ | பெண்ணை | பெண்ணே |
| ௧௭ | ௩௬ | நகர் | நகர்ச் |
| ௧௮ | ௧௭ | ஈடா | ஈடாய் |
| ௧௯ | ௩௪ | துளைக்க. | துளைக்கலுமாம். |
| ௨௭ | ௫ | பிறையு | பிறையையு |
| ஷை | ௨௫ | பாராட்டப்பபடுவது | பாராட்டப்படுவது |
| ஷை | ௩௦ | ருள்ளதி | ருள்ளத்தி [து |
| ௨௯ | ௩ | உமது | ஒற்றியிலுறைபவரே! உம |
| ஷை | ௩௮ | ஔவையார் தனிப்பாடல் | திருவள்ளுவமாலை |
| ௩௦ | ௧௧ | யென்கிறு | யென்கின்று |
| ௩௧ | ௨௨ | தொடுப் | தொடுப்ப |
| ௩௨ | ௧௭ | வரயி | வயிர |
| ௩௭ | ௧௮ | லெழுத்து | லகரம் |
| ௩௯ | ௧௭ | ளென்று | ளென்றும் |
| ௪௩ | ௧௯ | திகா | திக |
| ௪௯ | ௨௦ | வல்லோம் | வல்லேம் |
| ௪௭ | ௨௪ | என்றேன் | என்றேன்யான் |
| ஷை | ௨௫ | என்றனன் | என்றனன்யான் |
| ஷை | ௨௬ | ஆகாயமே | மேகமே |
| ௫௦ | ௫ | என்மனைவி | எம்மனைவி |
| ஷை | ௬ | நான் | நாம் |
| ஷை | ௧௮ | யான் | யாம் |
| ௫௧ | ௧௩ | சரும | சன்ம |
| ௫௩ | ௧௭ | உள்மை | யாம் |
| ஷை | ஷை | உனது | யாம் உனது |
| ஷை | ௨௦ | எல்மை | கண்மை உறல் எண்மை |
| ௫௪ | ௩௫ | வாரம் | வராம் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௫௭ | ௩ | மென்று | மொன்று |
| ௸ | ௫ | உரை | உரைப்ப |
| ௫௮ | ௨0 | உளத்தில் | உளத்தின் |
| ௬௧ | ௯ | தோற்றத்தான் | தோற்ற |
| ௬௩ | ௨௪ | நமா | நாமோ |
| ௬௪ | ௧௧ | உள்ள | நின் உள்ள |
| ௸ | ௨௮ | இன்று | நீர் இன்று |
| ௸ | ௨௯ | இன்று | நீர் இன்று |
| ௬௫ | ௨௩ | ொன்பதுகருத்து. | ொனனுங்கருத்தது. |
| ௬௭ | ௬ | யார்க்கே | யாருக்கு |
| ௭௨ | ௧௯ | றக்குலங் | றைரக்குலங் |
| ௸ | ௨௩ | லயத்தை | லயமாகிய இடத்தை |
| ௭௪ | ௭ | நீ | நீ இவண் |
| ௭௫ | ௧௧ | என்செய் | என் சொல் |
| ௸ | ௨௩ | டுருப்பது | டிருப்பது |
| ௭௮ | ௭ | ருயிர்கு | ருயிர்க்கு |
| ௮0 | ௩௧ | றென்ஞர் | றென்றார் |
| ௸ | ௩௩ | ஊராம் | ஊறாம் |
| ௮௧ | ௧௩ | மீட்டுத | மீட்குத |
| ௸ | ௨0 | லணிந்திா | லணிந்தாய் |
| ௮௮ | ௨௯ | என்றேன் | என்றுரைத்தேன் |
| ௸ | ௩௧ | என்றனன் | என்றுரைசெய்தனன் |
| ௯௪ | ௩௮ | யனையீரிம் | யனையாயிம் |
| ௯௯ | ௨௫ | மார்க்களா | மர்களா |
| ௸ | ௩0 | வேமக் | மேவக் |
| ௧0௧ | ௪ | என்கின்றார்- நீ என் | என் என்கின்றார் - நீ |